
அரண்மனைத்
தேவதை
கோட்டயம் புஷ்பநாத்
தமிழில்: சிவன்

அரண்மனைத் தேவதை

முதற் பதிப்பு : அக்டோபர், 2012

உரிமை : ஆசிரியருக்கு

**விலை** : ₹ 200/-

**Aranmanai Devathai**

By : **Kottayam Pus›anath**

Translated By : **Sivan**

First Edition : October, 2012

Pages : 352

Published by:

**KAVITHA PUBLICATION**
Post Box No. : 6123
8, Masilamani Street,
Pondy Bazaar,
T. Nagar, Chennai - 600 017.
✆ 2436 4243, 2432 2177.
Telefax: 044-2436 4243
E-mail : kavitha_publication@yahoo.com
website : www.kavithapublication.in

ISBN: 978-81-8345-266-3

**Price : ₹ 200/-**

ஒளி அச்சு : சு. அசோக்குமார்,
சென்னை - 600 080.

அச்சிட்டோர் : சென்னை மைக்ரோ பிரிண்ட் (பி) லிட்,
சென்னை.29

## சில வார்த்தைகள்...

தமிழில் மொழிபெயர்ப்புச் செய்ய நான் திட்டம் வைத்திருக்கிற நூல்களின் எண்ணிக்கையே என் சக்திக்கு மீறியவை. அவ்வப்போது பதிப்பாளர்கள், மலையாள எழுத்தாளர்கள், தமிழ் வாசகர்கள் கேட்டுக் கொள்ளும் நூல்கள் வேறு. இவற்றுக்கு நடுவே, மற்றவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு மொழிபெயர்ப்புச் செய்யும் தொடர்களும், நாவல்களும் தவிர்க்க முடியாதவை. இவ்வளவுக்கும் நடுவே ஏற்கெனவே மற்றவர்கள் மொழி பெயர்ப்புச் செய்து பல்வேறு காரணங்களால் புத்தக வடிவம் பெறாதவற்றை நான் மறுபடியும் மொழிபெயர்ப்புச் செய்ய நேர்கிறது. அவற்றை என்னால் தவிர்க்க முடியவில்லை என்பதே காரணம்.

மற்றவர்கள் செய்த மொழிபெயர்ப்பில் குறை எதுவுமில்லை. நல்ல மொழிபெயர்ப்புதான். அதையும் மறுப்பதற்கு இல்லை. எனவே, மொழிபெயர்ப்பு சரியில்லை என்பதற்காக நான் அவற்றை மொழிபெயர்க்க ஒப்புக் கொள்ளவுமில்லை.

முதன் முதலாக இப்படிச் செய்ய நேர்ந்தது. 'கிருஷ்ணப் பருந்து' நாவலை. நண்பர் வைத்தியநாதன், 'சாவி' வார இதழில் தொடராக இதை மொழிபெயர்த்தார். பத்திரிகையில் ஓர் அத்தியாயத்துக்கு இத்தனை பக்கங்கள் என்று ஒதுக்கியதில் கதையில் மூன்றில் ஒரு பகுதி வெட்டுப்பட்டது. மட்டுமின்றி, தொடர் வெளியாகி சுமார் ஏழாண்டுகள் ஆகியும் அது புத்தக வடிவம் பெறவில்லை. எனவே, புத்தக வடிவம் பெறும்போது முழுமையாக இருக்கவேண்டும் என்று கருதிய அதன் ஆசிரியர் பி.வி.தம்பி என்னிடம் முழுமையாக மொழிபெயர்க்கச் சொன்னார்.

தொடங்கிய மொழிபெயர்ப்பைத் தொடர நேரமில்லாததால் 'கலிகா' மொழிபெயர்ப்பை என்னிடம் தொடரச் சொன்னவர் மலையாள குங்குமம் பத்திரிகையின் ஆசிரியர் இலாகாவில் பணி புரியும் திரு. எஸ். ராமகிருஷ்ணன். கலிகாவின் கதாசிரியர் மோகனசந்திரன்.

புத்தகமாகாத காரணத்தால் ஏற்றுமானூர் சிவகுமாரின் சந்தியாவந்தனம், தம்புரான் குன்று போன்றவற்றைப் பதிப் பகத்தார் கேட்டுக் கொண்டதற்காக மொழிபெயர்க்க நேர்ந்தது.

இந்த 'அரண்மனைத் தேவதை'யையும் புத்தகமாக்குவதற்காக என்னிடம் மொழிபெயர்க்கச் சொன்னார் ஆசிரியர் கோட்டயம் புஷ்பநாத்.

ஞானபீடம் விருது பெற்ற எம்.டி. வாசுதேவன் நாயர் அவர்களின் ஒரு நாவலை மொழிபெயர்க்கும் அனுமதிக்காக அணுகியபோது, அவர் மொழிபெயர்க்கச் சொன்னது, ஏற்கெனவே மொழிபெயர்த்து தமிழில் புத்தகமாக வெளிவந்த 'நாலுகட்டு' நாவலை. இந்த வரிசையில் மற்றொரு புத்தகம் மோகனசந்திரனின் 'காக்கைகளின் இரவு'. மொழிபெயர்ப்பு எனக்கு ஓர் உபதொழில். பரஸ்பரம் இது தொடர்பானவர்களின் சம்மதமும், ஒத்துழைப்பும் இதற்குத் தேவை. எனவே, இது போன்ற வாய்ப்புகளை நான் நிர்த்தாட்சண்யமாக மறுக்க முடிவதில்லை.

'அரண்மனைத் தேவதை' நூலை மொழிபெயர்க்க அனுமதி யளித்த திரு. கோட்டயம் புஷ்பநாத். அழகான முறையில் புத்தகமாக்கி வெளியிடும் கவிதா பப்ளிகேஷன், வாங்கி ஆதரிக்கும் வாசகர்கள் ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகிறது.

தோழமையுடன்
**சிவன்**

# 1

**அ**ன்று இரவில் வழக்கமான நேரம் தாண்டிய பிறகும் டாக்டர் சேதுவர்மாவுக்குத் தூக்கம் வரவில்லை!

சுவர்க்கடிகாரத்தில் மணி பதினொன்று. அடிக்கும் சத்தம் கேட்டது.

அந்தச் சத்தம் ஓய்ந்தபோது மழைத்துளிகள் ஜன்னல் கண்ணாடிகளில் வலுவுடன் பாயத் தொடங்கின. தொடர்ந்து வலிமையாக வீசிய காற்று, மூடாதிருந்த ஜன்னல் கதவுகளை விசையுடன் மூடவைத்தது.

படுத்த நிலையிலேயே சேதுவர்மா ஜன்னல் கண்ணாடி வழியாக வெளியே பார்த்தார். வீட்டையொட்டி வளர்ந்திருந்த ஒட்டுமாமரத்தின் கிளைகள் வலுவுடன் அசைந்தன. அசையும் ஒரு கருமையான நிழல்படம் மாதிரி இருந்தது அந்தக் காட்சி.

மருத்துவக் கல்லூரியில் மகப்பேறுப் பிரிவின் துணைப் பேராசிரியராக இருப்பவர் சேதுவர்மா.

வயது முப்பத்திரண்டு. பழகுவதற்கு இனிமையானவர். செறுவல்லூர் கோவிலகக் குடும்பத்தவர். பட்டணத்திலிருந்து பதினைந்து கிலோமீட்டர் தொலைவிலிருந்தது அவருடைய பரம்பரை வீடு. ஆனால், வர்மா தற்சமயம் தங்கியிருப்பது மருத்துவக் கல்லூரிக்கு சொந்தமான குவார்ட்டர்ஸில்.

அதற்கும் காரணமிருந்தது. இப்போது கோவிலகத்தில் யாரும் வசிக்கவில்லை. அவர் அப்பாவும் அம்மாவும் விமான விபத்து ஒன்றில் இறந்து போனார்கள். அதன் பிறகு அந்தக்

குடும்பத்தில் மிச்சமிருந்தது அப்பாவின் அம்மா மட்டும்தான். அதாவது வர்மாவின் பாட்டி. அவரும் இறந்து போய் இரண்டு வருடங்களாகின்றன.

சிற்றப்பா ஒருவர் இருந்ததாகக் கேள்விப்பட்டிருந்தார். தாத்தாவின் தொடுப்பு மூலமாகப் பிறந்தவர் என்றும் அவரைப் பற்றிச் சொன்னார்கள். இதுவரை பார்த்ததில்லை. ஒரு தடவை அம்மா அவரைப் பற்றி சூசகமாகச் சொல்லியிருந்தார். இலங் கைக்குப் போனவர் துப்பாக்கி குண்டுக்குப் பலியானதாகவும் பேசிக் கொண்டார்கள்.

இப்போது கோவிலகக் குடும்பத்தின் மொத்த சொத்துக்கும் ஒரே வாரிசு சேதுவர்மா மட்டுமே. வர்மாவைப் பொறுத்தவரை இந்த சொத்துகளில் அவருக்கு அவ்வளவாக ஆர்வமில்லை. எல்லாவற்றையும் மேற்பார்வையிட்டு கவனித்துக் கொள்கிறவர் காரியஸ்தர் சங்கர வாரியர்.

கோவிலகம் வீட்டை ஒட்டியுள்ள வீட்டில்தான் வாரியர் வசிக்கிறார். எப்போதாவது ஒரு தடவை வந்து விவசாயம் பற்றி ஏதாவது சொல்லிவிட்டுப் போவார். 'நெல் விற்ற பணம் இவ்வளவு... தேங்காய் விற்ற பணம் இவ்வளவு' என்று கணக்குச் சொல்லுவார். நோட்டுக் கத்தைகளைக் கொண்டு வருவார். அவரே பணத்தை பாங்க்கில் கட்டிவிட்டு பாஸ் புத்தகத்தை வர்மாவிடம் கொடுப்பார்.

சேதுவர்மாவுக்கு, வாரியர் மீது அபரிமிதமான நம்பிக்கை. இதுவரை எந்தக் கணக்கையும் சரிபார்த்ததோ, விளக்கம் கேட்டதோ கிடையாது.

சமீபத்தில் வர்மாவுக்குப் பெண் கொடுக்க விரும்புவதாகத் தெரிவித்தார்கள். அவர் இதுவரை பெண்ணைப் பார்க்கவில்லை. அவருடன் பணிபுரியும் பேராசிரியை ஒருவர்தான், அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர். பெண் பார்க்க வருமாறு அந்தப் பேராசிரியை அவரை வற்புறுத்திக் கொண்டேயிருந்தார்.

படிக்கும்போதும், வேலையில் அமர்ந்த பிறகும் அவர் எத்தனையோ பெண்களிடம் பழகியிருக்கிறார். இருந்தாலும்



காதல் என்ற ஓர் உணர்வே சேதுவர்மாவிடம் தோன்றியதில்லை. யாராலும் அவர் இதயத்தில் இடம்பிடிக்க முடியவில்லை.

இப்போதெல்லாம் டாக்டர் ராஜாம்பாள் - பேராசிரியை குறிப்பிட்ட, இதுவரை பார்த்தேயிராத பெண் அடிக்கடி அவர் மனத்தில் தெளிவற்றுத் தோன்றத் தொடங்கினாள்.

தொலைபேசி மணியடித்தது.

டாக்டர் சேதுவர்மா சிந்தனையிலிருந்து விடுபட்டார்.

தொலைபேசி நிறுத்தாமல் மணியடித்தது.

சமீபத்தில்தான் படுக்கையறையில் ஒரு சிவப்பு நிறத் தொலைபேசியைப் பொருத்தியிருந்தார். ஒரு நண்பர் பரிசளித்தது அது. தொலைபேசியை எடுப்பதற்காக அறையைவிட்டு வெளியே போகாமல் இப்போது படுக்கையிலிருந்தபடி கைநீட்டி எடுக்கலாம்.

வர்மா ரிசீவரை எடுத்தார்.

"ஆமாம்... நான்தான் பேசுகிறேன். என்ன சொல்கிறீர்கள்? கொஞ்சம் சத்தமாகச் சொல்லுங்கள். ம்... ம்... பண்ணார மூலையிலா... அது எங்கே இருக்கிறது... ஓகோ!" நெற்றியைச் சுளித்தபடி டாக்டர் வர்மா ரிசீவரை வைத்தார்.

இதுபோன்ற தொலைபேசி அழைப்புகள் எப்போதாவது வருவதுண்டு. இருந்தாலும் இந்த ராத்திரி வேளையில்...

தனியாக எப்படிப் புறப்படுவது?

போகாமலிருப்பதும் முறையல்ல.

இது ஓர் உயிர்ப்போராட்டம்!

அவ்வளவாகப் பழக்கமில்லாத இடம். அவர்கள் அடையாளம் சொன்ன பிறகு ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு தடவை அந்த வழியாகப் பயணம் செய்திருக்கிறோம்.

அவசியமான உபகரணங்கள் மற்றும் மருந்துகளை கிட்பேகில் எடுத்து வைத்தார். டார்ச் லைட்டையும் காரின்

சாவியையும் எடுத்துக் கொண்டு டாக்டர் வெளியே வந்தார். வெளிக்கதவைப் பூட்டி, சாவியை வழக்கமாக வைக்கும் கார்ஷெட்டுக்கு அருகிலுள்ள பூச்சட்டியில் முள்செடிக்குப் பின்புறம் போட்டார்.

காரை ஸ்டார்ட் செய்தார்.

கேட் அருகே நிறுத்தி, அவசரமாக கேட்டைத் திறந்தார்... அப்போதும் மழை பெய்து கொண்டிருந்தது.

காரை ரோட்டுக்குக் கொண்டுவந்து வலது புறமாகத் திருப்பினார்.

மெயின்ரோட்டைத் தாண்டி, மற்றொரு சிறிய சாலையில் திருப்பினார். தொலைபேசியில் தகவல் தந்தவர்கள் அப்படித் தான் சொல்லியிருந்தார்கள்.

அங்கங்கே கற்கள் பெயர்ந்து, தாரின் அடையாளமே இல்லாமலிருந்தது சாலை.

பாதையில் இடதுபுறத்தைப் பார்த்தவாறே குறிப்பிட்ட இடம் தட்டுப்படுகிறதா என்பதில் கவனமாக இருந்தார்.

அதோ... பாம்புகள் இழைவதுபோல் வேர்கள் பரவிக் கிடக்கும் ஆலமரம். அதன் கீழே ஒரு சிறிய மண்டபம். அருகிலேயே பழைய கால உண்டியல் ஒன்றும் தெரிந்தது. அதற்குப் பின்னால் சூலம் ஒன்று, ஆலமரத்தைத் தாங்கி நிற்பது போல் நட்டு வைக்கப்பட்டிருந்தது.

டாக்டர் வர்மா காரை நிறுத்தினார்.

அப்போதும் விடாமல் மழை பெய்தது. மழைத்துளிகள் வலுவாக நிலத்தில் மோதின.

மழைத்துளிகளை ஊடுருவும் வெளிச்சத்தின் உதவியால் பாதையின் இரு புறங்களையும் கவனித்தார் டாக்டர்.

திடுமென்று ஒரு மனிதர் ஆலமரத்தின் பின்புறத்திலிருந்து வெளிப்பட்டு காரை நெருங்கினார். அவர் கையில் டார்ச்லைட் ஒன்றும் குடையும் இருந்தன. நடுத்தர வயது மனிதர். தலையில்



பிளாஸ்டிக் தொப்பியொன்று வைத்திருந்தார். முகத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த தாடி - மீசை. அவர் கண்கள் நல்ல பளபளப்புடன் விளங்கின.

டாக்டர் காரின் கதவைத் திறந்தார்.

குடையை மடக்கியவாறு அவர் காரில் ஏறி அமர்ந்தார்.

"சே... என்ன ஒரு மழை சார்! நான் உங்களை ரொம்ப நேரம் காக்க வெச்சுட்டேனா?" வந்தவர் கேட்டார்.

"அதெல்லாம் இல்லை. நானும் இப்போதுதான் வந்தேன்." ஆக்ஸிலேட்டரை அழுத்தியபடி டாக்டர் வர்மா பதிலளித்தார்.

"இதுதான் சார் வழி. கிட்டத்தட்ட ரெண்டு கிலோ மீட்டர் இருக்கும். அவ்வளவுதான்." முன்புறச் சாலையைப் பார்த்தவாறு பேசினார் வந்தவர்.

காரின் ஹெட்லைட் வெளிச்சம் முன்புறமாகப் பாய்ந்து கொண்டிருந்தது.

குறிப்பிட்ட தூரம் தாண்டியிருக்க வேண்டும். அப்போது அந்த நடுவயது மனிதர் கூறினார்: "இடது புறமாகத் திரும்பினால் நேராக கேட். கேட்டின் வலதுபுறம் திரும்புங்கள். கேட் திறந்து கிடக்கிறது!"

அவர் சொன்னபடியே டாக்டர் காரை வளைத்துத் திருப்பி நிறுத்தினார். பிரமாண்டமான ஓர் இரண்டடுக்கு மாடி வீட்டின் முன்னால் கார் நின்றது.

பழங்கால வீடு.

சுவர்கள் சுண்ணாம்பைப் பார்த்து வெகுநாளானது போல் தோன்றியது. செதில்கள் போல் ஆங்காங்கே பாசம் மண்டியிருந்தது. ஏதோ ஒரு வகையான காட்டுக் கொடி சுவர்களில் கன்னாபின்னாவென்று படர்ந்து வளர்ந்திருந்தது.

"வாங்க சார்!" நடுவயது மனிதர் காரைவிட்டு இறங்கிய பிறகு அழைத்தார்.

டாக்டர் வர்மா காரிலிருந்து இறங்கினார்.

அந்தக் கட்டடத்துக்குள் வெளிச்சம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரே இருட்டாக இருந்தது.

ஹெட்லைட்டின் வெளிச்சத்தில் சுற்றுப்புறம் தெளிவற்றுத் தோன்றியது. அதுவும் ஒரு சில பகுதிகள்.

''மழை பெய்யத் தொடங்கியபோது கரண்ட்போனது சார். இன்னும் வரலை போலிருக்கு!'' நடுவயது மனிதர் வீட்டு வாசல் கதவைத் திறந்து உட்புறமாகத் தள்ளினார்.

கரகரவென்ற ஓசையுடன் கதவுகள் உட்புறமாக விரிந்தன.

''வாங்க சார்!'' அவர் அழைத்தார்.

டாக்டர் சேதுவர்மா அவருடன் அந்தக் கட்டடத்துக்குள் நுழைந்தார்.

காரிலிருந்து டார்ச்லைட்டை எடுக்க மறந்தது அப்போதுதான் டாக்டருக்கு நினைவு வந்தது. உடன் வருபவரிடம் டார்ச்லைட் இருக்கிறதே என்பதில் ஆறுதலடைந்தார்.

டார்ச்லைட் வெளிச்சத்தைப் படிக்கட்டின் மீது பாய்ச்சியபடி நடுவயது மனிதர் படிக்கட்டின் அடிப்பகுதிக்கு வந்தார். கீழேயிருந்து வளைவாக மேற்புறம் செல்லும் படியின் உச்சிப் பகுதியில் பால்கனி இருந்தது. இடதுபுறமாக உள்ள படிகளில் ஏறினார் டாக்டர்.

பால்கனிக்கு வந்த பிறகு திரும்பவும் இடதுபுறமாக நடந்தார். பாதை குறுகலாகத் திரும்புமிடத்துக்கு வந்து, வலப்புறம் சற்றுத் தூரம் நடந்தவர் சட்டென்று நின்றார்.

அங்கிருந்த வாசல் வழியாக வெளிச்சம் வெளியே எட்டிப் பார்த்தது.

டாக்டர் அறைக்குள் நுழைந்தார்.

அவருடன் வந்த மனிதர் பின்புறமாக நகர்ந்து மறைந்தார்.

அறைக்குள் எரியும் சிம்னி விளக்கின் வெளிச்சத்தில் இளம்



அவளருகே மற்றொரு பெண்மணி அமர்ந்திருந்தாள். சிம்னியின் மீது புகை படிந்து கருமை தட்டியிருந்ததால், இரண்டு பெண்களையும் தெளிவாகப் பார்க்க முடியவில்லை டாக்டரால். இளம் பெண்ணுக்கு சுமார் இருபத்திரண்டு வயது இருக்கலாம். அழகி. உடனிருப்பவளுக்கு நாற்பது வயதுக்கு மேல் இருக்காது. பணக்காரத் தோரணை தெரிந்தது.

டாக்டர் அவர்களை நெருங்கிய பிறகும் அந்தப் பெண்மணி எழுந்திருக்கவில்லை.

''டாக்டர், பாதை ரொம்பவும் கஷ்டமா இருந்திருக்கும் இல்லையா?'' பெண்மணி கேட்டாள்.

''அதற்கென்ன... பரவாயில்லை!'' டாக்டர் கட்டிலில் கிடந்த இளம்பெண்ணைப் பார்த்தார். அவள் கண்களை மூடிப் படுத்திருந்தாள்.

சந்தேகம் கொண்டவராக டாக்டர் கட்டிலில் உட்கார்ந்து இருந்த பெண்மணியைப் பார்த்தார்.

''எல்லாம் முடிஞ்சுபோச்சு டாக்டர்! இரண்டு பேரையும் காப்பாத்த முடியலை!'' இருந்த நிலையிலிருந்து சற்றும் அசையாமல் அந்தப் பெண்மணி பேசினாள்.

''குழந்தை?'' டாக்டர் கேட்டார்.

''கட்டிலுக்கு அடியில் வெச்சிருக்கிறேன். மழை நிற்கட்டும். புதைக்க வேண்டியதுதான்...'' பெண்மணி பாதிப்படையாத மாதிரி இயல்பாகப் பேசினாள்.

''அப்படியானால் நான்...'' டாக்டர் வர்மா கேள்விக் குறியுடன் அவளைப் பார்த்தார்.

''டாக்டர் உங்க ஃபீஸ்?'' அவள் விசாரித்தாள்.

டாக்டர் அதை கவனிக்காதவராகத் திரும்பி, நடக்கத் தொடங்கினார்.

தன்னால் எதுவும் செய்ய முடியவில்லையே என்கிற வருத்தத்துடன் அவர் மெதுவாக அந்த அறையிலிருந்து வெளியேறினார்.

டாக்டரை அழைத்து வந்த மனிதர் அந்தப் பகுதியில் எங்கும் தட்டுப்படவில்லை.

வெளிச்சமும் இல்லை. அந்தப் பெண்மணியிடம் என்னத்தைக் கேட்பது?

டாக்டர் அந்த இருட்டில் மௌனமாக நின்றார்.

சற்று நேரத்துக்குள் கண் இருட்டுக்குப் பழக்கப்பட்டதாகத் தோன்றியது. ஒருவாறாகத் தட்டுத்தடுமாறி பால்கனிப் பகுதிக்கு வந்தார். கீழ்ப்புறத் தளத்திலிருந்த ஜன்னல் மூலமாக வெளிவந்த சன்னமான வெளிச்சத்தில் படிகள் தெளிவற்ற பொருளாகத் தெரிந்தன.

டாக்டர் படிகளில் இறங்கினார். கீழ்த்தளத்தை அடைந்தார். கதவைத் தாண்டி வேகமாக வெளியே வந்தார். மழை இன்னும் நிற்கவில்லை. நடுவயதுக்காரரும் தென்படவில்லை.

வர்மா காருக்குள் நுழைந்தார்.

'எப்படியாவது அங்கிருந்து தப்பித்தால் போதும்!' என்று டாக்டர் நினைப்பதாகத் தோன்றியது.

டாக்டர் திரும்பத் தனது வீட்டை அடைந்தபோது, மணி ஒன்றே கால் ஆகியிருந்தது. அவரைப் பொறுத்தவரை அன்றைய இரவு தூக்கம் வராத ஓர் இரவாக இருந்தது. கண் விழிக்கும் இரவு!

பொழுது விடிந்தபோது நடந்ததெல்லாம் ஒரு கெட்ட கனவு போல் தோன்றியது. இரவு தனக்கு நேர்ந்த அனுபவத்தை டாக்டர் வேறு யாரிடமும் சொல்லவில்லை.

இரண்டு நாட்கள் கடந்தன.

அன்று மதிய வேளையில் ஓய்வாக உட்கார்ந்திருந்தார்.

நல்ல ஒரு தூக்கம் போட்டு எழுந்தபோது மணி ஐந்தானது. வழக்கமான வாக்கிங் புறப்பட்டபோது, அன்றைய அந்த வீடு நினைவில் எழுந்தது. ஏற்கெனவே அந்த அனுபவம் ஒருபோதும் அழியாத ஓர் ஓவியம் மாதிரி அவர் மனத்தின் திரைச்சீலையில் பதிந்திருந்தது.



காரை ஸ்டார்ட் செய்தபோது கைகள், அந்தப் பாதையை நோக்கித் திருப்பியது.

படர்ந்து பரவி வளர்ந்திருந்த ஆலமரத்தை நெருங்கியபோது அவரையும் அறியாமல் அவர் கால் தானாகவே பிரேக்கை மிதித்தது.

உண்டியலும் மரத்தைத் தாங்குவதுபோல் நிறுத்தப்பட்டிருந்த சூலமும் தட்டுப்பட்டன.

சூலத்தின் முனைப்பகுதி சிந்தூரத்தில் மூழ்க வைத்து எடுத்தது போல் சிவந்த நிறத்தில் காட்சியளித்தது.

கார் இடது புறமாகத் திரும்பியது.

இரு புறங்களிலும் புதர்களும் மரங்களும் அடர்ந்து வளர்ந்திருந்த செம்மண் பாதை. பாதை முடிந்த இடத்தில் திரும்பவும் இடதுபுறமாகத் திரும்பினார். அந்தப் பெரிய கட்டடம் இப்போது அவர் கண்களுக்கு நன்றாகத் தெரிந்தது.

பழங்காலத்தைச் சேர்ந்த இரண்டு மாடிக் கட்டடம்.

துருப்பிடித்த கேட், தாழ்ப்பாள்கள் இற்றுப் போனதால் மட்டமல்லாக்க விழுந்து கிடந்தது. அதற்குள் யாரும் வசிப்பதாகத் தெரியவில்லை.

அன்றைக்குப் பார்த்த பெண்மணி அங்கிருந்தால், பார்த்து ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு வரலாம் என்று நினைத்தார். 'இளம்பெண்ணும், அவள் பெற்ற குழந்தையும் ஒருசேர இறந்து போனதில் அவள் ஒரு வேளை தீராத சோகத்தில் ஆழ்ந்திருக்கக் கூடும்' என்று டாக்டர் நினைத்தார்.

இறந்து போனவள், அவள் மகளாக இருக்கலாமோ? அவளைப் பார்த்தால் அத்தனை வயதானவளாகத் தெரியவில்லையே.

வெளிவாசலின் முன்னால் வந்து நின்றார். காலிங்பெல்லின் சுவிட்ச் எதுவும் அங்கிருப்பதாகத் தெரியவில்லை. தம்மை யாராவது கவனிக்கிறார்களா என்று ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, வாசல் கதவை இரண்டு தடவை தட்டினார்.

காதைக் கூர்மையாக்கி, உட்புறமிருந்து ஏதாவது சத்தம் வருகிறதா என்று கவனித்தார். எந்த விதமான சத்தமும் இல்லை.

வியப்படைந்த டாக்டர் ஒரு தடவை சுற்றுப்புறத்தின் மீது விழிகளை ஓட்டியபோது பின்புறத்திலிருந்து காலடிச் சத்தம் கேட்டது.

''யாரது? என்ன வேணுமுங்க உங்களுக்கு?'' கேட்டின் அருகிலிருந்து ஒருவர் கேட்டார்.

வேட்டி உடுத்தி, பெரிய தலைப்பாகை கட்டியிருந்த அந்த மனிதன், டாக்டர் திரும்பியதும் தலைப்பாகையாக இருந்த துண்டை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு பணிவுடன் அவரையே பார்த்தபடி நின்றான்.

''இந்த வீட்டில் யாருமில்லையா?'' டாக்டர் கேட்டார்.

''இந்த வீட்டிலயா கேட்குறீங்க? அது தெரியாதா சார் உங்களுக்கு? இந்த வீட்டில ஆளுங்க குடியிருந்து வருஷம் எத்தனையோ ஆயிடுச்சு. குறைஞ்சபட்சம் அஞ்சு வருஷமாவது ஆகியிருக்கும்!'' தலைப்பாக்காரன் பதிலளித்தான்.

''இங்கே ஒரு அம்மாவும்... பொண்ணும்...'' டாக்டர் சந்தேகத்துடன் இழுத்தவாறு எதிரே தெரிந்த மனிதனைப் பார்த்தார்.

''ஓகோ... அதைப் பத்திக் கேட்குறீங்களா? உங்களுக்கும் அந்த அனுபவம் ஏற்பட்டாச்சா? இது பேய்ங்க உலாவுற வீடு சார். ஒரு காலத்துல இந்த வீட்டில ஒரு அம்மாவும் பொண்ணுமா சேர்ந்து தூக்குப்போட்டுச் செத்துப் போனாங்க. ரொம்பப் பேருக்கு இதே மாதிரியான அனுபவம் உண்டாயிருக்கு.'' பதிலளித்தவன் புறப்பட யத்தனித்தான்.

''இந்த வீடு யாரோடது?'' டாக்டர் விசாரித்தார்.

''தெரியாதுங்களே!'' மேற்கொண்டு அதைப் பற்றிப் பேசுவதில் அவ்வளவாக விருப்பமில்லாதவன் போல், ஒரு தடவை டாக்டரை ஊன்றிப் பார்த்துவிட்டுக் கிளம்பினான்.

டாக்டர் சேதுவர்மா நின்ற நிலையில் அசைய முடியாதவராக



அப்படியானால், தான் கண்ட காட்சிகள்?

நவீன விஞ்ஞானத்துக்குச் சவால் விடும் உண்மையா!

விரைவாக நடந்த டாக்டர் காரை நெருங்கினார்.

சூரியன் மேற்குப்புற மரக்கூட்டங்களுக்கிடையில் மறைந்துவிட்டான்.

எங்கும் இருள் நிழலாகப் பரவத் தொடங்கியிருந்தது.

டாக்டர் காரின் கதவைத் திறந்தார். அப்போது அந்தக் கட்டடத்தின் மேற்புறத்தில் ஒரு ஜன்னல் கதவை மூடும் சத்தம் தெளிவாகக் கேட்டது.

சேதுவர்மாவின் உடல் ஒருமுறை நடுங்கியது.

அவசரமாக ஸ்டார்ட் செய்தவர் ஆக்ஸிலேட்டரில் காலை அழுத்தி மிகுந்த விரைவுடன் காரைச் செலுத்தி அங்கிருந்து புறப்பட்டார்.

வீட்டுக்கு வந்தவர் ஒரு தடவை வெறுமனே திரும்பிப் பார்த்தார்.

தனக்கு நேர்ந்த அனுபவத்தை எவரிடமாவது சொல்லியே தீர வேண்டுமென்று தோன்றினாலும் கேட்பவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்பதால், அதை மனதுக்குள்ளேயே பத்திரமாகப் பூட்டி வைத்தார்.

வாரங்கள் பல கடந்த பிறகும் அந்தக் கட்டடத்துக்குள் கண்ட காட்சி எப்போதும் அவர் சிந்தனையிலேயே சுற்றிச் சுழன்று வந்தது.

அன்று முழுவதும் அவர் கல்லூரியில் இருக்க வேண்டியிருந்தது.

டாக்டர் வர்மா அறைக்குள் உட்கார்ந்திருந்தார்.

இரவு நேரம், மணி இரண்டைத் தாண்டியிருந்தது.

தூங்கக்கூடாது என்பதற்காக ஏதோ ஓர் ஆங்கில இதழைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

''என்ன டாக்டர், தனியாக உட்கார்ந்திருக்க போரடிக்கிறதா?''

கேள்வி கேட்டுத் தலையை உயர்த்தியபோது, எதிரே டாக்டர் ராஜாம்பாள் நின்று கொண்டிருந்தார்.

நாற்பத்தைந்து வயதைத் தாண்டிய ராஜாம்பாள் திருமண மாகாதவர். பேரழகியான ராஜாம்பாள் கல்லூரிக் காலத்தில் நிகழ்ந்த காதல் தோல்வியால் திருமணம் செய்து கொள்ள வில்லை. பார்வைக்கு இப்போதும் முப்பது வயது மதிக்கத்தக்க வராகவே காட்சியளித்தார்.

''ஆமாம்... சும்மா உட்கார்ந்திருந்து போரடித்ததால் பத்திரிகையைப் புரட்டத் தொடங்கினேன். இதை ஏற்கெனவே இரண்டு தடவை ஓர் எழுத்து விடாமல் படித்தாகிவிட்டது...'' டாக்டர் புத்தகத்தை டீப்பாயின் மீது போட்டார்.

''நான் உங்களிடம் ஏற்கெனவே ஒரு பெண்ணைப் பற்றிச் சொல்லியிருந்தேனே, ஞாபகமிருக்கிறதா டாக்டர்? அந்தப் பெண்ணின் அம்மாவை ஒரு தடவை பார்த்துப் பேச விரும்புகிறீர்களா?'' ராஜாம்பாள் கேட்டார்.

''இந்த நேரத்திலா?'' வர்மா கேட்டார்.

''ஆமாம்... அவரிடம் வேலை செய்யும் ஒரு பெண் உடல் நிலை சரியில்லாமல் வந்திருக்கிறாள். நான்தான் அந்தப் பெண்ணை கவனிக்கிறேன்.''

''அப்படியா? எங்கே இருக்கிறார்கள்?''

அதே நேரம் ஒரு பெண்மணி அந்த அறைக்குள் திடுமென்று நுழைந்தார்.

டாக்டர் சேதுவர்மா அந்தப் பெண்மணியை ஊன்றி கவனித்தார்.

அவர் இதயத்துக்குள் சட்டென்று எதுவோ ஒன்று பாய்ந்தாற் போல் இருந்தது.

'யார் இந்தப் பெண்மணி? எங்கோ பார்த்த முகமாக இருக்கிறதே?' டாக்டரின் சிந்தனை ஞாபக அடுக்குகளைத்



அன்றொரு நாள் நள்ளிரவில் இரண்டு மாடிக் கட்டடத் துக்குள் பார்த்த அதே பெண்மணி!

அவள் இன்று இப்போது தனக்கு முன்பாக நிற்கிறாள்'''

தன் நாக்கு உலர்ந்து, தொண்டை வறள்வதாக வர்மாவுக்குத் தோன்றியது!

## 2

அன்று, அந்தப் பழைய பங்களாவில் இறந்துகிடந்த இளம் பெண்ணின் அருகில் உட்கார்ந்திருந்த பெண்மணிதான் தன் முன்பாக நிற்கிறாள் என்பது டாக்டர் வர்மாவுக்கு உறுதியாகத் தெரிந்தது.

''என்ன டாக்டர் பதிலையே காணோம்? ராஜாம்பாள் கேட்டாள்.''

''ஓ... ஒன்றுமில்லை!'' வர்மா விழுங்கியபடி பதிலளித்தார். நள்ளிரவு வேளையில் அப்படியொரு இடத்தில் இந்தப் பெண்மணியைப் பார்த்தோம் என்று சொன்னால், தனக்கு மனநிலை பாதிப்பு ஏற்பட்டதாக ராஜாம்பாள் நினைப்பார் என்று டாக்டர் கருதினார்.

எனவே மௌனமாக நின்றார்.

''இவங்க பெயர் ரத்னபிரபாதேவி. ரத்னபிரபா என்று நாங்கள் கூப்பிடுவோம். பாரீஸ் பியூட்டி பார்லரின் உரிமையாளர். அவங்களுக்கு இது ஒரு பொழுதுபோக்கு மட்டும்தான். எக்கச் சக்கமான பணம் பாங்க்கில் டெபாசிட்டாகத் தூங்குகிறது.'' ராஜாம்பாள் அறிமுகம் செய்து வைத்தார்.

''உட்காருங்கள்!'' டாக்டர், ரத்னபிரபாவின் முகத்தைப் பார்க்காமல் கூறினார்.

ரத்னபிரபாதேவி நாற்காலியில் அமர்ந்தார்.

டாக்டர் வர்மா, அப்போதும் வேறு ஏதோ ஓர் உலகத்தில் மிதந்து கொண்டிருந்தார்.

அன்றைய சம்பவத்தை முற்றிலுமாக மறந்துவிட வர்மா முயன்றார். அப்போது அது முன்பை விட வலுவாக அவர் முன் விஸ்வரூபம் எடுத்து நின்றது.

''உங்கள் குழந்தைக்கு என்ன நேர்ந்தது?'' எதையாவது கேட்க வேண்டும் என்பதற்காக டாக்டர் கேட்டார்.

''உங்களிடம்தான் முதலில் அவளைக் கொண்டுவர வேண்டு மென்று நினைத்தேன். டாக்டர் ராஜாம்பாள் சமீபத்தில்தான் எனக்கு அறிமுகமானவர். பெண்ணுக்குக் குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவுமில்லை. அடிக்கடி அவளுக்குத் தலை சுற்றுகிறதாம். உடம்பில் ரத்தம் குறைவாக இருப்பதுதான் காரணம் என்று சொன்னார்கள். ஹாஸ்டலில் தங்கியிருப்பவள்.'' ரத்னபிரபா விவரித்தாள்.

''உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறது...'' டாக்டர் வர்மா தன் மனத்திலிருப்பதை அடக்க முடியாமல் சொன்னார்.

''இருக்காது டாக்டர்! அதற்கு சந்தர்ப்பமே கிடையாது. நான் இப்போதுதான் உங்களை முதல் தடவையாகப் பார்க்கிறேன். ஒரு வேளை ரோட்டரி கிளப் போன்ற இடத்தில் பார்த்திருக்கலாம்!'' ரத்னபிரபா கூறினாள்.

''அங்கு நான் உங்களை சந்திக்க வழியே இல்லை. நான் ஜேஸீஸ் மெம்பர்!'' வர்மா மறுத்தார்.

''டாக்டர் எப்போது எங்கள் வீட்டுக்கு வருகிறீர்கள்?'' ரத்னபிரபா கேட்டாள். இதுவரையில் வர்மா அவள் முகத்தைப் பார்க்காமல் தவிர்த்தார் எனலாம். அந்த முகத்தைப் பார்க்க வேண்டாம் என்று டாக்டர் தவிர்ப்பது நன்றாகத் தெரிந்தது.

நேற்றுத்தான் அந்த பங்களாவின் அருகே தட்டுப்பட்ட மனிதன் சொல்லியிருந்தான் - ஒருசில வருடங்களுக்கு முன்னால் தாயும் மகளும் ஒரே நேரத்தில் தற்கொலை செய்துகொண்டு இறந்து போனதாக. அப்படி இறந்துபோன தாய் தற்போது தனக்கு முன்னால் நிற்கிறாள்!

எதை நம்புவது?



''எங்கு தங்கியிருக்கிறீர்கள்?'' வர்மா விசாரித்தார்.

''கிறிஸ்டியன் கிளப்புக்கு அருகில் ஒரு வாடகை வீட்டில் குடியிருக்கிறோம். ஒரு பழைய பங்களாவை விலைக்கு வாங்கி யிருக்கிறேன். அதைக் கொஞ்சம் பழுது பார்க்க வேண்டியிருக் கிறது. எல்லாவிதமான வசதிகளும் நிறைந்த பங்களா.'' ரத்னபிரபா கூறினாள்.

''பழைய கட்டடம்!'' வர்மா தனக்குத்தானே என்பதுபோல் சொல்லிக்கொண்டார்.

''ஒரு வாரத்துக்குள் அனேகமாக அந்த பங்களாவின் வேலைகள் முடிந்து விடும் என்று நினைக்கிறேன்... உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.''

''நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். நான் இதோ வந்து விடுகிறேன்!'' டாக்டர் ராஜாம்பாள் அங்கிருந்து புறப்பட்டார்.

தன்னுடன் ரத்னபிரபாதேவி மட்டும் தனியாக இருந்ததால், டாக்டர் சேதுவர்மாவுக்குள் ஏதோ காரணமற்ற ஒருவித பயம் தோன்றியது. தனது பயத்தை எதிராளி உணர்ந்து கொள்ளக்கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வும் தெரிந்தது.

''நீங்கள் விலைக்கு வாங்கியிருக்கும் பங்களா சுவரில், காட்டுக் கொடிகள் ஏராளமாகப் படர்ந்து வளர்ந்திருக்கிறதா?'' டாக்டர் கேட்டார்.

''அப்படியானால் உங்களுக்கும் அந்த பங்களா எங்கிருக் கிறது என்பது தெரியும். உண்மையாகவா சொல்கிறீர்கள்?'' அவள் ஆர்வத்துடன் கேட்டாள்.

'' ஆமாம்... தெரியும்!''

அதற்குள் டாக்டர் ராஜாம்பாள் திரும்பிவந்து மற்றொரு நாற்காலியில் அமர்ந்தார்.

''உங்களை அந்தப் பெண் தேடுகிறாள்!'' ராஜாம்பாள், ரத்னபிரபாவிடம் கூறினார்.

''அப்படியானால் நான் வரட்டுமா?'' ரத்னபிரபா எழுந்து வெளியே போனாள்.

''எப்படி... நன்றாகப் பழகுகிறார்களா அந்த அம்மா?'' வர்மாவை நோக்கிக் கேட்டார் ராஜாம்பாள்.

''புரிந்துகொள்ள முடியவில்லை.'' டாக்டர் வர்மா ராஜாம் பாள் முகத்தைப் பார்த்தபடி பேசினார்: ''தோற்றம்... பேச்சு... இதை யெல்லாம் வைத்து என்னால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ஆக மொத்தம் நான் மிகவும் குழப்பத்தில் இருக்கிறேன்.''

''குழப்பமா? எதனால் குழப்பம்?''

''ம்... அது கிடக்கட்டும் விடுங்கள். இந்தப் பெண்மணியின் முன்கதை ஏதாவது உங்களுக்குத் தெரியுமா?'' டாக்டர் வர்மா விசாரணையில் இறங்கினார்.

''ரொம்ப நாள் வெளியூரில் எங்கோ இருந்தார். பியூட்டீஷியன் கோர்ஸ் படித்திருக்கிறார். ஹெர்பல் சிகிச்சையும் செய்கிறார். எத்தனை வயதான பெண்ணாக இருந்தாலும் சின்னப் பெண்ணாக மாற்றி விடுகிறார்.''

''உண்மையாகவா?''

''பியூட்டி பார்லர்களின் வேலையே அதுதானே? இவர் திறமையைப் பார்த்து, தொழில் கற்றுக் கொள்வதற்காகப் பலர் வந்து சேருகிறார்கள்.''

''நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாகவே இருக்கட்டும். அவர் மகளுக்கு நான் எந்த வகையில் பொருத்தமானவன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?''

''என்னை மடக்குவதற்காகக் கேட்கிறீர்கள். இருக்கட்டும், பரவாயில்லை... சொல்கிறேன் கேளுங்கள்! அவர்களும் கோவிலகத்தைச் சேர்ந்தவர்கள். சொத்துபத்தும் ஏராளம். அவர் மகளை நீங்கள் பார்த்ததில்லையே, அப்படியொரு அழகி! அடக்கமான பெண். டாக்டர், உங்களுக்கு இனிமேல் அப்படி யொரு பெண்தான் தேவை. நான் அப்படி நினைத்ததால்தான் இதில் ஈடுபட்டேன்.''

''ம்... எதற்கும் மகளையும் நான் ஒரு தடவை பார்த்துக் ...கிறேன்.'' வர்மா சற்று அழுத்தமான குரலில் கூறினார்.



''நாம் ஒருநாள் போய்ப் பார்த்தால் போகிறது.''

''கண்டிப்பாகப் போகவேண்டும்!'' வர்மாவின் மனத்தில் அப்போதும் அன்று இரவு நடந்த சம்பவங்கள் தெளிவடைந்தன.

மறுநாள் டாக்டருக்கு விடுமுறை நாள்.

காலைப் பலகாரத்தை முடித்துக்கொண்டு மருத்துவப் புத்தகம் ஒன்றைப் புரட்டியபோது போஸ்ட்மேன் வந்தார்.

அவர் கையில் ஒரு பார்சல் இருந்தது.

போஸ்ட் ஆபீஸ், வர்மாவின் வீட்டுக்கு அருகில் இருந்த தால், முதலில் அவருக்குரிய பார்சலைக் கொடுத்து விட்டுப் போகலாம் என்று போஸ்ட்மேன் நினைத்திருக்க வேண்டும்.

வி.பி.பி. தபாலில் வந்த ஒரு புத்தகம் அது.

போஸ்ட்மேனை அனுப்பிய பிறகு பார்சலைப் பிரித்து டாக்டர் புத்தகத்தை வெளியே எடுத்தார். 'மிஸ்ட்ரி இன்டீடு அண்ட் சஸ்பென்ஸ்' என்ற பிரபலமான புத்தகம் அது.

பேய்-பிசாசு மற்றும் ஆவிகளைப் பற்றி விவாதிக்கும் ஒரு புத்தகம். இவற்றின் நடமாட்டம் மற்றும் செயல்பாடுகளைக் குறித்த கட்டுரைகளும், அனுபவமாக உணரப்பட்ட உண்மை சம்பவங்கள் சிலவும் அதில் இடம் பெற்றிருந்தன.

'ஒரு தடவை கோமாவில் விழுந்த ஒரு பெண்மணியை அவள் இறந்துவிட்டதாக டாக்டர்கள் கொடுத்த சான்றிதழால் முறைப்படி அடக்கம் செய்துவிட்டனர். ஆனால், இறக்காத அந்தப் பெண்மணியின் ஆவி மற்றொரு பெண் குழந்தையின் உடம்பில் புகுந்துகொண்டது. அந்த பெண் குழந்தை பார்த்தே யிராத, கேள்விப்பட்டிராத முந்தைய பெண்மணியின் பெய ரையும், அவளை அடக்கம் செய்த இடத்தையும் குறிப்பிட்டுக் கூறியது. கூடவே கோமா நிலையில் இருக்கும்போதே இறந்துவிட்டதாகத் தீர்மானித்து அடக்கம் செய்து விட்டதையும் கூறியது. மூன்று நாட்களுக்குப் பிறகு அவர் கோமாவிலிருந்து விடுபட்டு எழுந்ததாகவும் அந்தக் குழந்தை தெரிவித்தாள்.

பெண் குழந்தை சொல்வது உண்மைதானா என்பதை அறிவதற்காக போலீஸ் மற்றும் மருத்துவக்குழு ஒன்று வெகு தொலைவிலிருந்து குறிப்பிட்ட கல்லறையை நோக்கிக் கிளம்பியது. கல்லறையைத் தோண்டிப் பார்த்தபோது கண்ட காட்சி மிகவும் பயங்கரமானதாக இருந்தது.

இறந்துபோன பெண்மணியின் எலும்புக்கூடு ஒருபுறமாகச் சரிந்த நிலையில் கிடந்தது. தலை மறுபுறம் திரும்பியிருந்தது. ஒரு கை, சவப்பெட்டியின் முடியைத் திறப்பதற்காக முயற்சி செய்தது விளங்கியது...'

யாரோ கதவைத் தட்டினார்கள்.

டாக்டர் திடுக்கிட்டார்.

நிமிர்ந்து பார்த்தபோது ஜன்னலின் மறுபுறம் ஒரு மனிதன் நின்றிருந்தான். இளைஞன்.

''யாரது, அடையாளம் தெரியவில்லையே?'' டாக்டர் கேட்டார்.

''உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்வதற்காக வந்திருக்கிறேன்.'' இளைஞன் சுற்றுமுற்றும் பார்த்தபடி பதிலளித்தான்.

''இப்படி வந்து உட்காருங்கள்.'' உட்புறமாக அவனை அழைத்த டாக்டர், அவன் உட்கார்வதற்காக நாற்காலி ஒன்றைச் சுட்டிக்காட்டவும் செய்தார்.

இளைஞன் உள்ளே வந்து அமர்ந்தான்.

''நீங்கள் யாரென்று தெரியவில்லையே?'' டாக்டர் கேட்டார்.

''என் பெயர் சுமேஷ். நான் ஒரு ஆர்ட்டிஸ்ட். சில நாட்களுக்கு முன் நான் உங்களுக்கு ஒரு போன் செய்தேன். ஞாபகமிருக்கிறதா - மழை பெய்து கொண்டிருந்த ஒரு இரவில்...'' இளைஞன் கேட்டான்.

''ஆமாம். ஞாபகமிருக்கிறது. நான் அடிக்கடி அந்த சம்பவத்தை நினைவு கூர்வதுண்டு. ஓகோ, அன்று எனக்கு போன்



செய்தது நீங்கள்தானா? யார் கேட்டுக்கொண்டதற்காக அப்படிச் செய்தீர்கள்?'' டாக்டர் ஆவலுடன் கேட்டார்.

''நான் அன்று அவசரமான ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தேன். மிக அவசரமாகச் செய்து முடிக்கவேண்டிய வேலை அது. சுமார் பதினோரு மணி தாண்டிய பிறகு ஒரு பெண்மணி என்னிடம் வந்தார். நன்றாக மழை பெய்து கொண்டிருந்தது. இருந்தாலும் அந்தப் பெண்மணியின் உடலில் கொஞ்சம்கூட ஈரம் இல்லாமலிருந்தது. இதையெல்லாம் அப்புறம்தான் யோசிக்க முடிந்தது. அவர் சொல்லித் தந்தது போலவே உங்களிடம் போனில் பேசினேன். ஆனால், அது ஒரு சிக்கலான சம்பவம் என்பதை நேற்றுதான் தெரிந்து கொண்டேன்.''

''எப்படி?''

''அந்த வீட்டில் மனிதர்கள் யாருமே குடியிருக்கவில்லை. இப்படியொரு முட்டாள்தனத்தை நான் இதற்கு முன்பு செய்ததில்லை. நீங்கள் அங்கு போனீர்களா சார்? அந்தப் பெண்மணியை அங்கு பார்த்தீர்களா?'' இளைஞனின் குரலில் ஆர்வம் தெரிந்தது.

''போனேன். நீங்கள் குறிப்பிட்ட பெண்மணியைப் பார்க்கவும் செய்தேன். இளம்பெண் ஒருத்தியும், அவள் பெற்றெடுத்த குழந்தையும் இறந்து போயிருந்தனர்.''

''சே... சரியான பித்தலாட்டம் சார். நேத்துதான் ஒருத்தர் சொன்னார், இதே மாதிரி பலபேர் ஏமாந்து போயிட்டதா! அந்த வீட்டுல அற்ப ஆயுசில ரெண்டுபேர் இறந்து போயிட்டாங்களாம். சமீபத்தில் அந்த வீட்டை யாரோ விலைக்கு வாங்கி இருக்கிறார்களாம். பாவம் அவர்கள் எப்படித்தான் அங்கு வசிக்கப் போகிறார்களோ?''

''யோசிக்க வேண்டிய விஷயம்தான். இந்தப் பின்னணியில் உள்ள நோக்கம் என்ன என்பது விளங்கவில்லையே?'' டாக்டர் கூறினார்.

''நான் வரட்டுங்களா? உங்களுக்குத் தொல்லை கொடுத்ததுக்கு மன்னிக்கணும் சார்.'' இளைஞன் எழுந்து போனான்.

ஒரு வாரம் கடந்தது.

கடந்த வாரம் முழுவதும் ரத்னபிரபாதேவியை டாக்டர் வர்மா சந்திக்கவில்லை. ஓரிரண்டு தடவை சேதுவர்மா அவளைப் பற்றிப் பேச்சை எடுத்தபோதும், ராஜாம்பாள் அதைக் காதில் வாங்கியதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

அந்த வாரத்தின் கடைசி நாளன்று...

டாக்டர் வர்மா தனக்கு வந்த கடிதங்களையெல்லாம் எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சமீபகாலமாக ஒரு சில பத்திரிகைகளில் பெண்கள் சம்பந்தமான கட்டுரைகளை சேதுவர்மா எழுதுவதால் அது தொடர்பாக அவ்வப்போது கடிதங்கள் வருவதுண்டு. தங்களுக்கு உள்ள நோய்களைப் பற்றியும் அதற்குச் செய்ய வேண்டிய சிகிச்சை குறித்த சந்தேகங்களும் சில கடிதங்களில் இடம் பெறுவதுண்டு. இம்மாதிரியான கடிதங்கள் பெரியதாகவும் இருப்பதுண்டு.

பளபளக்கும் ஃப்ளோராசென்ட் மையால் அச்சடிக்கப்பட்ட அழைப்பிதழ் ஒன்று அந்தக் கடிதங்களுக்கு மத்தியில் இருந்தது.

ஆவல் நிறைந்த டாக்டர் அந்த உறையைப் பிரித்தார். அதற்குள் ரத்னபிரபாதேவியின் புதிய வீட்டின் கிரகப்பிரவேச விழா அழைப்பிதழ் இருந்தது.

மறுநாள் காலையில் ஒன்பது மணியிலிருந்து ஒன்பத ரைக்குள் 'பால் காய்ச்சும்' வைபவம் நடைபெறப் போகிறது. அதைப் படிக்கும்போது தொலைபெசி மணியடித்தது.

டாக்டர் ராஜாம்பாளிடமிருந்து வந்த போன் அது.

''இன்விடேஷன் கார்டு வந்ததா உங்களுக்கு? விழாவுக்குப் போகிறீர்களா?'' என்று கேட்டார் ராஜாம்பாள்.

போகப் போவதாக டாக்டர் பதிலளித்தார்.

''அப்படியானால் இருவரும் ஒன்றாகவே போகலாம்'' என்று எதிர்முனை பதிலளித்தது. டாக்டர் ராஜாம்பாளின் கார்



ரிப்பேருக்காக ஒர்க் ஷாப்பில் இருப்பதாகவும், அதனால் டாக்டர் வர்மாவுடன் வர விரும்புவதாகவும் அவர் கூறினார். ராஜாம்பாளின் இருப்பிடத்துக்கு வந்து அழைத்துக் கொள்வதாக வர்மா கூறவும் செய்தார்.

அன்று ஒரு நாளிலேயே வர்மா அந்த அழைப்பிதழைப் பலமுறை எடுத்துப் படித்தார்.

அதனுடன் டாக்டர் வர்மாவுக்கு ஏதோ ஒரு பிரத்தியேகமான ஈர்ப்புத் தோன்றியது.

இரவில் படுத்த பிறகும் அன்றொரு நாள் இரவில் நடந்த சம்பவம் அவர் நினைவில் தெளிவாக எழவே செய்தது. நடுவயதுப் பெண்மணியும் இளம்பெண்ணும் படுத்திருந்த அறைக்குள் மறுபடியும் ஒரு தடவை நுழைந்து பார்ப்பது என்று தீர்மானித்தார் டாக்டர் வர்மா.

காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு டாக்டர் காரில் ஏறி, ஸ்டார்ட் செய்தார்.

டாக்டர் ராஜாம்பாள் தன்னுடைய குவார்ட்டார்ஸுக்கு வெளியே தயாராக நின்றிருந்தார். இப்போது அவரைப் பார்ப்பவர்கள் எவரும் அவரை முப்பது வயதுக்கு மெல் மதிப்பிட மாட்டார்கள். அசப்பில் அப்போது பிரபலமாகியிருந்த ஒரு சினிமா நடிகை மாதிரி தோற்றமளித்தார்.

''ரொம்ப நேரமாகக் காத்திருக்கீங்களா?'' வர்மா கேட்டார்.

''அதிகமாகப் போனால் ஐந்து நிமிடங்கள் ஆகியிருக்கலாம். அவ்வளவுதான்.''

''சரி, புறப்படுங்கள்!'' டாக்டர் வர்மா தனது கைக்கடியாரத்தைப் பார்த்தவாறு கூறினார்.

''ஏதாவது சாப்பிடுகிறீர்களா?'' ராஜாம்பாள் கேட்டார்.

'' வேண்டாம். இனிமேல் சாப்பிடுவதெல்லாம் அங்கு போன பிறகுதான். நேரமாகிறது புறப்படுங்கள்.''

ராஜாம்பாள் காரில் ஏறினார்.

டாக்டர் வர்மாவின் அருகில் முன்புற ஸீட்டின் இடது புற இருக்கையில் அமர்ந்தார் ராஜாம்பாள்.

அலுப்பேற்படுத்தாத பெர்ஃப்யூமின் அருமையான மணம் அவர் உடம்பிலிருந்து மென்மையாகத் தவழ்ந்தது.

டாக்டர் வர்மாவுக்குப் பாதை தெரியுமாதலால், வண்டி ஓட்டுவதில் எந்தவிதச் சிரமமும் இருக்கவில்லை.

ஒவ்வொரு வளைவு திரும்பும்போதும், நாற்சந்தி மற்றும் முச்சந்திகளில் தடுமாறாமல் வண்டி பாதை மாறும்போதும் ராஜாம்பாள், டாக்டர் வர்மாவைக் கவனித்தார்.

''டாக்டர், இதற்கு முன்பு இந்த இடத்துக்கு வந்து இருக்கிறீர்களா?''

''வந்திருக்கிறேன்.''

''உண்மையாகவா?''

''ஒரு தடவை வரவேண்டியிருந்தது!''

''ரத்னபிரபா, இந்த பங்களாவை வாங்கிய பிறகா போனீர்கள்?'' ராஜாம்பாள் வியப்புடன் கேட்டார்.

''இல்லை, அதற்கு முன்னால்!''

''நாலைந்து வருடமாக அங்கு யாரும் குடியிருக்கவில்லையே!'' டாக்டர் ராஜாம்பாள், டாக்டர் வர்மாவின் முகத்திலிருந்து பார்வையை விலக்காமல் கேட்டார்.

''அது ஒரு கதை. சாவகாசமாக அதை இன்னொரு நாள் உங்களுக்குச் சொல்கிறேன் டாக்டர்.''

கார் பண்ணார மூலையை அடைந்தது.

அப்போதும் அங்கிருந்த சூலத்தில் குங்குமம் அப்பிக் கிடந்தது. ஆலமரத்திலிருந்து வடிந்த ரத்தம் போலவே தோன்றியது அந்தச் சிவப்பு.

''பயங்கரமான இடம்தான்!'' வளைந்து நெளிந்து பரவிக் கிடந்த வேர்களைக் கவனித்த ராஜாம்பாள் கூறினார்.



''பக்கத்தில் வேறு எந்த வீடும் கிடையாது. மொத்தத்தில் ஒரு காட்டுக்குள் வந்துவிட்டதுபோல் இருக்கிறது!'' சொல்லிய வர்மா காரை இடதுபுறமாகத் திருப்பினார்.

சற்றுத் தூரம் போன பிறகு கார் மறுபடியும் இடதுபுறம் திரும்பியது. உடனே வலது புறமிருந்த கேட்டுக்குள் நுழையவும் செய்தது.

முற்றத்தில் ஏற்கெனவே மூன்று கார்கள் நின்றிருந்தன.

டாக்டரின் காரைத் தொடர்ந்து வேறு இரண்டு கார்களும் வந்தன.

இருவரும் காரிலிருந்து இறங்கினர்.

ரத்னபிரபாதேவி வரவேற்பதற்காக வாசலிலேயே காத்திருந்தாள்.

''வழி கண்டுபிடிப்பதில் சிரமம் ஏதும் இருந்ததா உங்களுக்கு?'' ரத்னபிரபா. ராஜாம்பாளைப் பார்த்துக் கேட்டார்.

''டாக்டருக்கு வழி தெரிந்திருக்கிறது. மட்டுமில்லாமல் டாக்டர்...'' ராஜாம்பாள் மேற்கொண்டு பேச முற்படுவதற்குள் டாக்டர் வர்மா குறுக்கிட்டார்.

''அதோ பாருங்கள்... யாரெல்லாமோ வருகிறார்கள்.'' வர்மா கேட்டின் பக்கம் கையைக் காட்டி விட்டு வீட்டுக்குள் நுழைந்தார். ராஜாம்பாள் அவரைத் தொடர்ந்தார்.

''பிரமாண்டமாக இருக்கிறது!'' விசாலமான வரவேற்பு ஹாலைப் பார்த்த ராஜாம்பாள் கூறினார்: ''அப்படியானால் அதிகமாக விலை கொடுத்திருக்க வேண்டும்!''

வர்மா படிக்கட்டை நோக்கி நடந்தார்.

வரவேற்பு ஹாலில் இளம்பெண்கள் கூட்டமாக இருந்தனர். ஆங்காங்கே போடப்பட்டிருந்த டேபிள்களில் பரிமாறப்பட்ட உணவு வகைகள் ஆவியுடன் மணம் பரப்பின.

பார்வையாளர்கள் நாலைந்து பேராக பங்களாவின் ஒவ்வொரு பகுதியையும் சுற்றிப்பார்த்து வந்தனர்.

"இந்தப் பெண்களில் பெரும்பாலானோர் பியூட்டி பார்லரின் மாணவிகள்தான்!" ராஜாம்பாள் கூறினார்.

"எல்லாருமே பியூட்டிஃபுல்லாகத்தான் இருக்கிறார்கள்." வர்மா தனக்கும் நகைச்சுவை வரும் என்பதைக் காட்டினார்.

சட்டென்று ராஜாம்பாளின் சினேகிதி ஒருத்தி வந்து அவரைப் பிடித்துக் கொள்ளவே, ராஜாம்பாள் அவளுடன் பேசத் தொடங்கினார்.

அந்தத் தருணத்தைப் பயன்படுத்தி வர்மா மெதுவாக அங்கிருந்து நழுவினார்.

படிகளில் ஏறியவர் பால்கனியை அடைந்தார். தனக்குப் பழக்கமான அதே பாதை!

அன்று இருட்டில் நடந்திருந்தாலும் அந்த நினைவு நேற்றுப் போல் பசுமையாக இருந்தது.

வலதுபுறம் திரும்பினார். இரண்டாவது அறையின் வாசலை அடைந்தார்.

அறைக்கதவு மூடியிருந்தது. அந்தப் பகுதியில் எவரும் தென்படவில்லை.

குறுகலான அந்த வராந்தாவில், மங்கலான வெளிச்சத்தில் வர்மா மேலும் முன்னேறினார். அது ஒரு ஜன்னல் அருகே சென்று முடிந்தது.

திரும்பி நடந்தவர் மறுபடியும் அந்த அறைவாசலின் முன் நின்றார்.

கதவைத் தள்ளிப் பார்த்தார்.

'கரகர'வென்ற சத்தத்துடன் கதவு உள்வாங்கித் திறந்து கொண்டது.

உட்புறமாகக் காலெடுத்து வைக்கும்போது வர்மாவின் நெஞ்சம் அதி விரைவாகத் துடிப்பதை உணர்ந்தார்.

உள்ளே அதே பழைய கட்டில் கிடந்தது.



எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆனால், கட்டிலின் மீது படுக்கை எதுவுமில்லை. அன்று பார்த்தபோது கட்டிலில் படுக்கை எதுவும் விரிக்கப்பட்டிருந்ததா?

வர்மா யோசனையில் ஆழ்ந்தார்.

சரியாக ஞாபகம் வரவில்லை.

புகைபடிந்த ஒரே ஒரு சிறிய சிம்மினி விளக்கு மட்டும் தானே அந்த அறையிலிருந்தது?

வர்மா கட்டிலை நெருங்கினார்.

அன்று இரவு கட்டிலின் அடியில் கிடப்பதாகச் சொல்லப் பட்ட குழந்தையின் உடலை டாக்டர் பார்க்கவே இல்லை.

தன்னையும் மீறி அந்தப் பகுதியைப் பார்த்தார்.

"என்ன!" வாயிலிருந்து வார்த்தை அவர் கட்டுப்பாட்டையும் மீறி வெளியே வந்து விழுந்தது.

ரத்தம்!

கட்டிலுக்கு அடியில் ரத்தம் கட்டி தட்டி உலர்ந்திருந்தது!

ஆங்காங்கே ரத்தத் துளிகள்!

கண்களில் பனிப்படலம் சூழ்வதாகத் தோன்றியது வர்மாவுக்கு.

பின்புறத்தில் ஏதோ காலடியோசை கேட்டது.

டாக்டர் சேதுவர்மா உடனே தலையைத் திருப்பிப் பார்த்தார்.

## 3

"யாரது, டாக்டர் வர்மா சாரா வந்திருக்கிறார்?" கேட்டது வேறு யாருமல்ல, ரத்னபிரபாதேவியேதான்.

டாக்டர் கையும் களவுமாகப் பிடிபட்டதைப் போன்ற உணர்வுடன் அங்கிருந்து திரும்பி நடக்கத் தொடங்கினார். அதன்

பிறகு ரத்னபிரபா வேறு எதையும் அவரிடம் கேட்கவில்லை. படிகளில் இறங்கிக் கடந்து போனாள்.

டாக்டர் வர்மா யோசனையில் ஆழ்ந்தார்.

'தான் அந்த அறைக்குள் இருக்கிறோம் என்பது ரத்ன பிரபாவுக்கு எப்படித் தெரிந்தது? ஏற்கெனவே வந்தவர்களையும் வருபவர்களையும் விட்டுவிட்டு... அல்லது அவர்களை வரவேற்கும் வேலையை நிறுத்திவிட்டு தன்னை கவனித்துக் கொண்டிருந்தாளா என்ன? இவ்வளவு பரபரப்புக்கு நடுவிலும் தம்மீது ஒரு கண் வைத்திருக்கிறாளோ என்னவோ?

அப்படியென்றால்...

அன்று இந்த அறைக்குள் பார்த்த பெண்மணியும் ரத்னபிரபாவும் ஒரே நபர்தானா? அது உண்மையாக இருந்தால், இந்த ரத்னபிரபா யார்?'

டாக்டர் வர்மா குழம்பிய சிந்தனைகளுடன் வரவேற்பு ஹாலை அடைந்தார். எல்லாரும் சிற்றுண்டிக்கு முன் அமர்ந்து சாப்பிடத் தொடங்கும் நேரம் டாக்டர், ராஜாம்பாளின் அருகே வந்தார்.

''எங்கே போயிருந்தீர்கள் டாக்டர்?'' ராஜாம்பாள் கேட்டார்.

''பங்களாவைச் சுற்றிப் பார்க்கலாம் என்று போனேன்.''

''சரி வாருங்கள் சாப்பிடலாம்!'' ராஜாம்பாள் வற்புறுத்தினார்.

''சரி வாருங்கள் சாப்பிடலாம்!'' ராஜாம்பாள் வற்புறுத்தினார்.

ராஜாம்பாளுடன் நடந்த டாக்டர் ஒரு டேபிள் முன்னால் அமர்ந்தார்.

தேவைப்பட்டவர்கள் தேவையானதை தேவையான அளவுக்கு எடுத்துச் சாப்பிடும் பஃபே முறையில் எல்லாப் பொருள்களும் வரிசைப்படி அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

வர்மா இரண்டு பிஸ்கட்டுகள், கொஞ்சம் முந்திரிப்பருப்பு மற்றும் ஒரு குளிர்பானத்துடன் மெனுவை முடித்துக் கொண்டார்.

''ரத்னாபிரபாதேவியின் கணவர் எங்கு இருக்கிறார்?'' வர்மா,



''அப்படி ஒருவர் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை!''

''அவருக்கு ஒரு மகள் இருப்பதாகச் சொன்னீர்களே! அப்படியானால், ஒரு அப்பா இருக்க வேண்டுமே. என்னைப் போன்ற ஒருவர் திருமணம் செய்ய விரும்பினால், இதை யெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் இல்லையா?''

''உண்மையைச் சொல்லட்டுமா? இதுவரை நான் அதைப் பற்றி எதுவும் கேட்கவில்லை. ஒருவேளை ஏதாவது நம்பூதிரி யாகக் கூட இருக்கலாம்!''

''ம்... அப்படியும் இருக்கலாம். மற்றொரு விஷயம், நாம் இதுவரை கல்யாணப் பெண்ணைப் பார்க்கவில்லையே!'' வர்மா கேட்டார்.

''இப்போது இந்த வீட்டுக்குள் அந்தப் பெண் இல்லை யென்று நினைக்கிறேன். ஒருவேளை ஹாஸ்டலில் தங்கியிருக் கலாம்.''

''நீங்கள் கூடவா இவரை அந்தப் பெண்ணைப் பார்த்த தில்லை?''

''பார்த்திருக்கிறேன். ஒன்று செய்யலாமா? இன்னொரு நாள் நாம் அதற்கென்று ஒரு தடவை வந்துவிட்டால் போகிறது. இப்போது இங்கு இருந்தால் நமக்கு அறிமுகம் செய்து வைத்திருப்பார். அதோ ரத்னபிரபா வருகிறார். நானே கூப்பிட்டுக் கேட்கிறேன்.'' ராஜாம்பாள் அங்கிருந்து எழுந்து போனார்.

ரத்னபிரபாவுடன் டாக்டர் ராஜாம்பாள் திரும்பி வந்தார். ராஜாம்பாள் விவரம் கேட்டிருக்க வேண்டும்.

''இன்றைய பரபரப்புக்கு நடுவே என்னால் விவரமாக உட்கார்ந்து பேச முடியவில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாமே!'' ரத்னபிரபா பேசினாள்: ''சரண்யா இன்று வரவில்லை; வரமுடியவில்லையாம்!''

'ஓகோ, அப்படியானால் மகளின் பெயர் சரண்யா...' வர்மா மனத்துள் அந்தப் பெயரைக் குறித்துக் கொண்டார்.

''சரண்யா என்னை மாதிரியில்லை. ரொம்ப அழகாக இருப்பாள்!'' ரத்னபிரபாதேவி சிரித்தவாறு கூறினாள்.

''என்ன இப்படிச் சொல்லிட்டீங்க! தற்பெருமையே கிடையாதா உங்களுக்கு?'' ராஜாம்பாள் கேட்டாள்.

''சும்மா ஒரு வேடிக்கைக்காகச் சொன்னேன். வேறொன்றும் இல்லை.'' ரத்னபிரபா மறுபடியும் சிரித்தாள்.

'நான் அன்று பார்த்த இளம்பெண்தான் சரண்யாவாக இருக்க வேண்டும்!' வர்மாவின் மனத்தில் இயற்கைக்குப் பொருந்தாத சிந்தனையொன்று எட்டிப் பார்த்தது.

'அந்தப் பெண் சரண்யாவாக இருந்தால், தனக்கு முன்னால் இறந்து கிடந்த அவள் எப்படி மறுபடியும் உயிருடன் எழுந்து வரமுடியும்?'

''சரி நாங்கள் புறப்படட்டுமா? மதியம் எனக்கு ஒரு அவசரமான வேலை இருக்கிறது.'' டாக்டர் ராஜாம்பாள் நழுவிய புடவைத் தலைப்பைச் சரி செய்தபடி எழுந்தார்.

ரத்னபிரபா அவர்களுடன், அவர்கள் கார் வரை வந்தாள்.

தன்னுடைய வீட்டுக்கு வந்த பிறகும் வர்மாவின் மனத்தில் அந்த சந்திப்பு நிழலாடியது.

மீண்டும் மீண்டும், அன்றொரு நாள் நள்ளிரவில் நடந்த சம்பவங்கள் மேன்மேலும் தெளிவடைகிறது மனத்தில்.

குறிப்பிட்டுச் சொல்வதானால் கட்டிலுக்கு அடியில் அவர் பார்த்த ரத்தத் துளிகள்!

'ஆள் யாருமே குடியிருக்காத அந்தக் கட்டடத்துக்குள் அது எப்படி வந்தது? அன்று நடந்ததெல்லாம் ஒரு மாயத்தோற்றம் என்றால் ரத்தத் துளிகள் அங்கிருக்க வழியில்லையே?' வர்மாவின் சிந்தனைகள் குழப்பத்திலிருந்து விடுபடவில்லை.

மதிய உணவை ஹோட்டலிலிருந்து வரவழைத்தார். காரணம் சமையல்காரருக்கு அன்று விடுமுறையளித்திருந்தார்.



வழக்கத்துக்கு விரோதமாக மதியம் உறங்கி எழுந்து கிளாஸிலிருந்து டீயை ஊற்றிக் குடிக்கும்போது காரியஸ்தர் சங்கர வாரியர் வந்து சேர்ந்தார்.

வாரியரின் முந்தைய வருகைக்கும் இந்த வருகைக்கும் நடுவே சரியாக ஒரு மாத இடைவெளி இருந்தது.

''வாருங்கள் வாரியரே, என்ன விசேஷம்?''

சங்கரவாரியர், டாக்டர் சேதுவர்மாவை தம்புரான் என்று அழைப்பது வழக்கம். இப்படி அழைக்காதீர்கள் என்று டாக்டர் எத்தனையோ தடவை சொல்லியிருந்தாலும், காரியஸ்தரின் வாயில் அதைத் தவிர வேறு வார்த்தை வருவதே இல்லை.

''நான் இப்ப வந்தது தம்புரான்கிட்ட ஒரு புதிய சேதி சொல்றதுக்காக...'' வாரியர், தான் கொண்டு வந்திருந்த பொட்டலத்தை டீப்பாய் மீது வைத்தபடி கூறினார்.

பொட்டலத்துக்குள் தேங்காய் மற்றும் பாக்கு விற்ற பணம், நோட்டுக் கத்தையாக மாறியிருந்தது.

''அது என்ன புதிய சேதி?'' வர்மா கேட்டார்.

''நமது தோப்பின் மேற்குப்புற ஓரத்திலுள்ள இல்லத்தை யாரோ ஒருவர் விலைக்கு வாங்கியிருக்கிறார்!'' வாரியர் தெரிவித்தார்.

''அப்படியா... மிகவும் புராதனமான அந்த இல்லத்தையா வாங்கியிருக்கிறார்கள்? ஒருவேளை வீட்டைப் பிரித்து மரப்பொருள்களை விற்பனை செய்பவராக இருக்கலாம்.'' வர்மா கூறினார்.

பழைய இல்லங்களை விலைக்கு வாங்கி அதிலுள்ள மரப் பொருள்களை விற்பனை செய்வதற்கென்றே சிலர் இருந்தனர். மிகவும் குறைந்த விலையில் வாங்கப்படும் கட்டடங்களிலிருந்து பிரித்து விற்பனை செய்யும் மரங்களின் மதிப்பு சில நேரம் லட்சங்களைத் தாண்டுவதும் உண்டு. பெரும்பாலான மனைகள் தேக்கு மற்றும் கருங்காலி மரங்களால் கட்டப்பட்டிருந்ததே காரணம்.

''இந்த இல்லத்தை வாங்கியிருப்பவர் ஒரு பெண்மணி. வெறும் ஐம்பதாயிரம் ரூபாயில் அந்த இல்லம் கைமாறியிருக் கிறது. அதனால் பழைய மரங்களைப் பிரித்து விற்கும் நோக்கம் இல்லையென்று தோன்றுகிறது!''

சங்கர வாரியர் குறிப்பிட்ட அந்த இல்லம் ஒரு காலத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கியதும் கூட. 'பத்ரகாளிமன' என்று அழைக்கப்பட்ட அந்த இல்லத்தில் பிரபலமான மாந்திரீகர்கள் பலர் வாழ்ந்திருந்தனர். நற்கர்மங்களுடன் துர்மந்திர கர்மங் களையும் அங்கிருந்தவர்கள் அனாயாசமாகச் செய்தனர்.

எனவே, அதிக அளவிலான மாந்திரீகச்சுவடிகள் அந்த மனைக்குள் இருப்பதாக நம்புகிறார்கள். பகல் நேரத்தில் கூட அந்த இல்லத்தின் அருகில் தப்பித்தவறி கூட எவரும் நடமாடுவதில்லை. அந்த இல்லத்தின் கடைசித் திருமேனியும் பைசாசிக சக்தி வாய்ந்தவராக இருந்தார். அவர் மரணமடைந்த பிறகும் வருடக் கணக்கில் இரவு நேரங்களில் அந்த இல்லத்தில் விளக்குகள் எரிவதையம் ஹோமங்கள் நடப்பதையும் ஆட்கள் கவனித்திருக் கிறார்கள். அவ்வளவு ஏன்... அந்தத் திருமேனி யையே நேரடியாகப் பார்த்தவர்கள் கூட இருக்கிறார்கள்.

''வாங்கியவர்கள் அதில் குடியிருக்கப் போகிறார்களா என்ன?'' வர்மா கேட்டார்.

''அவருடன் ஆண் ஒருவரும் இருந்தார். அனேகமாக அவர், அந்தப் பெண்மணியின் கணவராக இருக்க வேண்டும்.'' சங்கர வாரியர் குறிப்பிட்டார்.

''அந்த மனையை யார் வாங்கினால் நமக்கு என்ன? அது, தேவையில்லாத விஷயம்தானே!'' வர்மாவுக்கு அதைப் பற்றிப் பேசுவதில் அவ்வளவாக ஆர்வமில்லை என்று தோன்றியது.

''நமக்குப் பயன்பட்டிருக்கும். மேற்குப்புற வயல்பகுதியில் நெல் மற்றும் விவசாயக் கருவிகளைப் பத்திரப்படுத்தவும், தேங்காய் போட்டு வைக்கும் கிட்டங்கியாகவும் பயன் படுத்தி யிருக்கலாம், அதை விலைக்கு வாங்கியிருந்தால்! இனிமேல் அதைப் பற்றிப்பேசி என்ன பயன்?''



''அந்த வீட்டின் தற்போதைய வாரிசு யார்?''

''ஊர் ஊராகச் சுற்றியலைந்து சாந்தி கர்மம் நடத்தும் ஒரு சின்னத் திருமேனி இருக்கிறாரே... உங்களுக்கும் அவரைத் தெரியும். விற்கப் போவதாகச் சொல்லியிருந்தால் நான்கூட கேட்டுப் பார்த்திருப்பேன்...''

''ம்... அதெல்லாம் போகட்டும். விட்டுத் தள்ளுங்கள் வாரியரே. இந்தப் பணத்தையும் வழக்கம்போல் பாங்க்கில் போட்டு விடுங்கள். ஆமாம் உங்ளுக்குப் பணம் எதுவும் தேவையில்லையா?'' வர்மா கேட்டார்.

''சுனந்தாவுக்கு ஒரு நல்ல வரன் கிடைத்திருக்கிறான். முடித்து விடலாம் என்று தோன்றுகிறது.''

''எவ்வளவு தேவைப்படும்? இந்தப் பணம் போதுமா?''

''இதில் ஐம்பதாயிரம் ரூபாய் இருக்கிறது. எனக்கு இருபத்தைந்தாயிரம் இருந்தாலே தாராளம்!''

''அப்படியானால், உங்களுக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டு மீதியை பாங்க்கில் கட்டிவிடுங்கள்!'' இருந்த இடத்தி லிருந்து எழுந்த வர்மா அறைக்குள் சென்று பாஸ்புக்கை எடுத்துவந்தார். பாஸ்புக்கைப் பிரித்தவர் எதேச்சையாக இருப்பு எவ்வளவு இருக்கிறது என்று கவனித்தார். ஐந்து லட்சத்துக்கு மேல் இருந்தது.

சங்கர வாரியர் போன பிறகு வர்மா, அந்த இல்லத்தைக் குறித்து யோசித்தார். அதில் ஓர் அந்தர்ஜனம் இருந்தார்.

பெயர்... ஸ்ரீகுட்டி!

தாமரைப்பூவின் நிறமும், மென்மையும், தூய்மையும் கொண்ட அழகான பெண்.

தன் சிறுவயது விளையாட்டுத் தோழி.

குன்றின் மேல் இருக்கும் கருவறை மட்டுமே உள்ள கோயிலைச் சுற்றி சிறுவயதில் ஓடி விளையாடியவர்கள். ஸ்ரீகுட்டியின் அப்பா, தினமும் காலை-மாலை இரு

வேளைகளிலும் பூஜை செய்வார். அவர் பள்ளிக்கூட வாத்தியாராக வேலை பார்த்தவர். திடுமென்று ஒருநாள் ஊரை விட்டுப் போனவர் பிறகு திரும்பவே இல்லை!

அவர், அந்த வீட்டின் மாப்பிள்ளையும் கூட...

அதற்கு மந்திரவாதியான வீட்டுத் தலைவருடன் ஏற்பட்ட சண்டைதான் காரணம் என்றார்கள்.

ஸ்ரீகுட்டி கோயில்குளத்தில் மூழ்கி இறந்தாள்.

தாமரைக் கொடிகளுக்குள் அகப்பட்டதால் இறந்ததாகவும், இல்லை அது வேண்டுமென்றே மேற்கொண்ட தற்கொலை என்றும் அப்போது ஊரில் பேசிக் கொண்டார்கள்.

ஸ்ரீகுட்டிக்கு அன்று பதினேழு வயது.

ஒரு மெழுகுவத்தி மாதிரி சட்டென்று எரிந்து போனாள்.

'அந்த இல்லத்தை யார் வாங்கியிருப்பார்கள்?'

ஒரு பெண்மணி என்று வாரியர் குறிப்பிட்டாரே. இப்போதெல்லாம் பெண்மணி என்று சொன்னாலே முதலில் நினைவுக்கு வருவது ரத்னபிரபாதேவிதான். அந்தப் பெண்மணி பற்றி தற்போது நினைத்தால் தன்னை வட்டமிட்டுச் சுற்றுவதாக தெரிகிறது.

ஒவ்வொரு தடவையும் ஒரு காரணத்தை ஏற்படுத்திக் கொண்டு தன்னைத் தேடிக் கண்டுபிடிக்கிறாள். அவளது நோக்கம் என்னவென்று விளங்கவில்லை. எவ்வளவுதான் யோசித்தும் ஒன்றும் புலப்படவில்லை. தன்னால் அந்தப் பெண்மணிக்கு ஆகவேண்டி இருப்பது என்னவாக இருக்கும்?

உண்மையில் தன் மகளைத் திருமணம் செய்து வைப்பது தான் நோக்கம் என்றால், அந்த மகளை இதுவரை கண்ணில் காட்டவுமில்லை!

மகள் என்றாலே மூளையில் தெளிவடைவது அன்று கட்டிலில் இறந்து கிடந்த இளம்பெண்தான். இறந்துபோன பெண்ணுக்கு யாராவது மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் செய்வார்களா?



அதுவும் ஒரு குழந்தை பெற்றவளை!

மொத்தத்தில் ஏதோ ஒரு விபரீதம் நடக்கப்போவதாக அவர் உள்ளுணர்வு கூறியது.

பாங்குக்குப் போன சங்கர வாரியர் திரும்பி வரும்போது டாக்டர் வர்மா வேறோர் உலகத்துள் ஆழ்ந்திருந்தார்.

"சரி நான் புறப்படட்டுமா தம்புரான். வேறு ஏதாவது செய்தி உண்டா?" வாரியர் கேட்டார்.

"ஒன்றுமில்லை. சுனந்தாவின் கல்யாணம் நிச்சயமானதும் சொல்லுங்கள்." வர்மா நினைவூட்டினார்.

"கண்டிப்பாக எல்லா விரவத்தையும் தெரியப்படுத்துகிறேன். அடுத்த பஸ்ஸிலேயே புறப்பட வேண்டிருக்கிறது. தலைக்குமேல் வேலை கிடக்கிறது. வரட்டுங்களா?"

வாரியர் கேட்டைக் கடந்து வளைவில் திரும்பி கண்ணிலிருந்து மறைந்தார்.

ஒரு வாரம் கடந்தது. இதுவரை ரத்னாபிரபாதேவியைப் பார்க்கவோ, அவரிடமிருந்து செய்தியோ வரவில்லை.

இன்று வெள்ளிக்கிழமை.

டாக்டர் ராஜாம்பாள், காரை வர்மா வீட்டு முன் நிறுத்தினார்.

ஐந்து மணி தாண்டியிருந்தது.

"என்ன சார் தனியாக உட்கார்ந்து அலுப்புத்தட்டி விட்டதா என்ன?"

"ஒரு தடவை எங்காவது சுற்றிவிட்டு வரலாம் என்று நினைத்தபோது, நீங்கள் வந்திருக்கிறீர்கள்!" வர்மா கூறினார்.

"உங்கள் விருப்பப்படியே நடக்கட்டும். ம்... புறப்படுங்கள்!" ராஜாம்பாள், டாக்டரின் நோக்கத்துக்கு உற்சாகம் கொடுத்தார்.

"எங்கே போகிறோம்?"

''அதெல்லாம்... கார் போகிற வழியில் பார்த்துக் கொள்ள லாம்.'' காரில் ஏறி உட்கார்ந்த ராஜாம்பாள் இக்னீஷியன் சாவியைத் திருப்பினார்.

''சரி, உங்களது நோக்கப்படியே நடக்கட்டும்.'' வர்மா ஒப்பு கொண்டவராக காரில் ஏறி உட்கார்ந்தார்.

கேட்டைக் கடந்த கார் இடதுபுறமாகத் திரும்பியது.

''உங்களுக்கு சஸ்பென்ஸ் ஏற்படுத்தக்கூடிய ஒரு காரி யத்தைச் செய்யப் போகிறேன்.'' எச்சரிக்கையுடன் வண்டியை செலுத்திய ராஜாம்பாள் கூறினார்.

''என்னைப் பொறுத்தவரையில் சமீப காலமாக நடப்பது எல்லா சஸ்பென்ஸாகவே இருக்கின்றன.''

''அப்படி என்னதான் நடந்து விட்டது?''

''முதல் விஷயம் கல்யாண ஏற்பாடு. அதுவே ஒருவிதமான சஸ்பென்ஸை ஏற்படுத்தியிருக்கிறதே. கல்யாணம் செய்யப் போகும் பெண்ணையே நான் இதுவரை பார்க்கவில்லை. நானே ஒதுக்கி வைத்திருந்த ஒரு விஷயத்தை ஊதி ஊதிப் பெரிதாக்கியது நீங்கள்தான் மேடம்.''

''அப்படியானால், நமது ட்ரிப் ரத்னபிரபாவின் வீட்டுக்கே இருக்கட்டும். என்ன சொல்கிறீர்கள்?'' பேசியவாறு ராஜாம்பாள் டாக்டர் வர்மாவின் முகத்தை கவனிக்கத் தவறவில்லை.

''சுவாரஸ்யமான விஷயம்தான்!''

கார் பண்ணார மூலையில் திரும்பியது.

மிகவும் பழக்கம் வாய்ந்த ஒருவரைப் போல் ராஜாம்பாள் காரைச் செலுத்தினார்.

''அன்று நாம் போன பிறகு மறுபடி நீங்கள் இந்தப் பக்கம் வந்திருக்கிறீர்களா என்ன?'' வர்மா கேட்டார்.

''வரவில்லை. இருந்தாலும் இதெல்லாம் தெரிந்த பாதை தான். குறிப்பாகச் சொல்வதானால், இதுபோன்ற பாதைகள் அபூர்வமானதால் அப்படியே நினைவில் பதிந்துவிடும்.''



''உண்மைதான்!''

செம்மண் சாலையில் தூசிப்படலம் எழுந்து உயர்ந்து பின்புறமாக நகர்ந்தது. ரோட்டின் இரு புறமும் வளர்ந்திருந்த செடிகள், மரங்கள் எல்லாம் செம்மண் துகள்களை பூசியவை போல் சிவந்திருந்தன.

''ரத்னபிரபா கார் ஓட்டுவாரா?'' வர்மா கேட்டார்.

''கிளைடார் ஃப்ளைட்டையே ஓட்டக் கற்றுக் கொண்டிருக் கிறார் அவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால், இந்த உலகத்தில் அவ ருக்குத் தெரியாதது எதுவுமே இருக்காது என்று தோன்றுகிறது!''

வர்மா முன்புறப் பாதையை வெறித்தார்.

''ஓகோ, உங்களிடம் அப்படியொரு அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டதா அதற்குள்?''

''நீங்கள் சொன்னதை வைத்து வேடிக்கைக்காகச் சொன் னேன்.''

கார், கேட்டைத் தாண்டி நின்றது.

வீட்டு வாசலின் முன்னால் ஏற்கெனவே மாருதிவேன் ஒன்று நின்றிருந்தது.

''ரத்னபிரபா வீட்டில் இருக்கிறார் என்று தோன்றுகிறது!'' வர்மா கூறினார்.

''இருப்பதைத் தெரிந்துகொண்டுதான் இந்த இடத்துக்கு உங்களை அழைத்து வந்தேன்!''

ராஜாம்பாள் காரிலிருந்து இறங்கினார். வாசலின் மேற்புற ஓரத்திலிருந்த காலிங்பெல்லின் சுவிட்சை ஆட்காட்டி விரலால் அழுத்தினார். உள்ளே ஏதோ ஒரு பறவை கூவும் சத்தம் கேட்டது தொடர்ந்து எவரோ நடந்துவரும் ஓசை உட்புறமாகக் கேட்டது.

கதவு திறந்தது.

எதிர்பார்த்ததைப்போல் ரத்னாபிரபா கதவைத் திறக்க வில்லை. மாறாக இளம்பெண் ஒருத்தி நின்றிருந்தாள்.

''பெரியம்மா உள்ளே இருக்குறாங்க... வாங்க... வந்து உட்காருங்க!'' இளம்பெண் வரவேற்றாள். ராஜாம்பாளை, அதுவரை அந்தப் பெண் பார்த்ததில்லை என்பது விளங்கியது.

இருவரும் சோபாவில் அமர்ந்தனர்.

''ரொம்ப நேரம் காத்திருக்க நேருமோ?'' ராஜாம்பாள் கேட்டாள்.

''பூஜையறையில் இருக்கிறார்...'' மேற்கொண்டு எதுவும் பேசாமல் உட்புறமாக மறைந்தாள் அவள்.

இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''பூஜையறையா... அது எதற்கு?'' வர்மா தன்னையும் மீறிச் சட்டென்று கேட்டுவிட்டார். அந்த பங்களாவுக்குள் அதிக நேரம் காத்திருக்க அவர் தயாராக இல்லை.

சற்று நேரத்துக்குள் கதவைத் திறந்தவள் இரண்டு கிளாஸுகளில் பழச்சாறு எடுத்து வந்தாள்.

'வரவேற்பும் உபசாரமும் புது மாதிரியாக இருக்கிறதே!' வர்மா யோசனையில் ஆழ்ந்தார்.

சுவர்க்கடிக்காரம் ஆறு முறை அடித்து ஓய்ந்தது.

''நாம புறப்படலாமா?'' வர்மா, ராஜாம்பாளிடம் கேட்டார்.

சரியாக அதே நேரம், ரத்னபிரபா பால்கனியில் தென்பட்டாள். அவசர அவசரமாகப் படியிறங்கி வந்தாள்.

''மன்னிக்கணும்... ரொம்ப நேரம் காக்க வெச்சுட்டேனா?'' ரத்னபிரபா கேட்டாள்.

முந்தைய தடவை பார்த்ததைவிட, அவளிடம் ஏதோ ஒரு மாற்றம் தெரிந்தது. அவள் தலைமுடி பின்புறமாக அவிழ்ந்து கிடந்தது. நெற்றியில் சிவப்புநிறச் சாந்துப் பொட்டு அழகாக இடம்பிடித்திருந்தது.

அவசர அவசரமாக உடை மாற்றி வந்தவளைப் போல் தென்பட்டாள்



'அப்படியானால் இதுவரை என்ன செய்து கொண்டு இருந்தாள்?' வர்மாவின் சிந்தனை அந்த வழியில் பாய்ந்தது. 'அதுவும் பூஜையறைக்குள்?'

இப்போது அவளைப் பார்த்தால் அன்றைய தோற்றத்துடன் மிகவும் நெருங்கியிருந்தாள்.

''நீங்கள் வருவீர்கள் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. முன்கூட்டியே போனில் தகவல் சொல்லி இருக்கலாமே'' ரத்னபிரபா மன்னிப்புக் கோரும் பாவனையில் கேட்டாள்.

''ஒரு சர்ப்ரைஸ் விசிட் ஆக இருக்கட்டுமே என்றுதான் சட்டென்று புறப்பட்டோம்.'' ராஜாம்பாள் சிரித்தவாறு பேசினார்.

''இது அளவுக்கு அதிகமான சர்ப்ரைஸ் என்றல்லவா தோன்றுகிறது!'' ரத்னபிரபா சிரிக்க முயன்றதாகத் தோன்றியது.

''நாங்கள் இப்போது வந்தது சரண்யாவைப் பார்க்கத்தான். அவளை ஒரு தடவையாவது பார்க்கவேண்டும் என்று டாக்டர் பிடிவாதமாக இருக்கிறார்.'' ராஜாம்பாள் கூறினார்.

''அவ்வளவுதானே... கூப்பிடுகிறேன்.'' ரத்னபிரபா உட்புறம் நோக்கிக் குரல் கொடுத்தாள்: ''சரண்யா... கொஞ்சம் இப்படி வந்துட்டுப் போம்மா!''

அதே சமயம் டாக்டர் சேதுவர்மாவின் இதயம் துரிதகதியில் இயங்கியது.

## 4

'வரப்போவது யார்? இந்த சரண்யா யார்?' சேதுவர்மாவின் இதயம் இந்த இரு கேள்விகளின் உத்வேகத்தால் விரைவாகத் துடித்தது.

அன்றொரு நாள் இரவில் இந்தப் பெண்மணியின் அருகில் அசைவற்றுப் படுத்திருந்த இளம்பெண்ணின் தெளிவற்ற உருவம் வர்மாவின் மனத்தில் மெதுவாக உயர்ந்து வந்தது.

அந்தப் பெண்தான் சரண்யாவா?

பால்கனியில் ஓர் உருவம் சட்டென்று வெளிப்பட்டது. அவள் திடுமென்று அங்கு தோன்றியதுபோல் வர்மாவுக்குத் தோன்றியது.

நவீன பாணியிலான சுரிதார் போன்ற உடைக்கு பதிலாக பாவாடை, ரவிக்கை மற்றும தாவணி உடுத்தியிருந்தாள்.

அவள் மெதுவாகப் படிகளில் இறங்கி வந்தாள். டாக்டர் வர்மா அவளையே பார்த்தார்.

படிக்கட்டுகளைத் தாண்டி ஹாலுக்கு வந்தாள்.

'சரண்யா! சரண்யா! சரண்யா!' அந்தப் பெயர் அவர் காதுகளில் வலுவாக எதிரொலித்தது.

அவள் கழுத்தில் ரத்தினக்கற்கள் பளபளக்கும் சங்கிலி ஒன்று கிடந்தது.

மணிக்கட்டுப் பகுதிகளில் பல்வேறு வண்ணங்கள் கலந்த விலையுயர்ந்த கற்கள் பதித்த வளையல்கள். அழகாகச் சுருண்டிருந்த முடிக்கற்றைகள் நெற்றி மீது படிந்திருந்தன.

பழங்காலக் கோயில்களில் இரு கைகளையும் இணைத்து விளக்கை ஏந்தி நிற்கும் சிலை போன்ற உடலமைப்பு. நல்ல அழகி! இவள்தான் சரண்யாவா?

டாக்டர் வர்மா ஒரே ஒரு தடவை அவள் முகத்தைப் பார்த்தார்.

'அது அவள்தான்; அவளேதான்!'

மேற்கொண்டு அந்த இடத்தில் ஒரு நிமிடம் தாமதித்தாலும் தனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிடும் என்று நினைத்தவராக வர்மா அவசர அவசரமாக வாசலை நோக்கி நடந்தார்.

''டாக்டர்!'' ராஜாம்பாள் அழைத்தார்.

ஆனால், வர்மா அதைக் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை.



காரில் அமர்ந்த வர்மா, கர்ச்சீப்பை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்தார்.

ராஜாம்பாள், வர்மாவைத் தொடர்ந்து வந்தார்.

''என்ன டாக்டர், அந்தப் பெண்ணிடம் நீங்கள் எதுவும் பேச விரும்பவில்லையா?''

''எல்லாம் இங்கிருந்து போனபிறகுதான்.'' டாக்டர் வர்மா வேறு எதுவும் பேசவில்லை.

ராஜாம்பாள் அதன் பிறகு டாக்டரை வற்புறுத்தவில்லை. காருக்குள் ஏறி அமர்ந்தார்.

''என்ன டாக்டர், என்னதான் நடந்தது?'' போகும் வழியில் டிரைவிங் செய்தபடி ராஜாம்பாள் கேட்டார்.

''ஒன்றுமில்லை... தலைவலி!'' டாக்டர் மெதுவான குரலில் கூறினார்.

ராஜாம்பாள் மிகவும் விரைவாக காரைச் செலுத்தினார். ஒரு சில நிமிடங்களுக்குள் வர்மாவின் வீட்டை அடைந்தனர்.

''நான் புறப்படட்டுமா?'' வர்மா காரிலிருந்து இறங்கியதும் ராஜாம்பாள் கேட்டார்.

''சற்றுப் பொறுங்கள். நான் நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது...'' வர்மா வற்புறுத்தினார்.

ராஜாம்பாள் காரிலிருந்து இறங்கினார்.

மாலை நேரம் கடந்து இருள் மெதுவாகப் பரவியது. வர்மா லைட்டுகளை எரியவிட்டார்.

ஃபிளாஸ்கிலிருந்து, கிளாஸுக்குள் டீயைச் சரித்தார்.

இருவரும் டீ சாப்பிட்டனர்.

''உங்களுக்கு அந்தப் பெண்ணைப் பிடித்திருக்கிறதா?'' ராஜாம்பாள் கேட்டார்.

''அதைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் உங்களைப் போக வேண்டாம் என்று சொன்னேன்.'' டாக்டர் தனது ஷூக்களின் லேஸ் கயிறுகளை அவிழ்த்தபடி பேசினார்.

''சொல்லுங்கள்!''

டாக்டர் வர்மா, அன்றொரு நாள் இரவில் நடந்த சம்பவத்தை விவரித்தார். வியப்புக்கு உரிய ஒரு கதையைக் கேட்பது போல் ராஜாம்பாள் அதை ஆவலுடன் கேட்டார்.

''இப்போது சொல்லுங்கள்... உங்களது அபிப்பிராயம் என்ன?'' வர்மா கேட்டார்.

''ம்...'' திடுக்கிட்ட ராஜாம்பாள் சட்டென்று தலையைத் திருப்பிக் கொண்டார்.

''அந்தப் பெண்மணியைப் பற்றி எனக்கு அதிகமான விவரம் எதுவும் தெரியாது. நீங்கள் சொன்னதெல்லாம் உண்மையாக இருந்தால், அவர் ஒரு 'விட்ச்'தான். இந்தக் காலத்திலும் இப்படிப் பட்ட மோசமான மந்திரவாதிகளும், மந்திரவாதினிகளும் இருப்பதாக நான் படித்திருக்கிறேன்.'' சற்று பயந்த குரலில் பேசினார் ராஜாம்பாள்.

''மேற்கொண்டு தெரியவேண்டியது. அந்த பங்களாவில் ஐந்து வருடங்களுக்கு முன்னால் தற்கொலை செய்து கொண்ட தாய்-மகளைப் பற்றித்தான். அது தெரிந்து கொள்ள முடிந்த ஒன்றுதான். ஹலோ மேடம், இந்த விஷயத்தை நீங்கள் ரகசியமாக வைத்துக் கொள்ளுங்கள். சம்பந்தப்பட்டவர்கள் எந்தக் காரணத்தாலும் நாம் தெரிந்து கொண்டதை உணரக் கூடாது!'' வர்மா எச்சரித்தார்.

''வேறு யாரிடமும் நான் இதைபற்றிப் பேசப் போவதில்லை. அந்த இருவரையும் முடிந்தால் ரகசியமாகக் கண்காணிக்கலாம் என்று நினைக்கிறேன்.''

''நல்ல யோசனை! அதுவும் நீங்கள் நினைத்தால் சுலபமும் கூட. அந்த பங்களா, அவர்கள் யார் யாருடனெல்லாம் தொடர்பு கொள்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.''

''இதெல்லாம் நாம் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டியவைதான். வரட்டுமா டாக்டர்?''



ராஜாம்பாள் காரில் புறப்பட்டார். கார், கேட்டைத் தாண்டும் போது, முனிசிபாலிட்டி சங்கு ஒலித்தது. மணி எட்டாகி விட்டது.

அன்று, என்ன காரணத்தாலோ தெருவிளக்குகள் எரிய வில்லை.

டாக்டர் வர்மாவின் அனுபவ விவரிப்பு, ராஜாம்பாளின் மனத்தில் பீதியை விதைத்தது.

'அப்படியானால் ரத்னபிரபாதேவி அசாதாரணமான ஒரு பெண்மணி. இதுவரை கேள்விப்பட்டதை வைத்துப் பார்த்தால், அந்தப் பெண்மணி பைசாசிக சக்திகள் வாய்ந்த ஒரு மந்திர வாதியாகக்கூட இருக்கலாம்!'

ஆனால், அந்தப் பெண்மணி வர்மாவை மடக்க முயல்வது எதற்காக என்பது விளங்கவில்லை.

சட்டென்று காரின் வேகம் அதிகரித்தது.

ஆக்ஸிலேட்டரிலிருந்து அவர் காலைச் சற்றுத் தளர்த்திய போதிலும் கேபிள் ஸ்டிரக் ஆனது போல் கார் இரைச்சலுடன் பாய்ந்தது.

அதோ... ரோட்டின் குறுக்கே யாரோ நிற்கின்றனர்.

அது ஒரு பெண் வடிவம்.

வெள்ளைப் புடவையும், அதே நிறத்திலுள்ள ரவிக்கையும் அணிந்த அவளது உடைகள் காற்றில் அலைகின்றன.

கார் நெருங்கியது.

பெண்ணுருவம் அருகில் வந்தது.

ரத்னபிரபாதேவி!

டாக்டர் ராஜாம்பாள் ஒருகணம் திகைத்தார்.

ரத்னபிரபா ரோட்டின் நடுவே இரண்டு கைகளையும் உயர்த்தியபடி நின்றிருந்தாள்.

ராஜாம்பாளின் கால் பிரேக்கை அழுத்தியது. எனினும் அது எந்த வகையிலும் பயன்தரவில்லை, ரத்னாபிரபாவின் உருவம்

காரின் பானட்டைத் தாண்டி கண்ணாடியை ஊடுருவி, ஸ்டீயரிங்வீலைத் தாண்டி ராஜாம்பாளை ஒட்டி நின்றது.

அந்த ஒரு கணத்தில் மிகவும் கடுமையான குளிர் உடலை ஊடுருவுவதை ராஜாம்பாள் உணர்ந்தார்.

பனிக்கட்டியை விடக் கடுமையான குளிர் உடலைத் தாக்கிச் சட்டென்று பின்புறம் நகர்ந்தது.

அடுத்த விநாடி ராஜாம்பாள் சட்டென்று பின்புறமாகத் திரும்பிப் பார்த்தார்.

அந்த உருவம் காரின் பின்புறம் நின்றிருந்தது. அத்துடன் பயங்கரமான சத்தம் ஒன்று ராஜாம்பாளின் காதுகளில் ஒலித்தது. அதன் பிறகு எல்லாம் ஒரே அந்தகாரத்தில் மூழ்கியது.

**டா**க்டர் சேதுவர்மா தபாலில் வந்த பருமனான ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார்.

இரவு மணி பன்னிரண்டு ஐந்து.

போன் மணியடித்தது.

சந்தேகம் நிறைந்த முகத்துடன் வர்மா ரிசீவரை எடுத்துக் காதருகில் கொண்டுபோனார்.

''ஆமாம்... வர்மாதான் பேசுகிறேன். என்ன, மேடம் விபத்துக்குள்ளானாரா? அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து விட்டீர்களா? இதோ புறப்பட்டு விட்டேன்.'' ரிசீவரை கிராடிலில் வைத்த வர்மா துள்ளிப் பாய்ந்தார்.

அவசர அவசரமாக உடை மாற்றி, காரில் அமர்ந்து கிளப்பினார். அது ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தது.

காரிலிருந்து இறங்கி 'காஷுவாலிட்டி' வார்டை நோக்கி ஓடினார்.

அங்கிருந்து கிடைத்த பதில் அவரைச் சோர்வடைய வைத்தது.

டாக்டர் ராஜாம்பாளின் உடம்பு மார்ச்சுவரிக்குக் கொண்டு போகப்பட்டிருந்தது.



என்ன செய்வதென்று தெரியாமல் டாக்டர் வர்மா சற்று நேரம் அப்படியே நின்றார். ராஜாம்பாள் கார் விபத்தில் இறந்து போனாரா? அதை அவரால் நம்ப முடியவில்லை!

''டாக்டர் இப்படி உட்காருங்கள்.'' காஷுவாலிட்டியிலிருந்த டூட்டி டாக்டர் சொன்னார்.

வர்மா அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தார்.

சற்று நேரத்துக்கு முன்னால் தன்னுடன் பேசிய டாக்டர் ராஜாம்பாள் இப்போது பிணங்களோடு பிணமாக மார்ச்சுவரிக்குள்... வர்மாவால் அதைத் தாங்க முடியவில்லை.

ராஜாம்பாள் எப்படி இறந்தார்?

இதுவரை ராஜாம்பாள் விரைவாக காரைச் செலுத்தியதாக தகவலே இல்லை. கார் ஓட்டும்போது ஸ்பீடா மீட்டர் நாற்பதைத் தாண்டியதில்லை. அவ்வளவு எச்சரிக்கையும் நிதானமும் தவறாதவர். வேறு ஏதாவது ஒரு வண்டிமீது மோதியிருந்தால் கூட அதை ஒரு விபத்து என்று சொல்லலாம். அதுவும் இல்லையே!

ராஜாம்பாள் கார் தரையில் உருண்டு புரண்டிருக்கிறது. டயர் எதுவும் வெடித்ததாகவும் தெரியவில்லை.

''சரி நான் கிளம்பட்டுமா டாக்டர்?'' வர்மா எழுந்து வெளியே வந்தார்.

காரை ஸ்டார்ட் செய்து வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

ராஜாம்பாள் தங்கியிருந்த வீட்டை நோக்கிப் போனால் விபத்து நடந்த இடத்தைப் பார்க்கலாம். வேண்டாம். அப்போது அந்தக் காட்சியைக் காண அவர் தயாராக இல்லை!

அன்று இரவு அவரால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை.

மறுநாள் காலையில் கனத்த இதயத்துடன் டாக்டர் ஆஸ்பத்திரிக்கு வந்தார். ஆஸ்பத்திரி ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் துக்கத்துக்கு அடையாளமாக கறுத்த பாட்ஜ் அணிந்திருந்தனர். அவர்கள் முகங்களில் துயரம் தளம் அமைத்திருந்தது.

அன்று மாலை நேரத்தில் சங்கர வாரியர் மறுபடி வந்தார். அவர் வழக்கமாக இப்படியெல்லாம் வருவதில்லை. ஒருவேளை மகளின் கல்யாணம் நிச்சயமானதைச் சொல்ல வந்திருக்கலாம் என்று வர்மா நினைத்தார். பணம் ஏதாவது தேவைப்படலாம்.

''என்ன வாரியரே, ஏதாவது விசேஷமா?'' வர்மா கேட்டார்.

''நல்ல சேதிதான். இன்று காலையில் அந்தச் சின்னத் திருமேனியைப் பார்த்தேன்.'' வாரியர் பேச்சைத் துவக்கினார்.

''வீட்டை வாங்கியவர்கள் அதில் குடியேறி விட்டார்களா?''

''இல்லை... வாங்கியவர்கள் அதைத் திரும்பவும் அவரிடமே கொடுத்துவிட்டார்கள்!''

''வாங்கிய பணத்தை சின்னத்திருமேனி செலவு செய்திருப்பாரே, அதுவுமில்லாமல் உடனடியாக மறுபத்திரம் எழுத முடியுமா என்ன?''

''இதுவரை பத்திரம் எழுதவில்லை.''

''அப்புறம்?''

''முழுப்பணத்தையும் கொடுத்து பத்திரத்தாளில் மட்டும் எழுதி வாங்கியிருந்தார்களாம்.''

''மேற்கொண்டு என்ன திட்டமாம்?''

''நான் சின்னத்திருமேனியிடம் எல்லாவற்றையும் பேசி முடித்துவிட்டேன். உங்களிடம் சம்மதம் பெற வந்திருக்கிறேன்.''

''மேற்கொண்டும் நமக்கு வீடும் நிலமும் தேவையா என்ன?''

''தேவைதான். நம்முடைய வேலைக்கு அது மிகவும் சௌகரியம். பாதுகாப்பானதும்கூட!''

''அவசியம் என்று தோன்றினால் உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள். அதற்கு முன் ஒரு தடவை நான் அந்த இல்லத்தைப் பார்க்க வேண்டும்.''

''அப்படியானால், நாளைக்கே வாருங்கள்!'' வாரியர் வற்புறுத்தினார்.



சங்கர வாரியர் அன்று மகிழ்ச்சியுடன் திரும்பிப்போனார். மறுநாள் மதியத்துக்குப் பிறகு சேதுவர்மா ஓய்வாக இருந்தார். வெகு நாட்களாகியிருந்ததால், சொந்த வீட்டையும் ஒரு தடவை பார்த்துவிட்டு வரலாம் என்று பயணம் புறப்பட்டார்.

கோவிலகம் காம்பௌண்டுக்குள் காரை நிறுத்திய பிறகு ஒரு தடவை சுற்றி வந்தார்.

வாரியரின் வீட்டிலிருந்து டீ மற்றும் அவித்த நேந்திரம் பழங்களைக் கொடுத்து உபசரித்தாள் சுனந்தா.

டாக்டர், கல்யாணமாகவிருக்கும் மணப்பெண்ணை வாழ்த்தினார். பிறகு குன்றின் மேல் உள்ள கோயிலை நோக்கி நடந்தார். முன்னொரு காலத்தில் ஸ்ரீகுட்டியுடன் விளையாடிய அந்தப் பகுதியில் எந்த விதமான மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. இப்போதும் பழ மரங்களும் பூச்செடிகளும், காட்டுக் கொடிகளும் அந்தப் பகுதியை அழகுபடுத்தின.

கோயிலுக்கு முன்னால் வளர்ந்திருந்த ஆலமரத்தின் வேர்கள் மண்ணெடுத்துப் பள்ளம் தோண்டிய பகுதியில் படம் வரைந்து வைத்ததைப்போல் அழகான வளைவுகளாகத் தென்பட்டன.

ஸ்ரீகுட்டி மூழ்கி இறந்த குளத்தைப் பார்த்தார். அதில் இப்போதும் தாமரைப்பூக்கள் தலையை உயர்த்தியபடி நின்றிருந்தன. அதற்குள் இப்போதும் ஸ்ரீகுட்டியின் உயிர் ஒளிந்திருக்கலாமோ என்னவோ?

சேதுவர்மா திரும்பி நடக்கத் தொடங்கினார். இதயம் அளவுக்கு அதிகமாகக் கனப்பதை உணர்ந்தார்.

அங்கிருந்து நேராக இல்லத்தைப் பார்க்கப் புறப்பட்டார். சின்னத்திருமேனி அங்கு இருந்தார்.

''இந்த இல்லத்தை முதலில் வாங்கியது யார்?'' டாக்டர் வர்மா கேட்டார்.

''ஒரு பெண்மணி வாங்கினார். இரண்டு நாளைக்குப் பிறகு இல்லம் வேண்டாமென்று என்னிடம் திருப்பித் தந்துவிட்டார்.

அட்வான்ஸாகத் தந்த பணத்தையும் என்னையே வைத்துக் கொள்ளச் சொல்லிவிட்டார்!"

"ஓகோ..." டாக்டர் இல்லத்தின் திண்ணைமீது ஏறினார்.

"இந்த இல்லத்துக்குள் ஏராளமான ஓலைச்சுவடிகள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதெல்லாம் எங்கு இருக்கிறது?" வர்மா கேட்டார்.

"நிலவறைக்குள் இருக்கும் என்று நினைக்கிறேன்." சின்னத்திருமேனி பதிலளித்தார்.

இருவரும் நிலைவாசற்படியை கடந்து வலதுபுறம் இருந்த மற்றொரு வாசல் வழியாக உள்ளே சென்றனர்.

அது நிலைக்கு நேர் பின்புறம் இருந்தது. அங்கு நிலவறைக்கு மேல் மூடப்பட்டிருந்த பலகைகள் தென்பட்டன.

அந்தப் பகுதி முழுவதும் இருள் நிரம்பியிருந்தது.

"நான் போய் விளக்கை எடுத்து வரவா?" சின்னத் திருமேனி கேட்டார்.

சங்கர வாரியர் இல்லத்தின் முற்றத்தில் நின்றிருந்தார்.

"வாரியரே விளக்கு ஒன்றை எடுத்து வாருங்கள்... நான் இந்த இல்லத்தில் குடியிருக்கவில்லை. இல்லத்தை விற்க முன்பணம் வாங்கிய அன்று ஒரே ஒரு சங்கிலி போட்ட வெண்கல விளக்கு மிச்சமிருந்தது. கடைசியாக அதையும் விற்றுவிட்டேன்!" அசடு வழிந்தவராக சின்னத் திருமேனி சொன்னார்.

"இதோ எடுத்து வருகிறேன்." வாரியர் தனது வீட்டை நோக்கி நடந்தார். அவர் விளக்கை எடுத்துவரச் சற்றுத் தாமதமானது.

"அப்புறம் எதற்காக இப்படியொரு கைமாற்றம் நடந்ததாம்?" வர்மா, சின்னத்திருமேனியிடம் கேட்டார்.

"அதுதான் எனக்கும் புரியவில்லை! எதற்காக இதை வாங்கினார்கள், பிறகு திரும்பத் தந்தார்கள் என்று தெரியவில்லை!"



"அந்தப் பெண்மணி எப்படி இருந்தார்?" வர்மா ஆவலுடன் கேட்டார்.

"சுமார் நாற்பது வயதிருக்கலாம். ஆனால், பார்வைக்கு அப்படித் தெரியாது!"

டாக்டரின் மனத்தில் ரத்னபிரபாதேவியின் உருவம் தெளிவடைந்தது. 'ஒருவேளை அந்தப் பெண்மணியாக இருக்குமோ?' ஒரு விநாடி யோசித்தார்.

சங்கர வாரியார் ஒரு லாந்தர் விளக்குடன் வந்தார். திரியை மேலும் தூண்டிவிட்டு மூன்றுபேரும் உள்ளே நுழைந்தார்கள்.

நிலவறையை மூடியிருந்த மேற்புறப் பலகையை நெருங்கினர்.

"என்ன... இது தாழ்ப்பாள் உடைக்கப்பட்டிருக்கிறது?" வாரியர் கேட்டார்.

நீண்ட கம்பியுடன் கூடிய பூட்டால் பூட்டப்பட்டிருந்த அதன் தாழ்ப்பாள் பலவந்தமாக நெம்பி எடுக்கப்பட்டதுபோல் அலங்கோலமாக இருந்தது. அசாதாரணமான ஒரு மனிதனால் மட்டுமே அது சாத்தியம்.

சங்கர வாரியர் பலகைகளை ஒவ்வொன்றாக எடுத்தார்.

படிக்கட்டுகள் கீழ்ப்புறமாக இறங்கின.

"நான் முதலில் இறங்கிப் பார்க்கிறேன்." டாக்டர் வர்மா விளக்கைக் கையில் வாங்கிக் கீழே உட்கார்ந்து, பிறகு ஒரு காலை ஏணியின் மீது பதித்து, மிதித்துச் சோதித்தார்.

நல்ல உறுதியான படிகள்தான்.

லாந்தர் விளக்கின் வெளிச்சம் சுத்தமாக இருண்டு கிடந்த நிலவறைக்குள் சன்னமாக வெளிச்சம் பரப்பியது.

ஆறு படிகள் இருந்தன.

கீழே கால் பதித்தபோது செப்புப் பாத்திரங்கள் அசைந்து கிணுகிணுத்தன.

நிலவறைக்குள் செப்புப் பாத்திரங்களும் வெண்கலத் தாலான விளக்குகளும் பஞ்சலோகத்தால் வடிக்கப்பட்ட சிலைகள் சிலவும் இருந்தன. இதைத் தவிர ஏறத்தாழ ஒன்றரையடி நீளமும் ஓர் அடி அகலமும் அதே அளவு உயரமுள்ள பித்தளைப் பெட்டி ஒன்றும் இருந்தது.

பெட்டி திறந்திருந்தது.

வர்மா பெட்டியைத் தூக்க முயன்றார். ஆனால், அது தரையுடன், சுலபத்தில் எடுக்க முடியாதவாறு பொருத்தி வைக்கப்பட்டிருந்தது. மூடியை மேற்புறமாகத் தூக்கிவிட்டு உட்புறத்தைப் பரிசோதித்தார் டாக்டர்.

அதற்குள் ஓலைச்சுவடி ஒன்றின் ஒரே ஓர் இதழ் மட்டும் கிடப்பதை கவனித்தார்.

அதைக் கையில் எடுத்தார்.

மீண்டும் ஒரு தடவை சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு ஏணி வழியாக மேலேறத் தொடங்கினார்.

''பித்தளைப் பெட்டி திறந்து கிடக்கிறது.'' வர்மா சொன்னார்.

சின்னத் திருமேனி அதற்கு பதிலேதும் சொல்லவில்லை.

அந்த இல்லத்திலிருந்து வெளியில் வந்தபோது ஒரேயொரு விஷயம் டாக்டர் வர்மாவின் மனத்தில் தெளிவடைந்தது.

'பித்தளைப் பெட்டிக்குள் இருந்த நிலைச்சுவடிகளைக் கைப்பற்றுவதற்காக அந்தப் பெண்மணி ஐம்பதாயிரம் ரூபாயை அட்வான்ஸ் என்ற பெயரில் செலவழித்திருக்கிறாள்!

'அப்படிப்பட்ட பெண்மணி யாராக இருக்கும்?' வர்மா தனக்குத்தானே கேட்டுக் கொண்டார்.

டாக்டர், தனது இருப்பிடத்துக்குத் திரும்பியபோது நேரம் இரவு எட்டு மணியைத் தாண்டியிருந்தது.

ராஜாம்பாளின் உடல் போஸ்ட்மார்டம் செய்யப்பட்டது. மறுநாள் காலையில் தகனம் செய்யப் போவதாக டாக்டர் சுமா தகவல் தெரிவித்தார்.



சுவர்க் கடிகாரத்தில் ஒவ்வொரு தடவை மணியடித்த போதும் வர்மா உறங்காமல் அதையே கவனித்தார்.

மணி பன்னிரண்டு... நள்ளிரவு வேளை.

காலிங்பெல் ஒலித்தது.

டாக்டர் சேதுவர்மா சந்தேகத்துடன் கட்டிலிலிருந்து எழுந்தார்.

## 5

'இந்த நள்ளிரவு வேளையில் தன்னைத் தேடி வருவது யாராக இருக்கும்?' டாக்டர் யோசித்தார். இப்போதைய சூழ்நிலையில் தனக்கு நேர்வதெல்லாம் அசாதாரண சம்பவங்களாக இருக்கின்றன. எனவே, உடனே கதவைத் திறப்பது உசிதம்தானா என்றும் நினைத்தார்.

இருப்பினும் தான் ஒரு டாக்டர் என்ற முறையில் வந்திருப்பது யார் என்று தெரிந்து கொள்ளாமல் இருப்பதும் சரியில்லை. உயிருக்கு ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளின் உறவினர்கள் நேரம் காலம் பார்க்காமல் எந்த சந்தர்ப்பத்திலும் வரக்கூடும். கடைசியில் எது வந்தாலும் சரி என்ற தீர்மானத்துடன் கதவைத் திறந்தார்.

முன்பின் பார்த்திராத இளம்பெண் ஒருத்தி வாசலில் நின்றிருந்தாள்.

கதவைத் திறந்தவுடன் அவள் வர்மாவின் வீட்டுக்குள் நுழைய ஆர்வம் காட்டினாள். ஆனால், டாக்டர் வழி மறித்தது போல் வாசலின் குறுக்காக நின்றார். வந்தவள் ஒரு தடவை பின்புறமாகத் திரும்பிப் பார்த்து, டாக்டரைத் தள்ளி ஒதுக்கிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

''யாரம்மா நீ?'' டாக்டர் தலையைத் திருப்பிக் கேட்டார்.

''சொல்கிறேன் டாக்டர். முதலில் கதவை மூடுங்கள்!'' வந்தவள் ஏகத்துக்கு பயந்திருந்தாள்.

சேதுவர்மாவுக்குத் தலைகால் புரியவில்லை. இருப்பினும் அவள் கேட்டுக் கொண்டபடி கதவை மூடினார். மூடுவதற்கு முன் ஒரு தடவை வெளியே சுற்றுமுற்றும் பார்த்தார். எவரும் தட்டுப்படவில்லை.

''சரி சொல்லும்மா... எதற்காக இந்த அகால வேளையில் இங்கே வந்திருக்கிறாய்?'' கேட்டவாறே வரவேற்பு ஹாலை நோக்கி நடந்தார். அவள், அவரைப் பின்தொடர்ந்தாள்.

''அப்படி உட்காரம்மா!'' டாக்டர் சோபா ஒன்றைச் சுட்டிக்காட்டினார்.

அவள் உட்கார்ந்தாள்.

''சரி சொல்லும்மா... என்ன நடந்தது?'' டாக்டர் விசாரித்தார்.

''நான் டாக்டர் சிவகுமாரின் வீட்டுக்கு வந்திருக்கிறேன். அவர் தங்கை.'' அவள் பேசத் தொடங்கினாள்.

டாக்டர் சிவகுமார் பக்கத்து வீட்டுக்காரர். அவர் மனைவி ராஜியும் டாக்டர்தான். இருந்தாலும் இப்படி ஒரு பெண்ணை இதற்கு முன்பு அங்கு பார்த்ததாக நினைவில்லை.

''இன்று சாயங்காலம்தான் அண்ணனின் வீட்டுக்கு வந்தேன். ரெண்டு பேருமே டூட்டிக்குப் போய்விட்டார்கள். சாயந்தரம் வரை வேலைக்காரி இருந்தாள். அவள் குழந்தைக்கு உடம்பு சரியில்லை யென்று தகவல் வந்ததால், என்னிடம் சொல்லிவிட்டுப் போனாள்.'' அந்தப் டிபண் படபடப்புடன் பேசத் தொடங்கினாள்.

பதினேழு வயது மதிப்பிடலாம். ஊன்றிப் பார்த்தால், டாக்டர் சிவகுமாரின் சாயல் ஆங்காங்கே தெரியவும் செய்தது.

''பிறகு? சீக்கிரம் சொல்லுங்கள்.'' டாக்டர் அவசரப் படுத்தினார்.

''சற்று நேரத்துக்கு முன்னால் காலிங்பெல் அடிப்பதைக் கேட்டுக் கண் விழித்தேன். யார் வந்து என்ன சொன்னாலும் கதவைத் திறக்க வேண்டாம் என்று அண்ணன் சொல்லி இருந்தார். எனவே, ஜன்னல் வழியாக வெளியே பார்த்தேன். பெண்மணி



ஒருத்தி நின்றிருந்ததால், ஒருவித ஆறுதலுடன் கதவைத் திறந்தேன்.''

''அவளுக்கு என்ன வயசிருக்கும்?'' வர்மா குறுக்கிட்டார்.

''நாற்பதுக்குள் இருக்கும். மிகவும் அழகாக இருந்தார்கள். பார்வைக்கு ஒரு டாக்டர் மாதிரி தெரிந்தார்.''

''ம்...''

கதவைத் திறந்ததும் வீட்டுக்குள் வந்தார். சட்டென்று என் கையைப் பிடித்து இழுத்து காருக்குக் கொண்டு போனார். அவர் உடல் பலம் அசாதாரணமாகத் தோன்றியது. நான் மிகவும் கஷ்டப்பட்டு ஒருவிதமாக அவரிடமிருந்து தப்பித்து இந்தப் பக்கம் ஓடி வந்தேன். உடனே அவர் காரை ஸ்டார்ட் செய்து புறப்பட்டு விட்டார்!

சேதுவர்மாவின் மனத்தில் சட்டென்று ரத்னபிரபா தேவியின் முகம் தோன்றியது. 'ஒருவேளை வந்தது அந்தப் பெண்மணியாக இருப்பாளோ?' வர்மா யோசனையில் ஆழ்ந்தார்.

சுவர்க்கடிகாரம் இரண்டு தடவை ஒலித்தது.

சேதுவர்மாவுக்கு அந்தப் பெண்ணை அவளது வீட்டில் விட்டு வரலாம் என்று தோன்றியது. என்ன இருந்தாலும் அவளைத் தனது வீட்டில் தங்க வைப்பது நல்லது அல்ல என்று நினைத்தார். இப்படியொரு செய்தி மறுநாளே ஆஸ்பத்திரி முழுவதும் பரவிவிடும். அது அவரது நற்பெயருக்கு உகந்ததல்ல. காதோடு காதாகப் பேசப்படும், ஏதாவது ஒரு மாலைப் பத்திரிகையில் செய்தியாக வந்தால் தனது கௌரவம் மற்றும் மதிப்பு தலைகீழாக மாறிவிடும்.

''உன் பெயர் என்னம்மா?'' அவளிடம் கேட்டார்.

''ராணி!''

''சரி ஒன்று செய்யலாம். நான் உன்னை உன் அண்ணன் வீட்டில் கொண்டுபோய் விடுகிறேன். இனிமேல் யாரும் வரமாட்டார்கள். அப்படியே வந்தால்கூட கதவைத் திறக்காமல் இருந்தால் போதும்!'' வர்மா தனது கருத்தைத் தெரிவித்தார்.

''இல்லை சார். எனக்கு பயமாக இருக்கிறது. நான் இங்கேயே ஏதாவது ஒரு அறைக்குள் படுத்துக் கொள்கிறேன்.'' அவள் டாக்டரின் முகத்தைப் பார்த்தபடி கீழுதட்டைக் கடித்தாள்.

''வேண்டாம் ராணி. அது சரியில்லை. வாம்மா நானே கொண்டுபோய் விடுகிறேன்!'' வர்மா வற்புறுத்தினார்.

''வேண்டாம் டாக்டர். நான் இங்கேயே ஏதாவது ஒரு சோபாவில் படுத்துக் கொள்கிறேன்.'' அவள் அங்கிருந்து கிளம்ப விரும்பவில்லை.

''வேண்டாம்... எழுந்திரும்மா. நான் வீட்டில் விட்ட பிறகு ஏதாவது அவசியம் ஏற்பட்டால் ஒரு குரல் கொடுத்தால் போதும்.''

எவ்வளவு சொல்லியும் அவள் அங்கிருந்து புறப்படு வதாகத் தெரியவில்லை. கடைசியில் டாக்டர் சற்றுக் கடுமையான குரலில் மிரட்டிய பிறகு அவள் அங்கிருந்து எழுந்தாள்.

டாக்டர் அவளை வெளியேற்றினார்.

பக்கத்திலிருந்த குவார்ட்டர்ஸை நோக்கி அவள் நடந்து போவதை வர்மா கவனித்தார். அதே நேரம் அந்தப் பகுதி முழுவதிலும் ஒளிர்ந்த மின்சார விளக்குகள் ஒட்டுமொத்தமாக அணைந்தன.

உடனே ஹாலுக்கு வந்தவர் டார்ச் லைட்டை எடுத்து அவள் நடந்த பாதைப் பக்கமாக அடித்துப் பார்த்தார். அவள் தட்டுப்படவில்லை. வெளியே வந்து சிவகுமாரின் வீட்டுக் கதவைப் பார்த்தார். கதவு உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்தது.

வர்மா அவளை அழைக்கவேண்டாம் என்று பேசாமல் திரும்பி விட்டார்.

கோபத்துடன் வர்மாவின் வீட்டிலிருந்து வெளியேறி இருக்கிறாள். இப்போது கதவைத் தட்டி விசாரிக்க முற்பட்டால், அவள் தன்மீது குற்றம் கமத்தினாலும் சுமத்துவாள். அந்த ஓர் எண்ணமே அவர் மௌனமாகத் திரும்பியதற்குக் காரணம்.



மறுநாள் காலையில் டாக்டர் வர்மா, டாக்டர் சிவகுமாரின் வீட்டு காலிங்பெல்லை அழுத்தினார்.

சிவகுமார் கதவைத் திறந்தார்.

''என்ன சார்... இந்த விடியல் வேளையில்?'' வர்மாவிடம் விசாரித்தார்.

''உங்கள் தங்கை ராணி நேற்று அதிகமாக பயந்து விட்டாள் என்று நினைக்கிறேன்...'' வர்மா பேச்சை ஆரம்பித்தார்.

''யார்... ராணியா? எங்கே... யார் அது? நீங்கள் யாரைப் பற்றிச் சொல்கிறீர்கள்?'' சிவகுமார் வியப்புடன் எதுவும் புரியாதவராகக் கேட்டார்.

''வேறு யார்... உங்கள் தங்கை ராணியைத்தான் குறிப்பிடு கிறேன். நேற்று அவளை மட்டும் வீட்டில் விட்டுவிட்டு இரண்டு பேருமே நைட் டூட்டிக்குப் போய்விட்டீர்கள் இல்லையா?'' வர்மா சந்தேகத்துடன் சிவகுமாரைப் பார்த்தபடி பேசினார்.

''முதலில் உள்ளே வாருங்கள் சார். நிதானமாகச் சொல்லுங்கள். என்ன நடந்தது?''

வீட்டுக்குள் நுழைந்து உட்கார்ந்தார். வர்மா, பேச்சுக்குரல் கேட்டு சிவகுமாரின் மனைவி ராஜியும் வரவேற்பு அறைக்கு வந்தாள்.

முந்தைய இரவு நடந்த சம்பவங்களை சேதுவர்மா விவரித்தார்.

ஆவலுடன் கேட்ட இருவரும் வியப்பில் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

''சேது சார், எங்கேயோ... ஏதோ தவறு நடந்திருக்கிறது. ராணி என்ற பெயரில் எங்கள் இருவருக்கும் எந்த உறவினரும் கிடையாது. மற்றொரு விஷயம், எனக்குத் தங்கையே கிடையாது. அப்படியானால் இந்த சம்பவத்தின் பின்னணியில் ஏதோ ஒரு நோக்கம் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. எச்சரிக்கையாக இருங்கள்!'' சிவகுமார் சொன்னார்.

எதுவும் பதில் பேச முடியாத சேதுவர்மா அங்கிருந்து வெளியேறினார்.

அதற்குள் வேலைக்காரன் வந்திருந்தான். அதனால், அவர் வந்தவுடன் சூடான டீ கிடைத்தது.

அன்று வர்மாவுக்கு அரை நாள் வேலை.

டீ சாப்பிட்ட வர்மாவின் மனத்தில் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. 'அன்றொரு நாள் தன்னைத் தேடிவந்து அறிமுகப் படுத்திக் கொண்டு பேசிய சுமேஷை ஒரு தடவை சந்தித்துப் பேசினால் என்ன?'

இந்த சம்பவம் நடந்த அன்று சுமேஷிடம் வந்தவர் ரத்ன பிரபாதேவிதானா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். சுமேஷ் ஓவியராக இருப்பதால் தனது நோக்கம் சுலபமாக நிறைவேறும் என்று கருதினார் வர்மா.

சுமேஷை, ரத்னபிரபாதேவியின் முன்னால் கொண்டுபோய் நிறுத்தி, 'இவர்தான் அன்று என்னிடம் வந்தார்!' என்று சொல்ல வைக்கலாம்.

மணி பத்துக்கு மேல் ஆகியிருந்தது.

காரை ஸ்டார்ட் செய்து ஆர்ட்டிஸ்ட் சுமேஷின் இருப்பிடத்தை லட்சியமாக்கிச் செலுத்தினார்.

பண்ணார மூலைக்குப் போனால் ஒருவேளை ஓவியனின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கலாம் என்று தோன்றியது. அன்றைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டால், பண்ணார மூலைக்கு அருகில்தான் அந்த ஓவியன் வசிக்க வேண்டும்.

இரவு நேரம் மழை தூறல் போடும் போதுதான் ரத்னபிரபா(?) வந்து உதவி கோரியிருக்கிறாள்.

மெயின் ரோட்டிலிருந்து திரும்பியபோது வழியில் எவருமே எதிர்ப்படவில்லை. பண்ணார மூலையிலிருந்து இடதுபுறம் திரும்பினால் ரத்னபிராபவின் பங்களா வரும். பகல் நேரத்தில் அந்தப் பக்கம் போனபோது கூட வழியில் எங்கும் வேறு எந்த ... ஒருவரும் இல்லை.



சுமார் நூறு மீட்டர் தூரம் போவதற்குள் நாலைந்து மனிதர்கள் ஒன்று சேர்ந்து விரைவாக நடப்பது தெரிந்தது.

சேதுவர்மா காரின் வேகத்தைக் குறைத்து அவர்களுக்கு முன்புறமாக நிறுத்தி பிரேக்கை அழுத்தினார். அவர்களில் ஒருவரை அருகில் வருமாறு அழைத்தார் வர்மா.

''எனக்கு ஒரு விலாசம் தேவை. படம் வரையும் ஓவியர் ஒருவர் இந்தப் பகுதியில் இருக்கிறார். அவரது வீடு எங்கே இருக்கிறதென்று தெரியுமா?''

''நாங்களும் அங்குதான் போகிறோம்!'' மற்றவர்கள் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''அப்படியானால் யாராவது ஒருவர் காரில் ஏறிக் கொள்ளுங்கள்.'' டாக்டர் வற்புறுத்தினார்.

''ஜானி நீயே போப்பா!'' அவர்களில் ஒருவர் சொன்னார்.

இளைஞன் ஒருவன் காரில் ஏறினான்.

கார் முன்னோக்கி நகர்ந்தது.

சற்றுத் தூரம் போவதற்குள்ளேயே பாதையோரத்தில் கொஞ்சம் பேர் கூட்டமாக நின்றிருந்தனர். போலீஸ் ஜீப் ஒன்றும் நின்றிருந்தது.

டாக்டர் ஜீப்பின் அருகில் காரை நிறுத்தினார்.

இடது புறத்தில் காரை பூசிய கட்டடம் ஒன்று தென்பட்டது. கட்டடத்தின் முன்னால் ஒரு சிறிய கேட் இருந்தது. முற்றத்தில் இரண்டு போலீஸ்காரர்கள் உலவினர்.

கார் நின்ற சத்தத்தைக் கேட்டு இன்ஸ்பெக்டர் வெளியே வந்தார்.

டாக்டருக்கு அறிமுகமானவர்தான் இன்ஸ்பெக்டர்.

''வாங்க டாக்டர் சார். சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். என்ன சார் இந்தப் பக்கம்?'' இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''நான் இந்த இடத்துக்குத்தான் வர விரும்பினேன். இது ஓவியர் சுமேஷின் வீடுதானே?'' டாக்டர் கேட்டார்.

''ஆமாம் சார். ஆனால், அவர் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிகிறது. விடியற்காலை நேரத்தில் வாரப் பத்திரிகை அலுவலகத்திலிருந்து யாரோ ஓர் ஊழியர் கதைக்கான படம் வாங்கிப்போக வந்தாராம். அவர்தான் முதலில் இதைப் பார்த்தவர். தூக்குப்போட்டு இறந்திருக்கிறார்!'' இன்ஸ்பெக்டர் விவரித்தார்.

''ஒருவேளை கொலையாகக்கூட இருக்கலாம் இல்லையா?'' டாக்டர் தனது சந்தேகத்தை வெளியிட்டார்.

''மேஜைமீது ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறார்.''

டாக்டர் வர்மா வீட்டுக்குள் நுழைந்து பார்த்தார். சீலிங் ஃபேனில் கயிறு கட்டித் தொங்கிக் கிடந்தார் ஓவியர். அந்த உருவத்தின் கீழ் சற்றுத் தள்ளி ஸ்டூல் ஒன்று சரிந்து கிடந்தது. கடிதம் மேஜைமீது படிப்பதற்கு வாகாக விரித்த நிலையில் இருந்தது. பறக்காமலிருக்க சிறியகட்டை ஒன்று அதன்மீது வைக்கப்பட்டிருந்தது. டாக்டர் நின்ற நிலையிலேயே கடிதத்தைப் படித்தார்.

'' ... என்னுடைய இந்த முடிவுக்கு வேறு யாரும் எந்த வகையிலும் காரணமில்லை!'' என்று எழுதி கையெழுத்துப் போடப்பட்டிருந்தது.

அந்த ஒரே ஒரு வரிதான் மொத்தக் கடிதமும்.

டாக்டர் அந்தக் கையெழுத்தை ஊன்றிப் பார்த்தார். அழகான, குண்டு எழுத்துகள்.

பெண்களின் கையெழுத்து மாதிரி ஒன்றையொன்று தொடாமல் எழுத்துகள் சரியான இடைவெளியுடன் இருந்தன.

அவர் வரைந்த ஓவியங்கள் சில மேஜைமீது கிடந்தன.

'எதற்காக இந்த ஓவியர் இறந்திருப்பார்?' டாக்டருக்கு எந்தவிதமான பிடியும் கிடைக்கவில்லை. தனக்கு மிகவும் தேவையாக இருந்த, உருப்படியான சாட்சி ஒருவர் மறைந்து விட்ட வருத்தம் டாக்டரிடம் தென்பட்டது.



முதல் கட்ட விசாரணையை முடித்துக் கொண்டு உடலை போஸ்ட்மார்ட்டத்துக்கு அனுப்பி வைத்தனர்.

பி.எம். - ரிப்போர்ட்டைப் பார்க்கவேண்டும் என்று டாக்டர் விரும்பியதால் மருத்துவமனைக்குப் போனார். தனது சந்தேகத்துக்கு மாறாக அந்த மரணம் தற்கொலைதான் என்று அறிக்கை கூறியது.

ஆனால், சேதுவர்மாவின் மனத்துள் மட்டும் 'அது ஒரு திட்டமிட்ட கொலை!' என்று ஏதோ ஒன்று சொல்லியது. எப்படியும் அந்த உண்மையைக் கண்டறிவதென்று தீர்மானித்தார்.

திங்கட்கிழமை மருத்துவக் கல்லூரிக்கு வந்தபோது டாக்டர் வர்மாவுக்கு மற்றொரு செய்தி கிடைத்தது. தனது ஐந்து வருடப் பயிற்சியை முடித்துக்கொண்டு டாக்டர் சசிதரன் நியூயார்க்கிலிருந்து திரும்பி இதே மருத்துவக் கல்லூரியில் சேர்ந்துவிட்டதாகவும் தெரிந்தது.

இளைஞரும், உற்சாகம் நிரம்பியவருமான சசிதரன், டாக்டர் வர்மாவின் நெருங்கிய நண்பர். பள்ளி நாட்களில் ஒன்றாகவே படித்தவர்கள்.

டாக்டர் சசிதரன் புராதனமான வைத்தியப் பணிபுரியும் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் அப்பா புகழ் பெற்ற ஆயுர்வேத வைத்தியர். மந்திர தந்திரங்களிலும் தேர்ந்தவர்.

அவரின் மூதாதையர்கள் பைசாசிகமான சக்திகளை அடிமைப்படுத்தி வீட்டு வேலைகள் செய்யப் பயன்படுத்தியதாகவும் சொல்லப்படுகிறது.

சசிதரனின் அப்பா வாசுதேவன் நம்பூதிரி இன்னும் உயிருடன் இருக்கிறார். நகரத்தில் இப்போதும் மருத்துவத் தொழிலைத் தொடர்கிறார். அவ்வப்போது ஒரு சில மாந்திரீக வித்தைகளையும் செய்வதுண்டாம். ஆனால், அதெல்லாம் ரகசியமாகவே மேற்கொள்ளப்படுகிறதாம்.

டாக்டர் சசிதரன் அலோபதி மருத்துவத்தில் மட்டுமின்றி ஆயுர்வேதம் மற்றும் ஹோமியோபதி மருத்துவத்திலும் பட்டங்கள் பெற்றிருந்தார். பரம்பரை வழக்கத்தைத் தொடர்ந்து மாந்திரீகத்தையும் கற்று வைத்திருக்கிறார். ஆனால், அவற்றை இதுவரை சசிதரன் பயன்படுத்திப் பார்த்ததில்லை.

அன்று மாலையில் சசிதரனுக்காக வரவேற்பு விழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். அதிகமானவர்கள் கலந்து கொள்ளவில்லை. அதிகபட்சம் இருபத்தைந்து பேர் இருக்கலாம். அதில் நால்வர் பெண் டாக்டர்கள் - புரபஸர்கள்.

சசிதரன் திருமணமானவர். மனைவியும் ஒரு ஹோமியோபதி டாக்டர். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள்.

வரவேற்பு நிகழ்ச்சியின் இறுதியில் சசிதரன் ஏதாவது பேச வேண்டும் என்றும், அதுவும் அது அமெரிக்க வாழ்க்கை பற்றியதாக இருக்க வேண்டும் என்றும் நண்பர்கள் வற்புறுத்தினர்.

விழா நடந்த இடம் மருத்துவக் கல்லூரிக்கு முன்புறம் இருந்த ஓட்டல் ஒன்றின் பெரிய ஹால்.

சரியாக ஏழுமணிக்குப் பெரும்பாலானவர்கள் வந்து சேர்ந்தனர்.

விழாவைத் துவக்கி வைத்து உரை நிகழ்த்தியவர் டாக்டர் சேதுவர்மா. அவர் பேசி முடித்தபிறகு மேற்கொண்டு இரண்டு புதியவர்கள் அந்த ஹாலுக்கு வந்து சேர்ந்தனர்.

வர்மாவை நெருங்கி வந்த ரத்னபிரபா, "குட்ஈவ்னிங் டாக்டர்!" என்றாள்.

பிறகு டாக்டரின் வலது புறத்தில் காலியாக இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

சேதுவர்மாவின் இதயம் துரிதகதியில் துடிக்கத் தொடங்கியது. ஆனால், அவருக்கு மாறாக எந்தவிதமான உணர்வும் இல்லாமல் வெகு இயல்பாக உட்கார்ந்திருந்தாள் ரத்னபிரபா.

டாக்டர் சசிதரனைப் பற்றி, அவரைத் தெரியாத மற்றவர்களுக்காக அவர் நண்பர்கள் நிறையவே பேசினார்கள்.



அதிகமானவர்களுக்கு அவரைப்பற்றி எதுவும் தெரியாது என்பதும் உண்மைதான்.

டாக்டர் வாணிக்கு அவரை நன்றாக தெரியும். வாணியும் சசிதரனும் ஒன்றாக எம்.டி. வகுப்பில் பயின்றவர்கள். மேலும் அவர்களுக்கு நடுவே நெருக்கம் சற்று அதிகமாக இருந்ததும் மற்றவர்களுக்குத் தெரியும். இதெல்லாம் சசிதரனது திருமணத்துக்கு முந்தைய கதை.

வாணி இன்னும் திருமணமாகாதவர்.

"சசிதரன் சார், இனி நீங்கள்தான் பேச வேண்டும். ஏதாவது சுவாரஸ்யமான அனுபவமிருந்தால் சொல்லுங்களேன்..." டாக்டர் பாலச்சந்திரன் கேட்டுக்கொண்டார்.

"சரி... சொல்கிறேன். ஆனால், நான் சொல்லப்போவதை நீங்கள் யாரும் நம்பமாட்டீர்கள்." கூறிய சசிதரன் கூட்டத்திலிருந்த ஒவ்வொருவரையும் உற்றுப் பார்த்தார்.

அந்த முன்னுரையே குழுமியிருந்தவர்களின் ஆர்வத்தை அதிகப்படுத்தியதாகத் தோன்றியது.

"முதலில் சொல்லுங்கள் சார். நம்புவதா, வேண்டாமா என்பதை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்!" வேறு ஒருவர் குரல் கொடுத்தார்.

"சரி சொல்லிவிடுகிறேன். நான் முதலில் சொல்லப்போவது ஆவி மற்றும் பேய் பிசாசுகள பற்றித்தான். லிவிங்கோஸ்ட் பற்றி அதாவது உயிருடன் உலவும் ஆவிகள்..." டாக்டர் சசிதரன் மீண்டும் ஒருதடவை எல்லாரையும் பார்த்தார்.

"இப்படிப்பட்ட ஆவிகளைப் பற்றி ஆராயும் ஆராய்ச்சி நிலையம் ஒன்று லண்டனில் இயங்கி வருகிறது. அங்கு நான் ஆறு மாதகாலம் பயிற்சி எடுக்க நேர்ந்தது. மரணமடைந்தவர்களின் ஆவிகளை வரவழைத்து விவரங்களைச் சேகரிப்பது அவர்களது வேலை. ஒருமுறை கப்பல் ஒன்று விபத்தில் சிக்கி மூழ்கியதில், அமிழ்ந்து இறந்த கப்பல் கேப்டனை வரவழைத்து அவரது கட்டை விரல் அடையாளத்தை மெழுகில் பதிய

வைத்தார்கள். இது நடந்தது ஒரு மீடியேட்டர் மூலமாக. ஆனால், மெழுகில் பதிந்தது அந்த மீடியேட்டரின் கட்டைவிரல் அடையாளமல்ல. மாறாக, அந்த கேப்டன் பணிபுரிந்த காலத்தில் புத்தகத்தில் பதிந்திருந்த சொந்த விரல் அடையாளமாக அது இருந்தது...''

மூச்சுவிடக்கூட மறந்தவர்களாக எல்லாரும் சசிதரனின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

''நீங்கள் அதையெல்லாம் கற்றுக் கொண்டீர்களா மிஸ்டர் சசிதரன்?'' டாக்டர் வாணி குறுக்கிட்டுக் கேட்டார்.

''கற்றுக்கொண்டேன். மேலும் அதை இங்கு நடைமுறைப் படுத்துவதற்குரிய கருவிகளையும் வாங்கி வந்திருக்கிறேன்.'' சசிதரன் பதிலளித்தார்.

சசிதரனின் பதிலைக் கேட்டதும் ரத்னபிரபாதேவியின் முகம் வெளிறுவதை டாக்டர் சேதுவர்மா கவனிக்கத் தவறவில்லை!

## 6

''உங்களிடம் ஒரு சந்தேகம் கேட்கலாமா?'' டாக்டர் பாலச்சந்திரன் கேட்டார்.

பாலச்சந்திரன் பிரபலமான டாக்டர். மருத்துவக் கல்லூரியில் பணிபுரிவதோடு, பத்திரிகைகளிலும் மருத்துவம் தொடர்பான கட்டுரைகள் எழுதிப் புகழ்பெற்றவர். குறிப்பாகச் சொல்வதானால் மகப்பேறு மருத்துவத்தில் நிபுணர் அவர்.

''கேளுங்கள் டாக்டர்!'' சசிதரன் தலையாட்டியவாறு பாலச்சந்திரனை கவனித்தார்.

''இத்தகைய ஆவிகள் மீடியேட்டரின் அனுமதியுடன்தான் மற்றொரு உடம்பில் புகுந்து கொள்கின்றனவா? அல்லது சுயமாகவே அப்படிச் செய்கின்றனவா?''

''அருமையான சந்தேகம். இது தொடர்பான விவாதம் ஒவ்வொன்றிலும் எனக்கும் இதே சந்தேகம் எழவே செய்தது.''



சசிதரன் இப்போதும் ஒவ்வொருவரையம் பார்த்தார். அவரது பார்வை கடைசியாக ரத்னபிரபாதேவியின் மீது நிலைத்தது. இன்னும் தெளிவாகச் சொல்வதானால் ஒருவித சந்தேகத்துடன் அவரைப் பார்ப்பதாகவும் தெரிந்தது.

டாக்டர் வாணியும் அதை கவனிக்கத் தவறவில்லை.

''இவர் டாக்டர் இல்லை. என் நண்பர். நகரின் பிரபலமான பியூட்டி பார்லரை நடத்துகிறார். மிஸ் ரத்னபிரபாதேவி!'' டாக்டர் வாணி அவரை அறிமுகப்படுத்தினார்.

''இதற்குமுன் எங்கோ பார்த்துப் பழகிய முகம் போல் தெரிகிறது. சட்டென்று ஞாபகம் வரவில்லை!'' சசிதரன் கூறினார்.

''நீங்கள் என்னைப் பார்த்திருக்க முடியாது!'' ரத்னபிரபா உறுதியான குரலில் கூறினாள்.

ஆனால், சசிதரனுக்கு அந்த பதில் அவ்வளவாகத் திருப்தியளிக்கவில்லை. அவர் மூளையின் நினைவுப் பகுதியில் அந்த வடிவம் விநாடிக்கு விநாடி தெளிவடைந்து வந்தது.

'எந்த இடத்தில் தான் அவரைச் சந்தித்தோம்' என்று தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார் சசிதரன். ஆனால், நினைவுக்கு வரவில்லை. ரத்னபிரபா டாக்டர் சசிதரனை உற்றுப் பார்த்தாள். அவர் சட்டென்று தன் முகத்தைத் திருப்பிக் கொண்டார். அதன் பிறகு சசிதரனால், ரத்னபிரபாவின் முகத்தைப் பார்க்க முடியாமல் போனது.

ஏதோ ஒரு சக்தி, தன்னைப் பிடித்துப் பின்னுக்கு இழுப்பதாக சசிதரனுக்குத் தோன்றியது.

''உங்களது அறிமுகம் மற்றும் நட்பு பற்றி அப்புறமாகப் பேசலாம். இப்போது நேரடியாக விஷயத்துக்கு வருவோம்.'' டாக்டர் பாலச்சந்திரன் குறுக்கே புகுந்து பேச்சை வெட்டினார்.

''சரிதான்... அந்த விஷயத்தையே மறந்துவிட்டேன். நான் சொல்ல வந்தது...''

''மீடியேட்டரின் சம்மதத்துடன்தானா ஆவிகள் உடல்களுக்குள் புகுந்து கொள்கின்றன? அல்லது சுயவிருப்பத்தின்

பேரிலா என்பது பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்...'' டாக்டர் சாக்கோ நினைவூட்டினார்.

''அது இரண்டு விதமாகவும் நடப்பது உண்டு. அனுமதி இல்லாமலும் ஆவிகள் உடலில் புகுந்து கொள்வதுண்டு. அது மட்டுமின்றி பைசாசிக சக்திகளை ஆவாஹம் செய்து உடம்புக்குள் செலுத்தவும் ஆவிகளால் முடியும். மாந்திரீக வித்தைகளில் தேர்ந்தவர்கள்கூட இப்படிச் செய்வது உண்டு!'' சசிதரன் குறிப்பிட்டார்.

நடுவே ஒருதடவை சசிதரன் யதேச்சையாக ரத்ன பிரபாவைப் பார்த்தார்.

அவளும் டாக்டரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

முதலில் அவருக்கு ஏற்பட்ட சந்தேகம் இப்போது வலுவுடன் தலைதூக்கியது.

'அவரை எங்கே பார்த்திருக்கிறோம்?' என்பதையே அவர் மனம் யோசித்தது.

''நான் ஒரு தடவை ருமேனியாவுக்கு கல்விச் சுற்றுலா போனபோது ஒரு மனிதரை சந்திக்க தேர்ந்தது. அது விசித்திரமான மற்றோர் அனுபவம்...'' டாக்டர் சசிதரன் தொடர்ந்தார்.

''அந்த மனிதர் தான் ஈடுபட்டு வந்த புரோகிதர் தொழிலை உதறிவிட்டு, சாத்தானை வணங்கும் பாதையில் திரும்பியவர். சாத்தானின் கோயிலில் பூசாரியாகவும் வேலை செய்தவர். அந்த மனிதர் துர்மரணம் அடைந்தவர்களின் ஆத்மாக்களைத் தன் உடம்பில் புகுத்திக் கொண்டு எத்தனையோ அற்புதமான காரியங்களைச் செய்திருக்கிறார். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அவர் முகத்தோற்றமே மாறுவதுண்டு!''

''உண்மையாகவா!'' கூடியிருந்தவர்களின் உதடுகள் ஒட்டுமொத்தமாக வியப்பில் விரிந்தன.

அந்த விழா மேலும் ஒரு மணி நேரம் நீண்டது. இப்போது மணி ஏழுக்கு மேல் ஆகிவிட்டது.



சசிதரன் மேற்கொண்டு குறிப்பிட்ட சில சம்பவங்களைக் கேட்ட பிறகு, வந்திருந்தவர்களுக்குத் தனியாகத் தங்களது இருப்பிடத்துக்குச் செல்லவே பயம் தோன்றியது.

அன்றைய இரவில் டாக்டர் சசிதரன், சேதுவர்மாவின் வீட்டில் விருந்தாளியாகத் தங்குவது என்று தீர்மானித்தார்.

இரவு வெகு நேரம் வரையில் அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

பேச்சோடு பேச்சாக, தனக்கு ஏற்பட்ட வித்தியாசமான அனுபவங்களையும் டாக்டர் வர்மா, சசிதரனிடம சொல்லத் தவறவில்லை.

''நீங்கள் சொன்னதெல்லாம் கவனத்துக்குரிய விஷயங்கள் தான். அந்தப் பெண்மணியைப் பார்த்தபோது எனக்கும் சில சந்தேகங்கள் ஏற்படவே செய்தன.''

''நீங்கள் எந்த இடத்தில் அந்தப் பெண்மணியைப் பார்த்திருக்கிறீர்கள் என்பது நினைவுக்கு வந்து விட்டதா?'' வர்மா கேட்டார்.

''எனது கணிப்பு சரியானால், அவளை இலங்கையில் பார்த்திருக்கிறேன்!'' நெற்றியைச் சுளித்தபடி சசிதரன் கூறினார்.

''இலங்கையிலா?''சேதுவர்மா முன்பு ஒரு தடவை நடந்த நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார்.

'தன் சிற்றப்பா பிரதாப வர்மா இலங்கைக்குப் போனதாகவும் அங்கு நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் இறந்து போனதாகவும் ஒரு கதை சொல்லப்படுகிறது. தன்னைவிடப் பத்து வயது அதிகம் அவருக்கு என்றும் சொல்லியிருந்தார்கள். இப்போது எதற்காக அந்த நினைவு தோன்றியது?' சேதுவர்மா யோசனையில் ஆழ்ந்தார்.

ரத்னபிரபாதேவி மூலமாகத் தனக்கு ஏதோ ஓர் ஆபத்து நிகழப் போவதாக சேதுவர்மாவுக்குள் காரணமற்ற சந்தேகம் தோன்றியது.

இதுவரை நடந்துள்ள சம்பவங்களை வைத்துப் பார்த்தால் ரத்னபிரபாதேவியின் குறி தன்னை நோக்கித்தான் என்று தெரிகிறது.

அதற்கு என்ன காரணமாக இருக்கும்?

''எதற்காக அதை அவ்வளவு ஆர்வத்துடன் கேட்டீர்கள்?'' சசிதரன் கேட்டார்.

''ஒன்றுமில்லை. சட்டென்று ஒரு பழைய சம்பவத்தை நினைத்துக் கொண்டேன்!'' சேதுவர்மா அதைச் சொல்ல வேண்டாமென்று நினைத்தார்.

கடிகாரத்தில் மணி பன்னிரண்டு அடித்தது.

'தூங்கப் போகலாம்' என்று இருவரும் ஏக காலத்தில் நினைத்தனர்.

இருவரும் ஒரே அறைக்குள் படுத்துக் கொண்டனர்.

டாக்டர் வர்மா படுத்த கொஞ்ச நேரத்திலேயே உறங்கத் தொடங்கினார். ஆனால், சசிதரனுக்கு உறக்கம் வரவில்லை. அவர், தன் வெளிநாட்டு அனுபவங்களை மனத்துள் அசை போட்டவாறு படுத்திருந்தார்.

எங்கும் முழுமையான அமைதி நிலவியது. சற்றுத் தொலைவிலுள்ள மெயின் ரோட்டுப் பக்கமிருந்து கேட்கும் வாகனப் போக்குவரத்தின் சத்தம்கூட சுத்தமாக நின்று போயிருந்தது. அறைக்குள் இருள் நிறைந்திருந்தது. ஒரு மின்மினிப் பூச்சி வெளிச்சம் கூட அறைக்குள் இல்லை.

ஏதோ ஓர் உணர்வால் உந்தப்பட்டவராக சசிதரன் ஜன்னல் பக்கம் திரும்பினார்.

யாரோ மூச்சு விடுவது போன்ற சத்தம் ஜன்னலருகிலிருந்து கேட்டது.

அதே நேரம் வெகு தொலைவில்... அடிவானத்தின் எல்லையில் ஒரு மின்னல்கீற்று கிளைவிட்டுப் பரவி அடங்கியது. ... மின்னிமறைக்கும் வேளையில் அங்கு யாரோ நிற்பதாக



சசிதரன் ஜன்னலைப் பார்த்தார்.

மீண்டும் ஒரு மின்னல் வெட்டியது.

அது ஒரு பெண் வடிவம்!

டாக்டர் சேதுவர்மா விவரித்த சம்பவம் சசிதரனின் மூளைக்குள் பாய்ந்தது.

'ரத்னபிரபாதேவி! அல்லது கடந்த ஏதோ ஓர் இரவில் இந்த வீட்டுக்கு வந்த இளம்பெண்! இந்த உருவம். அந்த இருவரில் யாராவது ஒருவருடையதாக இருக்கவேண்டும். எப்படியிருந்தாலும் அனுமதி இல்லாமல் வீட்டுக்குள் வராது அந்த உருவம்' என்று சசிதரன் தீர்மானமாக நம்பினார்.

''பைசாசிக சக்திகள் சாதாரண நிலையில் நமது சம்மதம் பெறாமல் நம் உடம்புக்குள் புக முடியாது!'' என்று அப்பா சொல்லியிருந்தது நினைவுக்கு வந்தது. ஆனால், நமது சம்மதத்தைப் பெற எல்லை தாண்டிய முயற்சியில் கூட அவை ஈடுபடலாம்.

கழுத்தில் அப்பா. மந்திரித்துத் தந்த தாயத்து இருக்கிறது. தாயத்துக்குள் என்ன சக்தி குடியேற்றப்பட்டிருக்கிறது என்று தெரியாது. ஆனால், ''எந்த நேரமும் இதை உடம்பில் அணிந்திருக்க வேண்டும். பிரியக் கூடாது.'' என்று எச்சரித்திருந்தார்.

அந்த உருவம் இப்போதும் ஜன்னலுக்குப் பின்னால் நிற்கிறது.

சசிதரன், கழுத்தில் கிடந்த தாயத்தைச் சங்கிலியுடன் கழற்றிச் சுண்டுவிரலில் போட்டபடி ஜன்னலை நோக்கி மெதுவாக ஓசை எழுப்பாமல் நடந்தார். அவர் விரல் முன்புறமாக நீண்டபடி இருந்தது.

சட்டென்று இருளுக்குள் யாரோ ஓடி மறைவதுபோல் தோன்றியது.

தாயத்துக் கோத்த அந்தச் சங்கிலியின் சக்தி புரிந்த பிறகு மனத்தில் ஸதரியம் அதிகரித்ததை உணர்ந்தார். தவிர, தானே

கற்றுக் கொண்டுள்ள மாந்திரீக முறைகளும் கைவசமிருப்பதால் ஒரு கை பார்த்து விடுவது என்ற முடிவுக்கு வந்தார்.

மறுபடி கட்டிலுக்கு வந்து படுத்தார்.

களைப்பினால் உடனடியாக உறங்கவும் செய்தார்.

முதலில் கண் விழித்தவர் சேதுவர்மாதான். வேலையாள் கொண்டுவந்து கொடுத்த காபியை உறிஞ்சும் போதுதான் சசிதரன் கண்விழித்தார். கண் விழித்தவர் முதலில் பார்த்த இடம் ஜன்னல் தான்.

"நல்ல தூக்கமா?" வர்மா கேட்டார்.

"தூங்கினேன்... நான் ஒரு விஷயம் சொல்லட்டுமா? நீங்கள் தனியாக இந்த வீட்டில் வசிக்கக் கூடாது!" சசிதரன் கூறினார்.

"என்ன விஷயம்?"

முந்தைய இரவில் தனக்கு நேர்ந்த அனுபவத்தை சசிதரன் விவரித்தார்.

"அந்த உருவம் அநேகமாக அந்த இளம் பெண்ணாக இருக்கவேண்டும். ஒருநாள் இரவில் வந்தாளே..." சேதுவர்மா அவள் முகத்தை நினைவுக்குக் கொண்டு வந்தார். சிவகுமாரின் தங்கை என்று சொல்லிவந்தவள். அதையும் சேதுவர்மா சசிதரனிடம் விவரித்தார்.

காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு தன்னுடைய வீட்டுக்குப் புறப்பட சசிதரன் தயாரானார்.

"நான் அப்பாவிடம் இதைப் பற்றிப் பேசிப் பார்க்கிறேன். இதற்கு ஒரு மாற்று இல்லாமல் இருக்காது." சசிதரன் காரில் ஏறும்போது சொன்னார்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு வீட்டுக்குத் திரும்பி வந்திருக்கிற சசிதரனை அப்பாவும் அம்மாவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

அன்று இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு அப்பாவும் மகனும் திண்ணையில் அமர்ந்து பேசத் தொடங்கினர்.



"அந்த ஊரின் விசேஷங்கள் என்னவென்று சொல் பார்க்கலாம்!" என்றார் வாசுதேவன் நம்பூதிரி.

"அப்பா உங்களுக்குத் தேவையான ஒரு விஷயத்தை முதலில் சொல்லிவிடுகிறேன். மாந்திரீக வித்தைகளில் மேல் நாட்டினர் நமது நாட்டைவிட ஒரு பங்கு அதிகமாக ஈடுபடுகிறார்கள்..." என்ற சசிதரன், அங்கு நடந்த சில சம்பவங்களை விவரிக்கவும் செய்தார்.

"நீ இப்போது சொன்னவற்றை நம்மவர்களும் செய்திருக்கிறார்கள். ஆனால், இப்போது அதையெல்லாம் அதிகமாகச் செய்வதில்லை, அவ்வளவுதான்." அப்பா கூறினார்.

"என்னுடன் படித்த சேதுவர்மாவை உங்களுக்குத் தெரியும் இல்லையா? அவருக்கும் சமீபகாலமாக இந்த மாதிரி அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன." சசிதரன் அங்கு நடந்ததை விவரித்தார்.

வாசுதேவன் நம்பூதிரி எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டார். அவ்வப்போது அவர் முகத்தில் வெவ்வேறு வகையான உணர்வுகள் அலையடித்தன. கடைசியாக அவர் கூறினார்: "நீ இப்போது கூறியது கொஞ்சம் கடுமையான விஷயம்தான்."

"அப்படியென்றால்..."

"நீ குறிப்பிட்ட ரத்னபிரபாதேவி, அபாரமான மாந்திரீக வித்தைகள் கற்றுக்கொண்ட ஒரு பெண்மணியாக இருக்க வேண்டும். ஒருவேளை நாம் இப்போது பேசுவதைக் கூட அறிந்துகொள்ளும் வல்லமை கைவரப் பெற்றிருக்கலாம்."

அதே விநாடியில் ஏதோ மரக்கிளையிலிருந்து பறவையொன்று குரல் கொடுத்தது. அந்த வீட்டின் தென்புற மூலையிலிருந்து சவுக்கையை ஒட்டிய பகுதியிலிருந்துதான் அந்த சத்தம் வந்தது.

"வித்தியாசமான அந்த சத்தத்தை கவனித்தீர்களா அப்பா?" சசிதரன் கேட்டார்.

''கேட்டேன். இது இரவு நேரங்களில் மட்டுமே பறந்து திரியும் ஆந்தை வகையைச் சேர்ந்த ஒரு பறவை.'' வாசுதேவன் நம்பூதிரி கூறினார்.

நேரம் பதினொன்றுக்கு மேல் ஆகியிருந்தது.

''அந்தப் பறவையின் குரல் கேட்டது ஏதாவது துர்சகுனமாக இருக்குமோ?'' சசிதரன் கேட்டார்.

''அப்படித்தான் தோன்றுகிறது. ஒருவேளை கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நீ குறிப்பிட்ட பெண்மணி அனுப்பிய பறவையாகக் கூட இருக்கலாம். வரவேற்பு விழாவில் நீ பேசிய பேச்சுக்குப் பிறகு அந்தப் பெண்மணி உன்னையும் அவளின் எதிரிக்கூட்டத்தில் சேர்த்திருக்கலாம்.'' வாசுதேவன் நம்பூதிரி தனது கருத்தை வெளியிட்டார்.

''எனக்கும் அப்படியொரு சந்தேகம் ஏற்படத்தான் செய்தது.'' சசிதரன் எழுந்தார்.

''பேசிக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. மிச்சத்தை நாளைக்குப் பேசிக்கொள்ளலாம். போய்ப் படுத்துக் கொள் சசி!'' வாசுதேவன் நம்பூதிரி தென்புற அறையை நோக்கி நடந்தார்.

சசிதரன் நடுவிலிருந்த அறையில் படுத்துக் கொள்வது வழக்கம்.

சசிதரனின் மனைவி நிர்மலாவும், குழந்தைகளும் சசியின் மாமனார் வீட்டில் தங்கியிருந்தனர். சசிதரன் வெளிநாட்டுக்குப் போனதால், நிர்மலா தனது அம்மா வீட்டுக்குப் போய்விட்டாள். சசிதரனின் மாமனார் வீடு மருத்துவக் கல்லூரிக்கு அருகில்தான். சசி, தன் பெற்றோர் மீது மிகவும் அன்பு வைத்திருப்பதால் நேராக இங்கே வந்துவிட்டார். விஷயம் தெரிந்தால், மனைவி வீட்டார் வருத்தப்படுவார்கள் என்பதும் சசிதரனுக்குத் தெரியும்.

உண்மையைச் சொன்னால், இங்கு நடந்த எதிர்பாராத சம்பவங்கள்தான் அந்தப் பயணத்தைத் தள்ளிப் போட்டது.



நள்ளிரவு தாண்டிய பிறகும் சசிதரனுக்கு உறக்கம் வரவில்லை.

அந்தப் பறவையின் குரல் அவர் மனத்துள் ஏதோ ஒரு நிம்மதியற்ற தன்மையை ஏற்படுத்தியது.

ஆழ்ந்த உறக்கத்தில் அவர் பல தடவை திடுக்கிட்டு விழித்தார்.

மறுபடி கண்களை மூடும்போது ரத்னபிரபா தேவியின் முகம் மனத்தில் தெளிவடையத் தொடங்கும். 'என்ன காரணத்தாலோ, அந்த முகம் தன்னுள் சன்னமான பயம் ஏற்படுத்து'வதை உணர்ந்தார்.

காலையில் சிற்றுண்டி அருந்திய பிறகு மனைவி, குழந்தைகளைப் பார்ப்பதற்காக மாமனார் வீட்டுக்குப் புறப்பட்டார் சசிதரன்.

''ஊருக்குத் திரும்பி வந்த பிறகும் எங்களை வந்து பார்க்க இவ்வளவு தாமதமா?'' என்று மனைவியும் குழந்தைகளும் செல்லமாகக் கோபிக்கவே செய்தனர். வரவேற்பு விழாவும் அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களும், உடனே அப்பாவைக் காண வேண்டிய அவசியத்தையும் அவர் விளக்கிய பிறகே நிர்மலா இயல்பு நிலைக்குத் திரும்பினாள்.

சசிதரனுக்கு மகிழ்ச்சியளிக்கும் மற்றொரு செய்தியையும் நிர்மலா தெரிவித்தாள். அதாவது நிர்மலாவுக்கு மாற்றல் உத்தரவு வந்திருந்தது. இந்தத் தடவை சசிதரனின் பெற்றோர் வசிக்கும் பகுதியில்தான் வேலை. அங்கிருக்கும் ஹோமியோபதி மருத்துவ மனையில் வேலை செய்தால், சசிதரனின் அப்பா வீட்டிலேயே தங்கிக் கொள்ளலாம்.

மறுநாளே சசிதரனும் மனைவியும் குழந்தைகளும் அங்கிருந்து புறப்பட்டார்கள். நிர்மலா அன்றே புதிய இடத்தில் வேலைக்குச் சேரவும் செய்தாள்.

மூன்று நாட்களுக்குப் பிறகு சசிதரன், டாக்டர் சேதுவர்மாவை சந்தித்தார்.

''என்னங்க சேது, ஏதாவது செய்தி உண்டா?'' சசிதரன் கேட்டார்.

''நான் உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்''

''என்ன விஷயம், சொல்லுங்கள்!''

''சசி நீங்கள் விரும்பினால் எனது வீட்டுக்கு வலது புறத்திலுள்ள குவார்ட்டர்ஸில் வசிக்கலாம். நேற்றுத்தான் அது காலியானது. கடந்த மாதம் டிரான்ஸ்ஃபர் ஆன டாக்டர் சீதாராமன் நேற்றுத்தான் பொருள்களை எல்லாம் எடுத்துக் கொண்டு போனார். உங்களுக்காக அந்த வீட்டை ஏற்பாடு செய்யட்டுமா?''

''நல்ல விஷயம்தான். இந்த யோசனை நிர்மலாவுக்கும் பிடிக்கும். எங்கள் வீடும் பக்கத்தில்தான். ஆத்திர அவசரத்துக்கும் போய்வரவும் சௌகரியமாகயிருக்கும்.''

''ஆஸ்பத்திரி காம்பௌண்டுக்குள்ளேயே தங்கியிருப்ப தால், நோயாளிகளும் உங்களை எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம்...'' சேதுவர்மா தனது கருத்தைக் கூறினார்.

''இன்றைக்கு வெள்ளிக்கிழமை. அப்படியானால் ஞாயிற்றுக் கிழமை குடி வந்து விடலாம்'' சசிதரன் கூறினார்.

சேதுவர்மாவைப் பொறுத்தவரை, சசிதரனின் துணை தற்போது மிகவும் அவசியம். துணைக்கு வேறு உறவினர்கள் யாரும் இல்லாத நிலையில், சசிதரனும் அவர் குடும்பத்தினரும் அவர் சொந்தக்காரர்களைப் போல் தோன்றியதில் வியப்பில்லை.

''நான் ஒரு பெண்மணியைப் பற்றிச் சொன்னேனே... ஞாபகமிருக்கிறதா உங்களுக்கு? எந்த விதத்தில் அவளுக்கு நான் பகைவனானேன் என்று புரியவில்லை!'' சேதுவர்மா கூறினார்.

''ஏன் இப்படி யோசிக்கிறீர்கள்?''

''அவர் மகளை எனக்குத் திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்த பிறகு, என்னைத் தொல்லைப்படுத்தாமல் அல்லவா இருக்க வேண்டும் அவர்கள்?''



''சரியான சந்தேகம்தான். இதில் யோசிக்க வேண்டிய விஷயம்... உண்மையிலேயே அவள், அவர் மகள்தானா என்பது?''

''அப்படியா நினைக்கிறீர்கள்'' சேது வியப்புடன் சசிதரனைப் பார்த்தார்.

''அல்லது மகள் என்று சொன்னதே மனிதப் பெண்ணாக இல்லாமல் வேறு ஏதாவதாக இருந்தால்... டாக்டர் சார். பிரசவத்தின்போது இறந்துவிட்டதாகச் சொன்ன அதே பெண்ணைத்தானே அவர் மகள் என்று அன்று அதே பங்களாவில் பார்த்தீர்கள்?''

''ஆமாம். இருவரும் ஒரே பெண்தான். சரண்யா அவள் பெயர்.''

''அதிலெல்லாம் எவ்வளவு தகிடுதத்தங்கள் நடந்துள்ளதோ? பிறந்தவுடன் இறந்த குழந்தை... பிறகு அந்த இடத்தில் நீங்கள் பார்த்த ரத்தத் துளிகள்... இதெல்லாம் அசாதாரண சம்பவங்கள். என்ன நடப்பதாக இருந்தாலும் அந்தப் பெண்மணியையும் அவள் நடவடிக்கைகளையும்ஆராய்வது என்று தீர்மானம் செய்திருக்கிறேன்.'' சசிதரன் உறுதியான குரலில் பேசினார். சட் டென்று ஏதோ யோசனையிலிருந்து விடுபட்டவராக, ''ரத்ன பிரபாவின் போன் நம்பர் உங்களுக்குத் தெரியுமா?'' என்றார்.

''எனக்குத் தெரிந்தவரை அவருக்கு போன் இல்லையென்று நினைக்கிறேன். இப்போது போன் வந்திருக்குமோ என்னவோ தெரியவில்லை.''

''பரவாயில்லை. நான் நேராக அங்குதான் போகிறேன். ஒரு தடவை தனியாக அவரை சந்தித்துப் பேச வேண்டும்...'' சசிதரன் எழுந்தார்.

''தனியாகவா போகிறீர்கள்?'' சேதுவர்மா, பரபரப்புடன் கேட்டார்.

''அதற்கென்ன... எப்படிப்பட்ட பைசாசிக சக்தியும் இந்தத் தாயத்துக்கு முன்னால் எதுவும் செய்ய முடியாது'' சசிதரன் தாயத்து கோத்த சங்கிலியை உயர்த்திக் காட்டினார்.

சற்று நேரத்தில் சசிதரனது கார் அங்கிருந்து புறப்பட்டது.

டாக்டர் சசிதரனின் மாருதி கார் மெயின்ரோட்டைக் கடந்து செம்மண் பாதைக்கு நழுவியது. படர்ந்திருந்த ஆலமரத்தின் அடிப்பகுதியை நெருங்கியபோது அதன் கீழே உண்டியலும் சூலமும் தெரிந்தன.

சேதுவர்மா சொன்னபடி கார் வடக்குப்புறமாகத் திரும்பியது. ஆள்நடமாட்டமில்லாத பாதை. இருபுறமும் அடர்த்தியான மரங்களும், புதர்ச்செடிகளும் காடுபோன்ற தோற்றத்தை ஏற்படுத்தின. ஏறத்தாழ அங்கிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரம் போனபிறகு சேதுவர்மா குறிப்பிட்ட இரண்டடுக்கு பங்களா தென்பட்டது. கேட் அப்போதும் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை.

சசிதரனது கார் கேட்டைத் தாண்டியது.

முற்றத்தில் வேறு கார்கள் எதுவும் இல்லை. கார் இன்ஜினை நிறுத்திவிட்டு வாசற்படிக்கு வந்த சசிதரன் காலிங்பெல்லை நெருங்கினார்.

காலிங்பெல்லுக்கு பதிலாக அந்த இடத்தில் ஒரு கயிறு தொங்கியது.

மின்சாரம் இல்லாவிட்டாலும், மணியடிப்பதற்காக அந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தோன்றியது. ஒருவேளை அந்தக் கட்டடம் கட்டப்பட்டபோதே இந்த மணி அமைப்பும் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சசிதரன் யூகித்தார்.

சசிதரன் கயிறைப் பிடித்து இழுத்தார். உள்ளே எங்கோ மணியடிக்கும் சத்தம் கேட்டது. தொடர்ந்து யாரோ நடந்துவரும் காலடியோசை.

கதவைத் திறந்தது ஓர் இளம்பெண்.

''உட்காருங்கள். அம்மா இப்போ வந்திடுவாங்க!'' இளம்பெண் அளவாகப் பேசினாள்.

''அவர் என்ன செய்கிறார்?'' சசிதரன் கேட்டார்.

''தெரியாது.'' சொல்லிவிட்டு அவள் பாட்டுக்குத் திரும்பிப் போனாள்.



சசிதரன் விசாலமான வரவேற்பு அறையில் இருந்த சோபாவில் அமர்ந்தார். தெளிவற்ற ஹால் பகுதி அதிகமாகப் பழங்காத இடம்போல் தெரிந்தது.

விரைவிலேயே பால்கனிப் பகுதியில் யாரோ நடந்து வருவது தெரிந்தது.

படிக்கட்டில் இறங்கியபோதுதான் ஆளை அடையாளம் தெரிந்தது.

ரத்னபிரபாதேவி!

''டாக்டர் சசிதரன், நான் உங்களைத்தான் எதிர்பார்த்தேன்!'' உறுதியான குரலில் வெளிவந்தன சொற்கள் ரத்னபிரபாவிடமிருந்து.

சசிதரன் தன்னையும் மீறித் தன் கழுத்திலிருந்த தாயத்து கோர்த்த சங்கிலியில் கை வைத்தார்!

## 7

ரத்னபிரபாதேவி சோபாவில் அமர்ந்தாள்.

டாக்டர் சசிதரனின் வலதுகைப் பகுதி அப்போதும் அவர் மார்புப் பகுதியில் படிந்திருந்தது.

'தன்னை எதற்காக அவள் எதிர்பார்த்திருக்க வேண்டும்?' சசிதரனின் மனம் தனக்குத்தானே கேட்டுக் கொண்டது.

மனத்துள் எழுந்த பரபரப்பை அடக்கிக்கொண்டு அவர் கேட்டார்: ''என்ன விஷயமாக எதிர்பார்த்தீர்கள்?''

''சொல்கிறேன். அதற்கு முன்னால் குடிப்பதற்கு ஏதாவது தரட்டுமா? உங்களுக்கு தக்காளி ஜூஸ் ரொம்பவும் பிடிக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். சரண்யா!'' உட்புறமாகத் திரும்பிக் குரல் கொடுத்தாள் ரத்னபிரபா.

அடுத்த நிமிடம் அப்படியோர் அழைப்பை எதிர் பார்த்திருந்ததைப் போல இளம்பெண் ஒருத்தி தக்காளி ஜூஸுடன் வந்தாள்.

ரத்னபிரபா அதை வாங்கி முன்புறமிருந்த டீப்பாய் மீது வைத்தாள்.

"குடியுங்கள்!" ரத்னபிரபா வற்புறுத்தினாள்.

அந்த வற்புறுத்தலுக்கு அடிபணிவதைத் தவிர சசிதரனுக்கு வேறு வழியில்லை. கிளாஸைக் கையில் எடுத்தவர் ஒரு விநாடி அதை உற்றுப் பார்த்தார்.

"சந்தேகப்பட வேண்டாம். அது ரத்தமெல்லாம் கிடையாது!" சிரித்தவாறே ரத்னபிரபா கூறினாள்.

எதற்காக அவள் அப்படிச் சொன்னாள் என்று டாக்டர் சசிதரனுக்கு விளங்கவில்லை.

அந்த ஜூஸ் ருசியாக இருந்தது.

"அன்று நடந்த வரவேற்பு விழாவின்போது, ஏற்கெனவே என்னைப் பார்த்திருப்பதாகச் சொன்னீர்களே, எங்கே என்னைப் பார்த்தீர்கள் என்று சொல்ல முடியுமா?" ரத்னபிரபா, டாக்டர் சசிதரனின் கண்களை உற்றுப் பார்த்தவாறு கேட்டாள்.

சசிதரனின் நினைவுகள் பின்னோக்கிப் பாய்ந்தன.

அப்போது இலங்கையில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலம் பணிபுரிந்து கொண்டிருந்தார். அந்த மருத்துவ மனைக்கு அதிகமாக மகப்பேறு நோயாளிகள்தான் வந்தனர். பிரசவம்தான் அங்கும் அதிகமாக நடந்தது.

பிறந்து நாலைந்து நாட்களேயான குழந்தைகள் அடிக்கடி காணாமல் போவது வழக்கமானது. மருத்துவமனை ஊழியர் களும், ஊர் மக்களும் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தனர். அதனால், மருத்துவமனையின் நல்ல பெயரே கெட்டுப் போனது.

குற்றவாளிகளை எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

மருத்துவமனையில் இரவு நேரங்களில் பார்க்க நேர்ந்த சிலரை வைத்து ஒருநாள் அணிவகுப்பு நடந்தது.



குழந்தையை இழந்த இரண்டு தாய்களும், இரவு நேரத்தில் தேடி பார்த்த நர்ஸுகளும்தான் சந்தேகத்துக்கு உரியவர்களை அடையாளம் காட்டினர்.

இதை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த அதிகாரிகளுடன் டாக்டர் சசிதரனும் இருந்தார்.

சந்தேகத்துக்குரியவர்களாக அடையாளம் காட்டப்பட்ட நர்ஸ்கள் மத்தியில் ரத்னபிரபாதேவியின் முகமும் இருந்ததாக இப்போது அவரது நினைவு கூறியது.

அப்போது அவள் பிடிபட்டதாகத் தெரியவில்லை.

"நீங்கள் அந்த சந்தர்ப்பத்தையும் இடத்தையும் அடையாளம் கண்டு கொண்டீர்கள் இல்லையா?" ரத்னபிரபா கேட்டாள். அவள் குரலிலிருந்த கட்டளைத்தொனி டாக்டர் சசிதரனிடம் சந்தேகத்தை ஏற்படுத்தியது. இவளிடம் ஏதோ அமானுஷியமான சக்திகள் இருப்பதாக டாக்டர் நினைத்தார்.

எனவே, அந்த நிலையில்... தான் பார்த்த அந்த சம்பவத்தை அவளிடம் மறைக்க விரும்பினார் டாக்டர்.

"இல்லை... எதுவும் எனக்குச் சரியாக ஞாபகம் வரவில்லை."

"அது உண்மையானால், உங்கள் பதில் அப்படியே இருக்கட்டும். என்னை நீங்கள் இதற்கு முன் எங்கும் வெளியில் பார்த்ததில்லை. அப்படி இருந்து கொள்வதுதான் நல்லது!" ரத்னபிரபாவின் குரலில் எச்சரிக்கையும் கட்டளையும் கலந்து ஒலித்தன.

டாக்டர் எழுந்தார். ரத்னபிரபா டாக்டரை கேட்வரை தொடர்ந்தாள். பிறகு திரும்பி நடந்து வாசற்படியருகில் நின்றுகொண்டாள். கார் அவள் பார்வையிலிருந்து மறைவது வரை அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வீட்டுக்குள் திரும்பிச் செல்லும்போது ரத்னபிரபாவின் நெற்றியில் களிவுகள் பிறந்தன.

டாக்டர் சசிதரன் மிகவும் நிதானமாகவே கார் ஓட்டினார். பண்ணார மூலைக்கு வந்த டாக்டர், காரை கிழக்குத் திசையில் வளைத்தார்.

அந்த இடத்தைப் பற்றி அவருக்கு ஓரளவு தெரியும். கல்லூரியில் படித்த காலத்தில் அந்த இடத்துடன் ஒரு சன்னமான தொடர்பும் இருந்தது.

ஏறத்தாழ ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் சென்ற பிறகு காரை நிறுத்தி இடதுபுறம் பார்த்தார்.

மிகவும் பழைய செம்மண் பாதை.

சாலையின் நடுவே ஆங்காங்கு பசும்புல் முளைத்திருந்தது. நூறுமீட்டர் நீளமுள்ள அந்தப் பாதை முடிவடைந்தது, ஒரு வீட்டின் முன்பாக. யாரோ ஓர் ஆங்கிலேயர் கட்டிய வீடு அது. மத்திய ஐரோப்பிய கட்டடப் பாணியிலான 'கோதிக்' பாணியில் கட்டப்பட்டிருந்த அதில் வெகுநாட்களாக பறவை ஆராய்ச்சியாளர் ஒருவர் குடியிருந்தார்.

பெயர் சாமுவேல் ஜான்சன். அவர் ஓர் ஆங்கிலோ இந்தியர். முதல் தடவை அவரிடம் அறிமுகம் ஏற்பட்ட போதே அவருக்கு வயது எழுபது.

விதவிதமான பறவைகளை அவர் வளர்த்து வந்தார். எந்த ஒரு பறவையையும் அவர் கூண்டுக்குள் அடைத்து வைக்கவில்லை. அவை அந்த வீட்டுக்குள் சுதந்திரமாகப் பறந்து உலாவின. 'அவர் இப்போது உயிருடன் இருந்தால் எப்படியும் எண்பது வயதாவது இருக்கும்!' டாக்டர் சசிதரன் யோசனையில் ஆழ்ந்தார்.

கார் அந்தப் பழைய கட்டடத்தின் முன்னால் நின்றது. கேட் திறந்திருந்தது. காரை உள்ளே செலுத்தி கேட்டின் மறுபுறம் நிறுத்தினார்.

காரிலிருந்து இறங்கி கார் கதவைச் சாத்தும்போது, அந்த வீட்டின் கதவு திறக்கப்பட்டது.

சாமுவேல் ஜான்சன்!



தோற்றத்தில் ஐன்ஸ்டைனைப்போல இருந்தார். வெள்ளி இழைகள் போன்ற தலைமுடி மற்றும் மீசை - தாடி. வட்ட வடிவக் கண்ணாடிகள் பதித்த கனமான ஃபிரேம்.

நீலநிற நரம்புகள் புடைத்து நிற்கும் கைப்பகுதியை கண்ணின் மேல் அண்டக் கொடுத்து ஊன்றிப் பார்த்தார்.

''யாரது?'' சாமுவேல் கேட்டார்.

டாக்டர் சசிதரன் அவரை நெருங்கினார்.

முதுமை, சாமுவேல் ஜான்சனின் உடலில் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. முந்தைய தடவை பார்த்தபோது சற்றுப் பருமனான உடம்பாக இருந்தது. இப்போது எலும்புகளைத் தோல் மூடியிருப்பது போல் தெரிந்தது. கைகள் மற்றும் கன்னப் பகுதிகளில் எலும்புகள் துருத்திக் கொண்டிருந்தன.

கண்கள் உட்புறமாகக் குழி விழுந்திருந்தன. ஆனால், அந்த இடைவெளியைக் கண்ணாடி நிரப்பியிருந்தது. நரைத்த புருவ ரோமங்கள் விறைப்புடன் நின்றிருந்தன.

''என் பெயர் டாக்டர் சசிதரன். பத்து வருடங்களுக்கு முன்னால் உங்களை சந்தித்திருக்கிறேன்.'' சசிதரன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''முதலில் உள்ளே வாருங்கள். இந்தப் பெயர் எனக்கு ஞாபகம் வரவில்லை. மன்னிக்கவேண்டும்'' பெரியவர் வரவேற்றார்.

டாக்டர் அவருடன் வரவேற்பு அறைக்கு வந்தார்.

பிரம்பு நாற்காலிகள் நடுவில் பிரம்பாலான டீப்பாய் கிடந்தது.

''உட்காருங்கள்!'' சாமுவேல் ஜான்சன் இருக்கையைச் சுட்டிக் காட்டினார்.

இருவரும் அமர்ந்தனர்.

''இந்த அத்துவானக் காட்டுக்குள் எதற்காக வந்திருக்கிறீர்கள்?'' சாமுவேல் கேட்டார்.

"நான் இங்கே வரவேண்டும் என்பதற்காக வரவில்லை. சற்றுத் தூரத்தில் இருக்கிற ஒரு பழைய பங்களாவைப் பார்க்க வந்தேன்!"

இந்த பதிலைக் கேட்ட பெரியவரின் நெற்றியில் சுருக்கங்கள் விழத் தொடங்கின. அவர் கண்ணாடி மூலமாக டாக்டரை ஊன்றிப் பார்த்தார்.

"அந்த இரண்டு மாடிக் கட்டடத்தையா குறிப்பிடுகிறீர்கள்?"

"ஆமாம்!"

"அங்கே இப்போது யாராவது குடியிருக்கிறார்களா என்ன?" அவர் முகத்தில் சந்தேகத்தின் நிழல் வீசியது.

"ரத்னபிரபா என்ற பெண்மணி குடியிருக்கிறார்!" சசிதரன் கூறினார்.

"ஆண்கள் யாரும் அவருடன் இல்லையா?" சாமுவேல் கேட்டார்.

"இல்லை. அவருடன் இளம்பெண் ஒருத்தி இருக்கிறாள். வேலைக்காரப் பெண்கள் இருக்கலாம் என்று தோன்றுகிறது."

"நீங்கள் அங்கிருந்துதான் வருகிறீர்களா?" நம்பிக்கை இல்லாத குரலில் ஜான்சன் கேட்டார்.

"என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? ஏதாவது காரணம் இருக்க வேண்டுமே!" டாக்டர் கேட்டார்.

"அப்படியெல்லாம் குறிப்பாக எதையும் சொல்ல முடியாது. அந்த பங்களாவில் ஆட்கள் குடிவந்திருப்பதே நீங்கள் சொல்லித் தான் எனக்குத் தெரிகிறது. சில வருடங்களாக வெளியுலகில் என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை." பேசியபடி எழுந்த ஜான்சன் அந்த அறையின் மூலையிலிருந்த உலர வைத்த காபிச் செடியின் கிளையிலிருந்து விநோதமான வண்ணம் கொண்ட பறவை ஒன்றைக் கையில் எடுத்து வந்தார்.

அது மிகவும் லாகவத்துடனும் பழக்கத்துடனும் அவர் கையில் அமர்ந்தது. பிறகு தத்தித்தத்தி டீப்பாயின் மீது இறங்கி



"அந்த பங்களாவைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" டாக்டர் சசிதரன் கேட்டார்.

"ஏதோ கொஞ்சம் தெரியும். இங்கு நான் வசிக்க ஆரம்பித்து சுமார் நாற்பத்தைந்து வருடங்களாகின்றன. நான் முதன் முதலாக இங்கு வரும்போதும் அந்தக் கட்டடம் அங்கே இருந்தது. ஆனால், அப்போது அங்கு ஒரு நம்பூதிரிக் குடும்பம் இருந்தது. இவை எல்லாம் கேள்விப்பட்ட செய்திகள்தான்."

ஜான்சன் நினைவுகளிலிருந்து எதையெல்லாமோ ஆராய்ந்து அகழ்ந்தெடுப்பதுபோல் தோன்றியது. சற்று நேர மௌனத்துக்குப் பிறகு தொடர்ந்தார்.

"நான் இங்கு வரும்போது இந்தக் கட்டடத்தில் இப்போ தைய என் வயதுள்ள ஒருவர் குடியிருந்தார். அவருடையதுதான் இந்த வீடு. அவர் சொன்ன விவரங்கள்தான் இதெல்லாம்...

அதன் சுருக்கம் இதுதான்.

அந்த இல்லத்திலிருந்த நம்பூதிரிகள் மிகப்பெரிய மாந்திரீகர்களாக இருந்தவர்கள். பிற மனிதர்களின் உடம்புகளில் புகுந்துகொள்வது, கூடுவிட்டுக் கூடுபாய்தல் போன்றவற்றில் தேர்ந்தவர்கள். அந்த சந்தர்ப்பத்தில் தான் அங்கிருந்த திருமேனி வடக்குத்திசையிலிருந்து அந்தர்ஜனம் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டு வந்தார்.

அன்றைய தினத்திலிருந்து அந்த இல்லத்தில் அதுவரை நடக்காதிருந்த துர்மந்திரவாதம் அரங்கேறத் தொடங்கியது. அந்தப் பெண்மணி - அதுதான் புதிய அந்தர்ஜனத்தைப் பற்றி அப்போது பல்வேறு விதமான வதந்திகளும் உலாவத் தொடங்கின.

தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர் நரபலி நடத்தியதாகக் கூடச் செய்திகள் பரவின. அந்த இல்லத்தின் பின்புறத்தில் பெரிய எட்டி மரம் ஒன்று நின்றிருந்தது. அதன் கிளைகள், மனிதக்கைகள் மாதிரி இருந்ததாகவும்... அதுபோலவே செயல்பட்டதாகவும் கூடப் பேசிக்கொண்டார்கள்.

அந்தப் பெண்மணிக்கு மரணமே கிடையாது என்று உறுதியாக நம்பியவர்கள் இருந்தனர். தலைமுறைகளைக் கடந்து

அவர் ஆத்மா, வெவ்வேறு பெண்களின் உடலில் புகுந்து கொண்டு தனது இளமையைத் தக்க வைத்துக் கொண்டதாகவும் பேசிக் கொண்டனர்.

ஒரு சில வருடங்களுக்குப் பிறகு அந்த இல்லம் வாரிசு அற்றுப் போனது. ஆள்வாசமற்றிருந்த அந்தக் கட்டடத்தை வாங்கி இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டு, புதிதாகக் கட்டிய கட்டடம்தான் இப்போது அங்கு இருப்பது.

அந்தப் புதிய பங்களாவில் கடைசியாக வசித்தது கூட ஒரு பெண்மணிதான். அவளுக்கு ஒரு மகள் இருந்ததாகவும் கேள்விப் பட்டிருக்கிறேன். ஒரு நாள் அந்த இருவரும் திடுமென்று காணாமல் போனார்கள்.

ஒருவித பயத்தால் யாருமே அந்த வீட்டுப்பக்கம் போவதே இல்லை. வெகுநாட்களுக்குப் பிறகு திடீரென்று ஒருநாள் அந்த வீட்டிலிருந்து இரண்டு எலும்புக்கூடுகளைக் கண்டுபிடித்தனர். அவை கடைசியாக இருந்த தாய்-மகள் ஆகியோருடையதுதான் என்றும் பேசிக் கொண்டார்கள்."

"நீங்கள் குறிப்பிட்ட பெண்மணி எப்படிப்பட்டவராக இருந்தார்?" டாக்டர் சசிதரன் கேட்டார்.

"அந்தப் பெண்மணியிடம் அமானுஷ்யமான பல சக்திகளும் இருந்ததாகச் சொன்னார்கள்." ஜான்சன் ஒரு விடுகதையின் புதிரை அவிழ்க்கத் தொடங்குவது போல் பேச்சை நிறுத்தினார்.

"இவ்வளவு விவரங்களைச் சொன்னதற்கு நான் எப்படி நன்றி சொல்வதென்று தெரியவில்லை. முடியும் போதெல்லாம் வருகிறேன்." சசிதரன் இருக்கையிலிருந்து எழுந்தார்.

சாமுவேல் ஜான்சன், சசிதரனின் கார் வரை பின்தொடர்ந்து வழியனுப்ப வந்தார்.

"ஒரே ஒரு வேண்டுகோள்..." பெரியவர் ஏதோ கூற விரும்பினார்.

"இவற்றையெல்லாம் உங்கள் மனதுக்குள்ளேயே வைத்துக் கொள்ளுங்கள். அதுதான் நல்லது!" இதை மட்டும் கூறிவிட்டுப் பெரியவர் திரும்பி வீட்டுக்குள் சென்றுவிட்டார்.



அன்று மாலை நேரத்தில் டாக்டர் சசிதரன், சேதுவர்மாவின் குவார்ட்டர்ஸை அடைந்தார்.

சாமுவேல் ஜான்சன் எச்சரிக்கை செய்த போதிலும் சசிதரன் தனக்குத் தெரிந்த எல்லா விவரங்களையும் சேதுவர்மாவிடம் கூறவே செய்தார்.

"உண்மையைச் சொன்னால், நான் இப்போது மிகவும் தர்மசங்கடமான நிலையில் இருக்கிறேன். இதுவரை இந்த மாதிரி ஒரு நிலைமை எனக்கு ஏற்பட்டதில்லை. அந்தப் பெண்மணி என்ன நோக்கத்துடன் என்னைத் தேர்ந்தெடுத்து இதுபோன்ற தொல்லைகள் தருகிறாளோ?" என்ற சேதுவர்மா, ஒவ்வோர் அனுபவத்தையும் நினைவுகூர்ந்தார்.

"ஏதாவதொரு காரணம் இருக்கும்!"

"டாக்டர் ராஜாம்பாளின் மரணம்கூட சரியானதாக எனக்குத் தோன்றவில்லை. இன்னும் என்னால் அதை நம்பமுடியவில்லை. யாரோ அவரைத் திட்டமிட்டுக் கொன்றிருப்பதாகவே தெரிகிறது." சேதுவர்மா உறுதியான குரலில் பேசினார்.

"உண்மையைச் சொன்னால் எனக்கும் அந்த சந்தேகம் உண்டு. டாக்டர் ராஜாம்பாள், அந்தப் பெண்மணியைப் பற்றி ஏதோ சில விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அந்த ரகசியமான விஷயங்கள் வெளியே போகக்கூடாது என்பதற்காகக் கூட அவர் கொல்லப்பட்டிருக்கலாம். பொதுவாக இப்படிப்பட்ட பைசாசிக சக்திகள் கோழைகள்தான். அதே சமயம் மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயல்படுபவையும் கூட."

"டாக்டர் வாணி மேனனுக்கும் அந்தப் பெண்மணிக்கும் கூட ஏதோ ஒரு தொடர்பு இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. விழாவுக்கு அந்த இருவரும்தானே ஒன்றாக வந்திருந்தார்கள்?" சேதுவர்மா சொன்னார்.

"இருக்கலாம். அந்த விஷயத்தில் எனக்கும் அதே சந்தேகம் தான்." டாக்டர் சசிதரன் வரவேற்பு விழாவில் அவர்கள் இருவரும் ஒன்றாக அமர்ந்திருந்ததை நினைவு கூர்ந்தார்.

அன்றைய விழாவில் டாக்டர்களைத் தவிர வெளியாளா இருந்த ஒரே நபர் ரத்னபிரபாதேவி மட்டும்தான்.

அன்று இரவு 'மெட்டர்னிட்டி' வார்டில் வாணி மேனோன் டூட்டியில் இருந்தார்.

மணி பதினொன்று பத்து.

ரவுண்ட்ஸை முடித்துவிட்டுச் சற்று ஓய்வாக அமர்ந்திருந்தா வாணி மேனோன்.

நர்ஸ் தங்கம்மா அவரை நோக்கி ஓட்டமாக ஓடி வந்தாள்.

''பதினேழாவது பெட்டில் இருக்கும் நோயாளி வலியால் துடிக்கிறார். சீக்கிரம் வாருங்கள் டாக்டர்!'' தங்கம்மா பரபரப்புடன் பேசினாள்.

அதே நேரம் தொலைபேசி மணி அடித்தது.

வாணி மேனோன் ரிசீவரைக் கையில் எடுத்தார்.

''என்ன... இரட்டைக் குழந்தையா? நீங்கள் யார், மிஸஸ் தேவியா?''

வாணி மேனோன் வியப்புடன் கேட்டார். அதற்குள் மறுமுனையில் போன் வைக்கப்பட் டு விட்டது.

டாக்டர் வாணியும் தங்கம்மா நர்ஸும் பதினேழாவது படுக்கையை நோக்கி விரைந்தனர்.

நோயாளியை ஆபரேஷன் தியேட்டருக்கு எடுத்துச் சென்றனர்.

ஆபரேஷனுக்கான எல்லாம் தயாராக இருந்தன. தங்கம்மா நர்ஸுக்குத் தெரிந்த பெண்மணிதான் கர்ப்பிணியான நோயாளி.

ஆபரேஷன் நடந்தது.

இரட்டைக் குழந்தைகள். இரண்டுமே ஆண்பிள்ளைகள்.

வாணி மேனோன் வியப்பால் பேச்சிழந்து போனார். புறப்படுவதற்கு முன் போனில் கிடைத்த தகவல் நூற்றுக்கு நூறு சரியாக இருந்தது.



ஆனால், வருத்தத்துக்குரிய ஒன்றும் நடந்துவிட்டது.

வாணி மேனோனது வாழ்க்கையில் அதுவரை நடக்காத ஒன்றும் கூட.

குழந்தைகளை மட்டுமே அவரால் காப்பாற்ற முடிந்தது.

தாய் இறந்துபோக எந்த ஒரு காரணமும் கிடையாது. அதை அவரால் கண்டுபிடிக்கவும் முடியவில்லை. அதில் விளைந்த குற்ற உணர்வு அவரைச் சற்றுச் சோர்வடைய வைத்ததும் உண்மை.

ஆபரேஷன் தியேட்டரிலிருந்து ஆழ்ந்த வருத்தத்துடன் இருக்கையில் வந்து அமர்ந்தபோது யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

தலை உயர்த்தி நிமிர்ந்தபோது எதிரே ரத்னபிரபா தேவி நின்றிருந்தாள்.

''என்ன இந்த நேரத்தில்?'' டாக்டர் வாணி கேட்டார்.

''ஒன்றுமில்லை... சும்மா பார்த்துவிட்டுப் போகலாம் என்றுதான். நான் சொன்னபடியே நடந்து விட்டது இல்லையா?'' ரத்னபிரபாதேவி கேட்டாள்.

''ஆனால், அந்தப் பெண்மணி...'' டாக்டர் வருத்தத்துடன் பேச்சை நிறுத்தினார்.

''பரவாயில்லை... ஒருவகையில் சொன்னால் அதுவும் நல்லதற்குத்தான்.'' ரத்னபிரபா கூறினாள்.

'இவள் ஏன் இப்படிப் பேசுகிறாள்?' என்று டாக்டருக்கு விளங்கவில்லை!

''சரி... ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் புறப்படுகிறேன்...'' ரத்னபிரபா புறப்பட்டாள். ஒரு கெட்ட கனவிலிருந்து விழித்தது போல் வாணி மேனோன் சட்டென்று விழிப்பு நிலைக்கு வந்தார்.

கடிகாரத்தில் மணி இரண்டாகியிருந்தது.

தங்கம்மா நர்ஸ் மீண்டும் பதைப்புடன் ஓடி வந்தாள்.

''டாக்டர்... டாக்டர்... அந்த இரட்டைக் குழந்தைகளைக் காணவில்லை!'' அவள் குரல் நடுக்கத்துடன் இருந்தது.

''உண்மையாகவா!'' டாக்டர் துள்ளி எழுந்தார்.

இருவரும் குழந்தைகளைப் படுக்க வைத்திருந்த அறைக்கு வந்தனர்.

குழந்தைகள் படுத்திருந்த இடம் சூனியமாக இருந்தது.

உடனே ரத்னபிரபாவின் முகம், வாணி மேனோனின் மனத்தில் உயர்ந்தது. எந்த ஒரு காரணமுமின்றி அந்த நினைவு அவர் உள்ளத்தில் வளர்ந்து, உறுதிப்படவும் செய்தது.

தன்னுடைய அறைக்கு வந்த வாணி, செக்யூரிட்டி ஆட்களுக்குத் தகவல் தெரிவித்துவிட்டு, ஆஸ்பத்திரி முழுவதும் சல்லடை போட்டுத் தேட உத்தரவிட்டு, அவரும் தேடுதலில் ஈடுபட்டார்.

ஒருவகையாக ஓய்ந்துபோய்த் தனது இருக்கைக்கு வாணி மேனோன் திரும்பியபோது தொலைபேசி மணி இடைவிடாமல் ஒலித்தது.

''அம்மாவுக்கு வலி அதிகரித்துவிட்டதா? என்னை உடனடியாகப் பார்க்க வேண்டுமா?'' வாணி மேனோன் ரிசீவரை வைத்த பிறகு தங்கம்மாவிடம் விவரத்தைத் தெரியப்படுத்தி விட்டு, உடனடியாக அங்கிருந்து வெளியேறினார்.

பார்க் செய்திருந்த இடத்திலிருந்து காரை ரிவர்ஸில் எடுத்து விரைவாகச் செலுத்தத் தொடங்கினார்.

அப்போதும் அவர் மனத்தில் ரத்னபிரபாதேவிதான் இருந்தாள். குழந்தைகள் காணாமல் போனது, குழந்தைகளின் தாய் இறந்துபோனது... இதைத் தொடர்புபடுத்திய ரத்னபிரபாவின் பேச்சு...

என்ன செய்வதென்று புரியாதவராக அவர் குழம்பித் தவித்தார். அதே நேரம் காரின் முன்புறம் வின்ட்ஷீல்டில் நீண்ட தலைமுடி தொங்காத ஒரு கிளைச்சீலை போல் விழுந்தது.



''என்ன இது!'' டாக்டர் தனக்குத்தானே மந்திரிப்பது போல் பேசினார்.

அப்போது அவர் கண்ட காட்சி...

டாக்டர் வாணி மேனோன் சட்டென்று கைகளால் தன் கண்களைப் பொத்தினார்.

## 8

உடம்புக்குள் நடுக்கத்தையும் பயத்தையும் ஏற்படுத்தியது அக்காட்சி. டாக்டர் வாணி மேனோன் மெய்சிலிர்த்துத் திடுக்கிட்டார்.

சற்று நேரத்துக்கு முன்பு, பிரசவம் பார்த்த... இரட்டைக் குழந்தைகள் பெற்ற... தன்னாலேயே இன்னும் நிதானிக்க முடியாமலிருக்கிற... அகால மரணமடைந்த பெண்ணின் உருவம்.

அதன்பிறகு டாக்டர் வாணிக்கு வேறு எதுவும் தெரிய வில்லை. தன்னைச் சுற்றிப் பனிப்படலம் சூழ்ந்ததுபோல் தோன்றியது!

ஒரே மாதிரி நடந்த இரண்டு மரணங்களும் மருத்துவமனை ஊழியர்களைத் துயரத்தில் ஆழ்த்தியது.

ஒரு சில நாட்களுக்கு முன்னால்தான் டாக்டர் ராஜாம்பாள் கார் விபத்தில் இறந்தார். இப்போது டாக்டர் வாணியும் அதே மாதிரி இறந்திருக்கிறார்.

யாருக்கும் எதுவும் விளங்கவில்லை.

வழக்கமாக நடைபெறும் விபத்துகளின் பட்டியலில் இதையும் எழுதிச் சேர்த்தனர்.

விபத்து நடந்திருப்பது இரவு இரண்டு மணிக்குப் பிறகு என்பது தெரிந்தவுடன் பெரும்பாலானவர்கள் இப்படித்தான் பேசினார்கள். ''நைட் டூட்டி பார்த்தார் இல்லையா, தன்னைமீறி ஒருவேளை கண்ணயர்ந்து விட்டாரோ என்னவோ?''

"அப்படியும் இருக்கலாம்!" ஒரு சிலர் அதையும் ஆமோதித்தனர். ஆனால், டாக்டர் சேதுவர்மா அப்படி நினைக்கவில்லை. அவருள் சந்தேக அலைகள் உயர்ந்தன. அவரால், முந்தைய விபத்தைப் போலவே இதையும் நம்ப முடியவில்லை. 'இதன் பின்னணியில் ஏதோ ஒன்று பதுங்கியிருக்கிறது!' என்று அவரது உள்ளுணர்வு எச்சரித்தது.

டாக்டர் வாணி மேனோனின் இறுதிச் சடங்குகள் நடந்து இரண்டு நாளைக்குப் பிறகு டாக்டர் சேதுவர்மாவும், சசிதரனும் வர்மாவின் பங்களாவில் சந்தித்தனர்.

சற்று நேரம் இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

வாணியின் மரணம் எல்லாரையும் போலவே அவர்களையும் துயரத்திலாழ்த்தியது.

"இந்த மரணத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" சேதுவர்மா பேச்சை ஆரம்பித்தார்.

"நாம் எதைச் சொன்னாலும் யாரும் நம்பப் போவதில்லை," சசிதரன் பேசினார்.

"நானும் அப்படியேதான் நினைத்தேன்."

"இதிலும் ரத்னபிரபாதான் சம்பந்தப்பட்டிருப்பாள் என்று எனக்குத் தோன்றுகிறது!" சசிதரன் கூறினார்.

அந்தப் பெயரைக் கேட்டதும் சேதுவர்மாவின் உடல் ஒருமுறை நடுங்கியது.

"எந்த அடிப்படையில் நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள்?" சேதுவர்மா கேட்டார்.

"இரட்டைக் குழந்தைகளை வைத்துதான். அவர்கள் காணாமல் போகவில்லையா?" சசிதரன் மெதுவான குரலில் பேசினார்.

"அதன் அர்த்தம்?"

"அந்தப் பிஞ்சுக் குழந்தைகள் அவருக்குத் தேவைப்பட்டிருக்கலாம். அவள் துர்மந்திரவாதியாக இருக்க வேண்டும்."



"கடவுளே... என்ன இது! அப்படி எதுவும் நடக்காமல் இருக்கட்டும்!" சேதுவர்மா தலைமீது கைகளை வைத்தபடி கூறினார்.

"பச்சிளம் குழந்தைகளைப் பலிகொடுத்து, சில மந்திரங்களை துர்மந்திரவாதிகள் செய்வதுண்டு என்று அப்பா சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையில்தான் இதைச் சொன்னேன்."

"இப்படிப்பட்ட செய்திகளை நானும் பத்திரிகையில் வாசித்திருக்கிறேன். புதையல் எடுப்பதற்காக பிஞ்சுக் குழந்தைகளை பலி கொடுத்திருப்பதாக அந்த அடிப்படையில் இதிலும் அதற்கு வாய்ப்பு இருக்கவே செய்கிறது."

"ஒரு காரியம் செய்யலாமா?" திடுமென்று சசிதரன் கேட்டார்.

"சொல்லுங்கள்!"

"அன்று ஆஸ்பத்திரியில் நைட் டூட்டி இருந்த நர்ஸுகளில் வேறு யாரிடமாவது விசாரித்துப் பார்க்கலாமா?"

"எனக்கும் அப்படியொரு யோசனை தோன்றவே செய்தது. போலீஸ்காரர்களும் அதைச் செய்திருப்பார்கள். நாமும் ஒரு தடவை முயற்சி செய்து பார்க்கலாம்."

சேதுவர்மா உடனே மருத்துவமனைக்கு போன் செய்தார்.

மகப்பேறு பிரிவில் விசாரித்தபோது குறிப்பிட்ட நாளன்று தங்கம்மா டூட்டியில் இருந்ததாகத் தெரிய வந்தது. தற்போது தங்கம்மா குவார்ட்டர்ஸில் ஓய்வெடுப்பதாகவும் தகவல் கிடைத்தது.

"நாம் நேராக தங்கம்மாவின் வீட்டுக்கே போகலாமா? பக்கத்தில் ஓர் இடத்துக்குப் போக வேண்டி இருந்ததால் அப்படியே பார்த்துவிட்டுப் போகலாம் என்று நினைத்தோம் என்று சொல்லிவிடலாம்." சேதுவர்மா யோசனை கூறினார்.

உடனே இருவரும் வர்மாவின் காரில் ஏறிப் புறப்பட்டனர்.

நல்லவேளையாகத் தங்கம்மா குவார்ட்டர்ஸிலேயே இருந்தாள். சாதாரணமாக டாக்டர்கள் இங்கெல்லாம்

வருவதில்லை. எனவே, இரண்டு டாக்டர்களும் ஒரே நேரத்தில் தன்னைத் தேடி வந்ததால் ஆச்சரியப்பட்டாள் தங்கம்மா.

''பயப்படாதீர்கள். சும்மா பொழுதுபோக்குக்காக இப்படியே காரில் கிளம்பினோம்.'' சசிதரன் முன்னெச்சரிக்கையாகச் சொல்லி வைத்தார்.

தங்கம்மாவின் முகம் வாடியிருந்தது. சமீப காலமாக தங்கம்மா, வாணி மேனோனுடன் சேர்ந்து பணிபுரியத் தொடங்கியிருந்தாலும் தொழில் முறையை மீறி அவர்களுக்குள் ஒருவித அன்னியோன்னியம் தோன்றியிருந்தது.

''டீ சாப்பிடுறீங்களா சார்?'' தங்கம்மா கேட்டாள்.

''குடுங்களேன்...'' சசிதரன் கூறினார்.

''உட்கார்ந்திருங்கள் சார், இதோ வந்து விடுகிறேன்.'' தங்கம்மா சமையற்கட்டை நோக்கிப் போனாள்.

திரும்பி வரும்போது அவள் கைகளில் ஆவி பறக்கும் இரண்டு டீ கப்புகள் இருந்தன.

''நீங்களும் உட்காருங்க. வீட்டில் ஃபார்மாலிட்டியெல்லாம் பார்க்க வேண்டியதில்லை...'' சசிதரன் கூறினார்.

அவர்களுக்கு எதிரில் இருந்த ஒற்றை நாற்காலியில் அமர்ந்தாள் தங்கம்மா.

''டாக்டர் வாணியம்மா இறந்தது இன்னும் கண்ணிலேயே நிக்குது சார்.'' தங்கம்மாவின் கண்களில் நீர் நிறைந்தது.

''எல்லோருக்கும் அதுதான் நிலைமை. ஆமாம் போலீஸ்காரர்கள் உங்களிடம் விசாரித்தார்களா?'' இது வர்மாவின் கேள்வி.

''ஆமாம் சார். குழந்தைகள் வேறு காணாமல் போனதால் விசாரணை சற்றுக் கடுமையாக இருந்தது. ஆனால், எனக்கு அதைப் பற்றித் தெளிவாக எதையும் சொல்ல முடியவில்லை.'' தங்கம்மா கூறினாள்.

''நமது ஆஸ்பத்திரியில் இப்படியொரு சம்பவம் நடப்பது இதுதான் முதல் தடவை இல்லையா?'' டாக்டர் சசிதரன் கேட்டார்.



''உண்மைதான் சார். என்னுடைய இவ்வளவு நாள் அனுபவத்தில் இப்படி நடந்தது இதுதான் முதல் தடவை.'' தங்கம்மாள் கண்ணீரைத் துடைத்தபடி பேசினாள்.

''அன்று இரவு குறிப்பிட்டுச் சொல்கிற மாதிரி யாராவது ஆஸ்பத்திரிக்கு வந்தார்களா? நீங்கள் அப்படி யாரையாவது பார்த்த ஞாபகம் இருக்கிறதா?'' வர்மா கேட்டார்: ''அவசரமில்லை. நிதானமாக யோசனை செய்து சொன்னால் போதும்.''

சேதுவர்மா டீ கப்பை டீப்பாயின் மீது வைத்துவிட்டு சோபாவில் முதுகைச் சாய்த்து உட்கார்ந்தார்.

தங்கம்மா அன்றிரவு நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் நினைவுக்குத் கொண்டுவர முயற்சி செய்தாள்.

இல்லை... அது முடியவில்லை.

வார்டில் எரிந்த லைட்டுகளையும், தெளிவற்ற வடிவங்களையும் தவிர வேறு எதுவும் அவள் நினைவுக்கு வரவில்லை.

ஒவ்வொன்றையும் படிப்படியாக யோசித்தபோது ஒரு கட்டத்தில் யாரோ சட்டென்று பிடித்து நிறுத்திக் கடிவாளம் போட்டதுபோல் அதற்குமேல் நகராமல் அப்படியே எல்லாம் நின்று விடுகின்றன.

''இல்லை சார்... எதுவுமே நினைவுக்கு வரமாட்டேன் என்கிறது...'' தங்கம்மா கூறினாள்.

''போலீஸ்காரர்கள் கேட்டபோது என்ன பதில் சொன்னீர்கள்?'' சசிதரன் கேட்டார்.

''இதையேதான் சொன்னேன்.''

''அப்படியானால் எங்களுக்காகக் கொஞ்சம் முயற்சி செய்து பாருங்களேன்.'' வர்மா வற்புறுத்தினார்.

''இல்லை சார்... அப்படி எவரையும் பார்த்ததாக நினைவே இல்லை.''

''சரி... நாங்கள் புறப்படுகிறோம்!'' டாக்டர் வர்மா இருக்கையிலிருந்து எழுந்தார்.

இருவரும் காருக்குள் நுழைவதை தங்கம்மா பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இதன் பின்னணியில் ஏதேதோ தகிடுதத்தங்கள் நடந்துள்ளதாகத் தெரிகிறது.'' சசிதரன் கூறினார்.

''அப்படித்தான் இருக்க வேண்டும். ஒரு காரியம் செய்யுங்கள் சசிதரன். இப்போதே உங்கள் அப்பாவையும் பார்த்து விடலாம். ஒரு வேளை குழந்தைகள் காணாமல் போனது பற்றி அவருக்கு ஏதாவது தெரியலாம்.'' வர்மா தனது கருத்தைத் தெரிவித்தார்.

''நல்ல யோசனை. நானும் அதைப் பற்றி யோசித்தேன். நேராக அங்கேயே போய்விடலாம்...'' சசிதரனும் அதை ஆமோதித்தார்.

கார், குவார்ட்டர்ஸின் பக்கம் திரும்பாமல் மேற்குப்புறமாகப் பாய்ந்தது.

டாக்டர் சசிதரனின் வீட்டை அடைந்தபோது பொழுது இருட்டத் தொடங்கியிருந்தது.

வாசுதேவன் நம்பூதிரி சந்தியாவந்தனத்தை முடித்து விட்டு, ஏற்றி வைத்த நிலவிளக்கின் அருகே வெளிவாசலைப் பார்த்தபடி உட்கார்ந்திருக்கும்போதுதான் இருவரும் தெருவாசலைக் கடந்து வந்தனர்.

வருவது யாரென்று நம்பூதிரிக்கு அடையாளம் தெரிந்தது.

''ரெண்டு பேருமாக இந்த நேரம் எங்கே கிளம்பி இருக்கிறீர்கள்?'' வாசுதேவன் நம்பூதிரி நெற்றியைச் சுளித்தபடி கேட்டார்.

''உங்களைத்தான் பார்க்க வந்திருக்கிறோம்.'' சசிதரன் கூறினார். பிறகு ஆஸ்பத்திரியில் நடந்த சம்பவங்களை விவரித்தார். ரத்னபிரபாதேவிமீது அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தையும் தெரிவித்தார்.

''நீங்கள் சொன்னதை வைத்துப் பார்த்தால் அந்தப் பெண் மணி அமானுஷிக ஸித்திகள் உள்ளவள் என்று தோன்றுகிறது.



இப்படிப்பட்டவர்களை சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வருவது சுலபமான காரியமில்லை. ஏனென்றால், இப்படிப்பட்ட விஷயங்களை நீதிமன்றத்தில் நிரூபிப்பது நடக்கக்கூடியதல்ல. குறிப்பாகச் சொல்வதானால் டாக்டர் ராஜாம்பாளும், டாக்டர் ரத்னமணியும் கூட தற்போது உயிருடன் இல்லையே?'' வாசுதேவன் நம்பூதிரி கூறினார்.

''அந்தப் பெண்மணியின் வீட்டை ரெய்டு செய்ய வைத்தால் என்ன?'' சேதுவர்மா கேட்டார்.

''அந்தப் பெண்மணி எச்சரிக்கையானவளாகத் தெரிகிறாள். ரெய்டிலிருந்து சுலபத்தில் தப்பித்து விடுவாள். ஆனால், நீங்கள் தான் அதற்குக் காரணம் என்று உணர்ந்து கொண்டால் அவளது அடுத்த குறி நீங்களாக இருப்பீர்கள். அதனால் நீங்கள் ஜாக்கிரதையாகச் செயல்பட வேண்டும்.'' வாசுதேவன் நம்பூதிரி எச்சரிக்கைத் தொனியில் கூறினார்.

''வேறு என்ன செய்வது? நீங்களே ஒரு வழி சொல்லுங்களேன். அவளை அவள் போக்கில் இப்படியே விட்டுவிட்டால் இன்னும் என்னென்வெல்லாம் நடக்குமோ!''

''நீ சொல்வதும் யோசிக்க வேண்டிய விஷயம்தான். எதற்கும் ஒரு முயற்சி செய்து பார்க்கிறேன். இன்றைக்குத் திங்கள் கிழமையா... சரி வெள்ளிக்கிழமை வரட்டும். அதுவரை நீங்கள் அந்தப் பெண்மணியைப் பார்க்காமல் இருங்கள்.'' வாசுதேவ நம்பூதிரி கூறினார்.

''சரி... அப்படியே செய்கிறோம்'' என்று பதிலளித்த சசிதரன், வீட்டுக்குச் சென்று அம்மாவைப் பார்த்து உபசாரமாகச் சில வார்த்தைகள் பேசிவிட்டுத் திரும்பினார்.

காரில் இருவரும் திரும்பும்போது சசிதரன் சொன்னார். ''நிச்சயமாக அப்பா இதற்கு ஒரு மாற்று வழி கண்டுபிடிக்காமல் இருக்க மாட்டார்.''

மறுநாள் சேதுவர்மா வழக்கம்போல் மருத்துவமனைக்கு வந்தார். அன்று அவர் முழுநாளும் வேலை செய்ய

வேண்டியிருந்தது. வந்தவுடன் ஒரு ரவுண்ட்ஸ் பார்த்துவிட்டுத் தனது அறைக்கு வந்தார்.

ஒரு புதிய பெண்!

அப்போதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறார்.

டாக்டர் வர்மாவைப் பார்த்ததும் அந்தப் பெண் இருக்கையிலிருந்து எழுந்தாள்.

''சார்... நீங்கள்தானே டாக்டர் சேதுவர்மா?'' அவள் கேட்டாள்.

''ஆமாம்... நீங்கள் யாரென்று தெரியவில்லையே?'' சேதுவர்மா எதிர்க்கேள்வி கேட்டார்.

ஒரு தடவை டாக்டர் அணிந்திருக்கும் கோட்டை அவள் உற்றுப்பார்த்தாள்.

சேதுவர்மா, கையிலிருந்த ஸ்டெதாஸ்கோப்பை மேஜை மீது வைத்தார். பிறகு தமது இருக்கையில் அமர்ந்தார்.

''உட்காருங்கள்!'' சேதுவர்மா அந்தப் பெண்ணைப் பார்த்துக் கூறினார்.

உட்கார்ந்தாள்.

''பெயர் இந்திராபாய். ஊர் நிலம்பூர். எழுமற்றூர் கோவிலகம் என்னுடைய வீடு...'' அவள் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

டாக்டர் சேதுவர்மா ஒரு விநாடி சிந்தனையில் ஆழ்ந்தார்.

பிறகு சொன்னார். ''கேள்விப்பட்டிருக்கிறேன்!''

''எனக்கும் உங்களைப் பற்றித் தெரியும். நான் இந்த ஊருக்கு டிரான்ஸ்ஃபர் ஆனவுடனே அம்மா குறிப்பிட்டுச் சொன்னார்.'' இந்திராபாய் புன்னகைத்தாள்.

இருபத்தேழு வயதான இந்திராபாய் திருமணமாகாதவள். ஒருவித தெய்விக அழகு அவள் உடலை வருடி ஆசீர்வதித்திருந்தது. அடர்த்தியான, நீண்ட கருங்கூந்தலை, நடுப்பகுதியில்



பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியில் இந்திரவில் போன்ற புருவங்கள். அதன் கீழே நட்சத்திரங்கள் பிறப்பெடுக்கும் அழகான கனவுக்கண்கள்.

வரைந்து வைத்தவை போன்ற உதடுகள்.

எந்த ஓர் அழகு நிபுணரின் கைகளும் படாமலேயே அழகு தேவதையாக ஒளிர்ந்தாள்.

கழுத்தில் எளிமையான ஒரு தங்கச் சங்கிலி.

இடதுகையில் ஒரு வளையல். வலதுகை மணிக்கட்டில் லேடீஸ் வாட்ச்.

நகைகளால் ஏற்படும் அழகு அவளுக்குத் தேவையாக இருக்கவில்லை.

தூயவெள்ளையில் புடவை - ரவிக்கை அணிந்திருந்தாள்.

''இந்த டிரான்ஸ்ஃபரை நீங்களாகக் கேட்டு வாங்கினீர்களா அல்லது...'' டாக்டர் சேதுவர்மா கேட்டார்.

''கேட்டு வாங்கியதுதான்!'' அவள் ஒப்புக்கொள்வது போல் பேசினாள்.

''அதற்கு குறிப்பிட்ட காரணம் ஏதாவது...''

''அப்படிச் சொல்ல முடியாது டாக்டர். சமீபத்தில் இந்த மருத்துவமனையில் இரண்டு விபத்துகள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். அது எனது கவனத்தைக் கவர்ந்தது. அப்படியானால், நாம் ஏன் இங்கே வேலை செய்யக் கூடாது என்று தோன்றியது.''

''சாதாரணமாக இப்படிப்பட்ட செய்திகள் உங்களைப் போன்ற பெண்களை பயப்பட வைக்கும். இதிலிருந்து தப்பிக்க விரும்புவதுதானே இயல்பு?''

''உண்மைதான் சார். ஆனால், என் இயல்பு அப்படிப் பட்டதல்ல. இதை ஒரு த்ரில்லிங்கான அனுபவமாக எடுத்துக் கொண்டேன்.'' அவள் சாதாரணமாகப் பேசினாள்.

அவள் வார்த்தைகளைக் கேட்டபோது டாக்டர் சேதுவர்மாவுக்கு அவள் மீது ஒருவித மதிப்புத் தோன்றியது.

பொதுவாக இதுபோன்ற செய்தி கேட்டால் நமக்கு எதற்கு வம்பு என்று ஒதுங்குவது பெரும் பாலானவர்களது வழக்கம். குறிப்பாகத் திருமணமாகாத பெண்கள் என்றால் கேட்கவும் வேண்டியதில்லை. ஆனால், டாக்டர் இந்திராபாய் அதை எதிர்த்துச் சமாளிக்க விரும்பி வந்திருக்கிறார்.

அப்போது ஒரு சிஸ்டர் வந்து டாக்டர் சேதுவர்மாவை வார்டுக்கு வருமாறு கேட்டுக்கொண்டாள். சேது, இந்திரா பாயையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். ஒரு நோயாளியைக் கவனிப்பது அப்போதைய வேலை.

மறுநாள் மதியத்துக்குமேல் நைட் டூட்டி பார்த்த களைப்பைப் போக்கிக் கொண்டு டாக்டர் சேது வர்மா, சசிதரனின் குவார்ட்டர்ஸுக்கு வந்தார்.

சசிதரனுக்கு அன்று விடுமுறை நாள்.

"ஒரு புதிய டாக்டர் நேற்று அறிமுகமானார். தைரியம் வாய்ந்த பெண்ணாகத் தெரிகிறார்..." வர்மா கூறினார்.

"நான் இதுவரை அவரைப் பார்க்கவில்லை. கேள்விப் பட்டேன். குடியிருப்பதற்கு டாக்டர் ராஜாம்பாள் வசித்த வீட்டையே கேட்டு வாங்கியிருக்கிறார்." சசிதரன் அழுத்தமான தொனியில் பேசினார்.

"ஆச்சரியமான விஷயம்தான். நாங்கள் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. ஆனால், வித்தியாசமான பெண் என்று தெரிந்தது."

"சில பெண்கள் இப்படியும் இருக்கிறார்கள். பயமில்லாமல் இருப்பது பெரிய விஷயம்தான்!"

"நான் என்ன நினைக்கிறேன் என்றால், நமக்குத் தெரிந்த சந்தேகத்துக்குரிய விஷயங்களை இந்திராபாயிடம் தெரிவித்து விடலாமா என்று!" வர்மா குறிப்பிட்டார்.

"வேண்டாம்... அது முறையல்ல..."

"நான் சொல்ல வந்தது அதை அல்ல. அந்த ரத்ன



வைப்போம். அவளுடன் நெருக்கம் வைத்திருந்த இரண்டு பெண் டாக்டர்கள் இறந்து போயிருக்கிறார்கள். ஒரு சின்ன எச்சரிக்கை. அவ்வளவுதான்."

"ஒருவகையில் நீங்கள் சொல்வதும் நல்லதாகத் தோன்று கிறது. ஆனால், இப்போதே நம்முடைய சந்தேகங்களைச் சொல்லி வீணாக அவரைக் கலவரத்துக்குள்ளாக்கக் கூடாது. இரண் டாவது இதையெல்லாம் எப்படி அவர்களிடம் விவரிப்பது."

"அதுவும் யோசிக்க வேண்டிய விஷயம்தான். சரி, நேரம் வரும்போது சொல்லி வைப்போம்." வர்மா, சசியின் அபிப்பிராயத்துடன் இணங்கிப் போனார்.

"அப்பா சொன்னதை மறந்துவிட்டீர்களா? நாளை மறுநாள் ஒரு சில கர்மங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லி இருக்கிறார் இல்லையா?" சசிதரன் நினைவூட்டினார்.

"ஞாபகமிருக்கிறது. மறக்கவில்லை." சேதுவர்மா சிரித்தபடி பதிலளித்தார்.

வெள்ளிக்கிழமையன்று வாசுதேவன் நம்பூதிரி ஏதோவொரு ஆச்சரியகரமான செயலைச் செய்யப் போகிறார் என்பதில் வர்மாவுக்கு திடநிச்சயம் இருந்தது.

"நான் கிளம்பட்டுமா? நாளை மறுநாள் எனது வீட்டுக்கு வருகிறீர்களா? அல்லது, நான் வந்து உங்களை பிக்கப் செய்யட்டுமா?" சசிதரன் கேட்டார்.

"நீங்கள் என் வீட்டுக்கே வந்து விடுங்கள். நாம் ஒன்றாகப் புறப்படலாம்" தனியாகப் போவதில் சேதுவர்மாவுக்கு அவ்வளவாக விருப்பமில்லாதிருந்தது. தனியாகப் போனால் எதிரில் தட்டுப்படுகிற மனிதர்களிடம் வழி விசாரித்துப் போக வேண்டும்.

"சரி நான் கிளம்புகிறேன்." சேதுவர்மா புறப்பட்டார். அவரது கார் அங்கிருந்து அகன்று மறைந்தது.

வியாழக்கிழமையன்று குறிப்பிடத்தக்க சம்பவம் எதுவும் இல்லாமல் கடந்துபோனது. சேதுவர்மா, டாக்டர் இந்திராபாயை

சந்திக்க முடியவில்லை. தொலைபேசியை எடுத்து டயல் செய்தார். மறு முனையில் மணியடித்ததே தவிர, எவரும் எடுப்பதாகத் தெரியவில்லை.

அதற்கு அருகிலுள்ள குவார்ட்டர்ஸில் வசிக்கும் டாக்டர் விலாசினியிடம் விசாரித்தார் சேதுவர்மா. அன்று காலை நேரத்தில் தன்னுடைய மாருதி காரில் இந்திராபாய் தனியாகப் புறப்பட்டுப் போனதாகத் தகவல் கிடைத்தது.

வெள்ளிக்கிழமை மதியத்துக்கு மேல் டாக்டர் சசிதரன் வந்தார். இருவரும் சசிதரனது காரில் புறப்பட்டார்கள்.

இல்லத்தை அடைந்தபோது வாசுதேவன் நம்பூதிரி வழக்கமாக மந்திர கர்மங்கள் மற்றும் சடங்குகளைச் செய்யும் சவுக்கையில் ஹோமம் ஒன்றைத் தொடங்கும் மும்முரத்தில் இருந்தார்.

இருவரையும் சவுக்கைக்கு வருமாறு அழைத்தார்.

அவருக்கு முன்புறம் இரண்டடிக்கு இரண்டடி என்ற அளவில் செங்கல்லாலான சதுரமான ஹோமகுண்டம் இருந்தது. ஹோமகுண்டத்தின் உட்புறம் ஓரடி ஆழத்துடன் இருந்தது.

அரணியை உரசித் தீப்பற்ற வைத்தபிறகு அஷ்டதருக்களை ஒவ்வொன்றாக ஹோமகுண்டத்துக்குள் போட்டார். அவ்வப்போது நெய்யும் சொரிந்தார்.

''அக்னி நிமித்தம் ஹோமத்தைச் செய்யப்போகிறேன். டாக்டர் சேதுவர்மா தெரிந்து கொள்வதற்காக இதைச் சொல்கிறேன். நாம் தேடும் நபர் இதில் தெரிவார். தெரியாவிட்டால் அதற்கும் மாற்றுவழி உண்டு. தேவையானால், அதையும் செய்ய வேண்டியதுதான்!'' அதன்பிறகு அவர்களை கவனிக்காமல் வாசுதேவன் நம்பூதிரி மந்திரங்களை உருவிடுவதில் கவனம் செலுத்தினார். ஹோமாக்னி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

சட்டென்று வலதுகையை நீட்டி அருகில் வைத்திருந்த நீண்ட வாளை எடுத்து வலுவுடன் ஹோமகுண்டத்தினுள் குத்தி [illegible]



சற்று நேரத்துக்குப் பிறகு வாளை உருவி எடுக்க முயன்றார். ஆனால், அந்த வாளை தீ ஜுவாலைக்குள்ளிருக்கும் யாரோ அவரிடமிருந்து இழுத்துப் பிடுங்குவது போல் தோன்றியது. விநாடிக்கு விநாடி வாள் ஹோம குண்டத்துக்குள் இறங்கியது.

வாசுதேவன் நம்பூதிரி தன் முழுச் சக்தியையும் உபயோகித்து வாளை மேற்புறமாக இழுத்தார்.

என்ன ஆச்சரியம்!

ஹோமகுண்டத்துக்குள் வாளின் கூர்மையான மறு முனையை ஒருகை இறுக்கிப் பிடித்திருப்பது தெரிந்தது.

இருபுறமும் கூர்மையாக இருந்த அந்த வாளின் கீழ் முனையைப் பிடித்துக் கீழ்நோக்கி இழுத்தது அந்தக் கை.

'வாளின் கைப்பிடி மட்டும் தனியாகத் கழல்கிறதோ?' என்கிற சந்தேகம் வாசுதேவன் நம்பூதிரிக்குத் தோன்றியது.

## 9

**வா**சுதேவன் நம்பூதிரி தன் முழு பலத்தையும் உபயோகித்து வாளின் பிடியைப் பிடித்திருந்தார். அவர் கை, அப்போது மேற்புறமாக வாளை உருவவில்லை. மாறாக வாள் அவரிடமிருந்து போகாமலிருப்பதற்காக இழுத்துப்பிடித்தார்... அவ்வளவுதான்.

வாளின் எதிர்முனை இழுப்புவிசை அந்த அளவுக்கு இருந்தது.

அவர் கைகளின் நரம்புகள் புடைத்துக் கொண்டு எழுந்து நிற்பதை டாக்டர் வர்மாவும், சசிதரனும் கவனித்தனர். அப்பாவுக்கு எந்த வகையிலாவது உதவவேண்டுமென்று சசிதரனுக்குத் தோன்றியது.

அதற்காக சசிதரன் அப்பாவின் பக்கமாகக் குனிந்தார்.

''தொடாதே என்னை!'' வாசுதேவன் நம்பூதிரி கட்டளை விடும் குரலில் கூறினார்.

அவர் குரலின் மூலம் ஏதோ விபரீதம் இருப்பதை உணர்ந்த சசிதரன் சட்டென்று பின்னுக்கு நகர்ந்தார்.

அதே சமயம் வாசுதேவன் நம்பூதிரி முன்புறமாக சரிவதாகவும் தோன்றியது. சசிதரன் பிடித்திருக்கவில்லை என்றால், அவர் ஹோமகுண்டத்தில் முகம் பதித்துக் குப்புற விழுந்திருப்பார். நல்லவேளை!

அப்போது ஆச்சரியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

வாசுதேவன் நம்பூதிரியின் கையில் வாளின் பிடி மட்டும் மீதமிருந்தது.

பிடியின் கீழிருந்த பகுதி வாளிலிருந்து விடுபட்டு மாயமாக மறைந்திருந்தது.

வாசுதேவன் நம்பூதிரியின் உடல் குளித்ததைப்போல வியர்வையில் நனைந்திருந்தது.

''அந்தக் கடப்பாரையை இப்படி எடு!'' அவர் கேட்டுக் கொண்டார்.

சசிதரன் அருகிலிருந்த கடப்பாரையை எடுத்து அவரிடம் நீட்டினார். கை நீட்டி வாங்கிய வாசுதேவன் நம்பூதிரி, அதை ஹோமகுண்டத்தின் மையத்தை நோக்கிச் செலுத்தினார். பிறகு அதன் உதவியால் ஹோமகுண்டத்தின் நெருப்பைக் கிளறினார்.

ஹோமகுண்டத்துக்குள் வாளின் மிச்சப் பகுதி எதுவும் தட்டுப்படவில்லை.

''இதற்கு என்ன அர்த்தம்?'' டாக்டர் சேதுவர்மா கேட்டார்.

''எதிராளி சாதாரணமானவரல்லர் என்பதுதான்!'' நம்பூதிரி பதிலளித்தார்.

அதே நேரம் வீட்டின் முற்றத்தில் எதுவோ ஒன்று வந்து விழும் சத்தம் கேட்டது.

சசிதரன் வெளியே வந்து பார்த்தார்.

''அப்பா, வாளின் மிச்சப் பகுதி விழுந்து கிடக்கிறது!'' சசிதரன் குரல் கொடுத்தார்.



வாசுதேவன் நம்பூதிரியுடன் சேதுவர்மாவும் வெளியே வந்தனர்.

முற்றத்தில் துளசிமாடத்திலிருந்து சுமார் மூன்றடி தொலைவில் உடைபட்டு விழுந்த வாள் மின்னியது.

மூவரும் வாளை நெருங்கினர்.

பிடியில்லாத வாளின் கூர்மையான முனைப்பகுதி மண்ணுக்குள் ஆழ்ந்து இறங்கியிருந்தது.

சசிதரன் வாளை மண்ணிலிருந்து உருவி எடுக்க முயன்ற போது அப்பா தடுத்தார்.

உள்ளிருந்து துவாலை ஒன்றை எடுத்து வந்தார். துவாலையை வாளின் மீது வைத்தவுடன் அதிலிருந்து அடர்ந்த புகை எழும்பத் தொடங்கியது. உடனே நம்பூதிரி துவாலையை அதிலிருந்து உருவி எடுத்தார்.

நெருப்பில் அமிழ்ந்திருந்த வாளின் வெப்பம் கொஞ்சம் கூடக் குறையவில்லை. டாக்டர் சேதுவர்மாவும், சசிதரனும் பேசும் சக்தியை இழந்ததுபோல் மௌனமாக நின்றனர். நவீன விஞ்ஞானத்துக்கே சவால்விடும் காட்சியாக இருந்தது அது.

இயற்கைக்கு மாறான எத்தனையோ சம்பவங்களைத் தபாலில் வந்த 'மிஸ்ட்டரி இன்டு அண்ட் சஸ்பென்ஸ்' புத்தகத்தில் வர்மா படித்திருந்தார். 1987ஆம் ஆண்டு லண்டனில், ஆக்டோபஸ் பதிப்பகம் வெளியிட்ட அந்தப் புத்தகத்தில் விவரித்திருக்கிற ஒவ்வொரு சம்பவமும் தேதி மற்றும் ஆதாரங்களுடன் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சற்று நேரம் எதையோ யோசித்தவாறு நின்றிருந்த வாசுதேவன் நம்பூதிரி, கிண்ணம் ஒன்றில் நிறைத்து வைத்திருந்த தண்ணீரை எடுத்து வந்து கொஞ்சம் கொஞ்சமாக தகிக்கும் வாள்மீது ஊற்றினார்.

'ஸ்... ஸ்... ஸ்' என்கிற சத்தத்துடன் வாள்மீது விழுந்த நீர் ஆவியாகியது.

வெப்பம் தணிந்து விட்டது என்பதை உணர்ந்த நம்பூதிரி துவாலையின் உதவியால் மண்ணிலிருந்து வாளை உருவினார்.

சற்று நேரம் வரை மூவரும் பரஸ்பரம் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தனர்.

புகழ்பெற்ற மாந்திரீகரான வாசுதேவன் நம்பூதிரிக்கு, இது வரையிலான வாழ்க்கையில் இப்படியொரு தோல்வி ஏற்பட்டதில்லை. சசிதரனுக்கும் அந்த உண்மை தெரிந்தே இருந்தது.

அந்தப் பரம்பரையின் முந்தைய மாந்திரீகர்களைப் போல் அவரும் எத்தனையோ வியப்புக்குரிய செயல்களைச் செய்து காட்டியிருக்கிறார். ஆனால், இதுவரை எதிலும் அவர் தோல்வி அடைந்ததில்லை. இதுதான் முதல்முறை!

மூவரும் மீண்டும் சவுக்கைக்குத் திரும்பினர். ஹோம குண்டத்தின் நெருப்பிலிருந்து பச்சைநிற ஜுவாலைகள் படர்ந்து எரிந்து மெதுவாக நெருப்பு அணைந்து.

''நான் ஒரு விஷயம் கேட்கட்டுமா அப்பா!'' சசிதரன் கேட்டார்.

''கேள்!'' வாசுதேவன் நம்பூதிரி, சசிதரன் பக்கமாகத் திரும்பியபடி கூறினார்.

''ஹோமகுண்டத்தில் செலுத்திய வாளின் மறுமுனையை யாராவது பிடித்து இழுத்ததாக உங்களுக்குத் தோன்றியதா?''

''ஆமாம். ஓர் உருவம் தெரிந்தது. ஆனால், தெளிவாகத் தெரியவில்லை!''

''அது எப்படிப்பட்ட கையாக இருந்தது அப்பா?''

''குறிப்பிட்டு அடையாளம் சொல்ல முடியவில்லை. இருந்தாலும் தெரிந்தது இடதுகை என்று உறுதியாகச் சொல்ல முடியும்!'' வாசுதேவன் நம்பூதிரி கூறினார்.

''அப்படியென்றால், அந்தக் கையின் சொந்தக்காரரைப் பொறுத்தவரை நாம் மிகவும் சாதாரணமானவர்கள் இல்லையா?'' சசிதரன் கேட்டார்.



வாசுதேவன் நம்பூதிரி அதற்கு பதில் சொல்லாமல் சிந்தனையில் ஆழ்ந்தார்.

''மேற்கொண்டு நாம் என்ன செய்வது?'' சேதுவர்மா கேட்டார்.

''சற்றுப் பொறுங்கள். என்னைப் பொறுத்தவரை இது ஒரு புதிய அனுபவம். பொதுவாக ஹோமகுண்டத்தினுள் நான் செலுத்திய வாளின் முனை எதிரியின் உயிரைக் குடித்திருக்க வேண்டும்.'' வாசுதேவன் நம்பூதிரி, அணைந்த ஹோம குண்டத்தையே பார்த்தபடி பேசினார்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

அதுவரை அவர்கள் இரவுச் சாப்பாட்டைப் பற்றி யோசித்ததாகத் தெரியவில்லை.

வராந்தாவிலிருந்த சுவர்க்கடிகாரம் பதினோரு தடவை மணியடித்தது.

யாருக்கும் பசியே தோன்றவில்லை.

''இன்றைக்கு நீங்கள் கண்டிப்பாகப் போக வேண்டுமா என்ன?'' சாப்பாட்டுக்குப் பிறகு வாசுதேவன் நம்பூதிரி கேட்டார்.

''கண்டிப்பாகப் போக வேண்டும். நிர்மலாவும் குழந்தையும் தனியாக இருப்பார்களே!'' சசிதரன் கூறினார்.

''அப்படியானால், நேரம் கடத்தாதீர்கள். உடனடியாகப் புறப்படுங்கள்!'' வாசுதேவன் நம்பூதிரி கூறினார்.

குவார்ட்டர்ஸை அடைந்தபோது நிர்மலா ஏகத்துக்கு பயந்து போயிருந்தாள்.

''ஏங்க... இவ்வளவு நேரம்?'' நிர்மலா கணவனிடம் கேட்டாள்.

''எதிர்பாராமல் தாமதமாகிவிட்டது!''

''என்கிட்டத் தகவல் தெரிவிச்சிருக்கலாமில்லையா?'' நிர்மலா புகார் செய்வது போலக் கேட்டாள்.

''நான் வரட்டுமா, சசிதரன்?'' விடைபெற்ற சேதுவர்மா அங்கிருந்து கிளம்பினார்.

அன்றிரவு அவருக்குத் தூக்கம் வரவில்லை. ஒவ்வொரு தடவை கண் மூடும்போதும் கொழுந்து விட்டெரிந்த ஹோம குண்டத்து நெருப்பும், நீண்ட கைப்பிடியுள்ள கூர்மையான வாளும் அவர் கண் முன்பாகத் தோன்றின.

சனிக்கிழமை மதியத்துக்குப் பிறகு சேதுவர்மா சற்று ஓய்வாக உட்கார்ந்திருந்தபோது சசிதரன் வந்தார்.

''அப்பாவிடமிருந்து வேறு ஏதாவது தகவல் வந்ததா?'' சேதுவர்மா கேட்டார்.

''பரிகாரம் செய்யாமல் விடுவதில்லை என்று சபதம் செய்திருக்கிறார்.''

''நல்ல விஷயம், வந்திருக்கும் புதிய டாக்டரை சந்தித்துப் பேசினீர்களா?'' வர்மா கேட்டார்.

சற்று நேரத்தில் ஒரு வெள்ளை நிற மாருதி காரின் முன்புறம் தென்பட்டது. அடுத்த சில நிமிடங்களுக்குள் வெள்ளை நிறப் புடவையொன்று காரை மறைத்தது.

அந்தப் புடவை அசைந்தது.

அடுத்த விநாடி சிரித்த முகத்துடன் டாக்டர் இந்திராபாய் அவர்களுக்கு முன்னால் தென்பட்டாள்.

டாக்டர் சேதுவர்மாவும். சசிதரனும் ஒருகணம் அசந்து போனார்கள்.

உடனடியாக இப்படியொரு சந்திப்பு நிகழுமென்று அவர்கள் இருவரும் எதிர்பார்க்காததுதான் காரணம்.

சன்னமான சரிகை வைத்த வெள்ளை உடை அணிந்திருந்தாள். அதே நிறத்திலான ரவிக்கை. காலில் மெல்லிய வார்களால் இணைக்கப்பட்ட செருப்பு. அதன் மீது செதில்கள் போன்று பளபளப்பான பகுதிகள் அழகாகக் காட்சியளித்தன.



''ஹலோ வாருங்கள்!'' டாக்டர் சேதுவர்மா அவளை வரவேற்றார்.

''எப்படி இருக்கிறீங்க சார்?'' என்றவாறே அவள், அவர்களுக்கு அருகிலிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தாள்.

சுகமான ஒரு வாசனை அந்த இடம் முழுவதும் பரவியது.

''நான் உங்கள் நம்பருக்கு டயல் செய்து சலித்துப் போனேன். பிறகு நேரடியாக வந்து பார்க்கலாம் என்று புறப்பட்டேன். உங்களது வீட்டைப்பற்றி விசாரித்தேன். முன்னால் கார் நிற்பதைப் பார்த்ததால் நீங்கள் வீட்டில்தான் இருக்கிறீர்கள் என்று நினைத்தேன்.'' ஏற்கெனவே நெடுநாள் பழகிய ஒருத்தியைப் போல இந்திராபாய் பேசினாள்.

''இவர் டாக்டர் சசிதரன்.'' வர்மா அறிமுகப்படுத்தினார்.

''கேள்விப்பட்டிருக்கிறேன். சார், உங்கள் மனைவியும் ஒரு டாக்டர்தான் இல்லையா?'' இந்திராபாய் கேட்டாள்.

''ஆமாம் ஹோமியோபதி டாக்டர்.'' சசிதரன் கூறினார்.

''நாங்கள் இப்போதுதான் உங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.'' வர்மா சிரித்தவாறு சொன்னார்.

''எனக்கும் தெரியும் சார், நான் பேசப்படக்கூடிய ஒரு நபராவேன் என்று. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தானே வந்து சேர்ந்திருக்கிறேன். அதுவும் எனது விருப்பத்தின் பேரில்!'' இந்திராபாய் பேசினாள்.

''உண்மைதான். யாருக்கும் சந்தேகம் ஏற்படவே செய்யும். எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியானவர்களா என்ன? ஒரு சிலர் வித்தியாசமான மனிதர்களாகவும் இருக்கிறார்களே!'' சசிதரன் கூறினார்.

''அப்படியா சொல்கிறீர்கள்?'' இந்திராபாய் கேட்டாள்.

''மேடம், டாக்டர் சசிதரன் வெறும் ஒரு டாக்டர் மட்டும் இல்லை. அசாதாரண விஷயங்களில் கொஞ்சம் பயிற்சியும் உள்ளவர்.'' வர்மா சிரித்தபடி கூறினார்.

"கேள்விப்பட்டிருக்கிறேன். சமீபத்தில் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறவர் இல்லையா?" இந்திராபாய் சரிந்த முந்தானையைச் சரிசெய்தபடி பேசினாள். அப்போது அவள் மோதிர விரலில் போட்டிருந்த மோதிரம் பளபளத்தது.

பாம்பு வடிவிலான மோதிரம் அது. மோதிர விரலுக்கிடையே நுழைந்து சுற்றிக்கொண்ட தங்கநிற பாம்பு போலிருந்தது அது.

"நான் போன் செய்தபோது நீங்கள் இங்கு இல்லையா டாக்டர்?"

தாங்கள் ஈடுபட்டிருக்கிற விஷயத்தைப் பற்றி அவளிடம் சொல்லலாமா, வேண்டாமா என்று இருவரும் ஏககாலத்தில் யோசித்தனர்.

இந்த விஷயத்தைச் சொன்னால், தங்கள் இருவரைப் பற்றியும் இந்திராபாய் என்ன நினைத்துக் கொள்வாளோ என்று இருவரும் தயங்கினர். நவீனமான மருத்துவப் பணியில் ஈடுபட்டிருக்கும் இரண்டு டாக்டர்கள் பழங்காலத்தின் மூடநம்பிக்கைகளில் சிக்கிக்கொண்டு உழல்வதாக எண்ணி விட்டால்...

மகப்பேறு மருத்துவத்தில் டாக்டரேட் பட்டம் பெற்றதுடன், அயர்லாந்து சென்று ஹார்மோன்களின் சிகிச்சையிலும் சிறப்புப்பட்டம் பெற்றுவந்துள்ளவர் இந்திராபாய் என்பது அவர்கள் இருவருக்குமே தெரியும்.

எனவே, அவளிடம் இதைப் பற்றி எப்படிப் பேசுவது என்று தயங்கினர்.

"சார் உங்கள் அப்பா புகழ்பெற்ற ஒரு மாந்திரீகர் என்று கேள்விப்பட்டேன்... உண்மைதானா?" தெரிந்துகொண்டதை சரிபார்க்கும் தொனியில் இந்திராபாய் கேட்டாள்.

"இதையெல்லாம் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?" சசி வியப்புடன் கேட்டார்.

"நான் இங்கு வருவதற்கு முன்னாலேயே எங்கள் அப்பாவுக்கு, உங்கள் அப்பாவைத் தெரியும்!" இந்திராபாய் கூறினாள்.



"ஓகோ... அப்படியா விஷயம்? உங்கள் அப்பாவின் பெயர் என்ன மேடம்?" கேட்டவர் டாக்டர் சேதுவர்மா.

"உமயவர்மா! புகழ்பெற்ற ஒரு சமஸ்தானத்தின் கடைசி வாரிசு."

"நானும் இந்தப் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன்." சேதுவர்மா எதையோ நினைவுபடுத்திக் கொள்ள முயன்றார்.

"யோசித்தால் நினைவுக்கு வரும்!" இந்திராபாய் சிரித்தபடி கூறினாள்.

பாலக்காட்டின் வடக்குப் பகுதியைச் சேர்ந்த ஒரு ராஜ குடும்பத்தைப் பற்றி சேதுவர்மாவின் அம்மா முன்னர் எப்போதோ சொல்லியிருந்தார். அது அவரது சிறுவயதில் கேள்விப்பட்டதாக ஞாபகம்.

"உங்கள் அப்பாவும் அம்மாவும் விமான விபத்தில்தானே இறந்தார்கள்?" இந்திரா கேட்டாள்.

"அதற்குள்ளேயே இந்த அளவுக்குத் தகவல்கள் சேகரித்து விட்டீர்களா என்ன?" சேதுவர்மா வியப்படைந்தவராகக் கேட்டார்.

டாக்டர் சசிதரனும் இந்திராபாயை வியப்புடன் பார்த்தார்.

'ஓரளவுக்கு எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே இவள் வந்திருக்கிறாள்' என்பது சேதுவர்மாவுக்குப் புரிந்தது.

"இனிமேல் நீங்கள் தாராளமாகப் பேசலாமே. ஆஸ்பத்திரியில் நடைபெற்ற இரட்டைப் பிரசவம், பிறகு தாய் இறந்தது, குழந்தைகள் காணாமற் போனது இவற்றின் பின்னணியில் யார் அல்லது எது இருப்பதாக நினைக்கிறீர்கள்?" இந்திராபாய் கேட்டாள்.

டாக்டர் சசிதரனும் சேதுவர்மாவும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். 'சொல்லலாமா... வேண்டாமா?'

கடைசியில் டாக்டர் சேதுவர்மா பேசத் தொடங்கினார். "சமீப நாட்களாக எனக்கு வித்தியாசமான சில அனுபவங்கள்

ஏற்பட்டன. அதெல்லாம் நம்ப முடியாததும் அசாதாரணமும் ஆனவை. ஒரு பெண்மணி சம்பந்தப்பட்டவை. அது இன்னும் தொடர்வதாகத் தோன்றுகிறது. சமீபத்தில் இறந்த இரண்டு லேடி டாக்டர்கள் கூட அந்தப் பெண்மணியுடன் தொடர்பு கொண்டிருந்தவர்கள்தான். இதற்கெல்லாம் அந்தப் பெண்மணிதான் காரணம் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால், அதை ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியவில்லை.''

''அந்த அனுபவங்களை என்னிடம் சொல்ல முடியுமா டாக்டர்?'' இந்திராபாய் ஒரு விதமான பிடிவாதத்துடன் கேட்டாள்.

''சொல்கிறேன். ஆனால், ஒரு நிபந்தனை. எந்தக் காரணத்தை முன்னிட்டும் நீங்கள் அந்தப் பெண்மணியுடன் எந்தவிதமான தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. அது ஆபத்தை நோக்கி உங்களை அழைத்துச் செல்லும்!''

''பரவாயில்லை டாக்டர், நீங்கள் சொல்லுங்கள்.''

டாக்டர் சேதுவர்மா தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை விவரித்தார்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்ட இந்திராபாய் சற்று நேரம் ஏதோ யோசனையிலாழ்ந்தாள். பிறகு பேசத் தொடங்கினாள்: ''நீங்கள் சொன்னதை வைத்துப் பார்த்தால், அந்தப் பெண்மணி ஏதோ ஒரு காரணத்துக்காக உங்களைப் பழிவாங்க எண்ணுகிறாள். அதே நேரம் அந்தப் பெண்மணியால் உங்களுடன் நேருக்கு நேர் மோத முடியாமலும் இருப்பதாகத் தோன்றுகிறது. அதனால் நீங்களாகச் சிக்கிக் கொள்ளும் விதமாக ஆங்காங்கே உங்களுக்காகக் கண்ணிவெடிகள் பதித்து வைக்கிறாள்.''

''இவ்வளவெல்லாம் செய்யும் பெண்மணி தனது தாக்குதலை நேரடியாகவே தொடரலாமே'' டாக்டர் சசிதரன் கேட்டார்.

''அது முடியாத விஷயமாக இருக்கலாம். சேது சார் உங்கள் நட்சத்திரம் எது?''



''உங்களுக்கு ஜோதிடமும் தெரியுமா என்ன?'' சசிதரன் கேட்டார்.

''கொஞ்சம் தெரியும். உங்கள் நட்சத்திரம் தெரியாவிட்டால் அப் பரவாயில்லை. அதையும் நானே சொல்லிவிடட்டுமா? நட்சத்திரம் திருவோணம். உங்களுக்கு இப்போதுதான் வியாழதசை ஆரம்பித்திருக்கிறது. உங்களுக்கு முப்பத்திரண்டு வயதாகிறதா டாக்டர்?'' இந்திராபாய் தன் இடது கைவிரல்களை மடக்கிக் கணக்கிட்டபடி கேட்டாள்.

டாக்டர் சேதுவர்மா வியப்பின் எல்லைக்கே போய்விட்டார். அவள் சொன்னதெல்லாம் நூற்றுக்கு நூறு சரியாகப் பொருந்தியிருந்தன.

''பகவான் விஷ்ணுவின் பிறந்தநாள் திருவோண நட்சத்திரம். குறிப்பாகச் சொன்னால் வியாழதசையும் அவருக்கு உரியதுதான். அதனால் எந்த வகையிலும் அவளால் உங்களுடன் நேரடியாக மோத முடியாது. இந்த நடவடிக்கைகள் எல்லாமே உங்களது அபரிமிதமான சொத்துகளின் பொருட்டுத்தான்!'' இந்திராபாய் கூறினாள்.

''உண்மையாகவா? ஆனால், அந்தப் பெண்மணியைப் பார்த்தால், அப்படிப்பட்டவளாகத் தெரியவில்லையே?'' சேதுவர்மா தனக்குத் தானே சொல்வதுபோல் பேசிக் கொண்டார்.

''தற்சமயம் இதற்குமேல் எதையும் சொல்ல முடியவில்லை. அந்தப் பெண்மணிக்குத் துணையாக வேறு யாராவது செயல்படுகிறார்களா என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.''

''நானும் அந்தக் கோணத்தில் யோசனை செய்தேன்!'' சசிதரன் ஆமோதிப்பதுபோல் பேசினார்.

சேதுவர்மாவின் வீட்டு வேலையாள் மூவருக்குமாக டீ கொண்டு வந்து வைத்தார்.

''அப்படியானால் நீங்கள் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளவில்லையா?'' இந்திரபாய் கேட்டாள்.

''இல்லை... அந்தப் பெண்மணியின் மகளை எனக்குத் திருமணம் செய்துவைக்க விரும்புவதாகச் சொன்னார்கள். யோசித்துப் பார்த்தால் அதுகூட ஒருவகையில் ஏதோ சதித்திட்டம் என்று தோன்றுகிறது.''

''இருக்கலாம்!''

நேரம் ஆறுக்குமேல் ஆகிவிட்டது.

பகல் நேரம் குறைவாக இருந்த மாதமானதால், இருள் படர்ந்து கொண்டிருந்தது.

''டாக்டர் சார்... சசிதரன் சார்... நான் புறப்படட்டுமா? ரொம்ப நேரமாகப் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று தோன்றுகிறது.'' இந்திராபாய் எழுந்தாள்.

கார் சாவியை கைப்பையிலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு இந்திராபாய் காரை நோக்கி நடந்தாள். அதே நேரத்தில் ஒரு சிவப்பு நிற மாருதி கார் அந்த வீட்டு வாசலில் வந்து நின்றது.

அதிலிருந்து ரத்னபிரபாதேவி இறங்கினாள்.

## 10

''உங்களைப் பார்க்க யாரோ வருகிறார்கள் டாக்டர்!'' இந்திராபாய் பின் திரும்பிச் சொன்னாள். பிறகு தனது காரை நோக்கி நடந்தாள்.

ரத்னபிரபாதேவி அப்போதுதான் கேட்டைத் தாண்டிக் கொண்டிருந்தாள்.

இந்திராபாய், அந்தப் பெண்மணியை ஊன்றி கவனித்தாள். அதேபோல் ரத்னபிரபாதேவியும் இந்திராபாயை ஊன்றி கவனிக்கவே செய்தாள்.

இருவர் கண்களும் ஒரு புள்ளியில் சந்தித்தன.

சந்தேகம் நிரம்பிய கண்களுடன் ரத்னபிரபாவைப் பார்த்த இந்திராபாய் பிறகு தனது காரில் ஏறினாள். கார் வடக்குப்புறமாக



நகரும்போது மீண்டும் ஒரு தடவை இந்திராபாய் தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

சேதுவர்மாவின் வீட்டு வாசலில் நின்று ரத்னபிரபாதேவி தன்னையே பார்ப்பது அப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது.

இப்படித் திடுமென்று ரத்னபிரபாதேவி தன்னைத் தேடி வரக் கூடும் என்று டாக்டர் சேதுவர்மா ஒருபோதும் எதிர்பார்க்க வில்லை.

''ச்சே... நான் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விட்டேனே.'' வருத்தத்துடன் ரத்னபிரபா கூறினாள்.

மற்ற இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''எதைப்பற்றிச் சொல்கிறீர்கள் நீங்கள்?'' சேதுவர்மா கேட்டார்.

''இப்போது கிளம்பிப் போனவர் புதிதாக வந்து சேர்ந்திருக்கிற டாக்டர்தானே?'' ரத்னபிரபா கேட்டாள்.

''ஆமாம், அவரேதான், டாக்டர் இந்திராபாய்.'' சேதுவர்மா பதிலளித்தார்.

''இவரை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன். எங்கேயென்று ஞாபகம் வரவில்லை.'' சோபாவில் அமர்ந்தபடி பேசினாள்.

''அதற்கு சந்தர்ப்பமே இல்லை!'' சசிதரன் சொன்னார்.

''நீங்கள் எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறீர்கள் டாக்டர்?'' சிரித்தவாறு ரத்னபிரபா கேட்டாள்.

''நீங்கள் இந்த ஊருக்கு வருவதற்கு முன்பே அவர் வெளி நாட்டில் பயிற்சியில் இருந்தார். அது முடிந்த பிறகு கோழிக்கோடு மெடிக்கல் காலேஜில் வேலை செய்தார்.''

''இருக்கலாம். ஆனால், எனக்கு மிகவும் பழக்கமான முகம் போலவே தெரிகிறது.'' தன்னுடைய கார்ச் சாவியை முன்புறம் இருந்த டீப்பாயின் வைத்தாள். யதேச்சையாக சசிதரன் அப்போது

ரத்னபிரபாதேவியின் இடதுகையைக் கவனிக்க நேர்ந்தது. உள்ளங்கையின் வெள்ளைப் பகுதியில் சிவப்பு மையினால் கோடு கிழித்தது போல் தென்பட்டது. சசிதரன் தன் இடதுகையைக் கவனிப்பதை உணர்ந்ததும் ரத்னபிரபா சட்டென்று கையைப் பின்னுக்கு இழுத்தாள். மிகவும் எச்சரிக்கையுடன் அந்தக் கையைப் புடவைத் தலைப்புக்குள் மறைத்துக் கொள்ளவும் செய்தாள் - ஓர் இயல்பான நிகழ்ச்சியைப் போல.

டாக்டர் சசிதரனின் நினைவு சட்டென்று தன் தந்தை நடத்திய ஹோமத்தின் பக்கம் திரும்பியது.

'ஹோமகுண்டத்திலிருந்து வாளை உடைத்து உருவி எடுத்து வெளியே வீசியதும் ஓர் இடதுகைதான். அப்படியானால் நான் நினைத்ததுதான் நடந்திருக்கிறதா? தங்களுக்கு முன்பாக இப்போது அமர்ந்திருக்கும் இந்தப் பெண்மணி உண்மையில் யார்?'

தான் ஏற்கெனவே தீர்மானித்ததுபோல் பைசாசிக சக்தி வாய்ந்த பெண்மணியேதான்! இருப்பினும் அவள் இடது கையில் ஏற்பட்டிருக்கிற காயத்தைப் பற்றிக் கேட்க, ஏனோ சசிதரனுக்கு மனம் வரவில்லை.

''என்ன, இப்படித் திடுதிப்பென்று வந்திருக்கிறீர்கள்?'' சேதுவர்மா கேட்டார்.

''நான் ஒரு முக்கிய விஷயமாக உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன். ஒருவகையில் சொல்வதானால் ஓர் அழைப்பு என்று சொல்லலாம். எங்களது பியூட்டி பார்லரின் சார்பாக ஒரு 'ஃபாஷன் பரேடு' ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்தியாவில் இப்படி நடப்பது இதுதான் முதல்தடவை. சுமார் ஐம்பது பெண்கள் கலந்து கொள்கிறார்கள்...'' ரத்னபிரபா கூறினாள்.

''ஓகோ... பிரமாண்டமான திட்டமாயிற்றே. பரிசளிப்புகள் ஏதாவது உண்டா?'' சசிதரன் கேட்டார்.

''பெரிய பரிசு காத்திருக்கிறது. முதல் பரிசு நூற்றியொரு பவுன். இரண்டாவது பரிசு எழுபத்தைந்து பவுன். மூன்றாவது



பரிசு ஐம்பது பவுன். பிரபல இந்தித் திரைப்பட நடிகர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.''

''விழா எங்கு நடக்கிறது?'' சேது கேட்டார்.

நகரின் புகழ்பெற்ற மண்டபத்தின் பெயரைக் குறிப்பிட்டாள் ரத்னபிரபா.

''அதற்கு நாங்களும் வரவேண்டுமென்று சொல்கிறீர்களா? பரிசு ஏதாவது உண்டா?''

''உண்டு... ஆனால், அது பார்வையாளர்களைக் கட்டுப் படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்களுக்கு!''

''பரிசுகளை யாராவது ஸ்பான்சர் செய்கிறார்களா என்ன?'' சேது விசாரித்தார்.

''மூன்று நகைக்கடைக்காரர்கள் பரிசுப்பொருள்களை வழங்குகிறார்கள்.''

''நல்ல விஷயம்தான்.'' சேது கூறினார்.

ரத்னபிரபா தனது ஹேண்ட் பேக்கைத் திறந்து பிளாஸ்டிக் கார்டில் அச்சடிக்கப்பட்ட அழகான இரண்டு அழைப்பிதழ்களை வெளியே எடுத்து அதை டீப்பா மீது வைத்தாள்.

டாக்டர் சேதுவர்மா அதில் ஒன்றைக் கையில் எடுத்துப் பார்த்தார்.

''இரவு ஒன்பதுமணிக்கு விழா தொடங்குகிறது. பத்து மணிவரை முக்கிய நிகழ்ச்சி. அதன் பிறகு பிரபல திரைப்பட நடிகை நடத்தும் நடன நிகழ்ச்சி. நிகழ்ச்சிகளை புத்திசாலித்தனமாக அமைத்திருக்கிறீர்கள்...'' அழைப்பிதழைப் பார்த்த சேதுவர்மா கூறினார்.

''பேச்சின் நடுவே ஒரு விஷயத்தை மறந்துவிட்டேன். நான் வரும் போது வெளியே போனாரே டாக்டர். இந்திராபாய்! மறக்காமல் அவரிடமும் ஓர் அழைப்பிதழைக் கொடுங்கள். கண்டிப்பாக வரச் சொல்லுங்கள் சார். அல்லது நானே நேரடியாகப் போய் கொடுக்கட்டுமா?'' ரத்னபிரபா கேட்டாள்.

"நாங்களே கொடுத்துவிடுகிறோம். உங்களுக்கு எதற்கு வீண் சிரமம்? நாங்கள் மூவரும் ஒன்றாக வருகிறோம்!" சேது ஒப்புதலளித்தார்.

"அப்ப, நான் கிளம்பட்டுங்களா?" ரத்னபிரபா இருக்கையில் இருந்து எழுந்து காரை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

"அந்தப் பெண்மணி இப்படியொரு நாடகம் நடத்துவதானால் அதன் பின்னணியில் நிச்சயமாக ஏதாவது நோக்கம் இருக்கும்!" டாக்டர் சசிதரன் கருத்துத் தெரிவித்தார்.

"புகழுக்குப் புகழும் ஆயிற்று. அதன் வெளிச்சத்தில் வேறு ஏதாவது வஞ்சகமான திட்டத்தை மேற்கொள்வது அவரது நோக்கமாக இருக்கலாம்..." சசிதரன் எழுந்தார்.

"இந்த ஃபாஷன் பரேடுக்கு நாம் கண்டிப்பாகப் போக வேண்டும். மறந்துவிடாதீர்கள்!" சேதுவர்மா நினைவூட்டினார்.

புறப்படுவதற்காக எழுந்த சசிதரன் எதையோ நினைத்துக் கொண்டவராகத் திரும்பி வந்து சோபாவில் அமர்ந்தார்.

"ஒரு முக்கியமான விஷயத்தை உங்களிடம் சொல்ல மறந்துவிட்டேன். அந்தப் பெண்மணியின் இடது உள்ளங்கையில் ஒரு சிராய்ப்பு அடையாளத்தைப் பார்த்தேன். நான் அதைக் கவனிக்கிறேன் என்பதை உணர்ந்ததும் அவர் அந்தக் கையைச் சட்டென்று மறைக்கவும் செய்தார்."

"உண்மையாகவா?" சேது வியப்பு அடைந்தவராகக் கேட்டார்.

"அந்த அடையாளத்தை நன்றாகவே பார்த்தேன். அப்பாவிடம் இது தொடர்பாக நான் பேசவேண்டும்." சசிதரன் கூறினார்.

"காலம் தாழ்த்தாமல் அதைச் செய்யுங்கள். நீங்கள் பார்த்து விட்டதை அந்தப் பெண்மணியும் உணர்ந்து கொண்டதால் நீங்கள் சற்று எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம்!" சேது நினைவூட்டினார்.



"நாளைக்கே அப்பாவிடம் இதைப் பற்றிப் பேசுகிறேன்."

சொன்னபடி மறுநாளே வாசுதேவன் நம்பூதிரியை சந்தித்த சசிதரன், தான் பார்த்ததைக் குறிப்பிட்டார்.

"அப்படியானால் எனது நடவடிக்கையில் எந்தவிதத் தவறும் நடக்கவில்லை என்று தெரிகிறது. அந்தப் பெண்மணியைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டியது நிறைய உள்ளன. இரவு நேரத்தில் அவள் எந்த உருவத்தில் இருக்கிறாள் என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். சேதுவர்மா குறிப்பிட்ட அந்த உருவத்தைத் தவிர வேறு ஏதோ ஓர் உருவம் அவளுக்கு இருக்க வேண்டும். நாளைக்கு அமாவாசை. அப்படியென்றால், அந்தப் பெண்மணி ஏதாவது பூஜையில் ஈடுபடுவாள். அப்படி இருப்பதானால், அது என்ன பூஜை என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்!" வாசுதேவன் நம்பூதிரி கூறினார்.

'மாந்திரீகத்தைப் பயன்படுத்தும் ஒரு பெண் மந்திரவாதி என்ற நிலையில், அவள் ஏதாவது ஒரு மூர்த்தியை உபாசிப்பது அவசியம். அந்த மூர்த்தி யார் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் எதிர்நடவடிக்கை எடுக்கச் சௌகரியப்படும். அது மட்டும் வெற்றி பெற்றால்... அதன் பிறகு அந்தப் பெண்மணிக்கு எந்தவிதமான சக்தியும் இல்லாமல் செய்துவிட முடியும்!' என்று நம்பினார் வாசுதேவன் நம்பூதிரி.

"அதற்கு நான் மட்டும் போனால் போதுமா அப்பா?" சசிதரன் கேட்டார்.

"வேண்டாம் சசி, அதற்கெல்லாம் நீ போனால் சரியாகாது. அவள் எங்கே தங்கியிருக்கிறாள் என்று சொன்னால் நானே போய்விடுவேன்."

"என்னப்பா, நீங்கள் அந்த இடத்துக்குத் தனியாகப் போவதா... அது கூடாது!" சசி பிடிவாதத்துடன் பேசினார்.

"நல்ல பிடிவாதம் உனக்கு! இதுவரையில் நான் எப்படிப் பட்ட இடங்களுக்கெல்லாம் போயிருக்கிறேன்? சுடுகாட்டில்

எரியும் பிணத்துக்குப் பக்கத்திலேயே ஓர் இரவு முழுவதும் செலவழிக்க நேர்ந்திருக்கிறது. அதைவிடவா இது ஆபத்தானது என்கிறாய் சசி?''

''சொன்னதெல்லாம் சரிதான் அப்பா. ஆனால், ஹோமத்தில் கடைசியில் நடந்தது உங்களுக்குத் தெரியுமே!''

''ஓகோ... அதனால் சொல்லுகிறாயா? அங்கு போகும்போது என்னைக் காப்பாற்றக் கூடிய சரியான பாதுகாப்புக் கேடயம் என்னிடம் உள்ளது. அது மட்டுமா? அவளைப் போலவே எனக்கென்று சில சக்திகள் இருப்பதை நீ மறந்துவிட்டாயா?'' அப்பா, மகனுக்கு தைரியமூட்டினார்.

தன் அப்பா வல்லமை வாய்ந்த, புகழ்பெற்ற ஒரு மாந்திரீகன் என்பது சசிதரனுக்கும் தெரியும். மறுநாளே ரத்னபிரபாவின் வீட்டுக்குச் செல்வதென்று வாசுதேவன் நம்பூதிரி தீர்மானித்தார்.

ஆயிரம்தான் இருந்தாலும் அப்பா தனியாக அங்கு செல்வதில் சசிதரனுக்குக் கொஞ்சம்கூட விருப்பமில்லை எனினும் அப்பாவின் பிடிவாதத்தை எதிர்த்து அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

மறுநாள் இரவில், உணவை முடித்துக்கொண்டு, தேவையான பொருள்களை ஒரு தோள்பையில் போட்டுக் கொண்டு வாசுதேவன் நம்பூதிரி புறப்பட ஆயத்தமானார்.

பார்வைக்குச் சற்றுக் கௌரவமான பிச்சைக்காரனைப் போல தோற்றமளித்தார். கிழிந்த லுங்கி, மேலுடம்பை மறைத்துக் கொள்ளவும் அதேபோல் மற்றொரு லுங்கி, அந்த பங்களாவுக்குச் சுற்றிலுமிருப்பவர்கள் எவரும் தன்னை அடையாளம் தெரிந்து கொள்ளக்கூடாது என்பதில் வாசுதேவன் நம்பூதிரி மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொண்டார்.

யோசித்துப்பார்த்தபோது, அந்தப் பகுதியில் தனக்குத் தெரிந்தவர்கள் சிலர் இருப்பது ஞாபகம் வந்தது.

புதிய பேட்டரிகள் போட்ட பெரிய டார்ச்லைட் ஒன்றையும் எடுக்க மறக்கவில்லை. ஒரு தடவை டார்ச்லைட்டின் சுவிட்சைத்



தட்டிப் பார்த்துச் சோதனை செய்தார். அதிலிருந்து புறப்பட்ட வெளிச்சம் வெகுதூரம் வரை வட்டவடிவமாகப் பரவியது. திருப்திக்கு அடையாளமாகத் தலையசைத்தவர் அதைப் பையில் போட்டுக்கொண்டு கிளம்பினார்.

அவர் பண்ணார மூலையை அடையும்போது இரவு பத்து மணிக்கு மேலாகியிருந்தது.

அமைதியான சுற்றுப்புறம். ஓர் இலைகூட அசையவில்லை. டார்ச்லைட்டைப் பயன்படுத்தாமல் வேறு வழியில்லை. அப்படிப் பட்ட அந்தகாரம் சூழ்ந்திருந்தது எங்கும். எனவே தரைப் பகுதியில் மட்டும் வெளிச்சம் விழுமாறு லைட்டை எரிய விட்டு நடந்தார்.

ஆலமரத்தின் அடிப்பகுதிக்கு வந்தவர், அதன் சுற்றுப் புறத்தில் விளக்கொளியைப் பாய்ச்சிப் பார்த்தார்.

சிவப்பு நிறச் செந்தூரம் தேய்த்த சூலம் ஆலமரத்தை விழுந்து விடாமல் தாங்குவதுபோல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. முதல் பார்வையிலேயே அந்தப் பகுதியில் ஏதோ ஒரு விபரீதம் இருப்பது புரிந்தது.

விளக்கின் வட்டமான வெளிச்சத்தை மரத்தின் மேற் பரப்புக்குத் திருப்பிய வாசுதேவன் நம்பூதிரி, ஒருகணம் சந்தேகவயப்பட்டவராக நின்றார்.

பெரிய ஆணிகள் ஆறு ஆலமரத்தின் நடுப்பகுதியில் அறையப்பட்டிருந்தன. ஒரு மாந்திரீகனுக்கு அந்த ஆணிகள் எதற்காக, எப்படி அறையப்பட்டன என்பதைப் பற்றி யாரும் விளக்க வேண்டியதில்லை.

யாரையெல்லாமோ அதில் பிணைத்து வைத்திருந்தனர். அறைந்து வைத்திருப்பது மோகினிகளையா அல்லது ரக்ஷஸுகளையா என்பதை பிரஸ்னம் பார்த்தால் தெரிந்து கொள்ள முடியும்.

வாசுதேவன் நம்பூதிரி முன்புறமாகக் காலெடுத்து நடக்க முற்பட்டபோது மரத்திலிருந்த மொத்த இலைகளும் ஒரு தடவை

குலுங்கி அசைந்தன. கண்ணாடித் துண்டுகளைக் குலுக்கியது போன்ற ஒரு சத்தம். ஆழ்ந்த அமைதிக்கு நடுவே எழுந்த அந்தச் சத்தம் எப்படிப்பட்டவரையும் ஒருகணம் பயமுறுத்தவே செய்யும். இருளில் பிரமாண்டமாக உயர்ந்து, படர்ந்து பரவியிருக்கும் ஆலமரத்தை ஒரு தடவை மேலும் கீழும் பார்த்துவிட்டு அவர் பாட்டுக்கு நடக்கத் தொடங்கினார்.

சட்டென்று ஒட்டுமொத்தமாக ஓர் ஆயிரம் சுவர்க் கோழிகளின் கூச்சல் உயர்ந்தது. யாரோ அவற்றை இருப்பிடத்திலிருந்து கிளப்பி விட்டதைப் போலிருந்தது அவை எழுப்பிய கோரக் குரல்.

வாசுதேவன் நம்பூதிரி அதைப் பொருட்படுத்தாதவராக சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்தார். சற்றுத் தூரத்தில் நட்சத்திரங்களின் அரண்ட வெளிச்சத்தில் கேட் ஒன்று தெரிந்தது. இரண்டு கேட்டுகளில் ஒன்று உட்புறமாகச் சரிந்து தாழ்ப்பாள் விலகித் தொங்கியது.

பெரிய மாளிகையின் முன்புறம் வந்து நின்றார் நம்பூதிரி. ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தார். மேல்மாடி ஜன்னல்களில் ஒன்று கொஞ்சம் திறந்திருப்பதும், அந்த இடைவெளி வழியாக மெல்லிய ஒளிக்கீற்று வெளியே எட்டிப் பார்ப்பதையும் கவனித்தார்.

மெலிதாகப் பரவத் தொடங்கியிருந்த பனிமூட்டத்துக்கு நடுவே, வெளிச்சம் ஒரு வெள்ளை நைலான் துணியின் விறைப்புடன் பொருத்தி வைத்திருப்பதுபோல் தோன்றியது.

நிலை வாசற்படியை நெருங்கியவர் கதவை மெதுவாக உட்புறம் தள்ளிப் பார்த்தார்.

அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக கதவு உட்புறமாக நகர்ந்து திறந்துகொண்டது.

உட்புறம் காலெடுத்து வைக்க முயன்ற வாசுதேவன் நம்பூதிரியின் மனத்தில் சட்டென்று ஓர் எச்சரிக்கை உணர்வு தோன்றியது! ஒருவேளை இதுவும் திட்டமிட்ட ஓர் ஏற்பாடாக இருக்குமோ? தான் உள்ளே சென்ற பிறகு...



உள்ளே வைக்கவிருந்த காலைச் சட்டென்று வெளியே எடுத்துவிட்டு முற்றத்தை அடைந்து மேற்படி ஜன்னலைப் பார்த்தார். கீழிருந்து மேல்புறமாகக் கையளவு பருமனில் வளர்ந்திருந்த கொடியொன்று தட்டுப்பட்டது. கொடியின் மேல்முனை ஜன்னலைக் கடந்து மேற்புறம் நீண்டிருந்தது.

மேற்புற ஜன்னலை அடைந்தால், இரண்டாவது தளத்தின் தரைப்பகுதியும், வெளிப்புறம் நீண்டிருக்கும் பகுதியும் தெரியும்.

அதன் மீது ஏறி நின்றால் ஜன்னல் வழியாக உட்புறத்தைப் பார்க்கலாம். எனவே, வேட்டியைத் தார்ப்பாய்ச்சிக் கட்டிக் கொண்டு, செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு, ஒரு தடவை கொடியின் வலுவைப் பரிசோதித்தவர் மேற்புறமாக ஏறத் தொடங்கினார்.

ஜன்னலை அடைவதற்குள் நம்பூதிரி மிகவும் பாடுபட வேண்டியிருந்தாலும், ஒருவழியாக அடைந்தார்.

உட்புறம் எட்டிப் பார்த்தார்.

அவர் கண்களை அவராலேயே நம்ப முடியவில்லை.

ஜன்னலை ஒட்டியிருந்த அறைப்பகுதி இருட்டாக இருந்தது. ஆனால், அதன் எதிர்ப்புற அறையின் ஒரு கதவு விரியத் திறந்து கிடந்தது. அதன் வழியாகத் தெரிந்த காட்சி வாசுதேவன் நம்பூதிரியை நடுங்க வைத்தது!

சுவரில் சாத்தி வைத்ததுபோல் ஒரு பெண் உருவம் தென்பட்டது. அதன் உடலில் எந்தவிதமான அசைவும் இல்லை. உயிரற்றதுபோல் தென்பட்டது. பிணம் ஒன்று பொம்மை மாதிரி உட்கார வைக்கப்பட்டிருந்தது.

வெகுநாளானது போல் அதன் உடலிலிருந்து தசைத் துணுக்குகள் ஆங்காங்கே உதிர்ந்திருந்தன. கோரமான முகம், வெறிக்கும் கண்கள்.

தொங்கிய உதடுகளுக்கு மத்தியில் நீண்டிருக்கும் பல்வரிசை... பின்புறமாகப் படர்ந்து கிடந்த தலைமுடி.

பைசாசிகமான அந்த உருவத்துக்கு முன்னால் எண்ணெய் விளக்கு ஒன்று எரிகிறது. அதன் ஜுவாலையில் இருந்து புகை உயர்ந்தது.

ஏதோ ஒரு மிருகத்தின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட கொழுப்பை விளக்கில் எண்ணெயாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அதன் கடுமையான நெடி மூக்கைத் துளைத்தது.

பழங்காலத்தில் தீவட்டிக் கொள்ளைக்காரர்கள், கருவில் இருக்கும் குழந்தையை எடுத்து, அதிலிருந்து நெய் தயாரித்து மாந்திரீக சக்தியால் விளக்கெரித்து, அதிலிருந்து புறப்படும் புகையால் கொள்ளையடிக்கப் போகும் வீட்டிலுள்ளவர்களை மயக்குவார்கள் என்று வாசுதேவன் நம்பூதிரி கேள்விப்பட்டிருந்தார்.

கோரமானதும் பீதியேற்படுத்தக் கூடியதுமான அந்த உருவத்துக்கு முன்னால் அதன் நேர் எதிரில் அமர்ந்து பெண்மணி ஒருத்தி மந்திரம் எதையோ உச்சரிக்கிறாள்.

அவளுக்கு முன்னால் ஹோமகுண்டம் ஒன்று இருக்க வேண்டும். அவ்வப்போது அதற்குள் எதையோ வீசி எறிந்த போது நெருப்புப் பொறிகள் உயர்ந்தன.

வாசுதேவன் நம்பூதிரியால் அதை மேற்கொண்டு பார்க்க முடியவில்லை.

சத்ருசம்ஹார ஹோமத்தில் இறந்துபோன உடம்பை மடியில் போட்டு நிர்வாணமான பெண்ணை முன்னிறுத்தி, அவளை ஏதோ ஒரு துர்தேவதையாக எண்ணி பூஜை செய்த முறையை ராவணன் பின்பற்றியதாக புராணம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தது நம்பூதிரிக்கு நினைவு வந்தது.

அதைவிட பயங்கரமான ஒரு காட்சியை வாசுதேவன் நம்பூதிரி பார்த்தார்.

நம்பூதிரி மூச்சை அடக்கிப் பிடித்தவராக நின்றிருந்தார்.

நேரம் நகர்ந்தது.



விநாடிக்கு விநாடி அந்த அறைக்குள் புகை உயர்ந்தது.

விளக்கின் திரியிலிருந்து வெள்ளை நூல் புறப்படுவது போல் புகை உயர்ந்து அது இழை இழையாகப் பிரிந்து மேற்புற மச்சின் பரப்பைத் தொட்டு உடைந்து மெதுவாகப் பரவத் தொடங்கியது.

சற்று நேரத்துக்குள் புகையின் அடர்த்தியால் அந்தப் பைசாசிக உருவம் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது.

ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு அந்தப் பிணத்தின் கண்கள் உயிர் பெற்றதைப் போல் அசையத் தொடங்கின.

கோரமான காட்சியாக இருந்தது அது!

அந்த உருவத்திடமிருந்து வெளிவந்த ஓர் உருவம் மெதுவாக... மிக மெதுவாக நகர்ந்து வந்து பூஜை செய்யும் உடலுடன் கலந்து ஒன்றியது.

பூஜை செய்யும் பெண்மணி உட்கார்ந்த இடத்திலிருந்து மெதுவாக எழுந்தாள். அவள் கையில் சங்கிலி கோத்த பித்தளை விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

புகையைக் கக்கும் அந்த விளக்கு வெளிச்சத்தில், வாசுதேவன் நம்பூதிரி, பெண்மணியின் முகத்தைப் பார்த்தார்.

அழகும், பயங்கரமும் ஒன்றிணைந்து உருவானது போன்ற ஒரு முகம்.

அவள் அந்த விளக்குடன், அவர் நிற்கும் ஜன்னலுக்கு நேராக நடந்து வருவதாக நம்பூதிரிக்குத் தோன்றியது.

## 11

'மேற்கொண்டும் அங்கே நிற்பது நல்லதல்ல!' என்று வாசுதேவன் நம்பூதிரிக்குத் தோன்றியது.

எப்படியாவது அங்கிருந்து தப்பிக்க வேண்டும் என்கிற உணர்வு மட்டுமே அவர் மனத்தில் மேலோங்கியது.

உடனே கொடியைப் பிடித்துக்கொண்டு கீழ்ப்புறமாக ஊர்ந்து இறங்கினார். எப்படியாவது தரைப்பகுதியில் கால் வைத்தால் போதுமென்றிருந்தது அவருக்கு. ஏறத்தாழ பாதித் தொலைவு வந்தவர், யதேச்சையாக மேற்புறம் பார்த்தார். அந்தப் பெண்மணி விளக்கைக் கையிலேந்தியவாறு ஜன்னலுக்கு வெளியே தலை நீட்டியிருந்தாள்.

அவள் எதையோ தேடுவதாகத் தோன்றியது.

'ஒருவேளை தன்னை கவனித்திருப்பாளோ?' என்கிற சந்தேகம் நம்பூதிரிக்குத் தோன்றியது. அவள் கையிலிருந்த விளக்கு வெளிச்சத்தில் அவள் முகம் மிகவும் குரூரமாகத் தென்பட்டது.

அப்போது அதிசயமான மற்றொரு காட்சி அவருக்குத் தட்டுப்பட்டது.

அந்தப் பெண்மணியின் உதட்டிலிருந்து ரத்தம் வழிந்தது. விளக்கைக் கையில் பிடித்தபடி அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். அந்த முகத்தில் சந்தேகக் கீற்றுகள் விழுவதை நம்பூதிரி கவனித்தார். ஒருவேளை ஜன்னலுக்கு அருகில் நின்று யாரோ வேடிக்கை பார்ப்பதாகத் தோன்றி இருக்குமோ?

கவனித்திருந்தால்... மேற்கொண்டு தன்னைப் பார்த்து விடாமல் எச்சரிக்கையுடன் மறைந்துகொள்ள வேண்டியது அவசியம் என்று கருதினார். காரணம் என்னவென்றால், தற்போதைய நிலையில் அந்தப் பெண்மணிக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்று தீர்மானிக்க முடியாது.

எனவே, தற்போது நம்மால் செய்யக்கூடிய ஒரே வேலை அங்கிருந்து தப்பிப்பது மட்டுமே என்று முடிவு செய்தார். மீறி எதையாவது செய்வதாக இருந்தாலும்கூட தான் இருக்கும் இடத்திலிருந்து உடனடியாக நகர முடியாது. எந்த ஓர் அசைவும் அந்தப் பெண்மணிக்குத் தன்னை அடையாளம் காட்டிவிடலாம்.

சட்டென்று விளக்கை ஜன்னலின் சட்டத்தில் வைத்துவிட்டு, அந்தப் பெண்மணி உட்புறமாகத் திரும்பி நடக்கத் தொடங்கினாள்.



மேற்கொண்டு அந்த ஜன்னலருகில் சென்று, தான் எதையும் கவனிக்க முடியாது என்றும் புரிந்தது. நம்பூதிரி இருளோடு இருளாக ஒண்டி நடந்தார்.

விளக்கிலிருந்து வெளிவந்த வெளிச்சம், இருண்ட அந்தப் பகுதியின் ஓர் அம்சத்தை மிகவும் மங்கலாகக் குளிப்பாட்டியது. ஒருவிதமாக அவர் கேட்டை அடைந்தார்.

அப்போதும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

தமது இல்லத்தை நோக்கி நடக்கும்போது வாசுதேவன் நம்பூதிரியின் மூளைக்குள் பதில் கிடைக்காத பல கேள்விகள் உயர்ந்து வந்தன.

அவரது இத்தனை வருட வாழ்க்கையில் இதுபோன்றதொரு காட்சிக்கு அவர் சாட்சியாக இருந்ததில்லை. மாந்திரீக வித்தையில் கேள்விப்படாத ஒன்றை இப்போது நேரில் பார்த்தார்.

பண்ணார மூலையை அடைந்த நம்பூதிரி, டார்ச்லைட்டை எரியவிட்டு ஆலமரத்தின் அடிப்பகுதியைப் பார்த்தார்.

திடுக்கிட்ட திருமேனி காலை உடனே பின்னுக்கு எடுத்து வைத்தார்.

ஆலமரத்தின் கீழ் சாத்தி வைத்திருந்த சூலத்தின் அருகில் இளம்பெண் ஒருத்தி உட்கார்ந்திருந்தாள்!

டார்ச் லைட்டை அணைத்தபோது அந்த உருவம் கண்ணுக்குத் தெரியவில்லை. ஆலமரத்தின் கீழ் மிகவும் சன்னமான இயற்கை வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சம், அவளை வெளிக்காட்டப் போதுமானதாக இல்லை.

மறுபடியும் நம்பூதிரி டார்ச் லைட் வெளிச்சத்தைப் பாய்ச்சினார். அவள் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

''யார் நீ?''திருமேனி கேட்டார்.

''சரண்யா!'' அந்த உருவம் பதிலளித்தது.

அப்படியொரு பெயரை இதற்குமுன் எங்கேயோ கேள்விப் பட்டிருப்பதாக அவருக்குத் தோன்றியது. எங்கே என்று ஞாபகம் வரவில்லை.

''எதற்காக இங்கே உட்கார்ந்திருக்கிறாய்?'' திருமேனி கேட்டார்.

''சும்மாதான், இந்த வழியாக நீங்கள் வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்!'' எந்தவிதமான தயக்கமும் இன்றி பதிலளித்தாள்.

''பரவாயில்லையே. இரண்டில் ஒன்று பார்த்து விடுவதுதான் நோக்கமா?'' நம்பூதிரி சிரித்தவாறு கேட்டார்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நான் எப்போதும் இங்கே உட்கார்ந்திருப்பது வழக்கம். நீங்கள் அந்தப் பக்கமாகப் போனதைப் பார்த்தேன்...''

''எப்படியும் திரும்பி வந்தே ஆக வேண்டும் என்று காத்திருக்கிறாயா?''

''ஆமாம்!''

''என் கூட வந்துடுறியா?''

''வரமாட்டேன். அம்மா திட்டுவாங்க!''

''யார் உன் அம்மா?''

''ஜோதிர்மயி தேவி!''

அந்தப் பெயரை அவர் அப்போதுதான் முதல் தடவையாகக் கேட்கிறார். சசிதரன் கூட இந்தப் பெயரைக் குறிப்பிட்டதாக ஞாபகமில்லை. 'யார் இந்த ஜோதிர்மயி?'

''நான் ஒண்ணு கேட்கட்டுமா? உன் அம்மா யார்?''

''ரொம்ப நாளைக்கு முன்னால் அந்த பங்களாவில் குடியிருந்தவர்!''

வாசுதேவன் குழப்பத்துக்குள்ளானார்.

தான் இப்போது நிற்பது எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் இறந்துபோன ஓர் ஆவியின் முன்பாக என்பது அவருக்குத் தெரிந்தது.



பைக்குள் கையை விட்டு, திருநீறு இருந்த பொட்டலத்தை அவிழ்த்தார். அவள் உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு முன்னால் ஓர் அரைவட்ட அளவுக்குத் திருநீறைப் போட்டார்.

''நீங்கள் இப்படியெல்லாம் செய்யக்கூடாது. நான் யாரையும் தொல்லைப்படுத்துவதில்லை. ஆனால், நீங்கள் செய்வதை எல்லாம் அம்மாவிடம் சொல்லுவேன்.''

விசித்திரமான அவள் பேச்சைக் கேட்டுத் திருமேனியின் உடம்பு குப்பென்று வியர்த்தது. அதன் பிறகு அவர் அங்கு நிற்கவில்லை.

மறுநாள் காலையிலேயே நம்பூதிரி, சசிதரனின் குவார்ட்டர்ஸை அடைந்தார்.

எதிர்பாராமல் திடுமென்று நிகழ்ந்த அப்பாவின் வரவு டாக்டரை வியப்புக்குள்ளாக்கியது.

''உன்னிடம் முக்கியமான சில விஷயங்களைச் சொல்வதற்காக வந்திருக்கிறேன். உன் நண்பன் சேதுவர்மா கூட இதைத் தெரிந்துகொள்ளலாம்!'' நம்பூதிரி கூறினார்.

''உங்கள் விருப்பப்படியே செய்கிறேன்!'' சசிதரன் பதிலளித்தார்.

காபி சாப்பிட்டுவிட்டு இருவரும் சேதுவர்மாவின் வீட்டை அடைந்தனர்.

விடிந்தும் விடியாத காலைப்பொழுதில் இருவரையும் பார்த்த சேதுவர்மா வியப்படைந்தார்.

முந்தைய இரவில் தான் கண்ட சம்பவத்தைத் திருமேனி விவரித்தார்.

இருவரும் எந்தவிதமான குறுக்கீடுமின்றி மௌனமாக அதைக் கேட்டுக்கொண்டனர்.

''மேற்கொண்டு என்ன செய்யலாம்?'' நீண்ட நேர மௌனத்துக்குப் பிறகு சசிதரன் கேட்டார்.

''அந்த ஜோதிர்மயி யார் என்று முதலில் கண்டுபிடிக்க வேண்டும்!'' நம்பூதிரி கூறினார்.

சசிதரன் யோசனையில் ஆழ்ந்தார். சட்டென்று அவர் மனத்துக்குத் தென்பட்டது சாமுவேல் ஜான்சனின் முகம்தான். ஒருவேளை அவருக்கு இதைப் பற்றி ஏதாவது தெரிந்திருக்கலாம்.

''முடிந்தால் இன்று சாயங்காலத்துக்குள்ளாகச் சொல்லி விடுகிறேன்.'' சசிதரன் உறுதியளித்தார்.

''அதைத் தெரிந்துகொண்ட பிறகுதான் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று தீர்மானிக்க முடியும்!'' நம்பூதிரி கூறினார்.

''தெரிந்து கொண்டதும் சாயங்காலமே வீட்டுக்கு வந்து சேருகிறேன் அப்பா!''சசிதரன் உறுதியளித்தார்.

வாசுதேவன் நம்பூதிரி விடைபெற்றுப் புறப்பட்டார்.

''நானும் உங்களுடன் வரட்டுமா?'' சேதுவர்மா கேட்டார்.

''வேண்டாம். அந்தப் பெண்மணி புத்திசாதுரியம் நிறைந்தவள். சாமுவேல் ஜான்சனுடன் நாம் தொடர்பு கொள்கிறோம் என்பதை அவள் தெரிந்து கொள்ளக் கூடாது!'' அன்று அவர் பேசியதையெல்லாம் கூட அங்கேயே மறந்துவிடும்படி எச்சரித்திருந்தார். எனவே, அவரும் அந்தப் பெண்மணிக்கு பயப்படுகிறார் என்று தெரிகிறது.''

''வீண் சிக்கல் எதற்கு? நீங்களே போய்விட்டு வாருங்கள் சசிதரன்!'' சேதுவர்மா கூறினார்.

அன்று மாலையில் ஆஸ்பத்திரி வேலையை முடித்துக் கொண்டு சாமுவேல் ஜான்சனின் வீட்டை நோக்கி விரைந்தார் சசிதரன்.

பண்ணார மூலைக்கு வந்தபோது தன்னையும் மீறி ஒரு தடவை ஆலமரத்தின் அடிப்புறத்தைப் பார்த்தார். முந்தைய இரவில் இளம் பெண் ஒருத்தி அங்கு தன்னந்தனியாக உட்கார்ந்திருந்தாள் என்பதை அவரால் நம்பவே முடியவில்லை.



மாலை நேரம் அப்போதுதான் தொடங்கியிருந்தது. எனினும் அந்த மரத்தின் அடிப்பரப்பு இருட்டாக இருப்பதுபோல் தோன்றியது.

அங்கிருந்த சூலத்தில் அப்போதும் சிவப்புநிறச் செந்தூரம் அப்பியிருந்தது.

தன்னுடைய வீட்டில் மறுபடியும் டாக்டர் சசிதரனைப் பார்க்க நேர்ந்த சாமுவேல் ஜான்சனுக்கு அது அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்று தோன்றியது. வரவேற்பு வார்த்தைகள் எதையும் அவர் கூறவில்லை.

''என்ன டாக்டர் திரும்பவும் வந்திருக்கிறீர்கள்?'' கடமைக்காக அவர் கேட்டதைப் போலிருந்தது.

''மன்னிக்கணும் சார், நான் வருவது உங்களுக்குப் பிடிக்கவில்லையென்று தோன்றுகிறது...'' சசிதரன் மிகவும் தாழ்ந்த குரலில் ஒரு விதத் தயக்கத்துடன் பேசினார்.

''நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள், என்று எனக்குத் தெரியும். நான் அன்றைக்கே உங்களிடம் எச்சரிக்கை செய்தேன்...'' சாமுவேல் ஜான்சன் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

''உண்மைதான் சார். ஆனால், நான் மேற்கொண்டும் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டேன். இல்லாவிட்டால், நான் உங்களைத் தொல்லைப்படுத்த வந்திருக்க மாட்டேன்''

''அவ்வளவு அவசியமான விஷயம் என்றால் சீக்கிரம் சொல்லுங்கள். இருட்டத் தொடங்கி விட்டது. இருட்ட இருட்ட அது உங்களுக்கு நல்லதல்ல!'' எச்சரிக்கைத் தொனியில் கூறினார்.

அவரது வார்த்தைகள் சசிதரனுக்குச் சற்று பயத்தை ஏற்படுத்தினாலும் நோக்கம் நிறைவேறாமல் திரும்பக் கூடாது என்பதற்காகக் கேட்கவே செய்தார்.

''நேற்று இரவு என் அப்பா, வியப்புக்குரியதும். பைசாசிகமானதுமான சில காட்சிகளைக் கண்டார். அவற்றை நான் உங்களுக்கு விளக்க விரும்பவில்லை. அப்போது ஜோதிர்மயி

என்ற ஒரு பெயரைக் கேள்விப்பட்டார். அது யார் என்று மட்டும் தெரிந்தால் போதும்."

"ஜோதிர்மயி... உங்களுக்கு எதற்கு டாக்டர் இந்த பொல்லாப்பெல்லாம்? வீணாக நீங்கள் இதிலெல்லாம் ஈடுபட்டு ஏன் மண்டையைக் குழப்பிக் கொள்கிறீர்கள்? உங்களுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்திருக்கிறது. பேசாமல் அதைப் பார்த்துக் கொண்டால் போதாதா?" தோட்டத்திலிருந்து தன்னுடைய வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார் ஜான்சன்.

"சார்... நான் சொல்வதைக் கொஞ்சம் கவனியுங்கள். நீங்கள் என்னை ஏமாற்றமடையச் செய்யக் கூடாது. இது வேறொருவரின் வாழ்க்கைப் பிரச்சினை. பாவம் அவர் ஒரு நல்ல மனிதர். அவரை அனாவசியமாக வேட்டையாடுகிறார்கள். தயவு செய்து சொல்லுங்கள்!"

"உண்மையாகவா சொல்லுகிறீர்கள்? எனக்கு இந்த விஷயம் தெரியாது. சரி வாருங்கள். நாம் வீட்டுக்குள் உட்கார்ந்து பேசலாம்." ஜான்சன் மனம் மாறினார்.

இருவரும் வரவேற்பு அறைக்கு வந்து அமர்ந்தனர்.

சசிதரன் அதுவரை தனக்குத் தெரிந்த விஷயங்களை ஜான்சனிடம் கூறினார். அவர் எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டார்.

"நீங்கள் கேட்ட ஜோதிர்மயி என்பவள் எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் அந்த பங்களாவில் குடியிருந்தவள்..." கடைசியில் சாமுவேல் ஜான்சன் பேசத் தொடங்கினார்.

"அதுவும் கேள்விப்பட்ட செய்தி மட்டும்தான். ஒருவேளை உண்மையாகவோ பொய்யாகவோ இருக்கலாம். நீங்கள் குறிப்பிட்ட ஜோதிர்மயிக்கு இந்தப் பகுதியிலுள்ள ஜனங்கள் எல்லாருமே பயப்பட்டார்கள். அவள் ஒரு மந்திரவாதினிகூட. ஒருவேளை அங்கு கிடந்த எலும்புக்கூடுகள் அவளது படைப்பாக இருக்கலாம்."

"அப்படியானால் என் அப்பா பார்த்ததாகக் குறிப்பிட்ட தெளிவற்ற உருவம்?"



"அதுதான் ஜோதிர்மயியாக இருக்க வேண்டும்..." ஜான்சன் கூறினார்.

"ஒரே ஒரு சந்தேகம். ஏற்கெனவே அந்த பங்களாவில் ஒரு மந்திரவாதினி இருந்ததாகக் குறிப்பிட்டீர்களே?"

"ஆமாம், அதன் அடையாளம் தான் பண்ணார எல்லையிலுள்ள ஆலமரத்தின் அடிப்பகுதி!"

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் முந்தைய மந்திரவாதினி யின் மறுபிறப்புதான் ஜோதிர்மயியாக இருக்குமோ?"

டாக்டர் சசிதரனின் அந்தக் கேள்வி ஜான்சனைத் திக்கு முக்காட வைத்தது. அப்படியொரு கோணத்தில் அவர் இதுவரை யோசித்ததே இல்லை!

"ஆகா... அப்படியிருந்தால்..." ஜான்சன் தன் தலையில் கைவைத்து உட்கார்ந்தார்.

"இப்போதைய சூழ்நிலையைப் பார்க்கும்போது சசிதரனின் கேள்வி ஒருவகையில் நியாயமானது என்று தோன்றியது. அதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

"ஜன்மங்களைக் கடந்து வாழும் ஒரு சக்தியாக ஜோதிர்மயி இருப்பாளானால், அந்த ஜோதிர்மயியையே ஆவாஹித்து அதிசயமான சம்பவங்கள் பலவற்றைப் படைக்க முடிந்த ரத்ன பிரபாதேவி, ஜோதிர்மயியைவிட அதிகமான சக்தி வாய்ந்தவள் என்பதும் உண்மைதான்."

கடிகாரத்தில் மணி எட்டு அடித்தது.

சுற்றுப்புறம் இருளில் மூழ்கியிருந்தது.

சட்டென்று ஏதோ சிறகடிக்கும் ஓசை கேட்டது. சாமுவேல் ஜான்சன் திரும்பிப் பார்த்தார்.

வரவேற்பறையின் மூலையில் உலர்த்தப்பட்டு வார்னீஷ் போட்டிருந்த காபிச் செடியின் கிளையில் அமர்ந்திருந்த பறவை திடுமென்று தரையில் விழுந்தது. விரைந்து சென்ற ஜான்சன் அந்தப் பறவையைக் கையில் எடுத்தார்.

மருந்து சீசா ஒன்றை அவசர அவசரமாகத் திறந்து இங் ஃபில்லர் மூலமாக ஓரிரு சொட்டுகளை அதன் வாயில் விட்டார். மதுவின் நெடி அந்த அறைக்குள் பரவியது.

"என்ன நடந்தது சார்?" டாக்டர் கேட்டார்.

"என்னவோ தெரியவில்லை. இது இப்படி விழுவது இதுதான் முதல் தடவை. அதன் வாயில் இரண்டு சொட்டு பிராந்தி ஊற்றியிருக்கிறேன். பார்க்கலாம்." என்றவாறு பறவையை முன் புறத்திலிருந்த டீப்பாயில் விட்டார். அது சரிந்து விழுந்து கால்களைப் போட்டு அடித்துக் கொண்டது.

சாமுவேல் திகைப்பு அடைந்தவராக டாக்டர் சசிதரனைப் பார்த்தார்.

"பறவைக்கு ஏதாவது ஆபத்தா சார்?"

"ஒன்றும் புரியவில்லை?" அசைவற்றுப் போன பறவையைக் கையில் எடுத்துப் பரிசோதித்த ஜான்சன் பேசினார்.

சசிதரன் பறவையை அவரிடமிருந்து வாங்கினார். அதன் மார்புப் பகுதியில் விரலை மென்மையாக வைத்துப் பார்த்தார். அவர் முகத்தில் ஏமாற்றத்தின் திரைகள் படிந்தன. பறவையை என்ன செய்வதென்று தெரியாமல் அப்படியே கையில் வைத்துக் கொண்டிருந்தார்.

"இப்படிக் கொடுங்கள்... இது தாங்க முடியாத ஒரு நஷ்டம். நான் இதை ஸ்டஃப் செய்து வைக்கவேண்டும் - நினைவுச் சின்னமாக." ஜான்சனின் கண்களில் நீர்த் திரையிட்டது.

டாக்டர் சசிதரனுக்கு அது ஒரு சாதாரண சம்பவமாகத் தெரியவில்லை. ஏதோ ஒன்றின் முன்னறிவிப்பு போலத் தோன்றியது.

"டாக்டர், இது ஒரு சாதாரண நிகழ்ச்சிதான். இந்த எல்லைக்குள் ஒரு பறவை பாதிக்கப்படுவது இதுதான் முதல் தடவை. இதன் பின்னணியில் ஏதோ ஒன்று இருப்பதாகத் தோன்றுகிறது." ஜான்சன் பறவையைப் பதப்படுத்தும் நோக்கத்துடன் கத்தியைக் கையில் எடுத்தவாறு கூறினார்.



அப்போது அதிசயமான காட்சி ஒன்றை டாக்டர் கவனித்தார்.

அந்தக் கத்தியில் ரத்தம்!

"இதைப் பார்த்தீர்களா?" டாக்டர் சுட்டிக் காட்டினார்.

ரத்தக் கறையைப் பார்த்தவுடன் ஜான்சன் கத்தியைச் சட்டென்று தரையில் போட்டார்.

"இப்போது புரிந்ததா? மேற்கொண்டு நான் எதையும் பேசத் தேவையில்லை. நீங்கள் இனிமேல் என்னைப் பார்க்க வராதீர்கள்! ஒருவேளை தவிர்க்க முடியாமல் வர நேர்ந்தாலும் அந்த பங்களாவைப் பற்றி எதையும் கேட்காதீர்கள். இதை அவ்வளவு சாதாரணமாக நினைக்காதீர்கள். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்." அதுவரை அமைதியுடனிருந்த ஜான்சனின் முக உணர்ச்சிகள் சட்டென்று மாற்றமடைந்தன.

டாக்டர் சசிதரன் மௌனமாக அங்கிருந்து எழுந்தார்.

"உங்கள் மீதுள்ள மதிப்பால், அன்பினால் நான் ஒன்று சொல்லட்டும்மா? மேற்கொண்டு நீங்கள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடாதீர்கள். தவிர்க்க முடியவில்லை என்றால் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள்!" ஒரு பெருமூச்சுடன் எச்சரிக்கை செய்தார் ஜான்சன்.

சசிதரன் காரை ஸ்டார்ட் செய்தார்.

பண்ணார மூலை சென்றுதான் காரை மெயின் ரோட்டுப் பக்கம் திருப்ப வேண்டும். அதை நினைத்தபோது சசிதரனுக்கு என்னவோ போலிருந்தது.

இருப்பினும் போகாமலிருக்க முடியாதே. மற்றொரு வழி நேராகக் கிழக்குத் திசையில் சென்று ஏறத்தாழ ஐந்து கிலோ மீட்டர் சென்று மெயின்ரோட்டை அடைய வேண்டும். ஆனால், அந்தப் பாதையும் மிகமோசமானது. வழியில் மரத்தாலான பலவீனமான பாலம் ஒன்று இருந்தது.

எனவே, காரை வலதுபுறமாகத் திருப்பினார். எங்கும் இருள் பரவியிருந்தது.

காரின் முன்புற ஹெட்லைட் வெளிச்சம், ஒரு குகையை ஊடுருவுவது போல் முன்புறமாகப் பாய்ந்தது. சசிதரனின் கால் ஆக்ஸிலேட்டரை அழுத்தியது. எதைப் பார்க்க நேர்ந்தாலும் காரை நிறுத்துவதில்லை என்று தீர்மானித்திருந்தார்.

கார், பண்ணார மூலையை அடைந்தது.

அவரையும் மீறி சட்டென்று அந்தப் பக்கமாகப் பார்த்தார்.

அதே நொடியில் எதிர்பாராத விதமாக கார் அப்படியே நகராமல் நின்றது.

டாக்டர் சசிதரன் லைட்டுகளை அணைத்துவிட்டு சுவிட்ச் கீயைத் திருப்பினார்.

## 12

**சா**தாரணமாக ஒரு தடவை லேசாகத் திருகினாலே ஸ்டார்ட் ஆகிவிடும் கார், அன்று உயிரற்றுப் போனது போல் உறுமக்கூட இல்லை. பாட்டரியுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதுபோல் கார் மௌனமாக நின்றுவிட்டது. ஆனால், பார்க்லைட் மட்டும் எரிந்தது.

டாக்டர் சசிதரன் பார்க் லைட்டையும் ஆஃப் செய்துவிட்டு செல்ப் கொடுத்துப் பார்த்தார். ம்... ஹூம்! எந்த விதமான பிரயோஜனமும் கிடையாது.

டாக்டர் சசிதரனின் இதயத் துடிப்பு அதிகரித்தது.

சுற்றிலும் காரிருள் சூழ்ந்திருந்தது. எந்த ஓர் இரவுப் பறவையும் குரல் கொடுக்கவில்லை. ஆலமரத்தின் இலைகள் கூட அமைதி காத்தன.

பானட்டின் லிவரை உயர்த்திய சசிதரன், டாஷ் போர்டிலிருந்து டார்ச் லைட்டை எடுத்துக்கொண்டு காரிலிருந்து இறங்கினார்.

பானட்டை உயர்த்தினார்.



இன்ஜினின் வெளிப்புற வொயர் இணைப்புகளை ஒரு தடவை அழுத்திச் சோதனை செய்தார். பாட்டரி வொயர்களைப் பரிசோதித்தார்.

அப்போது யாரோ நடந்து நெருங்கும் மென்மையான சத்தம் கேட்டது.

"யாரது?" மெல்லிய திடுக்கிடலுடன் டாக்டர் கேட்டார்.

"நான்தான்... வண்டி நின்னு போயிடுச்சா?" முன்பின் கேட்டறியாத ஒரு பெண் குரல்!

டாக்டர் சசிதரன் மெய்சிலிர்த்தார்.

ஆள் யாரென்று பார்ப்பதற்காகக் குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினார்.

இளம் பெண் ஒருத்தி நின்றிருந்தாள்.

கறுத்த புடவையும் அதற்கு மேட்ச்சாக கறுப்புநிற ரவிக்கையும் அணிந்திருந்தாள். கழுத்தில் வைரக்கற்கள் பதித்த சங்கிலி ஒன்று கிடந்தது. டார்ச் லைட் ஒளியில் சங்கிலியிலிருந்த கற்கள் பாம்பின் உடல்போல் பளபளத்தன.

"எங்கிருந்து வருகிறாய்? யார் நீ?" சசிதரன் தைரியத்தை வரவழைத்தபடி கேட்டார்.

"நான் பக்கத்தில் குடியிருப்பவள். என்னை நீங்கள் ஏற்கெனவே பார்த்திருக்கிறீர்களே... மறந்து விட்டீர்களா?" அவள் கேட்டாள்.

டார்ச்லைட் வெளிச்சம் அவள் முகத்தில் விழாமல் இருந்தது. அவள் கழுத்தின் மேற்பகுதியில் லைட்டின் ஒளிவட்டத்தை உயர்த்த சசிதரன் முயன்றார்.

"ஆமாம் ஞாபகம் வந்துவிட்டது!"

அன்று ரத்னபிரபாவின் வீட்டில் தக்காளி ஜூஸ் எடுத்து வந்தவள்.

"பெயர் சரண்யா... இப்போது ஞாபகம் வந்திருக்குமே! இங்கு எதற்காக வந்தீர்கள்?"

அதைக் கேட்டவுடன் டாக்டர் சசிதரனின் ரோமக்கால்கள் ஒவ்வொன்றிலிருந்தும் வியர்வைத் துளிகள் அரும்பின.

''கடவுளே!'' தன்னையும் மீறி சசிதரனின் வாயிலிருந்து சத்தம் உயர்ந்தது.

''அப்படி எங்கும் வந்ததாகச் சொல்ல முடியாது. நோயாளி ஒருவரைக் கவனிக்க வந்தேன். வழி தவறி இந்தப் பக்கம் வந்துவிட்டேன்.''

''பொய் சொல்கிறீர்கள். அந்தப் பறவைக்கார ஆசாரி சாமுவேலின் வீட்டுக்குப் போய்விட்டு வருகிறீர்கள் இல்லையா? அவர் சொன்னதையெல்லாம் நானும் கேட்டேன். உங்கள் காருக்கு எந்த விதமான ரிப்பேரும் கிடையாது. நான் வரட்டுமா?'' அவள் திரும்பி நடக்கத் தொடங்கி, இருளில் கலந்ததுபோல் மறைந்தாள்.

அவள் போன திசையில் டாக்டர் சசிதரன் டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தார். ஆனால், ஒன்றும் தெரியவில்லை.

பானட்டை மூடிவிட்டு காருக்குள் உட்கார்ந்தார். சாவியைத் திருப்பியவுடன் இன்ஜின் உயிர் பெற்றது.

இதயத்திலிருந்து ஒரு பெரிய சுமை இறங்கியதுபோல் டாக்டருக்குத் தோன்றியது. கார் விரைவுடன் நகர்ந்தது. அதன் பிறகு கார் வந்து நின்ற இடம், சேதுவர்மாவின் வீட்டின் முன்புறம். நடந்த சம்பவங்களை சேதுவர்மாவிடம் விவரித்தார் சசிதரன்.

''அப்பா, அவளை அந்த இடத்தில் பார்த்தபோது ஜோதிர்மயியின் மகள் என்று சொல்லியிருக்கிறாள். ஆனால், என்னிடம் ரத்னபிரபாவின் மகள் சரண்யா என்று சொல்லி இருக்கிறாள். இரண்டும் ஒரே பெண்ணாகவே இருக்க வேண்டும்... அப்படியிருந்தால்...''

''இரண்டும் ஒரே பெண்தானா? என்னால் அப்படி நம்ப முடியவில்லை. எதற்கும் உங்கள் அப்பாவைப் பார்த்து விடுவது நல்லது.'' சேதுவர்மா கூறினார்.

''சரி அப்படியே செய்யலாம்.'' சசிதரன் எழுந்தார்.



அன்றைய இரவில் சசிதரனால் உறங்க முடியவில்லை. கண்ணுக்குள் அந்தப் பெண்ணின் உருவம் அடிக்கடி தோன்றியது.

இயற்கைக்கு மாறான சம்பவங்கள்!

மறுநாள் சசிதரனுக்கு ஆஃப் அது மட்டுமின்றி, அன்றைய தினத்துக்கு ஒரு பிரத்தியேகத் தன்மையும் இருந்தது.

அன்றுதான் ரத்னபிரபாதேவி ஏற்பாடு செய்துள்ள ஃபாஷன் பரேடு நடக்கவிருக்கிறது. அதற்கும் போக வேண்டியிருந்தது.

டாக்டர் இந்திராபாயும் அந்த விழாவுக்கு வருவதாகக் கூறியிருந்தாள்.

காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டதும் காரில் ஏறிக் கிளம்பினார் சசிதரன்.

கார் தெருவாசற்படியை நெருங்க முடியாததால் சற்று முன்பாகவே இறங்கி நடந்தார்.

சசிதரன் இந்த நேரத்தில் வருவார் என்று வாசுதேவன் நம்பூதிரி எதிர்ப்பார்க்கவே இல்லை. அவர் சில பழைய மாந்திரீக லைவச் சுவடிகளைப் புரட்டிக்கொண்டிருந்தார். பனையோலைத் துண்டுகளில் எழுதப்பட்டிருந்த அவை, புகை படிந்தாற்போல் கருமையடைந்திருந்தன.

''குறிப்பிடத்தக்க சேதி ஏதாவது உண்டா?'' வாசுதேவன் நம்பூதிரி, மகனிடம் கேட்டார்.

''இருக்கிறது அப்பா. அதனால்தான் காலையிலேயே கிளம்பி வந்தேன்.'' சசிதரன் வராந்தாவில் கிடந்த தடுக்குப் பாயை எடுத்துப் போட்டு உட்கார்ந்தார்.

அந்தப் பரம்பரை வீட்டின் நடைமுறைகளுக்கு இப்போதும் பெரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. அந்த வீட்டிலேயே நம்பூதிரி ஒருவர் மட்டும்தான் சாய்வு நாற்காலியில் படுப்பார்.

நடந்த சம்பவங்களை சசிதரன் விவரித்தார். எல்லாவற்றையும் கவனத்துடன் கேட்ட வாசுதேவன் நம்பூதிரி, சுவடியை

எடுத்து நாலைந்து இதழ்களைத் தள்ளிவிட்டு அதிலிருந்த வரிகளின் மீது கண்களை ஓட்டினார்.

பிறகு அதை மடக்கி மூடி வைத்துவிட்டுப் பேசத் தொடங்கினார்: "சசி, எனக்குச் சில புதிய விஷயங்கள் தெரிய வந்திருக்கிறது. இந்தச் சுவடிகள் எல்லாம் தாத்தாவின் பெட்டியில் இருந்தவை. இதில் சொல்லியிருப்பதை வைத்துப் பார்த்தால் உடலைவிட்டுப் பிரிந்த ஆவிகள் பிரேதாத்மாக்கள் தலைமுறைகளைத் தாண்டி மனிதர்களின் கூடவே வாழ்கின்றன. அப்படிப்பட்டவற்றை ஆவாஹம் செய்து நம் உடம்புக்குள் தங்க வைத்தால், அவற்றைப் போலவே நம்மாலும் அமானுஷிகமான செயல்களைச் செய்ய முடியும்..."

"நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால்..." சசிதரன் அப்பாவைப் பார்த்தார்.

"ரொம்ப நாளைக்கு முன்பாக அங்கு ஒரு நம்பூதிரியின் இல்லம் இருந்ததாகச் சொன்னாயே, ஞாபகமிருக்கிறதா? அங்கு வசித்திருந்த துர்மந்திரவாதினியின் ஆவிதான் ஜோதிர்மயி தேவிக்குள் இருக்க வேண்டும். அதுதான் இப்போது ரத்னபிரபாதேவியின் உடம்பிலும் புகுந்திருக்க வேண்டும்."

"அப்படியானால், அந்தப் பெண்மணி அசாதாரண சக்திகள் கைவரப் பெற்றிருப்பவள் அப்படித்தானே?" சசிதரன் கேட்டார்.

"ஆமாம்... தனக்குள் அந்தச் சக்தியைத் தக்க வைப்பதற்காக அந்தப் பெண்மணி ஜோதிர்மயிதேவியின் பிணத்துக்கு முன்பாக நரபலி நடத்துகிறாள் என்று பொருள். அதனால்தான் பிறந்த குழந்தைகள் காணாமல் போகின்றன என்று தோன்றுகிறது."

"அப்படியா சொல்கிறீர்கள்?" சசிதரன் வியப்பு அடைந்தவராகக் கேட்டார்.

'இந்த நிலை தொடர்ந்தால் நிலைமை என்ன ஆவது' என்று ஒரு கணம் யோசித்தார்.

"இன்னும் சில நாட்களுக்குப் பிறகு ரத்னபிரபாதேவியே நேரடியாக இந்த பலிகளைக் கோருவாள். சுருக்கமாகச் சொன்னால் அந்தப் பெண்மணி மனித ரத்தத்தைப் பருகுவாள்."



சசிதரன் திடுக்கிட்டார்.

"இதற்கு என்ன செய்வது?" சசிதரன் கேட்டார்.

"நான் ஒரு வழி சொல்கிறேன். அதை நீ செய்தால் சரியாகாது. ஒரு க்ஷத்திரியர்தான் செய்ய வேண்டும். அவர் திருமணமாகாதவராகவும் இருக்க வேண்டும். டாக்டர் சேதுவர்மா இதற்குப் பொருத்தமானவர். அதுவுமில்லாமல் இந்தப் பிரச்சினை அவர் சம்பந்தப்பட்டதும் கூட."

அப்பா என்ன சொல்ல வருகிறார் என்பதை அறியும் ஆவலுடன் அவரையே பார்த்தார் சசிதரன்.

"இதிலுள்ள ஒரு சுவடியில் பழைய கோவிலகம் ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கண்ணூர் நகரின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த ஒரு ராஜ குடும்பத்துக்கு சொந்தமானது அது. குறிப்பாகச் சொல்வதானால் பையன்னூருக்கு அருகில் உள்ளது. ஒரு கிராமப் பகுதி. அங்கு ஒரு சிறிய அரண்மனை உண்டு. விஷ்ணுபிரியா தேவி என்பவர் இன்னும் உயிருடன் வசிக்கிறார். அவரிடம் மிகப் பெரிய அளவுக்கு மாந்திரீக சக்திகள் உள்ளன!" வாசுதேவன் நம்பூதிரி கூறினார்.

"அந்தச் சுவடியில் குறிப்பிட்டுள்ளது மாதிரி, இந்தப் பெண்மணி இப்போதும் உயிருடன் இருக்கிறாரா என்ன?" சசிதரன் கேட்டார்.

"அதைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. அங்கு போன பிறகுதான் தெரிந்து கொள்ள முடியும்." நம்பூதிரி சொன்னார்.

"அப்படியே செய்யலாம்!" சசிதரன் ஒப்புக்கொண்டார்.

உடனடியாக இந்தச் செய்தியைச் சேதுவர்மாவிடம் தெரிவிக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் சசிதரன் எழுந்தார்.

"சசிதரா, சாப்பிட்ட பிறகு புறப்பட்டால் போதாதா?" அம்மா கதவுக்குப் பின்னாலிருந்து கேட்டார்.

"நாளைக்குச் சாயந்தரம் நிர்மலாவையும் அழைத்துக் கொண்டு வருகிறேன் அம்மா!"சசிதரன் கூறினார்.

அன்று மாலையில் அழகுப் போட்டிக்குப் போக வேண்டி இருந்ததால் சசிதரன் அப்படிக் கூறினார்.

வாசுதேவன் நம்பூதிரி சொன்ன விவரங்களை சசிதரன் சேதுவர்மாவிடம் தெரிவித்தார்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்ட சேதுவர்மா அந்த இடத்துக்குப் போகத் தீர்மானித்தார். வாழ்க்கையின் பெரும் பான்மையான பகுதியைப் பட்டணத்திலேயே செலவழித்த சேதுவர்மாவுக்கு, கிராமம் என்ற பெயரே ஓர் ஆறுதலாகத் தெரிந்தது.

"ஒரு மாத விடுமுறை கேட்டு விண்ணப்பம் கொடுத்துவிட வேண்டியதுதான்." சேது கூறினார்.

"நல்ல விஷயம். இன்று மாலையில் ஃபாஷன் பரேடு இருப்பதை மறந்து விடாதீர்கள்."

"மறக்கவில்லை... புறப்பட வேண்டியதுதான்." சேதுவர்மா பேசி முடிப்பதற்காகக் காத்திருந்த மாதிரி போன் மணியடித்தது.

எதிர்முனையில் இந்திராபாயின் குரல் கேட்டது. மாலையில் நடைபெறும் அழகிப் போட்டிக்குத் தானும் வருவதை ஞாபகப் படுத்தினாள்.

விழா மண்டபத்தில் இருக்கைகள் நிரம்பி வழிந்தன. குறைந்த பட்சம் ஆயிரம் பேர் இருக்கலாம். ரத்னபிரபா தேவிக்கு மனிதர்கள் மத்தியில் இந்த அளவுக்கு செல்வாக்கு இருப்பதை டாக்டர்கள் இப்போதுதான் தெரிந்து கொண்டனர்.

"இது என்ன?" இந்திராபாய் பிளாஸ்டிக் கவரில் போட்டு மூடி வைத்திருந்த பொருளைச் சுட்டிக்காட்டி சசிதரன் கேட்டார்.

"சொல்கிறேன். முதலில் அழகிப் போட்டி ஆரம்பமாகட்டும்." இந்திராபாய் பதிலளித்தாள்.

அறிவிப்பைத் தொடர்ந்து, இனிமையான மேல் நாட்டு இசை மண்டபத்தை நிறைத்தது.



சற்று நேரத்துக்குள் அழகான இளம்பெண் ஒருத்தி மேடையில் தோன்றினாள். தன் உடலின் வளைவு நெளிவுகளை லலிதமான போஸ்களில் நின்று சபையோர் முன் காட்டினாள்.

முன்புறக் கூட்டத்திலிருந்து ஒரே சமயத்தில் பல கேமிராக்கள் மின்னிட்டன. அப்போது இந்திராபாய் பிளாஸ்டிக் கவரிலிருந்து கேமிரா ஒன்றை வெளியே எடுத்தாள்.

ஆட்டோமாட்டிக் ஃபோகஸ் வசதியுள்ள அந்த கேமரா ஒரு தடவை மேடைமீது ஒளியைக் கக்கிக் கண் மூடியது.

குறிப்பிட்ட இடைவெளிகளில் அழகான இளம்பெண்கள் ஒவ்வொருவராக மேடைக்கு வந்தனர்.

ஒவ்வொரு தடவையும் கேமராக்களிலிருந்து ஃப்ளாஷ் வெளிச்சம் மேடையை நோக்கிப் பாய்ந்தது.

"அதோ சரண்யா..." சேதுவர்மா சசிதரனிடம் மெதுவான குரலில் பேசினார்.

"அந்தப் பெண்ணை மட்டும் இரண்டு மூன்று படங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்..." சசிதரன் கூறினார்.

அதேபோல் இந்திராபாய், சரண்யாவை மூன்று படங்கள் எடுத்தாள்.

ஏறத்தாழ முப்பது பெண்கள் வந்து போன பிறகு அழகுப் போட்டி நிறைவு பெற்றது.

அதைத் தொடர்ந்து நடைபெறவிருந்த கலை நிகழ்ச்சிகளைப் பார்க்க அதிகமானவர்கள் விரும்பவில்லை என்று தோன்றியது. கூட்டம் மெதுவாகக் கலையத் தொடங்கியது.

மூன்று டாக்டர்களும் அங்கிருந்து வெளியேறினர்.

மறுநாள் மாலை சுமார் ஏழு மணியளவில் இந்திராபாய் தனது ஹேண்ட்பேகைத் திறந்தபடியே கூறினார்: "படங்களைக் கொண்டு வந்திருக்கிறேன்."

"என்ன, விசேஷமான செய்தி ஏதாவது உண்டா?" சேதுவர்மா கேட்டார்.

''சொல்கிறேன்!''

சேதுவர்மா, டாக்டர் சசிதரனை அழைத்து வந்தார்.

''ஹலோ டாக்டர்!'' சசிதரன் இந்திராபாயை நோக்கிச் சிரித்தபடி கூறினார்.

''நேற்று எடுத்த போட்டோக்கள் கிடைத்து விட்டன.'' இந்திராபாய் ஒரு கவரை வெளியே எடுத்தாள்.

''பாருங்கள்!'' என்றபடி அதை டாக்டர் சேதுவர்மாவின் கையில் கொடுத்தாள்.

சேதுவர்மா கவரைப் பிரித்து ஒவ்வொரு புகைப்படமாகப் பார்த்தார். திரும்பவும் ஒரு தடவை அவற்றைப் புரட்டிப் பார்த்தார்.

''சரண்யாவின் படத்தைக் காணோமே!''சேதுவர்மா குழப்பத்துடன் கேட்டார்.

''அதுதான் ஆச்சரியமான விஷயம்!'' இந்திராபாய் போட்டோக்களை அவரிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டாள்.

''இதோ பாருங்கள்... இதுதான் சரண்யாவின் போட்டோ!'' போட்டோக்களின் நடுவிலிருந்து உருவிய ஒன்றை சேதுவர்மாவிடம் நீட்டினாள் இந்திராபாய்.

''இல்லையே... இது வேறு யாரோ ஒரு பெண்ணல்லவா?'' சேதுவர்மா மறுப்பது போல் தலையாட்டினார்.

''எனக்கும் இதே சந்தேகம் ஏற்பட்டது. அதனால்தான் சரண்யாவின் போட்டோவை மட்டும் மூன்று வெவ்வேறு போஸ்களில் எடுத்தேன். வேறு யாரையும் நான் மூன்று படங்கள் எடுக்கவில்லை! இப்போது என்ன சொல்கிறீர்கள்?'' இந்திராபாய் கேட்டாள்.

''நடப்பதெல்லாம் எனக்கு ஆச்சரியமாகத் தோன்றுகிறது. அப்படியானால் நாம் இதுவரை பார்த்த சரண்யா?'' இந்திராபாய் தனக்குத்தானே முணுமுணுப்பதுபோல் பேசிக் கொண்டாள்.

''நீங்கள் பார்த்தது சரண்யாவின் மற்றொரு வடிவம். அதாவது அவளுக்குள் குடியிருக்கும் ஆவியின் உருவம்.



போட்டோ உண்மையான வடிவத்தையே காட்டும்'' இந்திராபாய் கூறினாள்.

''அப்படியானால் அந்தப் பெண்...?'' சசிதரன் கேட்டார்.

''ரத்னபிரபா தேவி தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள, எங்கிருந்தாவது அந்த உடம்பைக் கைப்பற்றி இருக்கலாம்!''

சேதுவர்மாவுக்கு இதெல்லாம் புதிய செய்தியாக இருந்தன.

''ரத்னபிரபாவுக்கு வேறொரு முகம் இருக்கலாம் என்று தோன்றுகிறது. அதை நாம் பார்த்திருக்க மாட்டோம். இதுவரை நாம் பார்த்திருப்பதும் தெரிந்து கொண்டிருப்பதும் அவர் கைப்பற்றியுள்ள மாந்திரீக சக்தியைத்தான். டாக்டர் சசிதரனின் அப்பா ஒருவேளை அந்த மற்றொரு வடிவத்தைப் பார்த்திருக் கலாம்.'' இந்திராபாய் கூறியதும் டாக்டர் சசிதரனும் சேதுவர்மாவும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

இரவு நேரத்தில் வாசுதேவன் நம்பூதிரி அந்த பங்களாவுக்குச் சென்ற விவரத்தை அவர்கள் இருவரும் இந்திராபாயிடம் சொல்லவில்லை.

'இந்திராபாய்க்கு வேறு எப்படி இது தெரிந்திருக்கும்?' மற்ற இருவர் மனத்திலும் அது ஒரு நிலையான கேள்வியாக இடம் பெற்றது.

'' சரி... நான் புறப்படுகிறேன். டாக்டர்!'' இந்திராபாய் டாக்டர் சசிதரனைப் பார்த்துக் கூறியபடி எழுந்தாள்.

கடிகாரம் மணி எட்டரை என்று காட்டியது.

''நாங்கள் யாராவது துணைக்கு வரட்டுமா டாக்டர்? கேள்வியே வேண்டாம். நான் வருகிறேன். ஆட்டோவில் திரும்பிவிடுகிறேன். நீங்கள் தனியாகப் போவது நல்லதாகத் தோன்றவில்லை!'' சசிதரன் பிடிவாதமாகக் கூறினார்.

''அதற்கு அவசியமே இல்லை. நான் தனியாகவே போகிறேன்.'' கார்ச்சாவி இருந்த வளையத்தை விரலில் போட்டுச் சுழற்றியபடி நடந்தாள் இந்திராபாய்.

கார் புறப்பட்டது.

காரின் பின்புறச் சிவப்பு விளக்குகள் வளைவில் திரும்பி மறைந்தன.

"எனக்கென்னவோ பயமாக இருக்கிறது!" சேதுவர்மா கூறினார்.

"சரிதான். இந்த நேரத்தில் நாம் அவரைத் தனியாக அனுப்பியிருக்கக் கூடாது!" சசிதரன் எங்கோ தொலைவில் பார்த்தபடி பேசினார்.

"விஷ்ணுப்ரியா தேவியை சந்தித்தால் எல்லாவற்றுக்கும் பரிகாரம் கிடைக்குமென்று அப்பா சொன்னதால், ஓரளவு நிம்மதி தோன்றுகிறது. அதைத் தவிர வேறு வழி ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை!" சேதுவர்மா பெருமூச்சு விட்டபடி பேசினார்.

"உண்மைதான். இப்படிப்பட்டவர்களைத் துப்பாக்கியால் கூடச் சுடமுடியாது. அவர்களை நோக்கிச் சுட்டால் ஒன்று துப்பாக்கிக்குண்டு நம்மீதே திரும்பிப் பாயலாம். அல்லது ஒரு பூவைப் பிடித்து வீசியெறியும் லாகவத்துடன் எதிராளி அதைச் சுலபமாகப் பிடித்து எறிந்துவிடுவார்."

"பையனுருக்கு என்றைக்குப் புறப்படப் போகிறீர்கள்?" சசிதரன் கேட்டார்.

"வருகிற வெள்ளிக்கிழமையன்று. விஷயம் ரகசியமாக இருக்கட்டும்."

"அதுதான் நல்லது!"

டாக்டர் இந்திராபாய் பயணம் செய் கார் மெயின் ரோட்டை அடைந்ததும் சட்டென்று நின்றுவிட்டது. ஏதோ இயந்திரக் கோளாறு என்று நினைத்த இந்திராபாய் டார்ச் லைட்டுடன் காரிலிருந்து இறங்கினாள் பானட்டைத் திறந்தாள்.

ஓரளவுக்கு அத்தியாவசியமான கார் சம்பந்தமான அறிவு அவளுக்கு உண்டு.



காயல் வொயர்கள் விலகியிருப்பதை கவனித்தாள். சரியாகப் பொருத்திவிட்டு மறுபடி இன்ஜினை ஸ்டார்ட் செய்தாள்.

அதே நேரம் தெருவிளக்குகள் அணைந்தன.

கிழக்குப்புறப் பாதையில் திரும்பி மரக்கூட்டங்களுக்கு இடையில் கார் விரைந்தது.

சட்டென்று பானட்டில் எதுவோ ஒன்று இருப்பதாகத் தோன்றியது.

தொடர்ந்து ஏற்பட்ட மின்னலில் அது அவளுக்குத் தெளிவாகத் தெரியவும் செய்தது.

ஒரு பெண்மணியின் தலை!

அந்தத் தலையின் கண்கள் இந்திராபாயை முறைப்பதாகத் தோன்றியது. அவிழ்ந்து கிடந்த அதன் கூந்தல் பானட்டின் மேல்புறத்தை முழுவதுமாக மூடியிருந்தது.

இந்திராபாயின் கால், அவளையும் மீறி பிரேக்கை அழுத்தியது!

## 13

ஒரு குலுக்கலுடன் கார் நின்றது.

அந்தக் குலுக்கலிலேயே பானட்டின் மீதிருந்த தலை வீசியெறிப்பட்டிருக்க வேண்டும். ஆனால், மாறாக பசைபோட்டு ஒட்டியதுபோல் அது அப்படியே அசையாமல் இருந்தது!

இந்திராபாய் காரின் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

அப்போது, எப்படிப்பட்டவரையும் பயப்படுத்தக்கூடிய அந்தத் தலை அவளை நேருக்கு நேர் பார்த்தபடி விழித்தது!

ஆனால், இந்திராபாயின் முகத்தில் பயத்தின் எந்த விதமான அறிகுறியும் தென்படவில்லை.

நிதானமாக பானட்டை நெருங்கிய இந்திராபாய் அங்கு பரவிக் கடந்த மொத்த முடிக்கற்றையையும் வலது கையால் ஒன்று சேர்த்து வாரியெடுத்துப் பிடித்து உயர்த்தினாள்.

பானட்டின் மேற்புறத்திலிருந்து அந்தத் தலை மெதுவாக உயர்ந்தது. அந்த வெறும் தலை அவள் கையிலிருந்து விடுபட துடித்ததுடன், விசித்திரமான முறையில் குரல் கொடுக்கவும் செய்தது.

இதைப் பார்த்தும் பார்க்காதவளாக அல்லது பொருட்படுத்தாதவளாக இந்திராபாய் அந்தத் தலையை ஒரு சுழற்று சுழற்றி விசையுடன் ரோட்டுப்புறமாக வீசியெறிந்தாள்.

ரோட்டில் விழுந்ததும் அந்தத் தலை ஒரு மண்டையோடாக மாறி வேகமாக உருளத் தொடங்கியது. சற்றுத் தூரம் உருண்ட பிறகு அந்த மண்டையோடும் சிறுசிறு துண்டுகளாக உடைந்து இளஞ்சிவப்பு நிறமுள்ள நெருப்புத் துணுக்குகளாக மாறிச் சிதறவும் செய்தது.

''ஓகோ... இவ்வளவுதானா?'' இந்திராபாய் தனக்குத்தானே பேசிக் கொண்டாள். பிறகு எதுவும் நடக்காததுபோல் காருக்குள் ஏறி அமர்ந்து நெருப்புத் துணுக்குகள் தெரிந்த பகுதியை நோக்கி காரைச் செலுத்தினாள்.

அதன் பிறகு எதுவும் நடக்கவில்லை.

இந்திராபாய் அங்கிருந்து புறப்பட்ட சற்று நேரத்துக்குள் போன் மணியடித்தது.

டாக்டர் சேதுவர்மாவின் போன்.

''டாக்டர் இந்திராபாய்தானே?'' சேதுவர்மா கேட்டார்.

''ஆமாம். ஏதாவது செய்தி உள்ளதா?'' எதிர்முனையிலிருந்து இந்திராபாய் கேட்டாள்.

''ஒன்றுமில்லை... நீங்கள் பத்திரமாக குவார்ட்டர்ஸுக்குத் திரும்பி விட்டீர்களா என்று தெரிந்து கொள்ளத்தான் போன் செய்தேன்.'' வர்மா சொன்னார்.



''நல்லபடியாக வந்து சேர்ந்துவிட்டேன். இப்போதுதான் ...க்குள் நுழைந்தேன், உங்கள் போன் வருகிறது.''

''நல்லது. குட்நைட் டாக்டர் இந்திராபாய்.'' சேதுவர்மா ...தியடைந்தவராக ரிசீவரை கிராடிலில் பொருத்தினார்.

இதற்கு முன்பு இரண்டு டாக்டர்களுக்கும் நிகழ்ந்தது போல் இந்திராபாய்க்கும் ஏதாவது விபத்து நிகழ்ந்திருக்குமோ என்று ...துதான் சேதுவர்மா போன் செய்தார்.

மறுநாள் காலையில் அவரை சந்திக்க நேர்ந்த போதிலும் ...தைய நாள் தனக்கு நேர்ந்த சம்பவம் பற்றி இந்திராபாய் ...ும் சொல்லவில்லை.

எனினும் டாக்டர் இந்திராபாயின் மனத்தில் அந்த சம்பவம் ...யாத இடம் பெற்றுவிட்டது.

தன்னை ஆழம் பார்ப்பதற்காக ரத்னபிரபாதேவி மேற் ...ண்ட ஒரு செயல் அது என்று இந்திராபாய்க்குத் தெரியவே ...ந்தது.

டாக்டர் சேதுவர்மா டூட்டி ரூமில் அமர்ந்திருந்தபோது இந்திராபாய் அங்கு வந்து சேர்ந்தாள்.

இரவு மணி பதினொன்று தாண்டியிருந்தது.

''இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தீர்கள்?'' சேதுவர்மா கேட்டார்.

''இன்று ஒரு ஆபரேஷன் கேஸ் வந்தது. எதிர்பாராமல் திடு...ன்று வந்த கேஸ். சிசேரியன். பயப்படுவதற்கு ஒன்று...ல்லை... ஆண் குழந்தை பிறந்தது.'' நாற்காலி ஒன்றில் ...கார்ந்த இந்திராபாய் கூறினாள்.

''நேற்று ராத்திரி நான் போன் பண்ணினது எதுக்காகன்னு ...களுக்குத் தெரியாதில்லையா?'' சேதுவர்மா கேட்டார்.

''ஆமாம். மறந்தே போனேன். எதற்காக போன் செய்தீர்கள் ...ா?''

''குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவுமில்லை! மனத்து தோன்றியது செய்தேன்.''

''நான் சொல்லட்டுமா, உங்கள் கடந்த கால அனுப அப்படிச் செய்யச் சொல்லியிருக்கும், இல்லையா?'' சிரித்த கேட்டாள் இந்திராபாய்.

''உண்மை!''

''அப்படி ஏதாவது நடந்திருந்தால் இப்போது நான் உ முன்னால் வந்திருக்க முடியாது!''

அப்போது தங்கம்மா நர்ஸ் பதற்றத்துடன் வந்தாள்.

''டாக்டர், பதினேழாம் பெட் நோயாளி படுக்கையில புர துடிக்கிறாங்க. வலி ஆரம்பமாயிட்டதா தோணுது.''

''ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போங்க. நா இதோ வர்றேன். எதிர்பார்த்துட்டு இருந்தவங்கதான் சேதுவர்மா இருக்கையிலிருந்து எழுந்தார்.

''சரி? நானும் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கொள்கிறே இந்திராபாய் ஏப்ரனைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டிவிட் கட்டிலை நோக்கி நடந்தாள்.

மறுநாள் காலையில் சசிதரன் குவார்ட்டர்ஸுக்கு வந்தார்.

''நாளைக்குத்தானே போகிறீர்கள்?'' வந்தவுடன் கேட்டார்.

''தேவையானதெல்லாம் எடுத்து வைத்து ஒழுங்கு படுத் விட்டேன். புறப்பட வேண்டியதுதான். போய்விட்டு உடனே திரும்ப வேண்டியதில்லையே...''

''நான் ஏதாவது தகவல் சொல்ல வேண்டி உள்ளதா?'' சசிதரன் கேட்டார்.

டாக்டர் சேதுவர்மா எழுந்து உள்ளே போய் மேஜை மீது தயாராக வைத்திருந்த உறை ஒன்றை எடுத்துவந்து சசிதரனிடம் கொடுத்தார்.

''நான் இன்றைக்கே வேலைக்க வரவில்லை. லீவு லெட்டரை நான் கொண்டுபோய்க் கொடுத்தால் ஏன். எதற்கு என்றெல்லாம்



கேள்விகள் பிறக்கும். நான் அதிகமாக லீவே எடுக்காத வழியும்கூட.'' சேதுவர்மா கூறினார்.

''அதுவும் நல்லதுக்குதான். யார்கிட்டயும் எதையும் சொல்ல வேண்டியதில்லை. அதுதான் நல்லது. மட்டுமில்லாமல் ரத்ன தேவியின் ஆட்கள் யாராவது ஆஸ்பத்திரிக்கு வரலாம். அவர் உங்களது ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனிப்ப தும் கூட...!'' சசிதரன் முன்னெச்சரிக்கையுடன் கூறினார்.

''அதனால்தான் லீவு எடுப்பதுகூட மற்றவர்களுக்குத் தெரிய வேண்டாம் என்று நினைத்தேன்.''

''அப்புறம் ஒரு விஷயம். நீங்கள் காரை எடுத்துக் கொண்டு போகாதீர்கள். அது ஒரு கிராமப் பிரதேசம். கார் கொண்டு போனால் மற்றவர்களது கவனத்துக்கு ஆளாக வேண்டிவரும்!''

''அதுதான் சரி. நானும் அதைப் பற்றி யோசிக்கவே இல்லை. ஒரு சராசரி மனிதனாக நடந்து கொள்ள வேண்டியதுதான்!'' சேதுவர்மா சிரித்தபடி எழுந்தார்.

மறுநாள் விடியற்காலையிலேயே டாக்டர் சேதுவர்மாவை ரயில்வே ஸ்டேஷனுக்குத் தனது காரில் கொண்டு போய் வழியனுப்பி வைத்தார்.

அவர் கோழிக்கோடு நகரில் இறங்கினார்.

நண்பர் ஒருவரைப் பார்த்து அங்கேயே மதிய உணவை முடித்துக்கொண்டார். சேதுவர்மாவின் மருத்துவக் கல்லூரி நண்பர் ஷியாம் பிரசாத், கோழிக்கோடு மருத்துவமனையில் பணி புரிகிறார்.

''நான் ஒரு காரியத்துக்காக வந்திருக்கிறேன்...'' சாப்பாட்டை முடித்து எழுந்த சேதுவர்மா சொன்னார்.

''என்ன விஷயம்... தயங்காமல் சொல்லப்பா... எனக்குத் தெரிந்த விஷயம் என்றால் உதவுகிறேன். டிரான்ஸ்ஃபர் மாதிரி ஏதாவது விஷயமா?'' ஷியாம் பிரசாத் கேட்டார்.

''அதெல்லாமில்லை. சாதாரண விஷயம்தான். இங்கிருந்து டாக்டர் இந்திராபாய் என்பவர் எங்கள் ஆஸ்பத்திரிக்கு

வந்திருக்கிறார். அவரைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?'' சேதுவர்மா கேட்டார்.

''டாக்டர் இந்திராபாய்... கமாண்டிங் பவர் உள்ள கம்பீரமான பெண்தானே?'' ஷியாம் பிரசாத் கேட்டார்.

''அத்துடன், எப்படிப்பட்டவரும் விரும்பும் ஓர் அழகு. அதே சமயம் மரியாதையையும் ஏற்படுத்தும்.''

''அவர் அதிக நாள் இங்கு வேலை செய்யவில்லை. ஆறு மாதம்தான். விளையாட்டுத்தனமாக நான் அவரது பின்னணியெல்லாம் விசாரிச்சு வெச்சிருக்கிறேன்.''ஷியாம் பிரசாத் பதிலளித்தார்.

அதைக் கேட்டதும் சேதுவர்மாவின் நெற்றியில் சுளிவுகள் உயர்ந்தன. நண்பனையே கவனித்தார். ''பிறகு...''

''அவரிடம் அசாதாரணமான சில திறமைகள் இருப்பதை கண்டுகொண்டேன். நடக்கப்போகும் சம்பவங்களை முன்கூட்டியே சொல்வார். தீர்க்கதரிசனம்... ஈ.எஸ்.பி பவர் மாதிரி!''

''அதை எப்படித் தெரிந்து கொண்டாய்?''

''ஸ்கேனிங் பக்கமே போகாமல் கர்ப்பிணிகளின் வயிற்றை உற்றுப்பார்த்து குழந்தை ஆணா, பெண்ணா என்று சொல்லுவார். அது மட்டுமல்ல, அப்படிப்பட்ட குழந்தைகளின் உடலுறுப்புகள் ஊனம் அடைந்திருந்தாலும் அதையும் தெளிவாகச் சொல்லுவார்.''

''ஓகோ...''

''அவர் முன்கூட்டியே சொன்ன பல சம்பவங்கள் சரியாக அதே நேரத்தில் அப்படியே நடந்திருக்கின்றன.''

சேதுவர்மாவைப் பொறுத்தவரை இவை புதிய செய்திகளாக இருந்தன.

''இங்கு வருவதற்கு முன்னால் அவர்கள் வேறு எங்கெல்லாம் வேலை செய்தார்கள் தெரியுமா?'' சேதுவர்மா கேட்டார்.

''அதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை.''



''சும்மாதான் கேட்டேன்.'' சேதுவர்மா அவரைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்புவதை மறைத்தபடி சொன்னார்.

சுமார் இரண்டு மணியளவில் சேதுவர்மா அங்கிருந்து கிளம்பினார். கோழிக்கோட்டிலிருந்து பஸ்ஸில் பயணம் மேற்கொண்டார்.

பையனூரை அடைந்தபோது பொழுது சாய்ந்துவிட்டது. அங்கிருந்து சுமார் இருபது கிலோமீட்டர் போக வேண்டியிருந்தது.

பக்கத்திலிருந்த ஹோட்டலுக்குள் நுழைந்து சின்னதாக டிபன் சாப்பிட்டார். ஓட்டல் உரிமையாளர் வயதான பெரியவர். எனவே, அவரிடம் இளயிடத்து கோவிலகம் பற்றி விசாரித்தார்.

''அங்கே யாரைப் பார்க்கப் போகிறீர்கள்?'' ஹோட்டல் உரிமையாளர் கேட்டார்.

''நேராக அந்த இடத்துக்கு அல்ல, அதற்குப் பக்கத்திலிருக்கிற ஒரு வீட்டுக்குப் போக வேண்டும்...'' சேதுவர்மா சுதாரித்தவராகப் பதிலளித்தார்.

''ஓகோ... நான் நினைத்தேன்...'' பெரியவர் வாக்கியத்தை முடிக்காமல் தொண்டைக்குள் விழுங்கினார்.

இரவு எட்டரை மணியளவில் அந்த இடத்துக்குப் போகும் பஸ் வரும் என்ற தகவல் கிடைத்தது. அதன் பிறகு அந்த ஊருக்குச் செல்ல வேறு வழி கிடையாதாம்.

பஸ் ஸ்டாண்டிலிருந்து பஸ் புறப்பட்டபோது ஒரே நெரிசலாக இருந்தது. பாதி தூரம் போவதற்குள் பாதிக்கூட்டம் குறைந்தது. முக்கால்வாசி தூரம் போவதற்குள் அவரையும் சேர்த்துப் பயணிகள் ஆறு பேரோ ஏழு பேரோ மீதமிருந்தனர்.

சேதுவர்மாவை பஸ்ஸிலிருந்த அனைவரும் ஊன்றி கவனிப்பதாக அவருக்குத் தோன்றியது.

அடுத்த பஸ் ஸ்டாப்பில் சேதுவர்மாவைத் தவிர மற்ற எல்லாரும் இறங்கி விட்டனர்.

கடைசி பஸ்ஸ்டாப்பில் சேதுவர்மா இறங்க வேண்டும்.

டிக்கெட்டுகளையும், பணத்தையும் பத்திரப்படுத்தி ஒழுங்க படுத்தி, வைத்த கண்டக்டர், சேதுவர்மாவின் வலது பு இருக்கையில் வந்து அமர்ந்தார்.

"சார், நீங்க எங்கே போகணும்?"கண்டக்டர் கேட்டார்.

"இளயிடத்து கோவிலகத்துக்குப் பக்கத்தில் ஒரு வீடு வரை போக வேண்டும்!" வர்மா பதிலளித்தார்.

மேற்கொண்டு சேதுவர்மாவிடம் எதுவும் கேட்காமல் சாலையை வேடிக்கை பார்க்கத் தொடங்கினார் கண்டக்டர்.

சற்று நேரத்துக்குள் பஸ் ஓர் ஆலமரத்தைச் சுற்றி விட்டு நின்றது.

"சார், நீங்கள் இறங்கலாம். இதற்கு முன்னால் ஒரு ஸ்டாப்பைப் பார்த்தீர்களே அங்கேதான் எங்களுக்கு ஷெ... நாங்கள் உடனே கிளம்பி விடுவோம்." கண்டக்டர் கூறினார்.

சேதுவர்மா பஸ்ஸிலிருந்து இறங்கினார்.

உடனே பஸ், வந்த வழியே திரும்பிச் சென்றது. பஸ்ஸின் பின்புறச் சிவப்பு விளக்குகள் தேய்ந்து... ஒரு புள்ளியாகி கடைசியில் வளைவு ஒன்றில் திரும்பி மறைந்தது.

சேதுவர்மா சுற்றுமுற்றும் பார்த்தார்.

அதிர்ஷ்டம்தான்! சற்றுத் தூரத்தில் லாந்தர் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. புகை படிந்த கண்ணாடியை மீறி வெளிச்சம் விளக்கிலிருந்து வெளியேறத் திணறுவதாகத் தோன்றியது.

அதை நோக்கி நடந்தார்.

அருகில் போனபோது அது ஒரு டீக்கடை என்று தெரிந்தது.

நடு வயது மனிதர் ஒருவர் பழைய மேஜையின் முன்னால் அமர்ந்திருந்தார்.

காலடிச் சத்தம் கேட்டதும் திடுக்கிட்டவரைப்போல அவர் கண்விழித்தார்.

வர்மாவை தலை முதல் பாதம் வரை பார்த்தார்.



வர்மா அந்த மனிதரை கவனிக்காதவரைப்போல் நீளவாட்டு ...சில் அமர்ந்தார்.

"பால் இல்லை. பாலில்லாத காபி தரட்டுமா?" கடைக்காரர் கேட்டார்.

"ம்... கொடுங்கள்!" சேதுவர்மா கூறினார்.

பையிலிருந்து டவல் ஒன்றை எடுத்து முகம் துடைத்தார்.

ஆவி பறக்கும் சூடான கறுப்பு காபியை அவருக்கு முன்னால் வைத்தார் கடைக்காரர்.

"சாப்பிடுவதற்கு நேந்திரம் பழம் தரட்டுமா?" கடைக்காரர் கேட்டார்.

"கொடுங்கள்." இப்போதும் சேதுவர்மா, அவரை கவனிக்காமல் கிளாஸைக் கையில் எடுத்தார்.

ஒரு பெரிய நேந்திரம் பழத்தைக் குலையிலிருந்து உருவி டேபிளில் வைத்தார்.

சாப்பிட்டு முடித்தபோது பசியடங்கியது போலிருந்தது.

"இந்த நேரத்தில்... இங்கு யாரைத் தேடி வந்திருக்கிறீர்கள்?" கடைக்காரர் கேட்டார்.

"இளயிடத்து கோவிலகம் வரை போகவேண்டும்." சேதுவர்மா, கடைக்காரரைப் பார்ப்பதைத் தவிர்த்தபடி பதிலளித்தார்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் கடைக்காரின் நெற்றியில் சுருக்கங்கள் விழுந்தன. விழிகளில் வியப்பு பரவியது.

'கோவிலகத்துக்குப் போகிறேன்' என்று சொல்லிக்கொண்டு அவருக்கு விவரம் தெரிந்து இதுவரை எவருமே அங்கு வந்ததில்லை. அதனால், இந்த மனிதர் எதற்காக வந்திருக்கிறார் என்று யோசித்தது கடைக்காரரின் மனம்.

"கோவிலகத்துக்கா?" வியப்பை அடக்கமாட்டாதவராகக் கடைக்காரர் கேட்டார்.

"ஆமாம்... ஏன்?" சேதுவர்மா எதிர்க்கேள்வி கேட்டார்.

''ஒன்றுமில்லை... சும்மாதான் கேட்டேன்! ஆமாம், அங்கு நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்?'' கடைக்காரரு விடாக்கண்டனாக இருந்தார்.

''நான் அங்கு ஒருவரைப் பார்க்க வேண்டும். அவ்வளவு தான்!''

''அங்கு இப்போது காரியஸ்தர் யாரும் கிடையாதே!''

''காரியஸ்தரை நான் எதற்குப் பார்க்க வேண்டும்? வர்மாவின் நாக்கு வரை வந்த கேள்வி அப்படியே உள்ளுக்குள் அமுங்கியது. மேற்கொண்டு கடைக்காரரிடம் எதையும் பேசக்கூடாது என்று முடிவு செய்தார்.

பர்ஸைத் திறந்து ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கடைக்காரரிடம் நீட்டினார். அதை வாங்கியவர் மிச்சம் தரவேண்டிய சில்லறையைத் தேடினார்.

''வேண்டாம்... அங்கேயே இருக்கட்டும். அவசியமானால் திரும்பி வரும்போது வாங்கிக் கொள்கிறேன்.'' சேதுவர்மா பிரயாணப் பொருள்களுடன் கடையிலிருந்து வெளியேறினார்.

''திரும்பி வந்தால்தானே?'' கடைக்காரர் மெதுவான குரலில் சொல்லிக்கொண்டார்.

சேதுவர்மா இருட்டுக்குள் நடக்கத் தொடங்கினார்.

அது செம்மண் பாதை.

சற்றுத் தூரம் நடந்த பிறகு எதுவுமே கண்களுக்குத் தெரிய வில்லை.

இரு புறமும் வளர்ந்திருந்த மரங்களின் கிளைகள் ஒன்றை ஒன்று தொட்டுப் பாதையைக் குகைபோல் மாற்றியிருந்தன.

சேதுவர்மா டார்ச் லைட்டைக் கையில் எடுத்தார். சுவிட்சை அழுத்தியபோது பாய்ந்து வந்த வெளிச்சம் பாதையின் முன்புறமாக ஊடுருவியவாறு நகர்ந்தது.

பாதை முடிவடைந்த இடம் ஒரு பெரிய தெருவாசற்படியின் முன்புறம்.



காலப் பழைமையின் காரணமாக வாசலின் மரப் பகுதிகள் இற்றுப் போயிருந்தன.

மூடிக்கிடந்த கதவை சேதுவர்மா வெளிப்புறமாக இழுத்தார்.

'கரகர'வென்ற ஓசையுடன் பெரிய கதவு திறந்து கொண்டது.

சேதுவர்மா உள்ளே காலெடுத்து வைத்தார்.

நட்சத்திரங்களின் ஒளியில் எதிரே தெரிந்த பெரிய கட்டடம், பெரிய கேன்வாஸ், ஒன்றில் கறுப்பு மையால் தீட்டப்பட்ட ஓவியம் போல் தெரிந்தது.

பாசி பிடித்திருந்த பாதை வழியாக சேதுவர்மா நடந்தார்.

இளந்திண்ணையை அடைந்த பிறகு நின்றார். அப்போது வலது புறத்திலிருந்து வெளிச்சம் ஒன்று நெருங்குவதை கவனித்தார்.

சங்கிலி விளக்கின் திரியிலிருந்து மேற்புறமாக ஜுவாலை எழுப்பிய தீபம் ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அதன் பின்னால் தெளிவற்ற உருவமொன்று தென்பட்டது.

''யாரது... சேதுவர்மாதானே?'' இனிமையான பெண்குரல் கேட்டது.

திரியின் வெளிச்சத்தில் தெளிவற்றுத் தெரிந்தது அந்த முகம்.

சேதுவர்மா ஊன்றி கவனித்தார்.

## 14

**ச**ங்கிலி விளக்கின் வெளிச்சத்தில் தெளிவற்றுத் தெரிந்தது ஒரு முகம். புராதனமான ஏதோ கோயில் ஒன்றின் சுவரில் பார்த்திருந்த சிற்பத்தினுடையது போன்ற அழகான முகம்.

''டாக்டர் சேதுவர்மாதானே?'' இனிமையான மனத்தை மயக்கும் குரல். வர்மா வியப்படைந்தார்.

'இவ்வளவு தொலைவிலேயே தான் யார் என்பதைத் தெரிந்துகொண்டு விசாரிக்கிறார்கள். தன்னை ஏற்கெனவே

பழக்கமானதுபோல்!' இத்தனைக்கும் வர்மா இருட்டில் நின்றிருந்தார்.

"ஆமாம்... நானேதான்!" வர்மா பதிலளித்தார்.

"அதோ அந்த நாற்காலி மீது உட்காருங்கள். சசிதரனின் அப்பா உங்களை இங்கு சொல்லியனுப்பினார் இல்லையா?" வர்மாவை மேலும் வியப்பில் ஆழ்த்தியபடி இரண்டாவது கேள்வி பிறந்தது.

"ஆமாம்!" தோளிலிருந்த பேகை வராந்தாவில் வைத்து சேதுவர்மா நாற்காலியில் அமர்ந்தார்.

"நீங்க வருவீங்கன்னு நான் எதிர்பார்த்தேன். சரி, முதலில் ஒரு காரியம் செய்யுங்கள். அந்தப் பக்கம் கிணறு இருக்கிறது. வெளியில் இருந்தும் தண்ணீர் இறைக்கலாம். முதல்ல குளிச்சுட்டு வந்துடுங்க. பயணக் களைப்பு தீரும்." அந்தப் பெண் கூறினாள்.

அந்த வார்த்தைகளுக்குக் கட்டுப்படுவதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை. எனவே, நாற்காலியிலிருந்து எழுந்து பேகைத் திறக்க முயன்றார்.

அதற்குள் அந்தப் பெண்மணி பூஜையறை வாசலில் இருந்த நிலவிளக்கில் மேலும் இரண்டு திரிகளை ஏற்றி வைத்தாள்.

அத்துடன் வராந்தா அதிகப் பிரகாசமானது. சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களும் மரச்சுவரில் பதித்திருந்த பித்தளைக் குமிழ்களும் தெரிந்தன.

"நீங்கள் உடுத்தியிருக்கிற துணியை அதோ அந்தச் சவுக்கைக்குள்ளே போட்டுடுங்க. செருப்புகளையும் அங்கேயே போடலாம்." அவள் முற்றத்தை ஒட்டியிருந்த மற்றொரு பகுதியைச் சுட்டிக்காட்டினாள். ஆனால், அங்கு வெளிச்சம் இருப்பதாகத் தெரியவில்லை.

"அங்கே இருட்டா இருக்கு போலிருக்கே?" சேதுவர்மா கேட்டார்.

"அதுக்குள்ள ஒரு விளக்கு இருக்கு. உங்ககிட்ட தீப்பெட்டி இல்லேன்னா இந்தாங்க, இந்த விளக்கை எடுத்துட்டுப் போங்க." அவள் சங்கிலி விளக்கை தரையில் வைத்தாள்.



சேதுவர்மா அந்த விளக்கையும் பேகையும் எடுத்துக் கொண்டு சவுக்கையை நோக்கி நடந்தார்.

சவுக்கைக்குள் ஒரு கட்டில், மேஜை, நாற்காலி ஆகியவை இருந்தன. சுவரையொட்டி கயிற்றுக்கொடி ஒன்று கட்டப்பட்டிருந்தது. உள்ளே இருந்த விளக்கை ஏற்றிய பிறகு, சங்கிலி விளக்கை மறுபடியும் வராந்தாவில் கொண்டுவந்து வைத்தார்.

"சரி, நான் சாப்பாட்டு வேலையை கவனிக்கப் போகட்டுமா?" என்று கேட்டவள் விளக்கை எடுத்துக்கொண்டு வராந்தாவில் நடந்து மறைந்தாள்.

சேதுவர்மா பாண்ட்-ஷர்ட்டைக் கழற்றிக் கொடியில் போட்டார். ஷூ மற்றும் சாக்ஸைக் கழற்றி மூலையில் வைத்தார். லுங்கிக்கு மாறி, துண்டுடன் கிணற்றடியை நோக்கி விரைந்தார்.

இரும்புக் கப்பிக்கு பதிலாக மரத்தாலான உருளை மாட்டப்பட்டிருந்தது. வாளி அதில் இறங்கி ஏறியபோது ஒருவித கரகரப்புச் சத்தம் எழுந்தது. சிறு வயதாக இருந்தபோது சேதுவர்மா, இதே மாதிரி மர உருளையை தாத்தாவின் வீட்டில் பார்த்திருக்கிறார்.

குளித்துவிட்டு வந்தபோது அவள் வராந்தாவில் அவரை எதிர்ப்பார்த்துக் காத்திருப்பதாகத் தோன்றியது. சாப்பாட்டுக்குப் பிறகு அவள் பேசினாள்: "உங்கள் பேகை எடுத்துக் கொள்ளுங்கள். மாளிகைக்குப் போகலாம். நீங்கள் உடுத்தி வந்த துணியெல்லாம் சவுக்கையில் கிடக்கட்டும், பரவாயில்லை!"

அவள் சொன்ன மாதிரியே சேதுவர்மா பேகுடன் அவளைப் பின்தொடாந்தார்.

உட்புறத்திலிருந்த படிகளில் ஏறி மேல் மாடிக்கு வந்தனர். அவர்கள் நடந்து நகர்ந்த போதெல்லாம் இருள் விலகுவதும், அவர்கள் அகன்றதும் இருள் பின்தொடர்வதுமாக இருந்தது.

எத்தனையோ நூற்றாண்டுகளாக ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு கட்டடமாக அது சேதுவர்மாவுக்குத் தோன்றியது.

''இந்த அறையை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்!'' ஓர் அறையின் கதவைத் திறந்துவிட்டு அவள் கூறினாள்.

வெகு காலமாக மூடிக் கிடந்ததால், அந்த அறைக்குள் ஒருவித நெடி இருந்தது. ஒரு பெரிய அலமாரியும் அதையொட்டி காலியான ஒரு சிறு பெட்டியும் இருந்தன.

சுவரை ஒட்டியபடி மேஜை ஒன்றும் அதன்மீது சிம்மினி விளக்கு ஒன்றும், அருகிலேயே நாற்காலி ஒன்றும் இருந்தன. வேறு எதுவும் அந்த மங்கிய வெளிச்சத்தில் புலப்படவில்லை.

''உள்ளே வாருங்கள்!'' அவள் அழைத்தாள்.

சற்று நகர்ந்து மற்றொரு கதவைத் திறந்தாள். ''இந்தப் படி வெளிப்புறம் செல்லும் வழி. காலைக் கடன்களை முடிப்பதற்கான வசதிகள் கீழ்ப்புறத்தில் உள்ளன. இரவு நேரத்தில் வெளியே போக நேர்ந்தால் விளக்கை எடுக்க மறக்காதீர்கள். உங்களிடம் டார்ச் லைட் இருக்கிறதல்லவா?'' அவள் கேட்டாள்.

''இருக்கிறது...'' சேதுவர்மா பதிலளித்தார்.

''கூடுமானவரை வெளியே எங்கும் போகாமலிருப்பது நல்லது. முன்பின் பழக்கமில்லாத இடமில்லையா!'' அந்தக் குரல் எச்சரிக்கை செய்வதாக அவருக்குத் தோன்றியது.

வர்மா அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாரே தவிர, பதில் எதுவும் சொல்லவில்லை.

''சரி, படுத்துக் கொள்ளுங்கள்.'' மேற்கொண்டு எதுவும் பேசாமல் சங்கிலி விளக்கை எடுத்துக்கொண்டு அவள் அங்கிருந்து வெளியேறினாள்.

அவள் வாசலைத் தாண்டியதும் மெதுவாக நடந்து அவள் போகும் பாதையையே பார்த்தார் சேதுவர்மா. சற்றுத்தூரம் நடந்தவள் படியில் இறங்கத் தொடங்கியதும் மறைந்து விட்டாற்போல் தோன்றியது.

தனக்கு இடத்தைக் காட்டித் தருவதற்காகவே அவள் அந்த விளக்கை எடுத்து வந்திருப்பாளென்று சேதுவர்மாவுக்குத் தோன்றியது.



அறைக்குள் திரும்பியவர் கதவை மூடித் தாழிட்ட பிறகு நாற்காலி மீது அமர்ந்தார்.

சிம்மினி விளக்கிலிருந்து வந்த வெளிச்சம் நேரம் ஆக ஆகக் குறைவதாக அவருக்குத் தோன்றியது.

பிறகு என்ன நினைத்தாரோ விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு, வெளியே போகும் கதவை நெருங்கி நின்றார். ஏதோ சந்தேகம் கொண்டவரைப் போல் கதவைத் திறந்து வெளியே பார்த்தார்.

விளக்கின் அடிப்புற நிழல் படிக்கட்டுப் பகுதியை மறைத்திருந்ததால், வெறும் இருளாகத் தெரிந்தது. ஆனால், யாரோ கீழே நடமாடுவதுபோல் தெரிந்தது.

அவள் எச்சரிக்கை செய்தது ஞாபகம் வந்ததால் சட்டென்று கதவை மூடித் தாழிட்டார்.

விளக்கின் திரியைத் தாழ்த்திவிட்டுக் கட்டிலில் படுத்தார். இருப்பினும் அவ்வளவு சுலபத்தில் தூக்கம் வருவதாகத் தெரியவில்லை. எனவே, அதுவரை நடந்த சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நினைத்தபடி படுத்திருந்தார்.

சற்றுத் தொலைவில் எங்கோ கடிகார மணியடிக்கும் சத்தம் கேட்டது. வர்மா ஊன்றி கவனித்தார். மணி பன்னிரண்டு.

அப்போதுதான் இவ்வளவு நேரமாகியும் தான் இன்னும் தூங்காமல் இருக்கிறோம் என்பது அவருக்கு விளங்கியது.

'இனிமேலும் விழித்திருக்கக் கூடாது. தூங்க வேண்டியது தான்' என்று நினைத்தவராகக் கண்ணிமைகளை வலுக்கட்டாயமாக மூடினார்.

சற்று நேரத்துக்குள் யாரோ மந்திரிப்பது மாதிரி பேசும் குரல்கள் கேட்டன.

கட்டிலிலிருந்து எழுந்து விளக்கின் திரியை உயர்த்தினார்.

அறைக்குள் இருந்த இருள் விலகியது.

சேதுவர்மா காதைக் கூர்மையாக்கி கவனித்தார். பெண் குரல்கள்! ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பேசிக்கொள்வது தெரிந்தது.

'இந்த நள்ளிரவில் தூங்காமல் இப்படிப் பேசுவது யார்?' அங்கு வந்தபோது தன்னிடம் அறிமுகமான பெண்மணி கூறிய எச்சரிக்கையை சேதுவர்மா அந்த நிமிடம் மறந்தார்!

டார்ச் லைட்டைக் கையில் எடுத்துக்கொண்டு சத்தம் எழுப்பாமல் தாழ்ப்பாளை நீக்கி, கதவைத் திறந்தார். திறக்கும்போது சன்னமான ஒரு சத்தம் கேட்டது. வாசல் படியில் காலை வைக்காமல் அறையிலிருந்து வெளியேறினார். இடது புறமிருந்த மற்றோர் அறையின் கதவிலிருந்து வெளிச்சக்கீற்று ஒன்று வெளியே வந்ததை கவனித்தார். அங்கிருந்துதான் பெண்குரல்கள் கேட்பதாகத் தோன்றியது.

அதை நோக்கி நடந்தார்.

வாசலின் முன் நின்று உட்புறம் பார்த்தார்.

அது ஒரு நூலகம் போல் தென்பட்டது. அறைக்குள் இருந்த விளக்கு வெளிச்சத்தில் அங்கு ஏராளமான புத்தகங்கள் அடுக்கி வைத்திருப்பது தெரிந்தது.

தூண்டாமணி விளக்கு ஒன்று அந்த அறையின் மச்சிலிருந்து தொங்கியது.

வட்ட வடிவ மேஜைக்குச் சற்றுத் தள்ளி விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அதனால் மேஜைப் பரப்பில் வெளிச்சம் தெளிவாக விழுந்தது.

சேதுவர்மா வியப்புடன் அந்த அறையைப் பார்த்தார். தன் மூச்சுக் காற்றின் சத்தம் வெளியே கேட்காமலிருக்க சேதுவர்மா மிகவும் பாடுபட்டார்.

மேஜையின் இருபுறமும் இரண்டு பெண்கள் உட்கார்ந்து இருந்தனர். அவர்கள் உடுத்தியிருந்த உடை தெளிவற்று இருந்தது. அதாவது பனிமூட்டம் போல் - மேகக் கீற்றுகளை உடையாக உடுத்தியிருப்பது போலிருந்தது. அவர்கள் தங்கள் நிர்வாணத்தை ஓரளவுக்கு மறைத்திருந்தனர்... அவ்வளவுதான்.



மென்மையான முடிக்கற்றையால் தங்கள் மார்புகளை மறைத்திருந்தனர். இருவரும் தங்களுக்கு முன்னால் இருந்த ஓலைச்சுவடி ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தனர். ஒருத்தி அவ்வப்போது மற்றவளுக்கு எதையோ விளக்கினாள்.

ஏனோ அவருக்கு அந்த இருவரும் மனிதப் பெண்களாகத் தெரியவில்லை.

ஏதோ ஒருவித அமானுஷிகம் அவர்களைச் சூழ்ந்திருப்பதாகத் தோன்றியது.

எட்டிப் பார்க்கும் தீவிரத்தில் சேதுவர்மா தன்னையும் மீறி சற்று முன்புறமாக நகர்ந்தார். கதவுகள் இரண்டும் சட்டென்று உட்புறமாக நகர்ந்து சற்று விரிந்தன. அப்போதுதான் கதவை அவர்கள் உட்புறம் தாழிடவில்லை என்பது புரிந்தது. கதவின் கீல்கள் கரகரவென்று சத்தம் எழுப்பின. பழையபடி கதவை மூடிவிட சேதுவர்மா முயற்சி செய்தார்.

ஆனால், அதற்குள் அந்தப் பெண்கள் சேதுவர்மாவை கவனித்துவிட்டனர்.

''தயங்கவேண்டாம். உள்ளே வரலாம்.'' இருவரில் ஒருத்தி அழைத்தாள். அந்த அழைப்பை சேதுவர்மாவினால் தட்டிக்கழிக்க முடியவில்லை. அறைக்குள் நுழைந்தார்.

இருவரில் ஒருத்தி எழுந்து நாற்காலியில் உட்காருமாறு சைகை காட்டினாள்.

வர்மா நாற்காலியில் அமர்ந்தார்.

''மந்திரங்களைக் கத்துக்க வந்திருக்கிறீங்க, அப்படித் தானே?'' அவருக்கு எதிர்ப்புறம் அமர்ந்திருந்த இளம்பெண் கேட்டாள்.

விளக்க முடியாத ஏதோ, ஒருவித அழகு அவர்களிடம் பொங்கி வழிந்தது.

''என்ன மாதிரி மந்திரங்களைப் படிக்கப் போறீங்க?'' நிற்பவள் விசாரித்தாள்.

அதற்கு பதில் சொல்ல சேதுவர்மா திணறினார். 'அவர்களிடம் எதை விளக்குவது? என்னவென்று சொல்வது? மந்திர வாதம் மொத்தத்தையும் கற்றுக்கொள்ள வந்திருப்பதாகவா அப்படி பதிலளித்ததால். அந்தப் பெண்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ, என்னவோ?'

"இப்போ புரிஞ்சு போச்சு. நாங்களும் உங்களை மாதிரிதான் மந்திரம் கத்துக்கிறதுக்காக ஒரு காலத்துல இங்கே வந்து சேர்ந்தோம். ஆனால், இன்னும் எங்க படிப்பு முடியலை. இங்கியிருந்து வெளியேறவும் வழியில்லை." எதிர்நாற்காலியில் இருந்த பெண் கூறினாள். வஞ்சகம் நிறைந்த அவள் வார்த்தைகளுக்குள் மறைந்திருந்த விபரீதப் பொருளை வர்மா உணரவில்லை. 'எதனால் இவர்களால் இங்கிருந்து போக முடியவில்லை?' என்று யோசிக்கத் தொடங்கினார்.

சற்றுத் தள்ளி எரியும் தூண்டாமணி விளக்கின் வெளிச்சம் குறைந்து வந்தது. திரி எரிந்தபடியே உட்புறமாக இறங்கியது. உடனே நின்றிருந்த இளம்பெண் தன் வலதுகையின் சுண்டு விரலைப் பயன்படுத்தி எரியும் திரியை வெளிப்புறமாகத் தூண்டினாள்.

அப்போது வர்மா அசாதாரணமான அந்தக் காட்சியைக் கண்டார்.

தீபத்தின் அருகே சென்ற சுண்டுவிரலை ஒட்டியிருந்த பகுதியில் ஒரு மாற்றம் தென்பட்டது.

எப்படிப்பட்டவரும் பயந்து விறைத்துப் போகக்கூடிய ஒரு காட்சியாக இருந்தது அது.

ஏறத்தாழத் தீயின் செந்தழல் நிறம் கொண்ட அந்தக் கை விகாரமடைந்தது.

அந்த விரல்...

நெருப்பு ஜுவாலைக்குத் தோல் போர்த்தியதுபோல் கூர்மையான நகங்களுடன் மாறியது. திரியிலிருந்து நகர்ந்ததும் விரல் பழையபடி உருமாறவும் செய்தது.



'ஒருவேளை தனக்கு அப்படித் தோன்றியதோ... என்னவோ?' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார் சேதுவர்மா.

சேதுவர்மாவிடம் தென்பட்ட முகமாற்றத்தை அவர்களும் கவனித்ததாகத் தோன்றியது. எனவே, சட்டென்று பார்வையைத் திருப்பி மேஜைமீது விரித்து வைத்திருந்த ஓலைச்சுவடியை கவனித்தார்.

'ம்ருத சஞ்சீவினி மந்திரம்' என்ற தலைப்பை வாசித்தார்.

"இதையெல்லாமா படிக்கிறீர்கள்?" இளம்பெண்களைப் போல் தோன்றிய அவர்களிடம் கேட்டார் சேதுவர்மா.

"மரணத்தை வெல்லவும் அதாவது மரணமே இல்லாமல் போகவும், என்றென்றுமாக இளமையை நிலைநிறுத்தவும் உதவக்கூடிய மந்திரங்கள் இதில் உள்ளன. ஆனால், இதில் சொல்லியிருக்கிறபடி நடப்பதோ, நடைமுறைப்படுத்துவதோ அவ்வளவு சுலபமல்ல." உட்கார்ந்திருந்தவள் பதிலளித்தாள்.

அவள் அதைச் சொல்லும்போது பின்னால் நிற்கும் மற்றொரு பெண்ணிடம் மாற்றங்கள் சில நிகழ்வதை வர்மா கவனிக்கவில்லை!

அவள் முகத்தின் அழகு படிப்படியாகக் குறைந்து வந்தது. அவள் தோலின் பளபளப்புக் குறைந்து சுருக்கங்கள் படியத் தொடங்கின. கைவிரல்களில் நகங்கள் நீண்டு கூர்மையாக வளரத் தொடங்கின.

அந்த மாற்றங்களை சேதுவர்மாவின் முன்னால் இருந்தவள் கவனித்தாள். விரைவிலேயே அந்த மாற்றம் அவளிடமும் ஏற்படத் தொடங்கியது. சேதுவர்மா அவளையே பார்த்ததால் இப்போது அவரால் அந்த மாற்றங்களை உணர முடிந்தது. சற்று நேரத்துக்குள் அந்த முகம் குரூரமாக மாறியது.

அவள் கண்கள் வெள்ளி உலோகத்தை உருக்கியது போல் பளபளத்தன. தலைமுடி ஒவ்வொன்றும் உயிருள்ளவைபோல் இழைந்து அசையத் தொடங்கின. உதடுகளின் சிவப்பு நிறம் மாறி

அவையும் வளரத் தொடங்கின. விரைவிலேயே உதடுகளின் இரண்டு ஓரங்களிலும் கடைவாய்ப்பற்கள் கூர்மையாக நீண்டு வெளிவந்தன.

எதுவோ தன் உடம்பின் மீது பட்டது போல் தோன்றவே சேதுவர்மா திரும்ப முயன்றார். இரண்டு கைகள் அவர் தோளிலிருந்து கீழ்ப்புறமாக இறங்கின.

அப்போது, சேதுவர்மா அங்கு வந்தபோது வரவேற்ற பெண்மணி சங்கிலிவிளக்குடன் மாடிப் படியேறி வந்தாள்.

பால்கனிப் பகுதிக்கு வந்தவள் சேதுவர்மா தங்கியிருக்கும் அறைக்கு இரண்டு அறை தள்ளியிருந்த ஒரு வாசல் முன்னால் போய் நின்றாள்.

''என்ன நின்னுட்டே... உள்ளே வா!'' யாரோ அவளை அழைத்தார்கள்.

அவள் கதவைத் திறந்தபடி அதற்குள் நுழைந்தாள். அப்போது அந்த அறைக்குள் வெளிச்சம் வந்தது.

''அந்த மனிதர் எங்கே?'' அறையின் மையத்தில் போட்டிருந்த கட்டிலில் தலையணைமீது சரிந்தபடி அமர்ந்திருந்த பெண்மணி கேட்டாள்.

''அவரைப் படுக்கச் சொலிவிட்டு நான் போனேன். வெகு நேரமாகி விட்டது. இந்நேரம் அவர் தூங்கியிருப்பார்.'' விளக்குடன் வந்தவள் பதிலளித்தாள்.

கட்டிலில் படுத்திருந்தவளுக்கு சுமார் முப்பது வயது இருக்கலாம். கழுத்தில் ரத்தினங்கள் பதித்த செயின் ஒன்றும் கைகளில் பழங்காலப் பாணியிலான தங்கக் காப்புகளும் கிடந்தன.

ரவிவர்மாவின் ஓவியங்களில் இருப்பது போன்ற பேரழகியாக இருந்தாள் அவள். ஒருவித ராஜகம்பீரம் அவளிடம் தென்பட்டது.



''ஆனால், இப்போது அந்த மனிதர் நூல் நிலையத்தில் இருக்கிறார்!'' விளக்குடன் வந்தவள் கூறினாள்.

''உண்மையாகவா?'' படுத்திருந்தவள் கட்டிலில் இருந்து துள்ளி எழுந்தாள்.

## 15

அந்தப் பெண்மணி ஓலைச்சுவடிகளை வைத்துள்ள அறையை நோக்கி விரைந்து ஓடினாள். கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவள், அங்கிருந்த இரண்டு பெண்களையும் கைகளால் ஒதுக்கித் தள்ளினாள். அவளைப் பார்த்த பெண்கள் இருவரும் நாய்களைப் போல் மூச்சிரைத்தனர். ஏதோ ஒரு பெரிய காரியத்தை சாதிக்க வந்த அவர்களைத் தடுத்து விட்டதைப்போல் இருவரும் அவளை வெறித்தனர்.

''ம்... இங்கிருந்து கிளம்புங்கள்!'' அவள் அதட்டினாள். அதைக் கேட்டதும் வேண்டாவெறுப்பாக அவர்கள் இருவரும் பின்புறமாக நகர்ந்து இருளில் மறைந்தனர்.

''வசந்தா உங்களிடம் சொல்லவில்லையா? இரவு நேரத்தில் எங்கேயும் போக வேண்டாமென்று?'' அந்தப் பெண்மணி சேதுவர்மாவைப் பார்த்துக் கேட்டாள்.

சேதுவர்மா பதில் எதுவும் பேசவில்லை.

அவளைப் பின்தொடர்ந்தார் சேதுவர்மா.

சேதுவர்மாவுக்கு ஒதுக்கப்பட்ட அறையின் அருகே வந்ததும் அவள் வசந்தாவின் கையிலிருந்த விளக்கை வாங்கிக் கொண்டாள்.

''வசந்தா நீ கிளம்பலாம்!''

''வாருங்கள்!'' சேதுவர்மாவின் அறைக்குள் நுழைந்தபடி பேசினாள் அந்த அழகி.

விளக்கை மேஜையில் வைத்தாள்.

"உட்காருங்கள் சேது." என்றவள் மற்றொரு நாற்காலியில் அமர்ந்தாள்.

சேதுவர்மா கட்டிலில் அமர்ந்தார்.

தனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் பெண்மணியை சேதுவர்மா கவனித்தார்.

எங்கேயோ பார்த்துப் பழகி மறந்த முகம்போல் தெரிந்தது. எவ்வளவு முயன்றும் எங்கே பார்த்தோம் என்பது நினைவுக்கு வரவில்லை.

முப்பது வயதுக்கும் குறைவாக மதிப்பிடத் தோன்றும் அவள் முகத்தில், ராஜகளை அலையடித்தது. பொருத்தமான ஆடை ஆபரணங்கள் அணிவித்துத் தலையில் கிரீடமும் பொருத்தினால் பழங்காலத்தின் ஏதோ ஒரு நாட்டையாளும் மகாராணி என்றே நினைக்கத் தோன்றும்.

கட்டளையிடும் கண்கள்!

அழகு வழியும் முகத்தில், அளவாகச் செதுக்கப்பட்ட மூக்கின் கீழ் ஈரம் உலராத உதடுகள். சற்று உள்வாங்கி நீளும் கீழ்ப்புறத் தாடைப் பகுதி. தங்கச் சரிகை இழைகள் எழுந்து நிற்பதுபோல் சன்னமாக வளர்ந்திருக்கும் கைப்பகுதி ரோமங்கள்.

"சேது, நீங்கள் செய்தது முட்டாள்தனமான காரியம்!" அவள் பேசினாள்.

சேதுவர்மா பதில் சொல்லாமல் அவளைப் பார்த்தார். 'தான் பார்த்த அந்த மனித உருவங்கள்... ஒருவேளை பிசாசுகளாக இருக்குமோ?' அவை என்னவாக இருக்கும் என்றே விளங்கவில்லை அவருக்கு.

பின்புறம் நின்றிருந்த பெண் தன்னை நெருங்கி அவள் உதடுகளைத் தன் கன்னத்தில் உரசத் தொடங்கியது நினைவிருந்தது. அப்போது அந்தப் பெண்ணின் வாயிலிருந்து பச்சை ரத்தத்தின் வாடை கவுச்சியாக வீசியதும் நினைவுக்கு வந்தது.

அதே நேரம் முன்புறமாக நின்றிருந்தவள் சேதுவர்மாவின் மீது பாயத் தயாரானாள். சேதுவர்மா முடிந்த மட்டும்



அவர்களிடம் இருந்து விடுபட முயன்றும் முடியாமல் போனது. அவளது பிடி இரும்புக் கயிற்றால் கட்டியது போலிருந்தது. அந்தக் கைகளுக்கு அந்த அளவுக்கு வலுவிருந்தது.

அப்படிப்பட்ட நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தான் இப்போது தன் முன்னால் அமர்ந்திருக்கும் பெண் வந்தாள். இவள் மட்டும் அந்த நேரம் வராதிருந்தால்... என்ன நடந்திருக்கும் என்று தெரியவில்லை. எதையும் உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

"அந்தப் பெண்கள் யார்?" நீண்ட மௌனத்துக்குப் பிறகு சேதுவர்மா கேட்டார்.

"இந்த இடத்தின் மாணவிகள்!" அவள் இயல்பான குரலில் பதிலளித்தாள்.

"என்ன! மாணவிகளா?"

"ஆமாம்... உங்களைப் போலவே வந்து சேர்ந்திருப்பவர்கள்."

"என்னால் இதை நம்பமுடியவில்லை!"

"ஒருவகையில் உங்களது சந்தேகம் சரிதான். இங்கு மனிதர்களும், மனிதர்கள் அல்லாதவரும் வருவதுண்டு. அவர்களுக்குத் தேவையான ஓலைச்சுவடிகள்கூட இங்கு உள்ளன. அதனால் எப்பேர்ப்பட்டவர்கள் வந்தாலும் அவர்களுக்குத் தேவையானதை கற்றுக்கொள்ளலாம். அப்படிப்பட்டவர்கள் பெரும்பாலும் இரவு நேரத்தில் மட்டுமே வருவார்கள்."

"பகலில் வரமாட்டார்களா?" சேதுவர்மா, ஒருவித ஆறுதலுடன் கேட்டார்.

"அப்படியும் சொல்ல முடியாது. பயிற்சியின் சில கட்டங்களில், அவர்களுக்குப் பகலும் இரவும் ஒரே மாதிரி வேறுபாடு அற்றதாகிவிடும்!"

"அவர்கள் எங்கே வசிக்கிறார்கள்?"

"இந்தக் கோவிலகம் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் பரந்து கிடக்கிறது. ஏராளமான அறைகள் இதற்குள் உள்ளன. அதனால்

எத்தனை பேர் வந்தாலும் இதற்குள் தங்க முடியும். யார் எங்கே தங்கியிருக்கிறார்கள் என்று எவரால் சொல்ல முடியும்?''

''அப்படியானால், மனிதனாக வந்திருப்பவன் நான் மட்டும்தானா?'' சேதுவர்மா வியப்புடன் கேட்டார்.

''அப்படித்தான் என்று வைத்துக்கொள்ளுங்கள்.'' அவள் சிரித்தவாறு கூறினாள்.

''நான் ஒன்று கேட்கலாமா?'' சேதுவர்மா அவள் முகத்தைப் பார்த்தபடி கேட்டார்.

''என்ன தெரிய வேண்டும்?'' ஒரு தடவை அசைந்து உட்கார்ந்து கேட்டாள். அப்போது அவள் தலைமுடி ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்கு பனங்குலை போல் அழகாக ஆடி அசைந்தது.

''டாக்டர் சசிதரனின் அப்பா வாசுதேவன் நம்பூதிரி குறிப்பிட்ட விஷ்ணுப்ரியாதேவி யார்?''

''அது... இன்னுமா உங்களுக்குப் புரியவில்லை!'' அவள் மறுபடியும் சிரித்தாள்.

''இதுவரை புரியவில்லை... இப்போது புரிந்துவிட்டது.''

''போதுமா... நான்தான் விஷ்ணுப்ரியா. இந்தக் கோவிலகத்தின் கடைசி வாரிசு.''

''அப்படியென்றால் நான் இங்கு வந்தபோது முதன் முதலாகப் பார்த்தது?''

''அப்படிப்பட்ட பலரையும் நீங்கள் இங்கு காண நேரிடலாம்... வசந்தா மாதிரி. அவள் எனக்கு மிகவும் நெருக்கமானவள்.''

''நான் தேடிவந்த விஷ்ணுப்ரியா, வசந்தாவாக இருக்குமென்று முதலில் நினைத்தேன்.''

''அதிலேதும் தவறில்லையே? வசந்தாவும் அழகிதான். அவளுக்குப் பல விஷயங்கள் தெரியும். இங்கு வந்தவர்களில் மிகவும் அதிகமாகக் கற்றுக்கொண்டது அவள் ஒருத்திதான்.



இப்போது அவளுக்கு வேற்று உடம்புக்குள் புகுந்து கொள்ளும் வித்தை வரை தெரியும்.''

''பார்த்தால் அப்படித் தெரியவில்லை.'' சேதுவர்மா குறிப்பிட்டார்.

''இரவிலும் பகலிலும் ஒரே மாதிரி நடந்து கொள்ளவும் அவளால் முடியும்!''

''அப்படியானால் வசந்தா?''

''நீங்கள் அதிகமாகத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதே நல்லது.''

சேதுவர்மா அதன் பிறகு எதுவும் கேட்கவில்லை.

''நீங்கள் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள் என்று இன்னும் சொல்லவில்லையே?''

''நான் ஒரு டாக்டர். சமீபகாலமாக அற்புத சக்திகள் வாய்ந்த பெண்மணி ஒருத்தி என்னை வேட்டையாடுகிறாள். என்னை மட்டும் என்று சொல்ல முடியாது. என்னுடன் பணிபுரிபவர்களையும்தான். அந்தப் பெண்மணியால் என்னுடன் பணிபுரியும் இருவர் குறிப்பிட்டுக் கூற முடியாதபடி, மரணமடைந்திருக்கின்றனர். சட்டரீதியாக என்னால் அவளை எதுவும் செய்ய முடியவில்லை.'' சேதுவர்மா குறிப்பிட்டார்.

''அதற்குப் பின்னணியில் உள்ள நோக்கம் என்ன?'' விஷ்ணுப்ரியா விசாரித்தாள்.

''அவர்களைப் பொறுத்தவரை என்னைத் தொல்லைப்படுத்த வேண்டிய தேவையே இல்லை. ஒருவேளை வேறு யாராவது தூண்டிவிட்டதால், இப்படிச் செய்கிறார்களா என்றும் புரியவில்லை.''

''அப்படியும் இருக்கலாம். ஒருவேளை உங்களது சொத்துகளைக் கைப்பற்றுவதற்காகவும் இருக்கலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறதா?''

''என்னை விபத்துக்கு ஆட்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு எப்படி எனது சொத்துகள் கிடைக்கும்?''

''அப்படியானால் உங்கள் உறவினர்கள் யாராவது அவர்களைப் பயன்படுத்தலாம்.''

''இருக்கலாம்!''

''இன்னொரு விஷயத்தையும் நீங்கள் கவனிக்கவேண்டும். இந்த மாதிரி விஷயங்களில் ஈடுபட்டவர்கள் சட்டென்று அதை நிறுத்திவிட முடியாது; சாத்தியமில்லை. தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். உடனடியாக நிறுத்தினால்... அவர்களால் திருப்தியடையும் பைசாசிக சக்திகள் அவர்களைத் திருப்பித் தாக்கத் தொடங்கும்.''

அதைக் கேட்ட சேதுவர்மா ஒருகணம் திடுக்கிட்டார்.

அவள் சொன்னது உண்மையென்றால், ரத்னபிரபாதேவி குரூரமான செயல்களைத் தொடர்வாள். புதிதாகப் பிறந்த பச்சைக் குழந்தைகள்தான் அவளது இரை.

தன்னுடைய காரிய ஸித்திக்காகச் சின்னஞ்சிறு குழந்தைகளைப் பலியிடுகிறாள்!

''வாசுதேவன் குறிப்பிட்டது சரிதான். உங்களைப் போன்ற ஒருவரால்தான் அவரை எதிர்க்க முடியும். அதற்காக நீங்கள் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது - சத்ரு சம்ஹார ஹோமம் வரையில்!'' விஷ்ணுப்ரியா சொன்னாள்.

''கடவுளே! இதையெல்லாம் நான் கற்றுக்கொள்ள வேண்டுமா?'' சேதுவர்மா கேட்டார்.

''கற்றுத்தானாக வேண்டும்! எந்த முறையில் அவளை ஒதுக்க அல்லது ஒழித்துக் கட்ட வேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதே. சரி, நான் புறப்படுகிறேன். நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள்...'' அவள் எழுந்தாள்.

''விளக்கு இங்கேயே இருக்கட்டும். திரியை மட்டும் தாழ்த்திவிடுகிறேன்.'' அவள் வலது கைச் சுண்டுவிரலால் எரியும் திரியின் முனைப் பகுதியைப் பின்புறமாக நகர்த்தினாள்.

தீபத்தின் நடுவில் தொட்டபோதும் அவள் முகத்தில் எந்தவிதமான மாற்றமும் தென்படவில்லை.



இதற்கு முன்பு வசந்தாவும் இப்படியே செய்தது சேதுவர்மாவுக்கு ஞாபகம் வந்தது.

விஷ்ணுப்ரியா இருளில் மறைந்தாள்.

கட்டிலிலிருந்து எழுந்த சேதுவர்மா கதவை மூடித் தாழிட்டார். சற்று நேரத்துக்கு முன்பு நடந்த சம்பவங்கள் ஒரு பேய்க்கனவு போலிருந்தது.

மறுநாள் டாக்டர் சசிதரன் தன் அப்பாவைப் பார்ப்பதற்காக இல்லத்துக்குப் போனார். சேதுவர்மா புறப்பட்டுப் போனதைப் பற்றி முதலில் கேட்டுத் தெரிந்துகொண்டார் வாசுதேவன் நம்பூதிரி.

''சேது இப்போது அனேகமாக அங்குதான் இருக்க வேண்டும். அந்த இடத்தைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா அப்பா?'' சசிதரன் கேட்டார்.

''எல்லாம் கேள்விப்பட்டவைதான். நேரில் பார்த்ததில்லை.''

''நம்பத்தகுந்த இடம்தானே...''

''விஷ்ணுப்ரியா இருக்கும்வரை சேதுவுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது என்று உறுதியளிக்கிறேன்.''

''அப்பா, உங்களிடம் நான் மற்றொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டும். அதுதான் டாக்டர் இந்திராபாய் பற்றி...''

''அவருக்கு என்ன!''

''டாக்டர் வாணி மேனோனுக்கு பதிலாக வந்திருக்கிறவர் டாக்டர் இந்திராபாய். பார்த்தால் சாதாரணப் பெண்ணாகத் தெரியவில்லை. பேச்சிலும் நடவடிக்கையிலும் என்னவோ வித்தியாசம் தெரிகிறது.''

''நீ சொல்வது உண்மையாக இருந்தால், அவரை நானும் ஒரு நடவை பார்க்கவேண்டும்.'' வாசுதேவன் நம்பூதிரி சொன்னார்.

''இன்றைக்குச் சாயந்திரமே அழைத்து வருகிறேன்.'' சசிதரன் கூறினார்.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு சசிதரன் குவார்ட்டர்ஸுக்குத் திரும்பினார்.

வீட்டுக்குள் நுழைந்த சசிதரன் உடனடியாக இந்திராபாயின் நம்பரை டெலிபோன் டயலில் சுழற்றினார்.

ஒவ்வொரு தடவையும் மணியடித்ததே தவிர யாரும் டெலிபோனை எடுக்கவில்லை. சசிதரனுக்கு வியப்பாக இருந்தது.

''ஏன், என்னவோ போலிருக்கிறீர்கள்?'' அவர் மனைவி கேட்டாள்.

''ஒன்றுமில்லை, டாக்டர் இந்திராபாய்க்கு டெலிபோன் செய்தேன். அவர் அகப்படவே இல்லை.'' சசிதரன் மிகவும் தாழ்ந்த குரலில் கூறினார்.

அங்கு நடக்கும் சம்பவங்கள்பற்றி ஓரளவு நிர்மலாவுக்கு தெரியும். கணவரின் குரலிலிருந்த வேறுபாட்டை உணர்ந்த நிர்மலாவுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

''ஒரு தடவை நேரில் போய் பார்த்துட்டு வந்துடுறீங்களா?'' நிர்மலா கேட்டாள்.

''அதுதான் நல்லது. இன்று அவருக்கு டூட்டி கிடையாது குவார்ட்டர்ஸில்தான் இருக்கவேண்டும்.'' சசிதரன் எழுந்து சட்டையை மாட்டினார்.

சந்தேகம் நிறைந்த கண்களுடன் டாக்டர் சசிதரன் இந்திராபாயின் குவார்ட்டர்ஸை நோக்கி காரைச் செலுத்தினார்.

கார் இந்திராபாயின் வீட்டு முன் நின்றது.

கேட் மூடிக் கிடந்தது. உட்புற போர்டிகோவில் இந்திராபாயின் வெள்ளை மாருதி கார் நிற்பதைப் பார்த்ததும் சசிதரன் ஓரளவு ஆறுதலடைந்தார். மூடிக் கிடந்தாலும் கேட் பூட்டியிருக்கவில்லை.

கேட்டைத் திறந்துகொண்டு நடந்தவர் வாசல் கதவின் மேற்புறமிருந்த காலிங்பெல்லை அழுத்தினார்.

உட்புறத்தில் மணியடிக்கும் சத்தம் அவருக்குத் தெளிவாகக் கேட்டது.



கதவு திறக்கும் விநாடியை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

ஆனால், கதவு திறக்கப்படவில்லை.

இரண்டு மூன்று தடவை காலிங்பெல்லை அழுத்தினார்.

ஏமாற்றமடைந்தவராக டாக்டர் சசிதரன் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

அப்போது பக்கத்து வீட்டின் சுவர் ஓரமாக இளம்பெண் ஒருத்தி வந்து நின்றாள். சுரிதார் அணிந்திருந்த அவளுக்கு வயது பதினைந்து இருக்கலாம்.

''யாருங்க?'' சசிதரனிடம் கேட்டாள்.

டாக்டர் சசிதரன் காம்பௌண்டுச் சுவரின் அருகே சென்றார்.

''இது டாக்டர் விலாசினியின் குவார்ட்டர்ஸ்தானே?'' டாக்டர் கேட்டார்.

''ஆமாம்!''

''நீ யாரும்மா?''

''நான் அவர் மகள்!''

''டாக்டர் வீட்டில இருக்காங்களா?''

''இல்லை. ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காங்க.''

''இந்த வீட்டுல இருக்கிற டாக்டரம்மா எங்கே போனாங்கன்னு ஏதாவது தெரியுமா? கார் இங்கேயே இருக்கு. ஆனா, அவங்களைக் காணோமே!''

''நேத்துச் சாயங்காலம் நான் அவங்களைப் பார்த்தேன். எங்கேயோ போயிட்டு வந்தாங்க.''

''அவங்ககூட வேற யாராவது இருந்தாங்களா?''

''யாரும் இல்லை. தனியாத்தான் வந்தாங்க.''

''அதுக்குப் பிறகு நீ அவங்களைப் பார்க்கவே இல்லையா?''

''இல்லைங்க!'' அவள் பதிலளித்தாள்.

''சரி, அவங்க வந்தா டாக்டர் சசிதரன் வந்து விசாரிச்சதா சொல்ல முடியுமாம்மா?''

''சொல்றேன். அம்மாகிட்டயும் சொல்லி வைக்கிறேன்'' சொல்லிவிட்டு அவள் தனது வீட்டு வாசலை நோக்கி நடந்தாள்.

டாக்டர் சசிதரன் வெளியே வந்து கேட்டை மூடித் தாழிட்டார். காரில் ஏறி, ஸ்டார்ட் செய்தார்.

வளைவு திரும்பும்போது யதேச்சையாக ரியர் மிரர் மூலம் பின்புறம் பார்த்தார்.

இந்திராபாயின் குவார்ட்டஸுக்கு முன்பாக சிவப்பு நிற மாருதி ஒன்று நிற்பதுபோல் தெரிந்தது.

ரத்னபிரபாவின் காரின் நிறமும் சிவப்புதான் என்பது டாக்டர் சசிதரனின் நினைவில் எழுந்தது.

'அவள் இப்போது இங்கு வர வேண்டிய அவசியம் என்ன?'

உடனே திரும்ப வேண்டும் என்று நினைத்தாலும் கார் சற்றுத் தொலைவு முன்னால் வந்துவிட்டிருந்தது.

'சே... தவறு செய்துவிட்டோம்!' என்று நினைத்தவராகத் தனது காரை, ரிவர்ஸ் எடுத்துத் திரும்பி இந்திராபாயின் குவார்ட்டர்ஸை நோக்கி விரைந்தார்.

அதே பழைய வளைவில் திரும்பும்போது சிவப்பு நிற மாருதி, திரும்பி விரைந்து எதிர்த் திசையில் செல்வது தெரிந்தது.

## 16

**அ**ந்த சிவப்பு மாருதி கார் எதற்காக வந்திருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள டாக்டர் சசிதரன் விரும்பினார்.

தனது காரை இந்திராபாயின் வீட்டுக்கு முன்னால் நிறுத்தினார். டாக்டர் விலாசினியின் மகள் பழையபடி அங்கேயே நின்றிருந்தாள். 'புறப்பட்டுப் போன கார் திரும்பவும் வந்திருப்பது எதற்காக?' என்பது போல் அவள் பார்த்தாள்.



காரிலிருந்து இறங்கிய சசிதரன் அவளை அழைத்தார்.

''சற்று நேரத்துக்கு முன்னால் வந்த சிவப்பு மாருதி காரில் யார் இருந்தார்கள்?'' சசிதரன் விசாரித்தார்.

''ஒரு அம்மா இருந்தாங்க.'' அவள் பதிலளித்தாள்.

''அவங்க கூட வேற யாராவது இருந்தாங்களா?''

''இல்லைனு தோணுது!''

''உங்கிட்ட என்ன கேட்டாங்க?''

''டாக்டர் இருக்காங்களான்னு கேட்டாங்க!''

''இல்லைன்னு சொல்லியிருப்பே... இல்லையா?''

''அதையேதான் சொன்னேன்.''

சசிதரன் திரும்ப காருக்கு வந்தார்.

அவருக்கு ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது. அதாவது டாக்டர் இந்திராபாய்க்கு, ரத்னபிரபா மூலம் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படவில்லை. இருப்பினும் இந்திராபாய் திடுமென்று மறைந்தது ஒரு துர்நிமித்தமாகத் தோன்றியது.

சசிதரன், திரும்பும் வழியில் சேதுவர்மாவின் வீட்டுக்கு வந்து எட்டிப் பார்த்தார்.

கார் வெளியில் நின்றிருந்தது.

உட்புறத்தில் தொலைபேசி மணி இடைவிடாமல் ஒலித்தது.

யாராவது போன் செய்யலாம்.

''அவரைப் பற்றி ஏதாவது செய்தி தெரிந்ததா?'' நிர்மலா, விசாரிக்கப் போய்வந்த கணவரிடம் கேட்டாள்.

''எதுவும் தெரியவில்லை!''

''ராத்திரி நேரத்துலதானே அவங்க போயிருப்பாங்க?'' முன்பு நடந்த சம்பவங்களை நினைவு கூர்ந்தவளாக நிர்மலா கேட்டாள்.

''எப்போது போயிருந்தாலும் அவருக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படவில்லை!''

அன்று பகல் முழுவதும் ரத்னபிரபாதேவி, இந்திராபாய் மற்றும் சேதுவர்மாவின் குவார்ட்டர்ஸுக்கு மாறி மாறி பலமுறை போன் செய்தாள். ஆஸ்பத்திரி மற்றும் மருத்துவ கல்லூரியில் விசாரித்தபோது இருவரும் லீவில் இருப்பதாக சொன்னதால் அவர்களின் வீடுகளுக்கு போன் செய்தாள். ஒன்றும் புலப்படவில்லை.

மாலை நேரமானதுபோது ரத்னபிரபாதேவி தனது பூஜையறைக்குள் நுழைந்தாள். சுவர் அலமாரி போலிருந்த இடத்தின் கதவைத் திறந்தாள்.

அதற்குள் சாத்தி வைத்திருந்த பைசாசிக உருவத்தை சற்றுநேரம் பார்த்தாள். உயிரற்றது போலத் தோன்றிய அதன் கண்ணிமைகள் மெதுவாக அசைந்து உயர்ந்தன.

அதன் முன்புறமிருந்த கல்விளக்கின் திரிகளை ரத்னபிரபா ஏற்றினாள். நெய்யில் மூழ்கிக் கிடந்த திரியின் முனையில் சிவப்பு நிற நெருப்பும், அந்த ஜுவாலையில் இருந்து நூல் போன்ற புகையும் மேலெழும்பின.

கூடவே மட்டமான நாற்றமும் அந்தப் பகுதியில் பரவியது.

ரத்னபிரபாதேவி தன் இடது கையை கல்விளக்கின் மேற்புறமாக அந்த உருவத்தின் முன்னால் வீசினாள்.

அப்போது அதிசயமான காட்சி ஒன்று நிகழ்ந்தது.

திரிகளில் எரியும் ஜுவாலைகள் இரண்டும் ஒரு நாடா போல் நீண்டு அந்த உருவத்தின் கண்களை அடைந்தது. அந்த உருவத்தின் விழிகள் சிவப்பாக மாறின.

அந்த உருவம் சன்னமாக அசைந்தது.

அதிலிருந்து ஒளி ஊடுருவக் கூடியது போல் வெளிவந்த உருவம் ஒன்று காற்றில் மிதந்தபடி வந்து ரத்னபிரபாவுக்குள் புகுந்தது.

அத்துடன் அவள் முகம் மாறியது.

குரூரம் நிரம்பிய தோற்றம் ரத்னபிரபாவின் முகத்தில் தென்பட்டது.



அப்போதும் எதிரே இருந்த பைசாசிகமான உருவம் அவளை உற்றுப் பார்த்தது.

முன்புறமிருந்த ஹோமகுண்டத்தை நோக்கித் தன் இடது கையை அசைத்தபோது, விளக்கில் எரியும் தீ நாளங்கள் ஹோமகுண்டத்துக்குள் தாழ்ந்து வந்தன. கண்ணிமைக்கும் நேரத்துக்குள் ஹோமகுண்டத்துக்குள் தீ ஜுவாலைகள் உயர்ந்தன.

ஜுவாலைகள் பரவிக் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியதும் வலது கையை உயர்த்தி ஹோம குண்டத்துக்குள் செலுத்தி மடக்கியவாறு வெளியே எடுத்தாள். அவள் கை சென்ற பகுதியில் வட்டவடிவமான இடைவெளி தோன்றியது.

"எங்கே அந்த மனிதர்?" நெருப்பு ஜுவாலைகளைப் பார்த்தபடி உரத்த குரலில் கேட்டாள்.

அந்த வட்டம் விநாடிக்கு விநாடி பெரிதானது. அதற்குள் சேதுவர்மாவின் முகம் தெளிவடைந்தது. விரைவிலேயே ஒரு திரைப்படக் காட்சிபோல் அது பின்புறமாக நகர்ந்தது.

வெகு காலத்துக்கு முந்தைய மோஸ்தரிலான வட்டவடிவ மேஜைமீது விளக்கு ஒன்று ஒளி சொரிந்தது. அதன் அருகில் அமர்ந்து சேதுவர்மா ஓலைச் சுவடி ஒன்றை வாசிக்கிறார்.

"இந்த இடம் எது?" ரத்னபிரபாதேவி மந்திரிப்பது மாதிரி கேட்டாள்.

காட்சி மெதுவாக மாறியது. ஒருவாசல் கதவு தட்டுப்பட்டது.

"இடத்தை சரியாகக் காட்டு!" ரத்னபிரபாதேவியின் குரல் கட்டளை போல் ஓங்கி ஒலித்தது.

அதே நேரம் நான்கு புறத்திலிருந்தும் புகைப்படலம் போன்ற ஒன்று பரவிக் காட்சியை மறைத்தது. அதன் பிறகு தென்பட்டவை தெளிவற்றவையாக இருந்தன.

ரத்னபிரபா மடக்கி வைத்திருந்த வலது கையின் முஷ்டியை ஹோமகுண்டத்துக்குள் வலுவுடன் உதறினாள். அப்போது நெருப்புக் கோளம் ஒன்று அந்தக் கையிலிருந்து புறப்பட்டு ஜுவாலைகளை ஊடுருவியது.

நிமிடங்கள் சில கடந்தன.

ரத்னபிரபா ஹோமகுண்டத்தின் நெருப்பு ஜுவாலையையே பார்த்தாள். ஏறத்தாழப் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு அவள் எறிந்த நெருப்புக்கோளம் திரும்பி வந்தது. ஜுவாலைகளைத் தாண்டி வந்த கோளம் அவள் முகத்தின் மீது அருகே வந்து நின்று சுழலத் தொடங்கியது.

"ஓகோ... அப்படியா சேதி?" என்றவாறு மீண்டும் கையை ஹோமகுண்டத்துக்குள் வீச முயன்றவள், ஏனோ கையைப் பின்னுக்கு இழுத்தாள்.

தனக்கு எதிராக யாரோ செயல்படுவதாகத் தோன்றியது.

'அப்படிப்பட்ட நபர் யார்?' அவள் யோசனையில் ஆழ்ந்தாள்.

ரகசியமான ஏதோ ஓரிடத்திலிருந்தபடி டாக்டர் சேதுவர்மா செயல்படுகிறார் என்பது அவளுக்கு விளங்கியது. ஆனால், அது எந்த இடம் என்பது பிடிபடவில்லை!

சேதுவர்மா ஓலைச்சுவடியிலிருந்து கண்களை எடுத்தார். சற்று நேரத்துக்கு முன்பு ஏதோ ஒன்று சீறிப்பாய்ந்து வந்த சத்தத்தை சேதுவர்மாவும் கவனித்தார். ஜன்னல் வழியாக ஒரு கிரிக்கெட் பந்தின் அளவுள்ள நெருப்புக் கோளம் ஜன்னலைத் தாண்டி அவரை நோக்கி வந்தது.

என்ன செய்வது... இதை எப்படி சமாளிப்பது என்று யோசித்தபோதுதான் விஷ்ணுப்பிரியா அங்கு வந்து சேர்ந்தாள்.

"இது என்ன... இங்கே வந்து வட்டமடிக்கிறது?" என்றவாறு லாகவத்துடன் கையை நீட்டி அதைப் பிடித்தாள்.

சேதுவர்மா இமைக்க மறந்தவராக வியப்புடன் அந்தக் காட்சியைப் பார்த்தார். கையில் பிடித்த நெருப்புக் கோளத்தை அடுத்த விநாடி விசையுடன் ஜன்னல் பக்கமாக வீசி எறிந்தாள்.

"என்ன அது?" வர்மா விசாரித்தார்.



"இதெல்லாம் இந்த இடத்தில் சாதாரணமாக நடப்பதுதான். உங்களாலும் இதே மாதிரி நடந்து கொள்ளமுடியும். நிறையப் படித்து மனத்துள் அவற்றைப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்!" விஷ்ணுப்ரியா கூறினாள்.

"இந்த வித்தைகளைக் கற்றுக் கொள்ளும் அளவுக்கு இங்கு போதிய வாய்ப்புகள் உள்ளனவா?" வர்மா கேட்டார்.

"எல்லாம் இருக்கிறது. படிப்பு மற்றும் பயிற்சியின்போது கவனம் எள்ளளவும் திசை மாறாமல் இருக்கவேண்டும். அவ்வளவுதான். சிலசமயம் பயமேற்படுத்தக் கூடிய ஒருசில காட்சிகளைப் பார்க்கவும் நேரிடலாம்."

"மருத்துவ விஞ்ஞானம் படித்த ஒரு டாக்டர் என்ற முறையில் ஒருபுறம் இதையெல்லாம் என்னால் நம்பவும் முடியவில்லை. நம்பாமலிருக்கவும் முடியவில்லை!" சேதுவர்மா கூறினார்.

"அற்புதமான பல ஸித்திகள் கைவரப் பெற்ற மனிதர்களை வணங்கவும், பூஜை செய்யவும் படிப்பில் உயர்ந்த எத்தனையோ பேர் விரும்பி, அதைச் செய்து கொண்டும் இருக்கிறார்கள் தெரியுமா உங்களுக்கு?"

விஷ்ணுப்ரியா சொல்வது உண்மைதான் என்பது சேதுவர்மாவுக்கும் புரியவே செய்தது.

"இப்போது கடவுளை வணங்குபவர்களைவிட தெய்விக சக்தியுள்ள மனிதர்களை வணங்கும் மனிதர்கள்தான் அதிகம்." விஷ்ணுப்ரியா கூறினாள்: "அதனாலேயே அப்படிப்பட்டவர்கள் கடவுளைவிட உயர்ந்தவர்களாகிவிட மாட்டார்கள்!"

சேதுவர்மா அவளையே பார்த்தார். அவள் தொடர்ந்தாள்.

"ஆனால், அப்படிப்பட்டவரின் ஆத்மா மரணத்தை வெல்லும் வல்லமை பெற்றுவிடும். பஞ்சாரம் என்னும் இந்த உடம்புக்கூட்டை விட்டுச் செல்ல நேரிடும்போது வேறு ஏதோ ஒன்றைப் பற்றிப் பிடித்துக்கொண்டு அப்படியே ஆத்மப் பயணத்தைத் தொடர முடியும். அப்படிச் செய்யும்போது அவர்கள் ஒவ்வோர் உடம்பிலும் சம்பாதித்த அறிவையும்

ஒன்றுசேர்த்து அறிவுச் சுடருடன், மகத்தான சக்திகளையும் பெறுவார்கள்.''

சேதுவர்மா சந்தேகத்துடன் அவளையே பார்த்தார்.

எரியும் எண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் அவள் முகத்தில் ஏதோ ஒரு பிரத்தியேக ஒளி பிரதிபலிப்பதாக சேதுவர்மாவுக்குத் தோன்றியது.

''சரி... நீங்கள் உங்களது வேலையைத் தொடருங்கள். நான் இங்கே உட்கார்ந்திருந்தால் உங்கள் படிப்புக்கு இடைஞ்சலாக இருக்கும்.'' அவள் எழுந்தாள்.

அசாதாரணமாக ஏதோ ஓர் அழகு அவளைச் சூழ்ந்திருப்பதாக சேதுவர்மாவுக்குத் தென்பட்டது.

டாக்டர் இந்திராபாயிடம் தென்பட்டது மாதிரியே!

விஷ்ணுப்ரியா அந்த அறையிலிருந்து வெளியேறினாள்.

சேதுவர்மா மீண்டும் தனிமையில் ஆழ்ந்தார்.

பழங்கால ஓலைச்சுவடிகளை அவர் ஒவ்வொன்றாகப் புரட்டினார்.

அந்தப் பழைய கூடத்தின் ஏதோ ஒரு பகுதியில் நாழிகை மணி அடிப்பது கேட்டது.

தற்போதைய கணக்குப்படி மணி பன்னிரண்டு.

ரத்னபிரபாதேவி அந்த சந்தர்ப்பத்தில் மற்றொரு முயற்சியில் ஈடுபட்டிருந்தாள்.

பைசாசிகமான உருவத்துக்கு முன்னால் அமர்ந்து பயங்கர ஹோமம் ஒன்றை நடத்துகிறாள். தனக்கு நேர்ந்த தோல்வியை நினைத்த அவள் மனம் மருகியது.

பைசாசிக மந்திரத்தை உருவிட்டவாறு அவள் அந்த உருவத்தின்மீது கையை உதறினாள். மழைத்துளி போல் ரத்தத் துளிகள் அந்த உருவத்தின்மீது எங்கிருந்தோ வந்து விழுந்தன. ஒரு சில துளிகள் அந்த உருவத்தின் உதடுகளிலும் விழுந்தன.



சட்டென்று அந்த உருவம் அசைந்தது.

அசைவற்றதாகத் தோன்றிய அந்த உருவத்தின் உதடுகள் ரத்தத் துளிகளை நாக்கால் நக்கிச் சுவைத்து விழுங்கியது.

ரத்னபிரபாதேவி மெதுவாக எழுந்தாள்.

படிகளைக் கடந்து நிதானமாகக் கீழ்ப்புறத் தளத்துக்கு வந்து சேர்ந்தாள்.

வாசலில் நின்றிருந்த சிவப்பு மாருதி காரில் ஏறாமல், கேட்டைத் தாண்டி வெளியே வந்து வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

பண்ணார மூலைக்கு வந்தவள் ஆலமரத்தின் அடியில் நின்றாள். பாம்புகள் வளைந்து வளைந்து தொங்குவதுபோல் அமைந்திருந்த வேர்களை மிதித்து சூலத்தைக் கையில் எடுத்தாள்.

இடதுகையால் சூலத்தைப் பிடித்தபடி ஆலமரத்தின் மீது அடித்திருந்த ஆணி ஒன்றை ஒரே இழுப்பில் வெளியே எடுத்துத் தரையில் வீசியெறிந்தாள்.

ஆணி விழுந்த இடத்தில் புகைச்சுருள் ஒன்று உயர்ந்தது. அது மறைந்தவுடன் அந்த இடத்தில் பெண்ணுருவம் நின்றிருந்தது.

பேரழகியான இளம்பெண்!

சரிகை வைத்த புடவையும், அதே நிற ரவிக்கையும் அணிந்திருந்தாள்.

பின்புறம் இடுப்பின் கீழ்ப்பகுதிகளைத் தொடும் அடர்ந்து நீண்ட தலைமுடி!

''நீலி, உன்னை விடுதலை செய்திருக்கிறேன். இங்கிருந்து புறப்படும் நீ முதலில் அந்த சேதுவர்மாவின் கதையை முடிக்க வேண்டும்!'' ரத்னபிரபாதேவி கூறினாள்.

''அவர் எங்கே இருக்கிறார்?'' அந்தப் பெண் கேட்டாள்.

''இளயிடத்துக் கோவிலகத்துக்குள்... அங்குள்ள விஷ்ணுப்ரியாவின் அருகில்... ஜோதிர்மயியை அவள் இன்னும் சரியாகத்

தெரிந்து கொள்ளவில்லை. இனிமேல்தான் தெரிந்து கொள்ள போகிறாள்!'' ரத்னபிரபாதேவி ஆத்திரத்துடன் பேசினாள்.

அப்போது அவள் முகம் வேறொரு முகம் மாதிரி இருந்தது.

விடுதலையடைந்த நீலி எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் அந்த மரத்தில் ஆணியறையப்பட்டவள்.

துர்மந்திரவாதியான ஜோதிர்மயி ஒரு காலத்தில் பைசாசிக சக்திகளுக்காக கன்னிப்பெண்களை பலி கொடுக்கும் வழக்கத்தைப் பின்பற்றினாள். அவ்வாறு பலி கொடுக்கப்படும் பெண்கள் பின்னர் ரக்ஷஸாக மாறுவார்கள். இப்படிப்பட்ட ரக்ஷஸுகளை ஆலமரம் அல்லது எட்டி மரத்தில் ஆணியறைந்து கட்டிப் போடுவார்கள்.

அவற்றுக்கு விடுதலையளித்தால், தனக்கு விடுதலை அளித்தவருக்காக எந்த நேரமும், எப்படிப்பட்ட வேலையையும் செய்யவும் அவை தயங்குவதில்லை. உயிரோடிருந்த காலத்தில் தங்களைக் கொலை செய்த நபரையே கூட ரக்ஷஸுகள் அடையாளம் தெரிந்துகொள்ள முடியாது.

அங்கிருந்து புறப்பட்ட நீலி இளயிடத்துக் கோவிலகத்தை அடைந்தாள். கோவிலகம் அமைந்திருக்கும் காம்பௌண்டுக்குள் தென்மேற்கு மூலையில் உயரமாகச் செழித்து வளர்ந்திருந்த எட்டி மரத்தில் ஏறிக் காத்திருந்தாள்.

மறுநாள் காலையில் சேதுவர்மா படுக்கையிலிருந்து எழுந்தார்.

கோவிலகத்தின் தென்மேற்கு மூலையில் குளம் இருந்தது. ஏராளமாகப் பாசிபடிந்து கிடந்தாலும், குளம் எந்த விதத்திலும் சீர்கேடடையாமல் இருந்தது.

அங்கங்கே தெளிந்த நீர் தென்பட்ட பகுதியில் தாமரைப் பூக்கள் மலர்ந்திருந்தன.

சேதுவர்மா குளக் கரையில் வந்து நின்றார்.

எத்தனையோ வருடங்களாக நகரின் குழாய்த் தண்ணீரில் குளித்துப் பழகிய சேதுவர்மாவுக்கு குளத்தில் இறங்கிக் குளிக்க ஆசை பிறந்தது.



சுற்றுமுற்றும் பார்த்தார். எவரும் கண்களுக்குத் தென்படவில்லை.

எங்கும் அமைதி நிலவியது.

மறுகரையில் இருளைக் கவர்ந்தெடுத்ததுபோல் எட்டிமரம் நின்றிருந்தது. அதன் இலைகள் கூட கருமை நிறமுடையது தானோ என்று நினைக்குமளவு கருமையாகத் தென்பட்டது. அமைதியாக நிற்கும் எட்டி மரத்தை சேதுவர்மா சற்றுநேரம் பார்த்தபடி நின்றார்.

அதே நேரம் எட்டி மரத்தில் அமர்ந்திருந்த நீலியும் சேதுவர்மாவைக் கண்கொட்டாமல் கவனித்தாள்.

துண்டு கட்டிய சேதுவர்மா குளத்தின் படிக்கட்டுகளில் இறங்கினார்.

குளிர்ந்த நீரில் கால்பட்டதும் மெய்சிலிர்த்தது. நீருக்குள் இறங்கியபோது இதமாகவும் சுகமாகவும் தோன்றியது.

ஒரு தடவை நீரில் மூழ்கியெழுந்தபோது உடம்பிலிருந்து ஏதோ ஒரு பாரம் இறங்கியது போன்ற உணர்வு தோன்றியது.

சேதுவர்மா மறுபடியும் மூழ்கியபோது எதுவோ குளத்துக்குள் விழுந்த சத்தம் கேட்டது.

சந்தேகம் ஏற்பட்டதால் சேதுவர்மா, நீர்ப்பரப்பிலிருந்து விலகி, படிக்கட்டில் ஏறி நின்றார்.

குளத்தின் எதிர்க்கரையில் நீர்ப்பரப்பின்மீது நீர்ச்செடி கொடிகள் மெதுவாக மேலெழும்பின. எனவே, தண்ணீரில் எதுவோ விழுந்திருக்க வேண்டுமென்பது உறுதியானது.

குளத்தின் மேற்பரப்பு அசைவற்றுப் போவது வரையில் காத்திருந்தார். ஏதோ விபரீதம் காத்திருப்பதாக அவரின் உள்ளுணர்வு கூறியதால் குளியலை அத்துடன் முடித்துக் கொண்டார்.

காலையில் சிற்றுண்டி சாப்பிடும்போது குளத்தில் தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை வசந்தாவிடம் கூறினார்.

''அங்கு அந்த எட்டி மரத்தைத் தவிர வேறு எதுவும் இல்லையே? அதிலிருந்து குளத்தில் விழ என்ன இருக்கிறது?'' வசந்தா கேட்டாள்.

''உங்கள் தம்புராட்டி எங்கே போனார்?'' சேதுவர்மா கேட்டார்.

''அவர் பெரும்பாலும் பகல் நேரத்தில் பூஜையில் ஈடுபட்டிருப்பார். சில நாட்கள் விடியற்காலையில் வெளியே எங்காவது போவது வழக்கம். அவர் சொந்தக்காரர்களின் வீடு பக்கத்தில் ஏராளமாக உள்ளன!'' வசந்தா கூறினாள்.

''உனது வீடு எங்கே இருக்கிறது?'' சேதுவர்மா கேட்டார்.

''நாங்கள் தலைமுறை தலைமுறையாக இங்கேயே தங்கியிருப்பவர்கள்!'' வசந்தா கூறினாள்.

அப்போது விஷ்ணுப்ரியா சொல்லியிருந்த விஷயம் சேதுவர்மாவின் நினைவுக்கு வந்தது.

தனக்கு முன்னால், சற்றுத் தள்ளி நிற்கும் அழகான இவள் 'மனிதப்பெண் அல்ல' என்று நினைப்பதே அவர் மனத்துக்குக் கஷ்டமாக இருந்தது!

## 17

''எனது சமையல் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'' காலைப் பலகாரத்தைச் சாப்பிட்டுவிட்டு சேதுவர்மா கை கழுவும்போது வசந்தா கேட்டாள்.

''என்னைப் பொறுத்தவரை இதெல்லாமே அதிகம்'' சேதுவர்மா பதிலளித்தார்: ''இவ்வளவெல்லாம் தேவையே இல்லை!''

''எதற்காக இந்தக் கோவிலகத்துக்கு வந்திருக்கிறீர்கள்? நீங்கள் வரப்போகிறீர்கள் என்று தம்புராட்டி சொல்லியிருந்தார். நீங்கள் ஒரு டாக்டர் என்றும் சொன்னார்.'' வசந்தா கேட்டாள்.



''என்னை வேட்டையாடும் ஒரு பெண்மணியுடன் போராட வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான்!''

''உங்கள் எதிராளி மந்திரவாதினியா என்ன?''

''ஆமாம். அந்தப் பெண்மணியின் சக்தியினால் எங்களது மருத்துவமனையைச் சேர்ந்த இரண்டு பெண் டாக்டர்கள் சந்தேகத்துக்குரிய முறையில் மரணமடைந்தனர்!''

''மாந்திரீக வித்தை தெரிந்தவர்களை அதைக் கொண்டுதான் எதிர்க்க வேண்டும். இங்கு உங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள வசதியும் வாய்ப்பும் உள்ளன.''

''இதற்கு முன்பு என்னைப்போல் வேறு யாராவது இங்கு வந்திருக்கிறார்களா என்ன?'' சேதுவர்மா கேட்டார்.

''இல்லை... எனக்குத் தெரிந்து இப்படி வந்திருக்கிற முதல் மனிதர் நீங்கள்தான்!''

''உண்மையாகவா?'' சேதுவர்மா சந்தேகத்துடன் அவளை உற்றுப் பார்த்தார்.

''சரி, நான் வரட்டுமா? உள்ளே தலைக்குமேல் வேலை குவிந்து கிடக்கிறது!'' சொல்லிக்கொண்டே வசந்தா உட்புறம் போனாள்.

சேதுவர்மா, அவருக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குள் சென்று அமர்ந்தார்.

'இரவு நேரங்களில் எங்கும் போகாதீர்கள்' என்று விஷ்ணுப்ரியாவும் எச்சரித்திருந்தாள்.

பகல் நேரத்தில் எப்படிப்பட்ட பைசாசிக சக்தியும் எதுவும் செய்ய முடியாது என்று சேதுவர்மா கேள்விப்பட்டிருந்தார். எனவே, பகல் நேரத்தில் அந்தக் கோவிலகத்தைச் சுற்றிப்பார்த்தால் என்ன என்று நினைத்தார்.

அறையிலிருந்து வெளியேறி வலது புறமாக நடந்தார்.

எந்தப் பக்கம் திரும்பினாலும் நீண்ட வராந்தாக்கள் தென்பட்டன. அதன் இரண்டு புறங்களிலும் ஏராளமான அறைகள்.

ஒவ்வொரு கதவும் சிற்ப வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

எந்த அறையின் கதவும் பூட்டப்பட்டிருக்கவில்லை.

ஒன்றிரண்டைத் திறந்து பார்த்தார். அதற்குள் என்னென்னவோ கருவிகள் இருந்தன. சிலந்தி வலைகள் குறுக்கும் நெடுக்குமாக ஏராளமாக இருந்ததால் அந்த அறைகளுக்குள் நுழைவதும் கஷ்டமாக இருந்தது.

திரும்பி நடந்து முந்தையநாள் இரவில் நுழைந்த சுவடிகள் வைத்துள்ள நூல் நிலையத்தை அடைந்தார்.

மேஜைகளின் மீது அந்தப் பெண்கள் வாசித்த ஓலைச் சுவடிகள் எதுவும் தட்டுப்படவில்லை. சுவரை ஒட்டி நிறுத்தி யிருந்த அலமாரிகள் மீது கண்களை ஓட்டினார் சேதுவர்மா. தோலினால் பைண்ட் செய்யப்பட்ட புத்தகங்கள் அங்கு ஏராளமாக இருந்தன.

எல்லாம் பழங்காலப் புத்தகங்கள். செப்புத் தகட்டால் தயாரான புத்தகங்கள்கூட அங்கு இருந்தன. ஒருபுறத்தில் சில பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

சுவரில் சாவிக் கொத்து ஒன்று தொங்கியது. சேதுவர்மா அதைக் கையில் எடுத்தார்.

முதலில் இருந்த பெட்டியின் சாவித்துவாரத்தில் ஒவ்வொரு சாவியாகப் போட்டுத் திருகினார். ஐந்தாவது சாவி, அதில் பொருந்தியது.

பெட்டி திறந்து கொண்டது.

சட்டென்று திடுக்கிட்ட சேதுவர்மா பின்னுக்கு நகர்ந்தார்.

அந்தப் பெட்டிக்குள் அவர் பார்த்த காட்சி எப்படிப் பட்டவரையும் பயப்படுத்தக் கூடியதாக இருந்தது.

முழங்கை வரையிலான ஒருகை!

அது தோல் ஒட்டிச் சுருங்கியிருந்தது. விரல்களும் அப்படியே தென்பட்டன.



முதலில் ஏற்பட்ட பயம், ஒரு டாக்டர் என்ற முறையில் படிப்படியாகக் குறைந்தது.

ஒரு டாக்டராக இல்லாவிட்டால், தனக்கு ஏதேனும் நிகழ்ந்திருக்கலாம் என்றுகூட அவருக்குத் தோன்றியது.

மறுபடியும் அருகே சென்று கவனித்தார்.

ஒட்டிப்பிடித்து உலர்ந்திருந்த தோலுக்குள் எலும்பு இணைப்புகள் தெளிவாகத் தெரிந்தன.

கீழேயிருந்த பெட்டியில் கிடந்த கையைத் தன் இடது கையால் பிடித்து உயர்த்தினார்.

அது ஒரு பெண்மணியின் வலது கை என்பது தெரிந்தது.

உயிரோடு இருந்தபோது அந்தக் கை மிகவும் அழகாக இருந்திருக்கும் என்பதை விரல்களின் அமைப்பு தெரிவித்தது.

சேதுவர்மாவின் நெற்றியில் சுருக்கங்கள் ஏற்பட்டன.

அந்தக் கையின் விரல்களிலேயே அவர் பார்வை பதிந்தது. மோதிர விரலில் அப்போதும் மோதிரம் ஒன்று கிடந்தது.

அந்த மோதிரத்தை இதற்கு முன் எங்கோ பார்த்திருப்பது போல் அவருக்குத் தோன்றியது. சட்டென்று ஞாபகம் வரவில்லை.

பாம்பு வடிவத்தில் இருந்தது மோதிரம்.

யோசனையில் ஆழ்ந்த சேதுவர்மா எழுந்தார்.

சுற்றுமுற்றும் பார்த்தார். எவரும் தன்னை கவனிக்கவில்லை யென்பது புரிந்தது. பெட்டி மாறிவிடக் கூடாது என்பதற்காக மீண்டும் ஒரு தடவை அதை நன்றாகப் பார்த்து மனத்தில் பதித்துக் கொண்டு அதை மூடி வைத்தார்.

மீதமுள்ள பெட்டிகளை உடனே திறந்து பார்க்க ஏனோ தயங்கினார் சேதுவர்மா.

அந்த அறையிலிருந்து வெளியே வந்தவர், இந்தத் தடவை இடதுபுறமிருந்து வராந்தா வழியாக நடந்தார்.

ஒவ்வோர் அறையின் கதவையும் பார்த்தவாறே நடந்தார். சற்று வித்தியாசமாகத் தோன்றிய கதவு ஒன்றைப் பார்த்தபடி நின்றார்.

அந்த ஓர் அறை மட்டும் புதுவிதமான தாழ்ப்பாள் போட்டுப் பூட்டப்பட்டிருந்தது.

சேதுவர்மா அந்தத் தாழ்ப்பாளை இழுத்துப் பார்த்தார்.

''யாரது?'' அவருக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது. சேதுவர்மா திரும்பினார். வசந்தா நின்றிருந்தாள்.

''நான்தான்! ஆமாம் எதற்காக இப்படிக் கேட்டீர்கள்?'' சேதுவர்மா விசாரித்தார்.

''இங்கு அரையிருட்டாகத்தானே இருக்கிறது. அடையாளம் தெரியவில்லை, அதனால்தான் கேட்டேன். ஆமாம் எதற்காக இந்தப் பக்கமாகச் சுற்றுகிறீர்கள்?''

''குறிப்பிடும்படி எதுவும் இல்லை. தனியாக உட்கார நேர்ந்தபோது, சுற்றிப் பார்த்தால் என்ன என்று தோன்றியது. அப்படியே புறப்பட்டு விட்டேன். ஆமாம் இந்தக் கதவு மட்டும் என் இவ்வளவு பாதுகாப்பாகப் பூட்டப்பட்டிருக்கிறது?'' சேதுவர்மா கேட்டார்.

''உண்மையைச் சொல்லட்டுமா? இங்கு நடப்பது எதுவுமே எனக்குத் தெரியாது!'' வசந்தா கூறினாள்.

''இந்த அறையின் சாவி எங்கே இருக்கிறது?''

''ஐயோ... இதையெல்லாம் நீங்கள் என்னிடம் கேட்கக் கூடாது!'' வசந்தா பின்வாங்கினாள்.

''சரி!'' என்ற சேதுவர்மா வேறெதுவும் கேட்காமல் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

**ச**ரியாக அதே நேரம் டாக்டர் சசிதரன் தன் அப்பாவைப் பார்க்கப் போயிருந்தார்.

சேதுவர்மா பயணமானதை ஏற்கெனவே அவரிடம் தெரிவித்திருந்தார் சசிதரன்.



''உடனடியாக அங்கிருந்து கிளம்ப முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. முழுவதுமாகக் கற்றுக் கொள்ளாமல் சேதுவர்மாவை அனுப்பமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.'' வாசுதேவன் நம்பூதிரி கூறினார்.

''அவருக்குப் பழக்கமில்லாத இடம். ஏதாவது ஓர் ஆபத்தென்றால்...''

''அப்படி எதுவும் நடக்காது!''

''இல்லையப்பா. உங்களுக்கு அந்த விஷ்ணுப்ரியாவைப் பற்றி ஏதாவது தெரியுமா?'' சசிதரன் கேட்டார்.

''எனக்கு அவரைப்பற்றி எதுவும் தெரியாது. எல்லாம் கேள்விப்பட்ட செய்திகள்தான்!''

''எப்படிக் கேள்விப்பட்டீர்கள்?''

''அது ஒரு பழைய கதை.'' வாசுதேவன் நம்பூதிரி தொடர்ந்தார்: ''அப்போது எனக்கு உன்னுடைய இப்போதைய வயதுதான். வைத்தியப் படிப்பை முடித்துக் கொண்டு மாந்திரீகப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த காலம். குன்னங்குளம் நகரில் நீலகண்டன் நம்பூதிரியின் வீட்டில் தங்கியிருந்தேன். அவர் குருவான ஒரு பட்டதாரி அப்போது அங்கு வந்தார். பெயர்... ருத்திரன் பட்டதிரி. ஆள் பார்ப்பதற்கு பயங்கரமாக இருப்பார்.''

வாசுதேவன் நம்பூதிரி அவர் உருவத்தை நேரில் பார்ப்பதுபோல் ஒரு கணம் வெளியே பார்த்தார்.

''பிறகு...''சசிதரன் ஆவலால் உந்தப்பட்டவராகக் கேட்டார்.

''அந்த குருவுக்குக் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை வரை தெரியும். கோயிலிலுள்ள சிற்பங்களைப் பார்த்தே, அதற்குள் குடியிருக்கும் மூர்த்தி யார் என்பதைப் பட்டென்று சொல்வார். அவர் மாந்திரீக வித்தை கற்றுக்கொண்டது இளயிடத்து கோவிலகத்திலிருந்துதான் என்று சொல்லியிருந்தார்.''

''அப்போது விஷ்ணுப்ரியாதேவி இருந்தாராமா?'' சசிதரன் வியப்புடன் கேட்டார்.

''அந்தப் பெயரைத்தான் அன்று அவர் குறிப்பிட்டதாக எனக்கு ஞாபகம்!''

''என்னப்பா இது? இதெல்லாம் எத்தனை வருடங்களுக்கு முந்தைய கதை! அப்படியானால், இப்போது அவர் குடுகுடு கிழவியாகி இருப்பாரே!''

''ஆமாம்... எப்படியும் நூறு வயதுக்குமேல் இருக்க வேண்டும் அது உறுதி!''

மாலை நேரம் தாண்டியிருந்தது. இரவு நேரம் நீண்ட பருவமாக இருந்தது அது.

சசிதரன் வாட்ச்சைப் பார்த்தார். மணி ஆறு ஐம்பது.

''நான் புறப்படட்டுமா அப்பா. நிர்மலாவும் குழந்தைகளும் என்னை, எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சமீப காலமாக அவளுக்கு ஏதோ பயம் ஏற்பட்டிருக்கிறது...'' சசிதரன் கூறினார்.

''நிர்மலாகிட்ட இதைப்பற்றி யெல்லாம் எதுவும் பேச வேண்டாம். சரி, மேற்கொண்டும் தாமதிக்காமல் உடனே புறப்படு சசி!'' அப்பா விடைகொடுத்தார்.

அம்மாவைப் பார்த்து ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு சசிதரன் புறப்பட்டார்.

காரை ஸ்டார்ட் செய்தபோது அவர் மனத்தில் காரணமற்ற சந்தேகம் ஒன்று எழுந்தது.

ஆக்ஸிலேட்டரில் காலை வைத்து அழுத்தினார்.

வழக்கத்தைவிட அன்று காரின் வேகம் அதிகமாக இருந்தது.

குவார்ட்டர்ஸ் வாசலில் காரை நிறுத்தினார்.

உள்ளேயும் வெளியேயும் விளக்கு எதுவும் எரியவில்லை. கேட் பூட்டிக் கிடந்தது. காரிலிருந்து இறங்கி கேட்டைத் திறந்தார்.

காலிங்பெல் சுவிட்சில் விரல் வைத்து அழுத்தினார்.

உட்புறம் மணியடிப்பது கேட்டது.

நிமிடங்கள் சில கடந்தன.



கதவை யாரும் திறப்பதாகத் தெரியவில்லை.

டாக்டர் சசிதரனின் இதயத்துடிப்பு சட்டென்று அதிகரித்தது.

கடைசியில் வலுவுடன் கதவை உட்புறமாகத் தள்ளினார்.

ஒருவித முனகலுடன் கதவு விரியத் திறந்து கொண்டது.

''நிர்மலா...'' உரத்த குரலில் அழைத்தார்.

பதில் இல்லை.

லைட் சுவிட்சைப் போட்டார்.

வரவேற்பு அறையின் விளக்கு எரிந்தது. அப்போதும் உள்ளிருந்து எந்தவிதமான சத்தமும் கேட்கவில்லை.

படுக்கையறைக் கதவு மூடியிருந்தது.

அதையும் திறந்து லைட்டைப் போட்டார்.

''என்ன!'' டாக்டர் தன்னையும் மறந்து அலறினார்.

குழந்தைகள் இருவரும் படுக்கையில் படுத்து நன்றாக உறங்குகின்றனர்.

''முகுந்தா... ஷீலா!'' டாக்டர் பதற்றத்துடன் அழைத்தார்.

குழந்தைகளின் மார்பு ஏறி இறங்குவதைப் பார்த்த பிறகுதான் டாக்டர் சசிதரனுக்குச் சற்று நிம்மதி தோன்றியது.

அப்போதும் குழந்தைகள் எழுந்திருக்கவில்லை.

நிர்மலாவையும் பார்த்து விட்டால் போதும்... நிம்மதி அடையலாம்.

மற்ற அறைகளிலும் சமையற்கட்டிலும் குளியல் அறையிலும் தேடினார்.

எங்கும் அவளைக் காணவில்லை. 'எங்கே போயிருப்பாள்?' டாக்டர் பதைப்புடன் யோசித்தார்.

'என்னமோ நடந்திருக்கிறது!' டாக்டர் சசிதரனின் மனத்தில் என்னென்னவோ யூகங்கள் தோன்றின.

குழந்தைகளை எழுப்பினால் விவரம் தெரிந்துகொள்ளலாம் எழுப்பினார். முதலில் கண்விழித்தவள் மகள்தான்.

''ஷீலா... ஷீலா!''

அவள் கண்களை மெல்லத் திறந்தாள்.

''எழுந்திரும்மா... நீங்க யாரும் சாப்பிடலையா?'' அம்மாவைப் பற்றிக் கேட்காமல் மகளை எழுப்புவதுதான் அவர் நோக்கமாக இருந்தது.

கடைசியில் மகள் சுயநினைவுக்கு வந்தபிறகு நிர்மலாவைப் பற்றி விசாரித்தார்.

''அப்பா நீங்க எப்படி இருக்கீங்க?'' ஷீலா கேட்டாள்.

சசிதரனுக்கு எதுவும் விளங்கவில்லை.

''ஏம்மா அப்படிக் கேட்டே?'' சசிதரன் கேட்டார்.

''உங்களுக்கு உடம்பு சரியில்லைனு சொல்லித்தான் ஒரு ஆன்ட்டி வந்து அம்மாவைக் கூட்டிட்டுப்போனாங்க...'' ஷீலா கூறினாள்.

''அப்படியா?'' டாக்டர் துள்ளியெழுந்தார்.

கடிகாரம் எட்டுமணி என்பதைத் தெரிவித்தது. அந்த ஒலி பெரிய டமாரச் சத்தம்போல் வீட்டுக்குள் பிரமாண்டமாக ஒலித்தது.

''உனக்குத் தெரிந்த ஆன்ட்டிதானாம்மா?'' சந்தேகத்தை விலக்கிக் கொள்வதற்காகக் கேட்டார்.

''இல்லைப்பா... எனக்குத் தெரியாதவங்க.'' குழந்தை தூக்கக் கலக்கத்துடன் பதிலளித்தாள்.

என்னமோ சதி வேலை நடந்திருப்பது புரிந்தது.

மகள் 'ஆன்ட்டி' என்று குறிப்பிட்டது ஒருவேளை ரத்ன பிரபாதேவியாக இருக்குமோ என்று நினைத்தபோது அவர் உள்ளம் துடித்தது.



குவார்ட்டர்ஸிலிருந்து வெளியேறி விரைவாக டாக்டர் சிவகுமாரின் குவார்ட்டர்ஸை நோக்கி நடந்தார். காலிங்பெல்லை அழுத்தினார். சற்று நேரத்தில் திருமதி சிவகுமார் கதவைத் திறந்தாள்.

''என்ன டாக்டர்?'' அவள் கேட்டாள்.

''நிர்மலாவைக் காணவில்லை. யாரோ ஒரு பெண்மணி வந்து கூட்டிக்கொண்டு போனதாக மகள் சொல்கிறாள்.'' சசிதரன் படபடப்புடன் பேசினார்.

''ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் எனக்கும் கேட்டது. ஆனால் நான் அதைத் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. ஒருவேளை நீங்கள்தான் வந்திருப்பீர்கள் என்று நினைத்தேன்!''

சசிதரன் திரும்பி நடந்தார்.

என்ன செய்வதென்று தெரியாமல் டாக்டர் ஒரு கணம் திகைத்து நின்றார்.

அன்று இரவு டாக்டர் சேதுவர்மா தனது அறையில் உட்கார்ந்து ஓலைச்சுவடி ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தார்.

மணி பத்து தாண்டியிருக்கும்.

விஷ்ணுப்ரியாவை அன்று முழுவதும் காணவில்லை. வசந்தாவிடம் கேட்டபோது, அவள் எங்கோ வெளியே போயிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

தாழிட்டுப் பூட்டியிருந்த கதவு அவரது நினைவிலிருந்து மறையவில்லை.

அந்த அறைக்குள் ஏதோ ரகசியம் ஒளிந்திருப்பதாக சேதுவர்மாவுக்குத் தோன்றியது.

எப்படியும் அந்த அறையைத் திறந்து பார்ப்பதென்று நினைத்தார் சேதுவர்மா. விநாடிக்கு விநாடி அந்த வேட்கை அவருக்குள் அதிகரித்தது.

இரவு நேரத்தில் எங்கும் போகக் கூடாது என்று விஷ்ணுப்ரியா எச்சரித்தது நினைவிலிருந்தது. அன்றொரு நாள் நூலக

அறையில் நடந்த சம்பவமும் அவர் மனத்திலிருந்து அகல வில்லை.

எப்படியிருந்தாலும் அந்த அறையைத் திறந்து பார்ப்பது என்று தீர்மானித்தார்.

டார்ச்லைட்டை எடுத்து சுவிட்டை அழுத்தினார். வெளிச்சம் சக்தி மிகுந்ததாக இருந்தது. அந்த அறையின் சாவி, நூலகத்தி லிருந்த சாவிக் கொத்தில் இருக்கவேண்டும் என்று நினைத்தார்.

நூலக அறையின் கதவு திறந்து கிடந்தது.

சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு வராந்தா வழியாக நடந்தார்.

குறிப்பிட்ட அறையின் முன்னால் வந்து நின்றார். அதிலிருந்த எந்தச் சாவியும், அந்தக் கதவின் சாவித்துவாரத்தில் பொருந்தவில்லை.

அதே சமயம் யதேச்சையாகப் பாத்தபோது வலது புறமிருந்த மரச்சுவரில் மற்றொரு சாவித்துவாரம் தென்பட்டது. உற்றுக் கவனித்தபோது உட்புறமாகக் கீல் வைத்து இணைக்கப்பட்ட ஒரு சிறிய கதவு அது என்று தெரிந்தது.

அதில் பொருந்துகிற சாவியொன்று சாவிக்கொத்தில் இருந்தது.

அதைத் திறந்தபோது மரச்சுவரின் உள்ளறையிலிருந்து பூட்டியிருக்கும் கதவின் பூட்டைத் திறக்கும் மற்றொரு சாவி கிடைத்தது.

துருவேறியிருந்த அந்தச் சாவியின் உதவியால் கதவின் பூட்டைத் திறந்தார்.

அறைக்குள் காலெடுத்து வைத்தார்.

மூடியிருந்த அறையின் உட்புறத்திலிருந்து தூசு தும்பின் நெடி கடுமையாக மூக்கைத் துளைத்தது.

டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தார். அங்கு அவர் கண்ட காட்சியை அவராலேயே நம்ப முடியவில்லை!



## 18

விசாலமான அந்த அறைக்குள் புராதனமான பொருள்கள் பல இருந்தன. கடவுள்களின் உருவங்கள்... பல்வேறு வகையான ஆயுதங்கள்... சிற்ப வேலைப்பாடு அமைந்த என்னென்னவோ பொருள்களெல்லாம் இருந்தன.

பின்புறத்திலிருந்த ஒரு ஜன்னலின் இடுக்கு வழியாக சன்னமான வெளிச்சம் அறைக்குள் பாய்ந்தது.

தெளிவற்ற அந்த வெளிச்சத்தில் அவருக்குத் தெரிந்த முழு உருவப்படம் ஒன்றுதான், அவரை அந்த அளவுக்கு ஆச்சரியப் பட வைத்தது.

சேதுவர்மா டார்ச் லைட் வெளிச்சத்தை அதன்மீது அடித்துப் பார்த்தார்.

அவரால் தன் கண்களையே நம்ப முடியவில்லை!

அந்தப் படத்திலிருக்கும் நபரைத் தனக்கு நன்றாகவே தெரியும்.

தன்னை மிகவும் அதிகமாகக் கவர்ந்த முகம்!

ஒருதடவை பார்த்தால் சுலபத்தில் மறந்துபோக முடியாத முகம்.

டாக்டர் இந்திராபாய்!

சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக அந்தப் படத்தின் ஒவ்வொரு பகுதியிலும் சக்திவாய்ந்த டார்ச் லைட்டின் வெளிச்சத்தைப் பாய்ச்சிப் பார்த்தார்.

அந்தக் கண்கள்...

மூக்கு...

உதடுகள்... கன்னக் கதுப்புகள்!

எல்லாம் அச்சாக அதுவே தான்!

எந்த ஒரு வித்தியாசமும் இல்லை.

டார்ச் லைட் ஒளி அந்தப் படத்தின் ஓர் இண்டு இடுக்கையும் விடாமல் அலசியது.

கடைசியில் இடது கையின் முழங்கைப் பகுதியில் வந்து நின்றது. மோதிர விரலில் நாக வடிவ மோதிரம் இருந்தது!

டாக்டர் இந்திராபாயின் விரலில் அந்த மோதிரத்தைப் பார்த்ததும் ஞாபகம் வந்தது.

பச்சிலை மற்றும் பூக்களின் சாறுகளைப் பிழிந்தெடுத்துப் பக்குவப்படுத்தி, ஒரு பெரிய கேன்வாஸில் வரையப்பட்டிருந்த படம் அது. படத்தின் கீழே வலதுபுற மூலையில் வரைந்த ஓவியரின் பெயரும் வரைந்த தேதியும் குறிக்கப்பட்டிருந்தது.

மோகனவர்மா, ஓவியர் விருச்சிகம் - 670 (ஆங்கில வருடம் 1494, கார்த்திகை மாதம்)

ஓவியரின் பெயரை சேதுவர்மா இரண்டு மூன்று தடவை வாசித்தார். படம் வரைந்து ஐந்நூறு வருடங்களுக்கு மேலாகிறது!

அப்படியானால் டாக்டர் இந்திராபாயின் வயது?

சேதுவர்மாவினால் அதை நம்ப முடியவில்லை.

அது மட்டுமின்றி வேறொரு கேள்வியும் அவருள் உயர்ந்தது. 'விஷ்ணுப்ரியாவுக்கும் இந்திராபாய்க்கும் என்ன தொடர்பு- உறவு?'

டாக்டர் சேதுவர்மாவின் மூளைக்குள் பதில் கிடைக்காத கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக உயர்ந்தன.

இதையெல்லாம் வைத்துப் பார்த்தால், இந்திராபாயின் பின்னணியில் ஏதேதோ விபரீதங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது. அகால மரணமடைந்த டாக்டர் ராஜாம்பாள், வாணி மேனோனுக்கு பதிலாக இந்திராபாய் சுலபமாக வேலையில் சேரவும் முடிந்திருக்கிறது.

சட்டென்று எதுவோ ஒன்று குலுங்கும் சத்தம் கேட்டு சேதுவர்மா திடுக்கிட்டார். சத்தம் வந்த திசையைப் பார்த்து லைட் வெளிச்சத்தைப் பாய்ச்சினார்.



மச்சிலிருந்து தொங்கும் அலங்கார விளக்கின் சங்கிலி வழியாக அசாதாரணமான பல்லியொன்று கீழிறங்கி வருவது தென்பட்டது.

ஓர் உடம்பு அளவுக்கு வளர்ந்திருந்த அந்தப் பல்லியின் கண்கள் டார்ச் லைட் வெளிச்சத்தில் சிவப்புநிற ரத்தினக் கற்கள் போல் மின்னின.

விளக்கின் திரி கொளுத்தும் பகுதிக்கு வந்த பல்லி அங்கு வசதியாகப் படுத்தபடி அரைவட்ட வடிவமாக தனது தலையை உயர்த்தி, சேதுவர்மாவைப் பார்த்தது.

அது ஒரு விசித்திரமான காட்சியாகத் தோன்றியது அவருக்கு.

மொத்தத்தில் வியப்புகளின் கிடங்காக, அந்தப் படமும் பல்லியும் சேதுவர்மாவின் மனத்தில் இடம் பிடித்தன.

அறையிலிருந்து அவர் வெறியேற முயன்றபோது அந்தப் பல்லி வித்தியாசமான முறையில் குரல் கொடுத்தது.

சேதுவர்மா திரும்பிப் பார்த்தார்.

அதுவரை விளக்கில் படுத்திருந்த பல்லி சட்டென்று அந்த ஓவியத்தின் மீது பாய்ந்தது. சேதுவர்மா டார்ச் லைட் வெளிச்சத்தை பல்லியை நோக்கித் திருப்பினார்.

அந்தப் பல்லி படத்தின் மீது ஊர்ந்து மெதுவாகக் கீழ்நோக்கி வந்தது. கீழ்ப்புறம் வந்த பிறகு பீடம் போன்ற ஒன்றின்மீது ஏறிப் படுத்தது.

திடுமென்றுதான் அந்த இடத்தில் ஒரு சிறிய பெட்டி இருப்பதை அவர் கவனித்தார்.

ஏறத்தாழ ஓர் அடி நீளமும் முக்கால் அடி அகலமுமுள்ள பித்தளைப் பெட்டி. தங்கப் பாம்புகள் பின்னிப் பிணைந்திருப்பது போல் அதன்மீது உருவம் பொறிக்கப்பட்டிருந்தது.

பெட்டியின் மீது படுத்திருந்த பல்லி உதடால் பெட்டியைத் திறக்க முயன்றதுபோல் செயல்பட்டது.

பெட்டியைத் திறக்கும்படி அது தன்னிடம் கூறுகிறது என்று சேதுவர்மாவுக்குப் புரிந்தது.

சேதுவர்மா பெட்டியை நெருங்கியதும் பல்லி அங்கிருந்து தாவி அகன்றது. பெட்டியை உயர்த்தினார். எதிர்பார்த்ததைவிட பெட்டி அதிக கனமாக இருந்தது. மூடியை உயர்த்த முயன்றபோது திறக்கவில்லை. அதன் கீழ்ப்புற மையத்தில் ஒரு சிறிய சாவித்துவாரம் தென்பட்டது.

பல்லி மறுபடியும் குரல் கொடுத்தது.

சேதுவர்மா திரும்பிப் பார்த்தபோது பல்லியின் வாயில் தங்க நிறச் சாவி ஒன்று இருந்தது. சேதுவர்மா, பல்லியின் வாய்க்கு நேராகக் கை நீட்டினார்.

பல்லி இரண்டு உதடுகளையும் விரித்தது. சாவி அவர் உள்ளங்கைகளில் வந்து விழுந்தது. சேதுவர்மா அந்தப் பெட்டி மற்றும் சாவியுடன் அங்கிருந்து வெளியேறினார்.

வெளியே வந்ததும் பழையபடி கதவை மூடிப் பூட்டினார். தங்கச் சாவியை ரகசியமாகப் பத்திரப்படுத்தி வைத்த பிறகு தனது அறையை நோக்கி நடக்கத் தொடங்கினார். நூலகம் வழியாகத்தான் வரவேண்டியிருந்தது.

அந்த அறை வாயிலை அடைந்தபோது உட்புறமாக எட்டிப் பார்த்தார்.

சென்ற முறை பார்த்த பெண்கள் பழையபடி உட்கார்ந்து எதையோ வாசிக்கின்றனர். அவர்களில் ஒருத்தி சேதுவர்மாவைப் பார்த்தாள்.

அவள் உடனே கதவை நோக்கி ஓடி வந்தாள்.

வர்மாவின் அருகே வந்தவள் எதிர்பாராமல் திடுக்கிட்டு ஒரு கணம் பின்வாங்கினாள். அவள் பார்வை அந்தப் பெட்டியின் மீதே பதிந்திருந்தது.

தன் கையிலிருந்த பெட்டிக்குள் அவளைப் பயப்படுத்தத் தக்க எதுவோ ஒன்று இருப்பது சேதுவுக்கு விளங்கியது.



அவளை எச்சரிக்கையுடன் பார்த்த சேதுவர்மா தனது அறையை நோக்கி நடந்தார்.

ஓடிவந்தவள் தன் சினேகிதியை நெருங்கினாள்.

''அந்த மனிதன் பெட்டியைக் கைப்பற்றி விட்டார்!'' அவளிடம் கூறினாள்.

''படத்தின் கீழே இருந்த பெட்டியையா?'' சினேகிதி வியப்புடன் கேட்டாள்.

''ஆமாம்!''

''கண்ணுக்குச் சட்டென்று தெரியாத பல்லி பெட்டியின்மீது படுத்திருந்ததைக் கவனித்தேன்.''

''அந்த மனிதனுக்கு அந்தப் பல்லி தட்டுப்பட்டிருக்காது என்று தோன்றுகிறது.''

''அதே மாதிரி அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்றும் அந்த மனிதனுக்குத் தெரிந்திருக்காது. தெரிந்திருந்தால் பெட்டியை உடனே வீசியெறிந்திருப்பார்!''

''அடியே சிந்து, அந்தப் பெட்டியைத் திறந்து அதற்குள் இருக்கும் சுவடியை அவர் கைப்பற்றிவிட்டால் நம்மையெல்லாம் ஜெயித்து விடுவார்!'' கார்த்திகா சொன்னாள்.

''அதற்கு இடம் தரக்கூடாது. அதற்குள் அந்தப் பெட்டியில் இருக்கும் சுவடியை நாம் எப்படியும் எடுக்க வேண்டும்'' சிந்து தனது விருப்பத்தை வெளியிட்டாள்.

''இனிமேல் அது சுலபம்தான். அதுதான் அறையிலிருந்து வெளியே வந்துவிட்டதே. அந்த அறைக்குள் நாம் நுழைய முடியாமல் இருந்ததுதானே சிக்கல்!''

''எத்தனையோ நூற்றாண்டுகளாக நாம் அதற்குக் காத்திருக்கிறோம். இதோ இந்த மனிதர்... வந்த சில நாளிலேயே பெட்டியை எடுத்துவிட்டார்...'' சிந்து கூறினாள்.

''நீ சொல்வது சரியல்ல. அந்தப் பல்லி அவருக்கு உதவி செய்திருக்கும். அது மட்டுமின்றி, அந்த அறையிலிருந்த படத்தை நீயும் பார்த்திருக்கிறாய் இல்லையா?'' கார்த்திகா கேட்டாள்.

"ஒரே ஒரு தடவை பார்த்திருக்கிறேன். அன்றொரு நாள் தம்புராட்டி அறைக்குள் நுழைந்தபோது, அவருக்குத் தெரியாமல் நாம் அவர்களைப் பின்தொடர்ந்து வாசல் வரை போக வில்லையா?"

"ஞாபகம் இருக்கிறது. அந்தப் படத்துக்கும் தம்புராட்டிக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது." கார்த்திகா கூறினாள்.

"எப்படியும் அந்தப் பெட்டியிலிருக்கும் சுவடியை..." சிந்து நினைவூட்டினாள்.

அதற்குள் சேதுவர்மா தனது அறையை அடைந்து விட்டிருந்தார்.

கடிகாரம் மணி பதினொன்று அடித்தது.

பெட்டியைப் பத்திரமாகக் கட்டிலுக்கு அடியில் வைத்து விட்டு கதவை மூடித் தாழிட்டார்.

மறுநாள் காலையில் சேதுவர்மா குளிப்பதற்காக குளத்தங்கரைக்கு வந்தார்.

அவர் வருவதை எட்டி மரத்திலிருந்து நீலி கவனித்தாள். இடுப்பில் துண்டு மட்டும் கட்டிய சேதுவர்மா படிகளில் இறங்கத் தொடங்கினார். நீர்மட்டப் படியைக் கால்கள் தொட்ட அதே நேரத்தில், எதிர்க் கரையிலிருந்த எட்டிமரத்திலிருந்து ஓர் இலை பறந்து வந்து குளத்து நீரில் விழுந்தது.

அந்த இலையில் நீலி இருந்தாள்.

சேதுவர்மா குளத்தில் மூழ்கியவுடன் கண்ணுக்குக் குளிர்ச்சி கிடைக்கட்டும் என்பதற்காக விழிகளைத் திறந்தார். குழந்தைப் பருவத்தில் எப்போதோ குளத்தில் குளித்த சேதுவர்மாவுக்கு பழைய கால நினைவுகள் மேலெழும்பின.

கண்ணைத் திறந்தபோது, தண்ணீரின் உட்புறத்தில் விகாரமான வடிவம் ஒன்று தன்னை நோக்கிப் பாய்ந்து வருவது தெரிந்தது. திடுமென்று யாரோ தூக்கியதுபோல் நீரில் உயர்ந்தவர் மறுவிநாடி குளத்தின் படிக்கட்டில் குப்புறப் படுத்திருந்தார்.



எல்லாம் கண்மூடித் திறப்பதற்குள் நிகழ்ந்துவிட்டன.

மறுபடி கண்ணைத் திறந்தபோது வசந்தா எதிரில் நின்றிருந்தாள்.

"என்ன... எதையாவது பார்த்து பயந்துவிட்டீர்களா?" அவள் கேட்டாள்.

"இந்தக் குளத்தில் முதலை இருக்கிறதா என்ன?" சேதுவர்மா திருப்பிக் கேட்டார்.

"அது மாதிரி ஏதாவது தட்டுப்பட்டதா?"

"ஏதோ ஒன்று... எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. கிட்டத்தட்ட பல்லி மாதிரி... ஆனால், முதலையல்ல... அதே மாதிரி."

"இந்தக் குளத்தில் இனிமேல் குளிக்காதீர்கள். வாருங்கள். நான் குளியலறையில் தண்ணீர் எடுத்து வைக்கிறேன்." வசந்தா கூறினாள்.

சேதுவர்மா வேட்டியைக் கட்டிக்கொண்டு வசந்தாவுடன் புறப்பட்டார்.

சட்டென்று பின்புறத்திலிருந்து குளத்துநீர் இரைச்சல் எழுப்பியது போலிருக்கவே, இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

தண்ணீர், குளத்தின் மையத்தில் ஒரு தூண் மாதிரி மேற்புறமாக உயர்ந்து நீண்டு, உடனே பயங்கரச் சத்தத்துடன் அப்படியே குளத்துக்குள் விழுந்து அடங்கியது.

"பார்த்தாயா, நான் சொன்னது உண்மைதானே!" சேதுவர்மா அலையடிக்கும் குளத்தைப் பார்த்தபடி சொன்னார்.

வசந்தா குளத்தின் நீர்ப்பரப்பை உற்றுப் பார்த்தாள். அவளது பார்வை நீரை ஊடுருவிக் கீழ் நோக்கிச் சென்றது. குளத்தின் அடிப்பரப்பில் அவளுக்கு ஒரு காட்சி தென்பட்டது.

விகாரமான ஓர் உயிர்ப்பிராணி!

சேதுவர்மா கூறியதுபோல் அதன் முகம் பல்லி மாதிரித் தெரிந்தது.

''வாருங்கள் போகலாம்...'' வசந்தா அங்கிருந்து நகர்வதில் அவசரம் காட்டினாள்.

இருவரும் அங்கிருந்து விரைந்தனர்.

டாக்டர் சசிதரனின் மனைவி நிர்மலா அதே நேரம் ரத்ன பிரபா தேவியின் பங்களாவில் ஓர் அறையில் அடைபட்டிருந்தாள்.

'தான் எப்படி இங்கு வந்து சேர்ந்தோம்?' என்பதே நிர்மலாவுக்குப் புரியவில்லை.

டாக்டர் சசிதரன் அவரது அப்பா வீட்டுக்குப் போன பிறகு,

நிர்மலா குழந்தைகளுக்கு வீட்டுப்பாடம் எழுத உதவி செய்து கொண்டிருந்தாள். அப்போது கேட் அருகில் கார் ஒன்று வந்து நின்றது.

ஒருவேளை சசிதரன் திரும்பி வந்து விட்டாரோ என்று நினைத்து வாசலைத் தாண்டி வெளியே வந்தாள்.

''நான்தான் டாக்டர் இந்திராபாய்'' காரின் உள்ளேயிருந்து ஒரு குரல் கேட்டது.

இந்திராபாயை நிர்மலாவுக்குத் தெரியும்.

''ஏதாவது விசேஷமா?'' நிர்மலா கேட்டாள்.

''டாக்டர் சசிதரன் உங்களை அவசரமாக அழைத்து வரச் சொன்னார். ரோட்டரி கிளப்பில் இருக்கிறார். அவருக்கு உடம்பு சரியில்லை. குழந்தைகளை வேலைக்காரியிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுப் புறப்படுங்கள்!'' இந்திராபாய் கூறினாள்.

நிர்மலா பதைபதைப்புடன் வீட்டுக்குள் நுழைந்து உடைமாற்றி வந்து காரில் ஏறினாள். அதன் பிறகு நடந்தது எதுவும் நினைவுக்கு வரவில்லை. மறுபடி கண்விழித்துப் பார்த்த போது தனக்குப் பழக்கமில்லாத ஓர் அறைக்குள் இருப்பதை உணர்ந்தாள்.



கடிகாரத்தில் மணி பத்து அடித்தது.

ஜன்னலைத் திறந்து பார்த்தபோது வெளியே ஒரே இருட்டாக இருந்தது.

கடுமையான பசி.

சுவரைக் கையால் தடவிப் பார்த்தபோது சுவிட்ச் ஒன்று தட்டுப்பட்டது. அதன்மீது விரலை வைத்து அழுத்தினாள்.

அறையில் விளக்கு எரிந்தது.

ஒரு கட்டில், பீரோ, மேஜை இரண்டு நாற்காலிகள் அகியவை இருந்தன.

சுவரில் போட்டோ ஒன்றும் மாட்டியிருந்தது.

ஒரு பெண்மணியின் படம். நெஞ்சின் மேற்பகுதி மட்டுமே படத்தில் தெரிந்தது.

பழக்கப்பட்ட பெண்மணியாகத் தெரியவில்லை.

அதே நேரம் யாரோ அந்த அறை வாசலுக்கு வெளியே வந்து நிற்பதாகத் தோன்றியது. நிர்மலா யாரென்று தெரிந்துகொள்ள கதவுப் பக்கம் பார்த்தாள்.

கதவைத் திறந்து கொண்டு ஒரு பெண்மணியும் ஒரு மனிதனும் உள்ளே வந்தனர். பெண்மணியைப் பார்த்ததும் ஏற்கெனவே அறிமுகமானவள் என்று புரிந்தது. நினைவுக்கு வந்துவிட்டது.

டாக்டர் சேதுவர்மாவின் வீட்டுக்கு வந்திருக்கும் பெண்மணி. சிவப்பு நிற மாருதி காரில் வந்தவள்.

அந்த மனிதர் நடுவயதுக்காரராகத் தோற்றமளித்தார்.

இருவரும் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தனர்.

''நிர்மலா, உட்காருங்கள்...'' பெண்மணி கூறினாள்.

அவள் உட்கார்ந்தாள்.

''என் கணவர் எங்கே?'' கேட்டாள்.

''நான் சொன்னது பொய்தான். அத்தியாவசியமான ஒரு காரியத்துக்காக உங்களை நான் இங்கு கொண்டுவர வேண்டியிருந்தது...'' அந்தப் பெண்மணி சொன்னாள்.

''உண்மையில் நீங்கள் யார்?'' நிர்மலா பயம் கலந்த குரலில் கேட்டாள்.

''என் பெயர் ரத்னபிரபாதேவி. கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்!'' அவள் பேசினாள்.

அந்தப் பெயரைக் கேட்டதும் நிர்மலா திடுக்கிட்டாள்.

ஒரு தடவை தனது வீட்டில் இந்தப் பெண்மணியைப் பற்றி பேசியிருப்பதும் நினைவுக்கு வந்தது.

டாக்டர் வாணி மேனோன் மற்றும் ராஜாம்பாள் மரணங்களுக்குப் பின்னாலிருந்து செயல்பட்டவள் இந்த பெண்மணிதான் என்று சசிதரன் கூறியதும் ஞாபகத்திற்கு வந்தது.

தனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் பெண்மணி அசாதாரணமான சக்தி வாய்ந்தவர் என்பதும் நிர்மலாவுக்குத் தெரியும்.

''இவள் கணவன் சசிதரன் சேதுவர்மாவின் உயிர் நண்பன். சேதுவர்மாவை அந்த இடத்துக்குச் சொல்லி அனுப்பினவர் இவள் மாமனார். நம்முடைய மிகப் பெரிய எதிராளி'' ரத்னபிரபாதேவி கூறினாள்.

''இவ்வளவு தூரத்துக்கு அவளைக் கொண்டு வந்த பிறகு உயிருடன் திரும்ப அனுப்புவது எனக்கு உசிதமாகப் படவில்லை!'' நடுவயது மனிதர் முதல் தடவையாகப் பேசினார்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் நிர்மலாவின் இதயம் விரைவாகத் துடிக்கத் தொடங்கியது.

''இருங்கள்... சாப்பாடு கொடுத்து அனுப்புகிறேன்!'' ரத்னபிரபா தேவி எழுந்தாள்.

என்ன செய்வது என்று புரியாமல், குழந்தைகளை நினைத்தபடி, வந்தவர்கள் வெளியேறிப்போன வாசற்படியைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள் நிர்மலா.



## 19

அந்த பங்களாவிலிருந்து எப்படியாவது தப்பிப்பதென்ற முடிவுக்கு வந்தாள் நிர்மலா. தன்னை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதற்காக அங்கு கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதும் புரிந்தது. ஏற்கெனவே அவள் ரத்னபிரபாதேவியைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்தாள்.

ரத்னபிரபாதேவி மறுபடி அறைக்குள் வந்தாள்.

''என்ன நிர்மலா, ஏதோ யோசனையில் ஈடுபட்டிருப்பதாகத் தோன்றுகிறதே!'' அவள் கேட்டாள்.

''குழந்தைகளைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்...'' நிர்மலாவின் முகத்தில் கவலை குடிகொண்டிருந்தது.

ரத்னபிரபாதேவி பதில் எதுவும் சொல்லவில்லை.

''இந்த பங்களாவில் உங்களுக்கு எல்லாவிதமான சௌகரியங்களும் இருக்கிறது. மட்டுமல்ல, இனிமேல் நீங்கள் இங்கிருந்து வெளியேறுவதும் நல்லதல்ல!''

''என்ன சொன்னீர்கள்? அப்படியானால் என் குழந்தைகள். கணவர்... இவர்களையெல்லாம்...'' நிர்மலா சற்று உரத்த குரலில் கேட்டாள்.

''இனிமேல் அதையெல்லாம் ஒரு பழைய கனவாக நினைத்துக் கொள்ள வேண்டியதுதான். ஒரு விஷயத்தைச் சொல்லி வைக்கிறேன். எனக்குத் தெரியாமல் இங்கிருந்து தப்பிக்க நினைத்தால் அது ஆபத்தில் முடியும் என்பது ஞாபகமிருக்கட்டும்'' ரத்னபிரபாதேவி எச்சரித்தாள். உடனே அங்கிருந்து வெளியேறவும் செய்தாள்.

அவள் போனவுடன் நிர்மலா கதவை மூடித் தாழிட்டாள். மூடியிருந்த ஜன்னலைத் திறந்து வெளியே பார்வையை ஓட்டினாள்.

வெறும் இருட்டு மட்டுமே தெரிந்தது. அதே நேரம் பங்களாவை ஒட்டியபடி ஏதோ மரத்தின் கிளைகள் அசைவது தெரிந்தது.

இயற்கை வெளிச்சம் இருந்தால்கூட அந்த மரத்தின் இலைகள் அதை மறைத்திருக்கலாம்.

திரும்ப வந்தவள் கட்டிலில் அமர்ந்தாள்.

எப்படியும் தன் கணவர் தேடிவந்து காப்பாற்றுவார் என்று அவள் மனம் நம்பியது. அந்த நம்பிக்கைக்கும் காரணம் இருந்தது.

இப்போதைய சூழ்நிலையில் தன்னைக் கடத்திச் சென்றது யார் என்பதை ஓரளவுக்குத் துல்லியமாக யூகிக்கும் திறமை தன் கணவனிடம் உண்டு என்பது அவளுக்குத் தெரியும்.

எனவே, சசிதரன் தன்னை விடுவித்துச் செல்ல முயற்சி செய்வார் என்பதில் அவளுக்கு சந்தேகமே ஏற்படவில்லை!

குவார்ட்டஸுக்கு வந்த சசிதரன், நிர்மலாவைக் காண வில்லை என்றதும் ஒருகணம் பிரமை பிடித்தவர் போலாகி விட்டார். குழந்தைகளாலும் எதையும் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை.

டாக்டர் சிவகுமாரின் மனைவி சிவப்புநிற மாருதியைப் பற்றிக் குறிப்பிட்டதால், சசிதரனின் சந்தேகம் வலுவடைந்தது.

உடனே ரத்னபிரபாதேவியின் பங்களாவுக்குப் போய் விசாரித்தால் என்ன என்று முதலில் நினைத்தார். உடனடியாக தான் அங்கு போனால், ரத்னபிரபா ஏதாவது தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டால் என்ன செய்வது என்று தோன்றியதால் முதல் யோசனையைத் தற்காலிகமாகக் கைவிட்டார்.

போலீஸில் புகார் செய்யலாமா என்று யோசித்தார். அதுவும் சிக்கலாகிவிடும். ரத்னபிரபாதேவிக்கு எல்லா மட்டங்களிலும் தொடர்பும் செல்வாக்கும் உள்ளது. இந்த நிலைமையில் ரத்னபிரபாதேவி ஒரு துர்மந்திரவாதினி என்று உண்மையைச் சொன்னால் யாராவது நம்புவார்களா என்ன?

நகரின் பெரிய பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிகள் அனைவரும் ரத்னபிரபாதேவியின் பியூட்டி பார்லரின் வாடிக்கையாளர்கள்.



சேதுவர்மாவையும் இப்போது தொடர்பு கொள்ளமுடியாது.

அப்பா-அம்மாவிடம் சொன்னாலும் அளவுக்கு அதிகமாக பயந்து பதறுவார்கள்.

டாக்டர் சசிதரன் ஏகக் குழப்பத்திலிருந்தார்.

மாலை நேரமானபோது குழந்தைகள் அம்மாவைப் பார்க்க வேண்டுமென்று அடம்பிடித்தனர்.

எந்த வழியும் புலப்படாதபோது கடைசியில் அப்பாவையே சந்தித்து விஷயத்தைச் சொல்லி ஆலோசனை கேட்க வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தார் டாக்டர் சசிதரன்.

கடிகாரத்தில் மணி எட்டு அடித்தது.

ரத்னபிரபாதேவி பங்களாவிலிருந்து வெளியேறினாள்.

காரில் ஏறாமல் நடந்தாள். எங்கும் கூரிய இருட்டு, பாதையின் இரு புறமும், கவிந்து வளர்ந்திருந்த மரங்களின் நிழல், இருட்டின் அடர்த்தியை அதிகப்படுத்தியிருந்தது.

ரத்னபிரபாதேவி இருட்டைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

பகல் வெளிச்சத்தில் நடப்பது போலவே நடந்தாள். பண்ணார மூலைக்கு வந்ததும் நின்றாள்.

ஆலமரத்தில் சாத்தி வைத்திருந்த சூலத்தைக் கையில் எடுத்தாள்.

அதன் கூர்மையான முனையைத் தன் நெற்றிக்கு நேராகக் கொண்டுவந்து சட்டென்று அப்படியே பாய்ச்சினாள்.

நெற்றியிலிருந்து ரத்தம் பீறிட்டது.

அந்த ரத்தம் சூலத்தின் முனையில் ஒட்டிப் பதியவும் செய்தது. வலதுகைப் பெருவிரலால் நெற்றிக்காயத்தை அழுத்திக் கீழ்ப்புறமாக இழுத்தாள். பிறகு மரத்தில் அறையப்பட்டிருந்த ஐந்து ஆணிகளில் ஒன்றை உருவினாள்.

''வசுமதி!'' ரத்னபிரபாதேவி அழைத்தாள்.

''சொல்லுங்கள் இங்கிருக்கிறேன்.'' ஆலமரத்தின் பக்க வாட்டிலிருந்து ஒரு பெண் குரல் பதிலளித்தது. சற்று நேரத்தில் தெளிவற்ற பெண் உருவம் ஒன்று ரத்னபிரபாதேவியின் முன்னால் வந்து நின்றது.

அழகி என்றால் அப்படியொரு அழகியாக இருந்தாள் அவள். ஆனால், அவளிடம் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிந்தது.

அவள் உடம்பை ஒளியும் பார்வையும் ஊடுருவும் விதமாகப் பனிப்படலம் போல் தெரிந்தாள்.

''உனக்கு ஏற்ற ஓர் ஆகாரத்தைக் கண்டுபிடித்திருக்கிறேன்'' ரத்னபிரபாதேவி கூறினாள்.

தவிர்க்க முடியாத ஒரு சந்தர்ப்பத்தில் தீ விபத்தில் சிக்கி இறந்துபோன ஒரு விபசாரியின் ஆவி வசுமதி. உடல் சாம்பலாகிப் போன பிறகு ஒரு ரட்சஸாக மாறி அலைந்து திரிந்து கண்ணில் பட்டவர்களையெல்லாம் கொன்று கொண்டிருந்தாள்.

தாங்க முடியாத ஒரு கட்டத்தில் மாந்திரீகனான ஒரு நம்பூதிரி அந்த ஆவியை ஆவாஹம் செய்து ஆலமரத்தில் ஆணியடித்து அறைந்தார்.

ரத்னபிரபா, அந்த ரகசியத்தை மட்டுமல்ல, மொத்த ஆணிகளின் வரலாற்றையும் தெரிந்து வைத்திருந்தாள்.

தேவைப்படும்போது அவர்கள் ஒவ்வொருவரையும் பயன் படுத்துவது என்று ரத்னபிரபா ஏற்கெனவே முடிவு செய் திருந்தாள்.

அவளது வார்த்தைகள் வசுமதிக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது.

புகுந்து கொள்ள ஓர் உடம்பு கிடைத்தால் தனது பழைய தொழிலை உல்லாசமான ஒரு பொழுதுபோக்காகத் தொடரலாம் என்று வசுமதி கண்கிட்டாள்.

உயிருடன் இருந்தபோது அவள் ஒரு 'நிம்போமேனியாக்' ஆக இருந்தாள். எத்தனை ஆடவர்களுடன் கூடினாலும் மனத்துள் ஒருபோதும் திருப்தி அடையாதவளாக இருந்தவள் வசுமதி.



''என்னுடன் வா!'' ரத்னபிரபா கண்ணுக்குத் தெரியாத வசுமதியுடன், நிர்மலா படுத்திருக்கும் அறைக்கு வந்தாள்.

வாசலின் வெளிப்புறம் நின்று சாவித் துவாரத்தின் வழியே பார்த்தாள் ரத்னபிரபா.

நிர்மலா உள்ளே சோர்வுடன் படுத்திருப்பது தெரிந்தது.

கதவு உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்தது.

வெளிப்புறச் சுவரில் ஒண்டியிருந்த பல்லியைப் பார்த்த ரத்னபிரபா சுண்டுவிரலை நீட்டி சைகை செய்தாள்.

ஏதோ கட்டளை கிடைத்ததுபோல் அந்தப் பல்லி, கதவின் மேற்புறமிருந்த வெண்ட்டிலேட்டர் வழியாக நிர்மலா படுத்திருந்த அறைக்குள் நுழைந்தது.

சில விநாடிகளுக்குள் அறையின் தாழ்ப்பாள் விலகும் சத்தம் கேட்டது.

ரத்னபிரபா கதவைத் தள்ளித் திறந்தாள்.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

நிர்மலா மயக்க நிலையில் இருந்தாள். முகத்தைத் தலையணையில் பதித்து ஒரு புறமாகச் சரிந்து படுத்திருந்தாள். அவள் கன்னக் கதுப்புகளில் கண்ணீர் வழிந்து உலர்ந்திருந்தது.

''உம்...'' ரத்னபிரபா சைகை காட்டினாள்.

அந்த அனுமதிக்காகக் காத்திருந்ததுபோல் வசுமதி மெதுவாக நிர்மலாவின் உடலுள் புகுந்தாள்.

சற்று நேரத்தில் நிர்மலா முகத்தைத் துடைத்தபடி எழுந்தாள். இரண்டு கைகளையும் இருபுறம் நீட்டிப் பின்புறமாக வீசி உடற்பயிற்சி செய்வதுபோல் உடம்பை அசைத்தாள்.

அவள் கண்களில் புதியதாக உற்சாகத்தின் வெளிச்சம் தெரிந்தது.

அந்த முகம் நிர்மலாவாக இருந்தாலும், அந்தக் கண்களில் ஒருவித தாகம் பற்றியெரிந்தது.

''நிர்மலா... இனிமேல் உன் பெயர் இதுதான். மறந்து விடாதே!'' ரத்னபிரபா நினைவூட்டினாள்.

''மறப்பேனா... மறக்கமாட்டேன்!'' அவள் பதில் அளித்தாள்.

''இப்படிச் சொன்னால் மட்டும் போதாது. நீ இருக்க வேண்டிய இடம் அப்படிப்பட்டது. எல்லாம் படித்தவரான டாக்டர் சசிதரன். வாசுதேவன் நம்பூதிரி போன்றோர் மத்தியில் இருக்க வேண்டும். அவர்களுக்கு எந்த விதமான சந்தேகமும் ஏற்படாமல் நடந்து கொள்ளவேண்டும். முதலில் உன் பார்வையை மாற்றிக்கொள். அங்குதான் ஆபத்து ஆரம்பமாகும். ஜாக்கிரதை!'' ரத்னபிரபா எச்சரித்தாள்.

''அப்படியானால் எனது ஆசைகள்... கற்பனைகள்...?''

''அதெல்லாம் மிகவும் ரகசியமாக நிறைவேற்றப்பட வேண்டும். நீ தொடர்பு கொள்வதற்கு ஏற்றவாறு ஏராளமான டாக்டர்கள் இளைஞர்களாக இருக்கிறார்கள். அவர்களை உன் இஷ்டப்படி வளைக்கலாம். டாக்டர் சசிதரனும், குழந்தைகளும் எப்போதும் வீட்டில் இருக்கமாட்டார்கள். எல்லாம் உனது ஆசைக்கு ஏற்றதுதான்.''

''நான் எப்போது குவார்ட்டர்ஸுக்குப் போக வேண்டும்?'' நிர்மலா என்கிற வசுமதி கேட்டாள்.

''ரொம்பவும் தள்ளிப்போட வேண்டாம். நாளைக்கே போக வேண்டியதுதான். அங்கு போனபிறகு என்னிடம் இருந்து வந்ததாகச் சொல்லக் கூடாது. டாக்டர் இந்திராபாய் கூட்டிக்கொண்டு போனதாகச் சொல்ல வேண்டும்!'' ரத்னபிரபா மிகவும் பொருத்தமான யோசனை சொன்னாள்.

டாக்டர் இந்திராபாய் ஊரில் இல்லையென்பது ரத்ன பிரபாவுக்கும் தெரியும். எனவே, சொன்னால் அது நம்பக் கூடியதாக இருக்கும் என்று நினைத்தாள்.

''நாளைக் காலையில் உன்னைக் கூப்பிடுகிறேன்.'' ரத்னபிரபா சொல்லிவிட்டு வெளியேறினாள்.



அன்று இரவு டாக்டர் சசிதரன் தூங்கவே இல்லை. மறுநாள் குழந்தைகளுடன் நேராக அப்பாவிடம் வந்தார்.

திடுதிப்பென்று அவர்களைப் பார்த்ததும் வாசுதேவன் நம்பூதிரிக்கு எதுவும் புரியவில்லை. நிர்மலா, வேலையின் பொருட்டு வரமுடியாமல் போயிருக்கலாம் என்று நினைத்தார்.

சசிதரன் நடந்ததை விவரித்த பிறகு வாசுதேவன் நம்பூதிரி திகைப்பில் கல்லாய்ச் சமைந்துபோனார்.

நிர்மலா கடத்தப்பட்டதற்குப் பின்னால் ஏதோ ஒரு திட்டம் இருக்கும் என்று அவருக்கு உறுதியாகத் தெரிந்தது.

''அந்தப் பெண்மணிதான் இதற்கெல்லாம் காரணம் என்று நம்புகிறாயா சசிதரா?'' வாசுதேவன் நம்பூதிரி கேட்டார்.

''வேறு யார் மீது சந்தேகப்பட முடியும்?'' சசிதரன் எதிர்க்கேள்வி கேட்டார்.

சசிதரனின் வார்த்தைகள் வாசுதேவன் நம்பூதிரியை ஒரு வகையில் திணற வைத்தது என்றே சொல்லலாம்.

ரத்னபிரபா, நிர்மலாவைக் கடத்த வேண்டுமானால் திட்டம் சாதாரணமானதாக இருக்காது என்பது உறுதி! ஆனால், அப்படி எதுவும் நடந்துவிடக் கூடாதே என்று அவர் கடவுளிடம் பிரார்த்திக்கத் தவறவில்லை.

''பிரஸ்னம் பார்த்து விடலாமா?'' சசிதரன் கேட்டார்.

''இப்போது வேண்டாம். தேவையானால் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்!'' வாசுதேவன் நம்பூதிரி கூறினார்.

மறுநாள் சசிதரன் வேலைக்குப் போக வேண்டியிருந்ததால், லீவு எழுதிக் கொடுத்துவிட்டு வரலாம் என்று புறப்பட்டார்.

வழக்கமாக ஏழு நாற்பதுக்கு ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும். லீவு லெட்டருடன் சிவகுமாரின் குவார்ட்டர்ஸை அடைந்தார்.

''நிர்மலாவைப் பற்றி இன்னும் எதுவும் தெரியவில்லையா?'' சிவகுமார் கேட்டார்.

"இல்லை!" சசிதரன் ஏமாற்றம் நிறைந்த குரலில் கூறினார்.

சிவகுமாரின் மனைவி இருவருக்கும் டீ எடுத்து வந்தாள்.

சசிதரன் தன்னுடைய குவார்ட்டர்ஸை நெருங்கியபோது உள்ளே பாத்திரங்கள் உருளும் சத்தம் கேட்டது.

சந்தேகத்துடன் உள்ளே நுழைந்து பார்த்தபோது நிர்மலா காஸ் அடுப்பைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தாள்.

"நிர்மலா!" சசிதரன் மகிழ்ச்சியுடன் அழைத்தார்: "எங்கே இருந்த நீ? சொல்... என்ன நடந்தது?"

அவள் திரும்பினாள்.

"உங்களுக்கு உடம்பு சரியில்லை என்று சொல்லி டாக்டர் இந்திராபாய் என்னைக் கூட்டிக்கொண்டு போனார்."

"அப்புறம்?"

"அது உண்மையில்லைன்னு தெரிஞ்சது. என்னை ஒரு அரண்மனைக்குள் கொண்டு போனார்கள். மனித நடமாட்டமே இல்லாத ஒரு பழைய காலக் கட்டடம்."

"உண்மையாகவா?"

அவள் சொன்னது நம்பும்படியாக இருந்தது. கடந்த சில நாட்களாக இந்திராபாயைக் காணவில்லை. அவள் எங்கு போயிருக்கிறாள் என்று யாருக்கும் தெரியவில்லை. எனவே, நிர்மலா சொன்னதை நம்புவதைத் தவிர சசிதரனுக்கு வேறு வழியில்லை.

"அப்புறம் எப்படித் திரும்பி வந்தாய்?" சசிதரன் கேட்டார்.

"டாக்டர் இந்திராபாய் நல்லவளில்லை. என்னால் வேறு எதுவும் சொல்ல முடியவில்லை. அவ்வளவுதான் சொல்வேன். இன்றைக்குக் காலையில்தான் அவளை ஏமாற்றிவிட்டுத் தப்பித்து வந்தேன். மேற்கொண்டு எதுவும் கேட்காதீர்கள். நான் மிகவும் களைத்துப்போய் இருக்கிறேன்..." நிர்மலா பேசமுடியாமல் தடுமாறினாள்.



அன்று இரவு டாக்டர் சேதுவர்மா சுவடி ஒன்றை வாசித்து மனனம் செய்து கொண்டிருந்தார்.

அப்போது விஷ்ணுப்ரியா அறைக்குள் வந்தாள்.

"படிப்பு எந்தக் கட்டத்தில் இருக்கிறது?" அவள் கேட்டாள்.

"அப்படியே அது பாட்டுக்குப் போகிறது?" சேது அவள் முகத்தைப் பார்த்துப் புன்னகையுடன் பேசினார்.

"கடைசியாக என்ன படித்தீர்கள்?"

"அக்னி நிமித்தம்!"

"அப்படியானால், அதை பரிசோதனை செய்து பார்த்து விடலாம். சசிதரனின் மனைவி நிர்மலா காணாமல் போய் விட்டாள் இல்லையா... எங்கே இருக்கிறாள் என்பது அக்னி நிமித்தத்தில் தெரிந்துவிடும்." விஷ்ணுப்ரியா சொன்னாள்.

"பரிசோதிக்கலாம்! ஆனால், அதற்குத் தேவையான பொருள்கள்?"

"அதையெல்லாம் நான் வசந்தாவிடம் கொடுத்து அனுப்புகிறேன். மற்றொரு முக்கியமான விஷயம்... நீங்கள் அந்த அறைக்குள் நுழைந்தீர்கள் இல்லையா?" அவள் கேட்டாள்.

"எந்த அறையில்?"

"பூட்டிய அறைக்குள்!"

"ஆமாம்!"

"அங்கு ஒரு படம் இருந்ததே பார்த்தீர்களா?"

"பார்த்தேன்!"

"அதில் பார்த்த நபரை உங்களுக்குத் தெரியுமா?"

"எனக்கு என்ன தோன்றுகிறதென்றால்..."

"நான்தான் அந்த உருவம் என்றுதான் இல்லையா?" அவள் கேட்டாள்.

சேதுவர்மா அவள் முகத்தை உற்று கவனித்தார்.

# 20

டாக்டர் சேதுவர்மா தன் கண்களைக் கசக்கிக் கொண்டு சந்தேகம் கொண்டவராக உற்று கவனித்தார்.

தனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் விஷ்ணுப்ரியா தேவியிடம் சன்னமான மாற்றம் ஏற்படுவதாகத் தோன்றியது.

அவள் முகம் இரண்டு விதமான வெவ்வேறு டிரான்ஸ்பரன்ஸிகளை ஒன்று சேர்த்துப் பார்ப்பதுபோல் தோன்றியது.

நீர் நிறைந்த விழிகளுடன் பார்க்கும்போது தெரிவது போல் ஒரு தெளிவற்ற தன்மை தெரிந்தது.

சில விநாடிகளுக்குள் விஷ்ணுப்ரியாவின் முகம் இந்திராபாயின் முகமாக மாறியது.

"எனக்கு எதுவும் புரியவில்லை." சேதுவர்மா தோல்வியை ஒப்புக்கொண்டவராகக் கூறினார்.

"இதில் புரியாததற்கு என்ன இருக்கிறது? நான்தான் டாக்டர் இந்திராபாய். உங்களது குவார்ட்டர்ஸுக்கு எத்தனை தடவை வந்திருக்கிறேன். மறந்து விட்டீர்களா?" அவள் கேட்டாள்.

சேதுவர்மா பதில் எதுவும் பேசாமல் கல்லாகச் சமைந்து போனார்.

தன் முன்னாலிருந்த உருவம் இப்போது முற்றிலுமாக டாக்டர் இந்திராபாயாக மாறியிருந்தது!

"அப்படியானால் விஷ்ணுப்ரியா?" சேதுவர்மா கேட்டார்.

"இரண்டும் நான்தான். ஆனால், இந்த உருவம்தான் என் சரியான முந்தைய வடிவம். இந்த உருவத்தில்தான் ஒரு டாக்டராக உங்கள் முன் வந்தேன். என்னுடைய அதிர்ஷ்டம் அந்தப் பெயரில் ஏற்கெனவே ஒரு டாக்டர் இருந்தார். அதனால் வேலை சுலபமாகிவிட்டது!" சிரித்தவாறு சொன்னாள்.

"எனக்கு இன்னும் எதுவும் புரியவில்லை!" சேதுவர்மா தனக்கு முன்னால் தேவலோகப் பேரழகிபோல் உட்கார்ந்திருக்கும் பெண்மணியையே பார்த்தார்.



"உங்கள் ஆஸ்பத்திரியில் நடைபெற்ற சம்பவங்கள் அவைப் போது எனக்குத் தெரிய வந்தன. அதன் பின்னணியில் இருப்பது யார் என்பதும் தெரிந்தது. ஜோதிர்மயிதேவியை நான் அறிவேன். அவளைப் போல் குரூரம் நிறைந்த பெண்மணியை என்னுடைய எந்த ஜென்மத்திலும் பார்த்ததில்லை. அவள் ஒரு கோரப் பிசாசு... எதற்கும் தயங்காதவள்!"

"அப்படியானால் உண்மையான இந்திராபாய்?" சேதுவர்மா கேட்டார்.

"இங்கேயே இருக்கிறார்... வசந்தா" அவள் திரும்பிக் குரல் கொடுத்தாள்.

சற்று நேரத்துக்குள் வசந்தாவும் மற்றொரு பெண்ணும் அந்த அறைக்குள் வந்தனர்.

"இவள்தான் உண்மையான இந்திராபாய். ஆனால், அங்கு நடந்த எதுவுமே இவளுக்குத் தெரியாது!" அவள் சொன்னாள்.

வசந்தா அழைத்து வந்த பெண்ணும் அழகியாக இருந்தாள். அவள், தனக்கு முன்பாக இருக்கும் இந்திராபாயின் தோற்றத்துடன் ஏறத்தாழப் பொருந்தினாள்.

"தொல்லைப்படுத்துவதற்கு மன்னிக்க வேண்டும். இன்னும் ஒரு சில நாட்கள் மட்டும். அந்த வேலை முடிந்துவிட்டால் உங்களை நான் பத்திரமாக அனுப்பிவைப்பேன். இந்த சந்தர்ப்பத்தில் உங்களை அனுப்பினால், முந்தைய பெண் டாக்டர்களுக்கு நேர்ந்த கதிதான் உங்களுக்கும் ஏற்படும். வசந்தா, டாக்டரை கூட்டிக்கொண்டு போம்மா!" அவள் கூறினாள்.

வசந்தா அப்படியே செய்தாள்.

"இப்போதும் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை." சேதுவர்மா அவள் முகத்தையே பார்த்தபடி கூறினார்.

"புரிய வைக்க முயற்சி செய்கிறேன். உண்மையான டாக்டர் இந்திராபாய், உங்கள் மருத்துவமனைக்கு பிடிவாதமாக மாற்றல் கோரியதே என் மூலமாகத்தான். இன்னும் தெளிவாகச் சொல்வதானால் உங்களது மருத்துவமனைக்கு மாற்றல் கேட்டு

வந்ததே நான்தான். எனக்கு அது ஓர் அத்தியாவசியமான காரியமாக இருந்தது. நீங்கள் இந்த அளவுக்குத் தெரிந்து கொண்டால் போதும். மேற்கொண்டு எதையும் கேட்காதீர்கள்' அவள் எழுந்தாள்.

எதிராளி புதிர் சொன்னதுபோல் சேதுவர்மா அதைக் கேட்டுக்கொண்டார்.

'அப்படியானால் அந்த ஓவியத்தில் தெளிவற்றுத் தெரிந்த முழங்கைப் பகுதி...' சேதுவர்மாவின் மனத்தில் சட்டென்று அந்த சந்தேகம் எழுந்தது.

உடனே தன்னிடமிருந்து விலகிச் செல்லும் உண்மையான இந்திராபாயின் முன்கைப் பகுதியைப் பின்புறம் இருந்து கவனித்தார். அவள் முன்கைப்பகுதி நிழலால் மறைக்கப்பட்டது போல் அப்போது தெளிவாகத் தெரியவில்லை.

''இந்திராபாய்க்கு இடது முன்கை கிடையாதா என்ன!'' சேதுவர்மா தனக்குத்தானே கேட்டுக் கொண்டார்.

அவள் அங்கிருந்து அகன்று, பார்வையிலிருந்து மறைந்தாள்.

மறுபடியும் சேதுவர்மா விடை கிடைக்காத கேள்விகளுக்கு மத்தியில் அகப்பட்டார்.

எங்கு பார்த்தாலும் ஒரே மர்மம்.

நிர்மலாவைப் பற்றி அவர்கள் எதற்காகச் சொன்னார்கள்? நிர்மலாவை உடனடியாகக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் சொன்னாளே... ஒன்றும் புரியவில்லை!

அக்னி நிமித்தம் கற்றுவிட்டதால் எதற்கும் ஒரு தடவை அதைப் பரிசோதித்துப் பார்ப்பது நல்லது என்றும் சேதுவர்மா தீர்மானித்தார்.

விஷ்ணுப்ரியா சொன்னதைப் பார்த்தால், நிர்மலாவுக்கு ஏதோ நிகழ்ந்திருக்கிறது. ஒருவேளை அது ஆபத்தாக இருந்தால்...

சாதாரணமாக விஷ்ணுப்ரியா அப்படிச் சொல்லவேண்டிய அவசியமில்லையே!



ஹோமம் செய்வதற்குத் தேவையான பொருள்கள் வேண்டுமே! யாரிடம் கேட்பது?

''என்னவேண்டும் உங்களுக்கு? எதுவோ தேவைப்படுவது போல் தெரிகிறதே!'' வசந்தாவின் குரல். இதோ அறை வாசலில் நிற்கிறாள்.

''அக்னி நிமித்தம் பார்ப்பதற்கான பொருள்கள் தேவை. ஒரு தடவை பரிசோதித்துப் பார்க்கலாம்.'' சேதுவர்மா கூறினார்.

''அதற்கு எந்தவிதமான சிரமமும் இல்லை. அறுபத்து நான்கு விதமான ஹோமத்தையும் நடத்துவதற்கான பொருள்கள் இங்கு இருக்கின்றன. இதோ கொண்டு வருகிறேன்.'' வசந்தா உடனே அங்கிருந்து மறைந்தாள்.

'தான் மனத்தில் நினைப்பதைக் கூட உடனடியாக யூகிக்கும் வல்லமை உள்ளவர்கள் இங்கு இருக்கிறார்கள்!' என்பது சேதுவர்மாவுக்கு விளங்கியது.

சில நிமிடங்களில் ஹோமப் பொருள்கள் வந்து சேர்ந்தன.

''நான் உங்களுக்கு வேறு எந்த வகையிலாவது உதவ வேண்டுமா?'' வசந்தா கேட்டாள்.

''உதவினால் சுலபமாக இருக்கும்.'' சேதுவர்மா அவளைப் பார்த்தவாறு கூறினார்.

வசந்தாவைப் பார்த்தால் இருபத்தொரு வயதுக்கு மேல் மதிப்பிட முடியாது. அழகியும் கூட.

விஷ்ணுப்ரியாவை விட இளமைத்துடிப்பு வசந்தியின் கன்னக் கதுப்புகளில் அதிகம் தென்படுகிறது. முன்னர் எப்போதோ பார்த்து மறந்தது போன்ற குறும்பு நிறைந்த விழிகள் அவளுடையது.

இடுப்பு வரை பரந்து கிடக்கும் அவள் தலைமுடி அலைகள் போல் துள்ளிப் பாய்ந்தன.

தலைமுடி அவிழ்ந்து கிடந்தது.

கருமையான ஆகாயத்தில் ஆங்காங்கே நட்சத்திரங்கள் ஒளிர்வது போல் மல்லிகை மலர்கள் அவள் முடியில் ஒட்டிக் கிடந்தன.

ஹோமத்துக்கான பொருள்களைப் பயன்படுத்த வேண்டிய முறைப்படி வரிசைக்கிரமமாக எடுத்து வைத்தாள்.

சமிதுகளை ஒரே இடத்தில் குவித்து வைத்தாள்.

அரணி மரத்துண்டுகளை உரசி நெருப்பைப் பற்ற வைத்தாள்.

ஹோம குண்டத்தில் நெருப்புக் கொழுந்துகள் உயரத் தொடங்கின. ஒவ்வொரு மந்திரமாக சேதுவர்மா உச்சரிக்க உச்சரிக்க... வசந்தா அவ்வப்போது தேவையான பொருள்கள் அவர் கைக்குக் கிடைக்கும்படியாக நகர்த்தி வைத்தாள்.

அக்னியில் நெய்த்துளி விழுந்தபோது நெருப்பு நாக்குகள் உயர்ந்து எழும்பின.

ஒரு கட்டத்தில் தாமரைப் பூவின் இதழ்கள் குவிவது போல் தீ ஜுவாலைகள் ஒன்று சேர்ந்தன. இந்த ஜுவாலைகளின் மையப்பகுதியில் ஒரு கண்ணாடி மாதிரி இடைவெளி தோன்றி, படிப்படியாக அதில் காட்சிகள் தெளிவடையத் தொடங்கின.

ஓர் ஆலமரத்தின் அடிப்பகுதி!

அதன் கீழே சூலம் ஒன்று, மரத்தின் தாய்த்தண்டின் மீது சாய்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

அருகில் நிர்மலா நிற்கிறாள்.

அவள் உருவம் மாறிக்கொண்டே வந்தது.

இப்போது அங்கு வேறொரு பெண் நிற்பதாகத் தெரிந்தது.

சேதுவர்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

அக்னி நிமித்தத்தில் தென்பட்ட காட்சிகளை சேதுவர்மா உடனுக்குடன் வசந்தியிடம் சொல்லவும் செய்தார். அவற்றை அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டாள்.



அதே நேரம் டாக்டர் சசிதரன் தன்னுடைய குவார்ட்டர்ஸில் தூங்காமல் உட்கார்ந்திருந்தார். மறுநாள் ஒரு ஆபரேஷன் செய்ய வேண்டியிருந்தது. டாக்டர் சேதுவர்மா கவனிக்க வேண்டிய நோயாளி.

சிசேரியன்!

இரண்டு குழந்தைகள்... அதுவும் பெண் குழந்தைகள்.

ஸ்கேனிங்கில் பார்த்தாகி விட்டது.

சற்று காம்பிளிகேட்டடான கேஸ் என்பது சசிதரனுக்குத் தெரியவே செய்தது. எனவே, சர்ஜரி தொடர்பான புதிய புத்தகம் ஒன்றைப் புரட்டவேண்டும் என்று நினைத்தார். புத்தகத்தை எடுத்தார்.

கடிகாரம் பன்னிரண்டு முறை அடித்தது.

கட்டிலில் அவருக்கு அருகே படுத்திருந்த நிர்மலா, கண்ணைத் திறந்து ஓரக்கண்ணால் அவரைப் பார்த்தாள்.

அந்தப் பார்வை இருவேறுபட்ட உணர்வுகளின் கலவையாக இருந்தது. பைசாசிகமும், காமமும் இணைந்த பார்வை.

''என்னங்க தூக்கம் வரலையா?'' அவள் கேட்டாள்.

''இல்லை...'' புத்தகத்திலிருந்து கண்களை உயர்த்தாமல் பதிலளித்தார்.

டாக்டர் சசிதரனைப் பொறுத்தவரையில் இது ஒரு புதிய அனுபவம். நிர்மலா இதுவரை இப்படிக் கேட்டதே இல்லை!

இரவு நேரத்தில் சசிதரன் புத்தகம் எதையாவது எடுத்து விட்டால், அவசியமான வேலை என்று எண்ணி நிர்மலா உறங்கத் தொடங்குவது வழக்கம். அதுவும் அவருக்குப் பழக்கமான ஒன்று.

இந்தக் கேள்வி சசிதரனைச் சற்று வியப்பில் ஆழ்த்தியது.

''என்ன நிர்மலா தூக்கம் வரலையா?'' சசிதரன் கேட்டார்.

''ம்ஹூம்...'' அவள் பதில் வித்தியாசமாக இருந்தது.

அதுவும் வழக்கத்துக்கு மாறானதுதான்!

நிர்மலா, சசிதரனை வைத்த கண் வாங்காமல் தலையிலிருந்து கால் வரை பார்வையால் வருடினாள்.

சசிதரன் சட்டையைக் கழற்றியிருந்தார்.

கழுத்தில் சசிதரனின் தொப்புளைத் தொடுமளவு தங்க சங்கிலி ஒன்று கிடந்தது. அதன்கீழ் முனையில் தாயத்து ஒன்றும் இருந்தது.

சசிதரன் சட்டென்று அவள் பக்கமாகத் திரும்பியதால் அந்த தாயத்து அவள் கண்ணில் பட்டது. ஒரு கணம் அதிர்ந்தாள். உடனே கண்களை இறுக மூடினாள். மறுபுறம் திரும்பிப் படுத்தாள்.

சசிதரன் புத்தகத்தை அருகிலிருந்த மேஜையில் வைத்துவிட்டு சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தார்.

''நிர்மலா...'' அழைத்தார்.

அவள் பதில் குரல் கொடுக்கவில்லை.

''ஓகோ... அதுக்குள்ள தூங்கிட்டியா?'' சசிதரன் கேட்டார்.

சிகரெட்டைப் புகைத்து முடித்ததும் ஆஷ்ட்ரேயில் போட்டு அணைத்துவிட்டு, விளக்கை நிறுத்தினார்.

நிர்மலா கண்களைத் திறந்தாள்.

தனக்கு அருகில் படுத்திருக்கும் கணவனைப் பார்த்தாள். வலது கையை மெதுவாக உயர்த்தி அவர் மார்புக்கு நேராகக் கொண்டு சென்றாள். அவர் உடம்பைத்தொட்டுவிட்டு கண்ணிமைக்கும் நேரத்துக்குள் நெருப்புப் பட்டதுபோல் சட்டென்று கையைப் பின்னுக்கு இழுத்தாள்.

அவள் பார்த்தபோது சசிதரனின் கழுத்தில் கிடந்த தாயத்து அசைவதாகத் தோன்றியது.

அதன் காரணம் உடனே அவளுக்கு விளங்கவும் செய்தது.

அது அவர் கழுத்தில் கிடக்கும் காலம்வரை தான் அவரைத் தொடமுடியாது என்பதும் விளங்கியது.



தன்னுடைய வல்லமையைப் பயன்படுத்தி அதை அவர் உடலிலிருந்து அகற்ற முற்பட்டால், அது ஏதாவது சந்தேகத்தை ஏற்படுத்தலாம் என்றும் பயந்தாள்.

நிர்மலாவுக்குள் இருந்த வசுமதி என்கிற ரட்சஸ் திணறினாள். தனது ஆசைகள் வேறு எப்படித்தான் நிறைவேறும்?

அவள் யோசித்தாள்.

சட்டென்று அவள் மனதில் பக்கத்து குவார்ட்டர்ஸில் வசிக்கும் சிவகுமாரின் உருவம் தெளிவடைந்தது.

டாக்டர் சிவகுமார் தற்போது தனியாக இருக்கிறார். அவர் மனைவி ஊருக்குப் போயிருப்பதை அவர் இங்கு வந்தபோது பேச்சோடு பேச்சாகத் தெரிவித்திருந்தார். எனவே, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முடிவெடுத்தாள்.

அறைக்குள் விளக்கு அணைக்கப்பட்டாலும் வசுமதி எனும் ரட்சஸின் கண்கள் பகலைப்போல் எல்லாவற்றையும் பார்த்தன. அவள் கண்கள் அப்போதும் நெருப்புக் கங்குகளைப் போல் ஜொலித்தன.

கட்டிலிலிருந்து சத்தம் எழுப்பாமல் எழுந்தாள்.

கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

குழந்தைகள் பக்கத்து அறையில் படுத்து உறங்குகின்றனர்.

வரவேற்பு அறைக்கு வந்தவள், வலது புறத்திலிருந்த கதவை நெருங்கி வாசலைத் திறந்தாள்.

வெளியே நல்ல வெளிச்சமிருந்தது. கிழக்கு மேற்காக குவார்ட்டர்ஸை ஒட்டிச் செல்லும் மெயின்ரோட்டில் எரியும் தெரு விளக்குகளின் வெளிச்சம் ஓரளவு இந்தப் பகுதியில் பரவியிருந்தது.

தான் டாக்டர் சிவகுமாரின் வீட்டுக்குப் போவதை யாரும் கவனிக்கக் கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருந்தாள். பிற்பாடு அது ஏதாவது சிக்கலை ஏற்படுத்தலாம்.

நிர்மலாவை சந்தேகப்படத் தொடங்கி, பிறகு கவனிக்க ஆரம்பிப்பார்கள்.

விரைவாக நடந்தவள் வெளிப்புற கேட்டைத் திறந்து ரோட்டுக்கு வந்தாள்.

இடது புறமாக நடந்தாள்.

திடுமென்றுதான் அது நிகழ்ந்தது.

அங்கிருந்து மூன்று டாக்டர்கள் வீட்டுக் காவலுக்காக உயர்ந்த ஜாதி நாய்களை வளர்த்தனர். இரவு நேரத்தில் பூட்டிய கேட்டுக்குள் அவற்றைத் திறந்து விடுவார்கள். அதைத் தவிர தெருவில் திரியும் நாய்களும் அந்தச் சாலையோரம் அலைவது வழக்கம்.

நிர்மலாவைப் பார்த்ததும் எல்லா நாய்களும் ஒன்று சேர்ந்து அசாதாரணமான குரல் வலுவுடன் குரைத்தன.

எதையோ பார்த்து பயந்து அலறுவதுபோல் மொத்த நாய்களும் கோரஸாகக் குரல் கொடுத்தன.

ஒருகணம் என்ன செய்யலாம் என்று யோசித்த நிர்மலா என்கிற வசுமதி தவித்தாள்!

## 21

அசாதாரணமான குரலில் நாய்கள் ஊளையிடும் சத்தம் அந்தப் பிராந்தியத்தையே ஒலியால் நிறைத்தது.

இதற்கு முன்பு ஒரு போதும் கேட்டிராத அந்த ஊளை ஒலியைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தெழுந்த குழந்தைகள் படுத்தவாறே அலறியழத் தொடங்கினர்.

வரிசையாக இருந்த குவார்ட்டர்ஸுகள் சிலவற்றில் சட்டென்று விளக்குகள் பளிச்சிட்டன. படுக்கையறைக்குள் வெளிச்சத்தில் விழித்தெழுந்த பெரியவர்கள். ஒவ்வொருவரும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

அந்தப் பகுதியில் நாய்கள் அதிகமிருந்தாலும் இப்படியொரு ஊளையொலி எழுவது அதுதான் முதல் தடவை.

டாக்டர் சிவகுமார் எழுந்தார். வெளிப்புற லைட்டின் சுவிட்சைத் தட்டினார். ஜன்னலின் திரைச்சீலையை விலக்கி,



கண்ணாடி வழியாக வெளியே பார்த்தார். கேட்டின் அருகே உட்புறத்தில் போகன்வில்லா செடிப் பந்தலின் கீழ் யாரோ மறைந்திருப்பது தெரிந்தது.

ஜன்னலின் கண்ணாடிக் கதவைத் திறந்து திரும்பவும் உற்றுப் பார்த்தார். ஓர் உருவம் என்பது மட்டும் தெரிந்ததே தவிர, ஆள் யார் என்று சரியாக தெரியவில்லை.

''யாரது?'' டாக்டர் கேட்டார்.

பதில் இல்லை.

அந்த சமயம் மனைவி தன்னுடன் இல்லாமல் போனதும் நல்லதற்கே என்று ஒரு வகையில் ஆறுதல் அடைந்தார். எப்போதும் தன்மீது சந்தேகம் கொண்டு சண்டையிடும் மனைவிக்கு இப்படியொரு காரணமும் கிடைத்துவிட்டால் பிறகு கேட்க வேண்டாம்.

மற்றவர்கள் யாராவது பார்ப்பதற்கு முன்னால் வெளியே நிற்பது ஆணா, பெண்ணா என்பதைப் பார்த்துவிட முடிவு செய்தார் சிவகுமார்.

டாக்டர் படுக்கையறையிலிருந்து வரவேற்பு அறைக்கு வந்தார். அந்த வழியாக வெளிவாசல் கதவை அடைய முடியும். யாராவது நோயாளிகள் வந்தால் உட்கார்வதற்காக இரண்டு மூன்று இருக்கைகள் அங்கு போடப்பட்டிருந்தன.

டாக்டர் கதவைத் திறந்தார்.

அப்போதுதான் வெளிப்புற வாசல் கதவு திறந்திருப்பதைக் கவனித்தார். வழக்கமாக மூடி உட்புறம் தாழிடுவார். அன்று மறந்திருக்கலாம் என்று நினைத்தார்.

வராந்தா லைட்டை எரியவிட்டார்.

சிவகுமார் ஒரு கணம் அதிர்ந்தார்.

டாக்டர் சசிதரனின் மனைவி நிர்மலா நாற்காலியில் உட்கார்ந்து அவரையே பார்த்தாள்.

''டாக்டர் நிர்மலா!'' சிவகுமாரின் உதடுகள் மந்திரிப்பது போல் உச்சரித்தன.

பதில் எதையும் சொல்லாமல் ஒரு மாதிரியாகப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள். சிவகுமாரால் அந்தக் காட்சியை நம்பவே முடியவில்லை!

இவ்வளவு நாளும் மரியாதையும், மதிப்பும் வைத்திருந்த பெண்மணி ஒருத்தி, நள்ளிரவு வேளையில் அதுவும் தனது குவார்ட்டஸுக்கு வந்திருக்கிறாள். அது நல்ல நோக்கத்துடன் அல்ல என்று அவருக்கு விளங்கியது.

''எனக்கு விளங்கவில்லையே!'' பேசினார்.

''அங்கே யாருமில்லை. அதனால்தான் இங்கே வந்திருக்கிறேன். இதோ பாருங்கள்... பாத்ரூமில் வழுக்கி விழுந்து கால் சுளுக்கிக் கொண்டது. நடக்கவே முடியவில்லை... பாருங்கள் ரொம்பவும் வீங்கியிருக்கிறது.'' அவள் பேசியவாறே இரவு உடையான நைட்கவுனின் கீழ் விளிம்பை மேற்புறமாக உயர்த்தினாள்.

முழங்கால் பகுதி தென்பட்டவுடன் 'போதும்' என்று சிவகுமார் சைகை செய்தார்.

முழங்காலின் கீழ்ப்பகுதியைப் பார்த்தார்.

நிர்மலா சொன்னது உண்மைதான் என்று தெரிந்தது.

டாக்டர் சிவகுமார் எலும்பு மருத்துவத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்தவர். எலும்பு சம்பந்தமான வைத்தியத்தில் தேர்ந்தவரானதால், பல இடங்களிலிருந்தும் அவரைத் தேடி நோயாளிகள் வருவதுண்டு.

''பார்த்தீர்களா, வீக்கம் விநாடிக்கு விநாடி அதிகரிக்கிறது. உள்ளே எலும்பு உடைந்திருக்கும் என்று தோன்றுகிறது!'' நிர்மலா கூறினாள்.

இந்த நிலைமையில் தான் உடனடியாக முதலுதவியாவது செய்ய வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் பாதிப்பு அதிகமாகிவிடும்.

''தற்சமயம் வலி தெரியாமல் இருக்க நான் ஒரு இன்ஜெக்ஷன் போடுகிறேன். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால்தான் உண்மை நிலவரம் புரியும்.'' சிவகுமார் மருந்தை எடுத்துவரப் போனார்.



படுக்கையறையிலிருந்த சுவர் அலமாரியில் தான் அவசர மருந்துகளைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். மருந்தை ஊசிக்குள் உறிஞ்சி எடுக்கும்போது காலடியோசை கேட்டது. திரும்பிப் பார்த்தார்.

நிர்மலா அறைக்குள் வந்திருந்தாள்.

''வலி தாங்க முடியவில்லை.'' சொன்னாள்.

''கொஞ்சம் பொறுங்கள். இன்ஜெக்ஷன் போட்டால் வலி குறையும்.'' சிவகுமார் பதிலளித்தார்.

நிர்மலா அங்கிருந்த கட்டிலில் உட்கார்ந்தாள்.

ஊசி மருந்தை ஏற்றிக்கொண்டு, வேறு ஓர் ஊசியை மாற்றிக் கொண்டு நிர்மலாவின் அருகே வந்தார்.

சட்டென்று எதிர்பாராமல் அது நிகழ்ந்தது.

சிவகுமாரின் கையிலிருந்த ஊசியைத் தட்டி எறிந்து விட்டு, நிர்மலா சிவகுமாரின் மீது பாய்ந்து கட்டியணைத்தாள்.

அசுரத்தனமான அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டவளைப் போல் சிவகுமாரைத் தூக்கிக் கட்டிலில் போட்டாள். சிவகுமாரின் தலை கட்டிலின் மேற்புற மூலையில் மோதியது.

அதிர்ஷ்டவசமாக காயம் எதுவும் ஏற்படவில்லை.

டாக்டர் வலியுடன் கட்டிலிலிருந்து துள்ளி எழுந்தார்.

''என்னங்க நிர்மலா இது... இவ்வளவு முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறீர்கள்?'' டாக்டர் அவளிடம் இருந்து விடுபட முயன்றார்.

ஆனால், நிர்மலாவின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மிகவும் பைசாசிகமாக இருந்தன. ஒரு வழியாக அங்கிருந்து திமிறித் தப்பித்து படுக்கையறையின் வெளியே வந்து கதவை வெளிப்புறமாக இழுத்து மூடித் தாழிட்டார்.

அந்த அறைக்கென்று பிரத்தியேகமான பூட்டு ஒன்றை பொருத்தியிருந்தது நல்லதாகப் போனது.

செய்தியை உடனே டாக்டர் சசிதரனிடம் கூற வேண்டு மென்று விரும்பினார் சிவகுமார். பின்பு உடனே அப்படிச் செய்ய வேண்டாம் என்று மனத்தை மாற்றிக் கொண்டார். இப்படிப்பட்ட சம்பவம் நடந்தாலும் இதைச் சொல்வதன் மூலம் ஒரு குடும்ப வாழ்க்கையைச் சிதைக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தார்.

இருப்பினும் நிர்மலாவை எப்படித் தன்னுடைய படுக்கை யறையில் வைத்திருப்பது? அதுவும் முறையற்ற செயலல்லவா?

கதவைத் திறந்தால் மறுபடியும் நிர்மலாவின் குணம் மாறலாம்!

எனவே, என்ன செய்வதென்று தெரியாமல் சிவகுமார் தவித்தார்.

அதேநேரம் தென்புற ரோட்டுப் பகுதியிலிருந்து கார் ஒன்று வந்தது. அது சரியாக சிவகுமாரின் வீட்டு வாசலுக்கு முன்னால் நின்றது.

சிவகுமார் உற்றுப் பார்த்தார். சிவப்பு நிற மாருதி கார் அதிலிருந்து யாரோ இறங்கினார்கள்.

நிழல்புறமாக நகர்ந்தது ஓர் உருவம்.

ஆள் யார் என்பது இப்போதும் டாக்டருக்கு விளங்க வில்லை.

அதே நேரம் குவார்ட்டர்ஸின் பின்புறத்தில் எதுவோ பெயர்ந்து விழும் சத்தம் கேட்டது. சற்று நேரத்தில் எல்லாம் அடங்கிச் சுற்றுப்புறம் அமைதியடைந்தது.

சிவகுமார் குவார்ட்டர்ஸைவிட்டு வெளியே வந்து சசிதரனின் வீட்டு வாசலைப் பார்த்தார்.

இரவு உடை அணிந்த உருவம் ஒன்று அந்த வீட்டுக்குள் நுழைவதைப் பார்த்தார். ஒரு கணத்துக்குப் பிறகே அது நிர்மலா என்பது அவருக்கு உறைத்தது.



மூடி வெளிப்புறமாகப் பூட்டப்பட்டிருந்த கதவைத் திறந்து அவள் எப்படி வெளியேறியிருக்க முடியும்?

சிவகுமார் சட்டென்று வீட்டுக்குள் ஓடி படுக்கையறையைத் திறந்து பார்த்தார். நிர்மலா அந்த அறையில் இல்லை.

ஜன்னல் திறந்து கிடந்தது.

சிவகுமார் ஜன்னலைப் பார்த்து ஒரு விநாடி அசந்தே போனார்.

ஜன்னல் இருந்த பகுதி இப்போது வெற்றிடமாக இருந்தது.

ஜன்னலைக் காணவில்லை.

கையால் தடவிப் பார்த்தார்.

சுவரில் பொருத்தப்பட்டிருந்த மரச்சட்டம் மற்றும் கண்ணாடிக் கதவுகளுடன் கதவே ஒட்டுமொத்தமாகக் காணாமல் போயி ருந்தது!

ஒன்றும் புரியாதவராக சிவகுமார் வீட்டின் வெளியே வந்து நின்றார்.

டார்ச் லைட்டை எடுத்து வந்து ஜன்னல் இருந்த இடத்தின் மீது ஒளியைப் பாய்ச்சிப் பார்த்தார்.

ஜன்னல் அப்படியே மட்டமல்லாக்கத் தரைமீது கிடந்தது. முன்னர் எப்போதோ தான் பார்த்த ஒரு ஜேம்ஸ்பாண்ட் படத்தில் ஜாஸ் என்கிற கதாபாத்திரம் கார் மற்றும் ஏரோப்ளேனின் கதவுகளைப் பெயர்த்து வீசியது போலிருந்தது அந்தக் காட்சி.

டாக்டர் நிர்மலா ஜன்னலைப் பிடுங்கிப் போட்டுவிட்டுத் தனது அறையிலிருந்து தப்பித்தாள் என்று சொன்னால், மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று யோசித்தார் டாக்டர்.

எனவே, இதை சமாளிக்க தான் என்ன காரணம் சொல்வது என்பது பற்றி யோசிக்கத் தொடங்கினார்.

கடைசியில் ஒரு வழி புலப்பட்டது.

தான் வீட்டில் இல்லாதபோது யாரோ திருடன் புகுந்து விட்டதாகச் சொல்ல வேண்டியதுதான் என்று தனக்குதானே சமாதானம் சொல்லிக் கொண்டார்.

இந்தச் செய்தி மறுநாளே ஊர்முழுவதும் காட்டுத் தீயின் வேகத்தில் பரவியது.

'ஓகோ... அதனால்தான் நேற்று நாய்கள் அப்படிக் குரைத்ததா?' என்று பக்கத்து குவார்ட்டர்ஸ்காரர்கள் நினைத்தனர்.

அன்று மாலை நேரத்தில் சசிதரனின் வீட்டுக்குப் போவதென்று டாக்டர் சிவகுமார் தீர்மானித்தார்.

சசிதரனும் நிர்மலாவும் குழந்தைகளும் காரில் திரும்பி வந்ததை அவர் ஏற்கெனவே கவனித்திருந்தார்.

காலிங்பெல் ஓசையெழுப்பியதும் சசிதரன் வந்து கதவைத் திறந்தார்.

''என்ன சார், ஏதாவது துப்புக் கிடைத்ததா?''சசிதரன் கேட்டார்.

சிவகுமார் அதற்கு பதிலளிக்காமல் நிர்மலாவை கவனித்தார்.

அவள் எதுவும் நடக்காத மாதிரி மிகவும் இயல்பாக அவரைப் பார்த்தாள்.

**சே**துவர்மா சத்ருசம்ஹார ஹோமம் பற்றி வாசித்துக் கொண்டிருந்தார். அவரருகில் வசந்தா உட்கார்ந்திருந்தாள்.

அந்த அரண்மனைக்குள் வந்த நாளிலிருந்து வசந்தாவுக்கு சேதுவர்மாவிடம் அலாதியான அன்பு தோன்றியிருந்தது.

ஆனால், சேதுவைப் பொறுத்த வரை அந்த மாதிரியான எந்த உணர்வுக்கும் ஆட்பட நேரமே இல்லாமல் இருந்ததே உண்மை.

ஒரு பெண்ணைக் காதலிக்க வேண்டுமென்றால் அதற்கு எப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் வாய்த்திருக்கின்றன?

டாக்டராகப் பணிபுரியும் திருமணமாகாத இளம்பெண்கள் முதல் கல்லூரியில் படிக்கும் மாணவிகள் வரை எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.



இவ்வளவெல்லாமிருந்தும் திருமணம் பற்றியே அவர் இதுவரை நினைத்ததில்லை.

''ஆமாம், நீங்கள் ஏன் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?'' வசந்தா கேட்டாள்.

''அதற்கான சந்தர்ப்பம் அமையாததுதான் உண்மை!'' சேதுவர்மா சிரித்தபடி பதிலளித்தார்.

''ஒவ்வொருவரும் திருமணம் செய்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால் வாழ்க்கை முழுமையடையாது!''

''அதற்கேற்ற ஒரு பெண் கிடைக்க வேண்டாமா?''

''அப்படியா சொல்கிறீர்கள்?'' வசந்தா சேதுவர்மாவை ஊன்றிப் பார்த்தாள்.

அவள் கண்களில் நீர் சுரப்பதாக சேதுவர்மாவுக்குத் தோன்றியது.

''என்ன வசந்தா, எதற்காக அழுகிறீர்கள்?'' சேதுவர்மா திடுக்கிட்டவராகக் கேட்டார்.

''ஒன்றுமில்லை!'' கண்களைத் துடைத்தவாறு அங்கிருந்து எழுந்து போனாள்.

''தனியாக இருந்து அலுப்பு தோன்றிவிட்டதா என்ன?'' பின்புறத்திலிருந்து விஷ்ணுப்ரியாவின் குரல் கேட்டது.

''அப்படிச் சொல்ல முடியாது. இதுவரை வசந்தா இங்குதான் இருந்தாள்.''

முன்புறம் வந்த விஷ்ணுப்ரியா சிற்ப வேலைப்பாடு நிறைந்த மணை ஒன்றை எடுத்துப்போட்டு அதில் அமர்ந்தாள்.

அவள் அருகே வந்தபோது மல்லிகை மற்றும் பாலைப் பூவின் மணமும் ஒன்று சேர்ந்து காற்றில் பரவியது.

''வாசிப்பு எந்த நிலையில் இருக்கிறது?'' விஷ்ணுப்ரியா கேட்டாள்.

''பாதிக் கிணறு தாண்டிவிட்டேன்.'' சேதுவர்மா சுவடியை மடக்கி வாசற்படியை ஒட்டியிருந்த பீடத்தில் வைத்தார்.

''ஒரு விஷயம் சொல்லட்டுமா?'' அவள் கேட்டாள்.

''சொல்லுங்கள்!''

''சத்ருசம்ஹார ஹோமம் நடத்தும்போது மனைவி அருகில் இருந்தால் நல்லது. இல்லாவிட்டால் மனம் பதற்றமடையும்'' விஷ்ணுப்ரியா கூறினாள்.

''அது கட்டாயமா என்ன?'' சேதுவர்மா கேட்டார்.

''கட்டாயமா என்பதைவிட காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இதுவரை சத்ருசம்ஹார ஹோமம் நடத்திய எவரும் முழுமையாக வெற்றி பெற்றதில்லை. ஒரு சவ உடம்பின் மீது அமர்ந்து கொண்டு பிறந்தமேனியோடு இருக்கும் இளம்பெண்ணை முன்னால் நிறுத்திக்கொண்டு ஹோமம் செய்யவேண்டும். அவளை தேவியாகக் கற்பனை செய்ய வேண்டும். துரதிருஷ்டவசமாக அந்தப் பெண் மீது மோகம் பிறந்து விட்டால் அது ஆபத்தை வரவழைக்கும்.''

''ஒரு டாக்டர் என்ற முறையில் நீங்கள் குறிப்பிடும் நிலை எனக்குப் புதிதல்ல; பிரச்சினையை ஏற்படுத்தவும் செய்யாது என்று நினைக்கிறேன்.'' சேதுவர்மா பதிலளித்தார்.

''டாக்டர், நீங்கள் இறந்த உடம்புகளின் நிர்வாணத்தைப் பார்த்திருப்பீர்கள். இது உயிரும் உணர்வும் உள்ள இளம் பெண்ணின் உடல். எனவே, மனத்தில் சலனம் ஏற்படாதிருப்பதற்கும் பயிற்சி தேவை.'' விஷ்ணுப்ரியா கூறினாள்.

''நீங்கள் சொல்வதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை!'' சேதுவர்மா, விஷ்ணுப்ரியாவின் முகத்தைப் பார்த்தார்.

## 22

''உண்மையாகவா சொல்கிறீர்கள்?'' விஷ்ணுப்ரியா கேட்டாள்.

''உங்களது பேச்சுக்குப் பிறகு இப்போது என்னால் அப்படி இருக்கமுடியுமா என்பது சந்தேகமாகி விட்டது!'' சேதுவர்மா கூறினார்.



''ஓகோ... மனைவியின் விஷயத்தைச் சொல்கிறீர்களா?'' விஷ்ணுப்ரியா சிரித்தபடி கேட்டாள். அவள் சிரிப்பு அழகாக இருந்தது.

''ஒரு விஷயம் கேட்கலாமா?'' சேதுவர்மா, விஷ்ணுப்ரியாவைப் பார்த்துக் கேட்டார்.

''என்ன விஷயம்... கேளுங்கள்.'' தன் இரண்டு கைகளையும் பின்புறமாகத் தரையில் ஊன்றிச் சாய்ந்து உட்கார்ந்தாள்.

அப்போது தந்தத்தில் கடைந்தெடுத்த சிற்பம் போல் தென்பட்டாள் அவள்.

''ராமாயணத்தில், ராமன் அஸ்வமேத யாகம் செய்யும்போது, சீதைக்கு பதிலாக பொம்மை ஒன்றை வைத்திருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்களே... அதாவது சீதைக்கு பதிலாக உயிரற்ற ஒரு பொம்மை!''

''நியாயமான கேள்விதான். ஆனால், அவர் திருமணமானவர். அவர் மனைவி அப்போது அங்கு இல்லை. அவ்வளவுதான்...'' விஷ்ணுப்ரியா சிரித்தாள்.

''அப்படியானால் மனைவி அவசியம் என்கிறீர்கள்?''

''தேவை. முதலில் அதற்கேற்ற ஒருத்தியைக் கண்டுபிடிக்க வேண்டும் உங்களுக்கு விருப்பமான ஒரு பெண்ணை! நான் எனது கருத்தைச் சொல்லலாமா?'' விஷ்ணுப்ரியா கேட்டாள்.

''கேட்டுக் கொள்கிறேன்''

''அது டாக்டர் இந்திராபாயாக இருக்கலாம் இல்லையா? உங்களுக்கும் அவளைப் பிடிக்கும் என்று எனக்குத் தெரியும்.'' விஷ்ணுப்ரியா குறும்புடன் சேதுவர்மாவை கவனித்தாள்.

அவள் சொன்னதும் உண்மைதான்!

டாக்டர் சேதுவர்மாவின் மனத்தில் அவரையும் மீறி, இந்திராபாயின் உருவம் ஆழமாகப் பதிந்திருந்தது.

எங்கேயோ... ஏதோ ஒரு ஜென்மத்தில் சந்தித்துப் பின் மறந்தது போன்ற முகம் அவளுடையது.

ஆனால், அதே போன்ற உருவத் தோற்றமுள்ள ஓவியம் ஒன்று இதே அரண்மனையின் பூட்டப்பட்டுள்ள அறைக்குள் எப்படி வந்தது என்று புரியவில்லை.

''யோசித்து பதில் சொல்றேனே!'' சேதுவர்மா கூறினார்.

''இந்த பதிலே போதும்!'' விஷ்ணுப்ரியா எழுந்து வெளியே போனாள்.

ஹோமம் செய்ய வேண்டுமென்றால் திருமணமாகியிருக்க வேண்டும் என்ற நிபந்தனை சேதுவர்மாவுக்குப் பிடிக்கவில்லை.

மறுநாள் காலையில் குளித்து, காலைப் பலகாரம் சாப்பிட்ட பிறகு சேதுவர்மா, கடைசியாகப் பைசாசிக வடிவத்தைப் பார்த்த குளத்தை நோக்கி நடந்தார். அந்தப் பிராந்தியம் மயான அமைதியுடன் திகழ்ந்தது.

குளத்தின் மறுகரையிலிருந்த எட்டிமரம் கருமையான ஒரு படம் போல் அப்போதும் அசைவற்றிருந்தது.

அது வரை கற்றுக்கொண்ட மாந்திரீக சக்தியின் உதவியால் அந்த எட்டிமரத்தில் மர்மம் இருப்பது புலப்பட்டது.

குளத்தின் மறுகரையை அடைய வேண்டுமானால், மேற்குப் புறமாகச் சென்று திரும்ப வேண்டும். அது கிழக்குப்புறக் கோட்டை மதிலை ஒட்டி முடிவடைகிறது. மேற்குப் புறத்தில் முள் செடிகளும் அடர்த்தியான புதர்களும் அடர்த்தியாக மண்டி வளர்ந்திருந்தன.

எப்படியும் அந்த எட்டிமரத்தின் அடிப்பகுதியை அடைய வேண்டுமென்று விரும்பினார் சேதுவர்மா.

மேற்குப்புறம் திரும்பிப் புதர்களையும் முள்செடிகளையும் விலக்கிக்கொண்டு ஒருவாறாக நடக்கத் தொடங்கினார்.

எட்டிமரத்தின் அடிப்பகுதிக்கு வந்தவர், தன்னை எவராவது கவனிக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தார். இல்லை, அப்படி யாரும் தட்டுப்படவில்லை. வயதான மரம் என்பதற்கு அடையாளமாக மரத்தில் ஆங்காங்கே பொந்துகள் இருந்தன.



சட்டென்று ஒரு ராக்கோழி கூவியது.

மரத்தின் கீழிருந்து மேல்புறமாகப் பார்த்தார். ஓரிடத்தில் ஆணியொன்று அடிக்கப்பட்டிருந்தது.

ஆணியின் வெளிப்புறத் தலைப்பகுதியைப் பார்த்தால், குறைந்த பட்சம் ஆறு அங்குல நீளமாவது இருக்கும் என்று தோன்றியது.

சேதுவர்மா, ஆணியை உற்றுப் பார்த்தார்.

ஆணியடித்திருக்கும் முறையில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது. பக்கத்தில் ஒரு கல்லை மரத்தின் கீழே போட்டு அதன்மீது ஏறி நின்று அந்த ஆணியின் தலைப்பைப் பிடித்து இழுக்க முயன்றார்.

அப்போதும் ஏதோ சந்தேகமாக இருந்தது.

ஆணி அதிலேயே கழன்றது.

சேதுவர்மா வியப்படைந்தார்.

எட்டிமரத்தில் அறையப்பட்ட ஆணி கழலுகிறது என்றால் அது ஆச்சரியத்துக்குரிய விஷயம்தான்.

இப்படியொன்று நடக்கக்கூடாது!

ஆணியை உருவிப் பார்க்கலாமா என்றுகூட அந்தக் க்ஷணத்தில் நினைத்தார் சேதுவர்மா.

ஏதோ ஒரு ரட்சஸை ஆணியடித்திருப்பார்கள் என்று சேதுவர்மாவுக்குத் தெரியும். இருப்பினும் அந்த ஆணியை மரத்திலிருந்து உருவவேண்டுமென்று ஏனோ அவருக்குத் தோன்றியது.

ஆணியின் தலைப்பகுதியைப் பிடித்து இழுத்தார். மரத்திலிருந்து ஆணி வெளியேறி சேதுவர்மாவின் கைக்கு வந்து சேர்ந்தது. அதே நேரம் எட்டி மரம் யாரோ ஒரு ராட்சஸன் பிடித்துக் குலுக்கியதைப் போல் ஆடியது. சேதுவர்மா தலையை உயர்த்திப் பார்த்தார். எதுவும் தட்டுப்படவில்லை. ஒருவேளை காற்றினால் மரம் குலுங்கியிருக்கலாம் என்று நினைத்தார்.

ஆணியை உருவிய மரத்தின் துவாரப் பகுதியைப் பார்த்தார். ஆச்சரியமான முறையில் அது அடைபட்டிருந்தது ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது. தான் முட்டாள்தனமாக நடந்து கொண்டோம் என்பது அப்போது சேதுவர்மாவுக்கு விளங்கியது.

அதுவரை சலனமற்றிருந்த குளத்தின் நீர்ப்பரப்பில் ஏதேதோ சலனங்கள் ஏற்படுவதை சேதுவர்மா கவனிக்கத் தவறவில்லை. குளத்தின் மையப்பகுதியில் ஒரு சுழற்காற்றைப் போல் அது ஆரம்பமானது.

விரைவிலேயே குளத்தின் மையப் பகுதியிலிருந்த நீர், ஒரு ஸ்க்ரூ ஆணி சுழல்வது போல் சுழன்றது. அந்தப் பகுதியை ஒட்டி வளர்ந்திருந்த தாமரைப் பூக்கள் அந்தச் சுழலுக்குள் இழுக்கப்பட்டு. வட்டமிட்டுச் சுழன்று கடைசியில் நீருக்குள் அமிழ்ந்தன.

சேதுவர்மா குளத்தை கவனமாகப் பார்த்தார்.

"ஏன் தனியாக நிற்கிறீர்கள்?" பெண் குரல் ஒன்று கேட்டது.

சேதுவர்மா சுற்றுமுற்றும் பார்த்தார்.

ஆனால், எவரும் தட்டுப்படவில்லை.

எட்டி மரத்தின் பின்புறத்திலிருந்து குரல் வந்தது.

சேதுவர்மா அந்த திசையில் பார்த்தார்.

உலர்ந்த இலைகூட அசையவில்லை. ஒருவேளை தனக்கு அப்படித் தோன்றியதாக இருக்கலாம் என்று நினைத்தவராக, கோவிலகத்தை நோக்கி நடந்தார்.

சந்த்யாவந்தனம் முடிந்து இளந்திண்ணையில் உட்கார்ந்திருந்தபோது வசந்தா வந்தாள்.

"காலையில் குளத்தின் மறுகரையிலிருக்கிற எட்டி மரத்திற்கு அருகே போனீர்களா?" வசந்தா கேட்டாள்.

"ஆமாம், உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" சேதுவர்மா எதிர்க்கேள்வி கேட்டார்.

"அந்த நேரம் நான் அங்குதான் இருந்தேன். போனதுதான் போனீர்கள், எதற்காக எட்டி மரத்திலிருந்த ஆணியை உருவினீர்கள்?"



"என்னமோ அந்த நேரம் அப்படிச் செய்ய வேண்டும் என்று தோன்றியது. பிறகுதான் அது தவறென்று புரிந்தது."

"அதனால் பிரச்சினை எதுவுமில்லை. நீங்கள் விடுதலை செய்தது, உங்களை விரும்புகிற ஒருவரைத்தான்!"

"உண்மையாகவா... யார் அது?" சேதுவர்மா வியப்புடன் கேட்டார்.

"இன்று நள்ளிரவில் நான் உங்களது அறைக்கு வருவேன். நீங்களும் என்னுடன் வந்தால், அப்போது மிகவும் விசித்திரமான ஒரு காட்சியைக் காட்டுகிறேன்!" அவள் கூறினாள்.

'அது என்னவாக இருக்கும்?' சேதுவர்மா மனத்துள் கேட்டுக் கொண்டார்.

"இப்போதே அதைப் பற்றி யோசனை செய்து மண்டையைக் குழப்பிக்கொள்ள வேண்டாம். ஞாபகம் இருக்கட்டும்... நான் வருவேன்." துளசி மாடத்தில் வைத்திருந்த விளக்கை எடுத்துக் கொண்டு கோவிலகத்துக்குள் விரைந்தாள் வசந்தா.

அன்று இரவு ஒன்பது மணியானபோது டாக்டர் சசிதரன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு மருத்துவ மனைக்குப் புறப்பட்டார். அன்று அவருக்கு நைட் டூட்டி.

அவரது கார் கண்ணிலிருந்து மறைந்ததும் நிர்மலா விளக்குகளை அணைத்தாள்.

குழந்தைகள் படுத்துக் கொண்டனர்.

அவள் குழந்தைகளின் அருகே சென்று அவர்களின் தலைக்குமேல் கையை ஓட்டினாள்.

குழந்தைகள் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்தனர்.

நிர்மலா, குவார்ட்டர்ஸிலிருந்து வெளியேறினாள். இந்த முறை சிவகுமாரின் வீட்டுக்குப் போகக் கூடாது என்று முடிவு செய்தாள்.

சிவகுமாருக்குத் தன்மீது சந்தேகம் ஏற்பட்டிருப்பது அவளுக்கும் புரிந்தது. ஆனால், எவரிடமும் அதை சிவகுமார்

சொல்ல முடியாது. அதை சுலபத்தில் எவரும் நம்பப் போவதில்லை.

அன்றைய தினம் டாக்டர் பாலச்சந்திரனது குவார்ட்டர்ஸில் அவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதைத் தெரிந்து வைத்திருந்தாள்.

கேட்டைத் திறந்து ரோட்டுக்கு வந்தாள். அங்கிருந்து வலது புறமாகத் திரும்பித்தான் பாலச்சந்திரனின் வீட்டுக்குப் போக முடியும்.

குவார்ட்டர்ஸின் முன்புற கேட்டை அடைந்தாள்.

வீட்டுக்குள் வெளிச்சம் தெரிந்தது.

டாக்டர் பாலச்சந்திரன் பெரும்பாலும் இரவில் மிகவும் தாமதமாகவே படுக்கச் செல்வது வழக்கம். அதுவரை வாசிப்பது எழுதுவது என்று எதையாவது செய்வார்.

கேட்டைத் தாண்டி வாசலை அடைந்தாள்.

காலிங்பெல் சுவிட்ச்சில் விரலை வைத்து அழுத்தினாள்.

பாலச்சந்திரன் மருத்துவம் தொடர்பான புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார். காலிங்பெல் ஒலித்ததும் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தார். மணி பத்து ஆகியிருந்தது.

'யார் வந்திருப்பார்கள்?' பாலச்சந்திரன் யோசனையில் ஆழ்ந்தார்.

ஒருவேளை யாராவது நோயாளியாக இருக்கலாம் என்று நினைத்தவராக எழுந்து வந்து கதவைத் திறந்தார்.

''யார் திருமதி நிர்மலாவா?'' டாக்டர் கேட்டார்.

''ஆமாம்!'' என்று பதிலளித்தவாறு வீட்டுக்குள் நுழைய முயன்றாள்.

பாலச்சந்திரன் அவளை ஊன்றி கவனித்தார்.

அவள் முகத்தில் ஏதோ ஒரு வித்தியாசம் தென்படுவதை டாக்டர் கவனிக்கத் தவறவில்லை.



''என்னங்க நிர்மலா... உங்களுக்கு என்ன ஆனது?'' டாக்டர் விசாரித்தார்.

''உடம்புக்கு சுகமில்லை!'' நெற்றியில் விழுந்திருந்த முடியை லாகவமாக ஒதுக்கியவாறு மெதுவாக நகர்ந்து அவரது வீட்டின் வரவேற்பறையில் வந்து உட்கார்ந்தாள்.

டாக்டர் பாலச்சந்திரன் என்ன செய்வதென்று புரியாமல் ஒரு கணம் தடுமாறினார்.

நிர்மலா இப்படியெல்லாம் நடந்து கொள்ளக் கூடியவள் அல்ல. சசிதரன் வெளிநாட்டில் இருந்தபோது கூட நிர்மலாவை அவர் அவ்வப்போது சந்திக்க நேர்ந்திருக்கிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் கூட அடக்கமாக, ஒடுங்கி வாழ்ந்தவள். அப்போதெல்லாம் நிர்மலா சினிமாவுக்குக் கூடப்போய் பார்த்ததில்லை; கேட்டதில்லை!

அப்படிப்பட்ட நிர்மலாவா இவள்? இந்த நேரங்கெட்ட நேரத்தில் வேறொருவரது வீட்டுக்குள்?

டாக்டர் வரவேற்பு அறைக்கு வந்தார்.

நிர்மலா சோபாவில் அமர்ந்திருந்தாள்.

''என்னங்க நிர்மலா... வழக்கத்துக்கு மாறாக... உங்களிடம் ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறதே?'' டாக்டர் கேட்டார்.

''பெரிதாகச் சொல்லிக் கொள்ள ஒன்றுமில்லை. தனியாக இருந்து போரடிக்கிறது. அதுதான் உங்களைத் தேடி வந்தேன். நீங்களும் தனியாகத்தானே இருக்கிறீர்கள், இல்லையா?'' அவள் கேட்டாள்.

''இதெல்லாம் புதிய விஷயமா என்ன? வழக்கமானது தானே? நிர்மலா புறப்படுங்க. பாவம் குழந்தைகள் வேறு தனியாகப் படுத்திருப்பார்கள்...'' பாலச்சந்திரன் சொன்னார்.

''எந்தக் குழந்தைகள்?''

''உங்க குழந்தைகள்... நான் அந்த விஷயத்தையே மறந்து விட்டேன்!'' என்றபடி எழுந்தாள். பாலச்சந்திரன் எதேச்சையாகக் கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஒன்பது நாற்பத்தைந்து!

'என்ன! சற்று நேரத்துக்கு முன்னால் பார்த்தபோது மணி பத்து பத்துக்கு மேலாகியிருந்தது. இப்போது ஒன்பதே முக்காலா? நேரம் பின்னோக்கி நகர்கிறதா?'

டாக்டர் பாலச்சந்திரன் மனத்தில் வெவ்வேறு வகையான உணர்வுகள் அலையடித்தன.

எப்போதோ ஒரு தடவை படித்த புத்தகத்திலிருந்து சில பகுதிகள் ஞாபகம் வந்தன.

லிவிங் கோஸ்ட் - வாழும் ஆவிகள்!

பிரேதப் பிசாசுகள் அறைக்குள் வந்தால் கடிகார முள் பின்னோக்கி நகருமாம்!

நேரம் அதிகமாகிவிடவில்லையென்று எதிராளியை நம்ப வைப்பதற்கான வித்தை.

அப்படியானால் தன் முன்பாக நிற்கும் நிர்மலா?

சே... அப்படி நினைப்பதே பாவம்.

டாக்டர் பாலச்சந்திரன் நிர்மலாவின் முகத்தை ஊன்றி கவனித்தார்.

அந்த முகத்தில் ஏதோ மாற்றம் ஏற்பட்டதுபோல்...

கண்களில் ஒரு வகையான பளபளப்பு.

தோளிலிருந்து நழுவி விழுந்த புடவைத் தலைப்பை அவள் சரிப்படுத்த முயலவில்லை. அவள், பாலச்சந்திரனை நோக்கி மெதுவாக நடந்தாள். நெருங்கினாள்.

" சீ... தள்ளி நில்... மேற்கொண்டு நெருங்காதே!" டாக்டர் உரத்த குரலில் கட்டளையிட்டார்.

அவள் அதைச் சட்டை செய்யவில்லை.

டாக்டரைப் பிடிப்பதற்காக கைகளை உயர்த்தினாள்.

பாலச்சந்திரன் சட்டென்று திரும்பி மேஜை மீது வைத்திருந்த டேப்ரிக்கார்டரை எடுத்து அவளை நோக்கி வீசி எறிந்தார்.



டேப்ரிக்கார்டர் அவள் முகத்தில் பட்டுப்பாறை மீது மோதியதைப் போல் நொறுங்கி விழுந்தது.

அப்போதும் அவள் அசையவில்லை.

அந்த முகத்தில் எந்தவொரு மாற்றமும் தென்படவில்லை.

"நிர்மலா... என்னங்க இது! முதலில் இங்கிருந்து போங்கள்." பாலச்சந்திரன் மீண்டும் அவளை அங்கிருந்து விரட்டுவதில் தீவிரமானார்.

டாக்டர் சேதுவர்மா சத்ருசம்ஹார ஹோமம் பற்றி வாசித்துக் கொண்டிருந்தார்.

வசந்தா அறைக்குள் வந்தாள்.

"எதுவரை வந்திருக்கிறது உங்கள் படிப்பு?" விசாரித்தாள்.

"செயல்படத் தொடங்கும் நிலையை அடைந்திருக்கிறது." சேதுவர்மா கூறினார்.

"உங்களுக்கு நான் ஒரு காட்சியைக் காட்டுவதாகச் சொன்னேன்..." வசந்தா நினைவூட்டினாள்.

"ஆமாம்... நள்ளிரவுக்குப் பிறகு!"

"சற்று முன்னதாகவே அது ஆரம்பமாகிவிட்டது. அதை முதலிலிருந்து பார்த்தால்தான் நல்லது. வாருங்கள்!" அவள் அழைத்தாள்.

சேதுவர்மா எழுந்தார்.

"என் கையைப் பிடித்துக்கொள்ளுங்கள்..." வசந்தா கையை நீட்டினாள்.

சேதுவர்மா அவள் கையைப் பிடித்தபடி இருண்ட வராந்தாக்கள் வழியாக நடந்தார்.

## 23

இருண்ட வழிகளில் இருவரும் சற்றுத் தூரம் நடந்தனர். நான்கு வாசல்களைத் தாண்டியதும் இடது புறத்திலிருந்த வெள்ளிக்கோடு மாதிரி - மூடிக்கிடந்த கதவுக்குள் இருந்து வெளிச்சம் வந்தது. முன்னொரு தடவை ரத்னபிரபாதேவியின் பங்களாவில் இதே போன்ற ஒரு காட்சியைப் பார்த்தது சேதுவர்மாவுக்கு ஞாபகம் வந்தது.

அன்று அந்த அறைக்குள் பார்த்தது மாதிரி இன்று இந்த அறைக்குள் ஏதாவது இருக்குமோ என்று சந்தேகப்பட்டார் சேதுவர்மா.

இருவரும் கதவை நெருங்கினர். கதவிலிருந்து வந்த ஒளி சேதுவர்மாவின் மீது பதிந்தது.

''வாசல் கதவை மெதுவாகத் திறக்கிறேன். சத்தம் எழுப்பாமல் உள்ளே பாருங்கள்...'' வசந்தா கூறினாள்.

வசந்தா சுண்டுவிரலால் தாழை நகர்த்தினாள். தாழ்களுக்கு இடையில் சுமார் இரண்டங்குல இடைவெளி ஏற்பட்டது.

சேதுவர்மா உட்புறம் பார்த்தார்.

அதுவரை வாழ்க்கையில் பார்த்தறியாத ஒரு காட்சி அவர் கண்களுக்கு முன்பாக விரிந்தது. ஆஸ்பத்திரியின் பிணவறையிலும், ஆபத்தான நிலையில் எமர்ஜென்ஸி வார்டிலும், ஆப்பரேஷன் தியேட்டரிலும் காணாத ஒரு காட்சியாக இருந்தது அது.

இறந்து விறைத்துக் கிடப்பது போன்ற நிர்வாணமான ஓர் உடம்பு.

அதன் மீது ஓர் ஆண் உட்கார்ந்திருந்தார். முதுகுப்பக்கமாக நின்று பார்த்ததால், அவர் முகம் தெரியவில்லை. அவருக்கு முன்னால் ஹோமகுண்டத்தில் நெருப்பு ஜுவாலைகள் கொழுந்துவிட்டு எரிகிறது.



அதற்குப் பின்னால் அக்னி ஜுவாலைகளின் வெளிச்சத்தில் இளம்பெண் ஒருத்தி நின்றிருந்தாள்.

பதினைந்து வயது மதிப்பிடலாம்.

உடலில் உடையெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், நெருப்பு ஜுவாலைகள் அவள் உடலில் மறைவுக்குரிய பகுதிகளை மறைத்தபடி உயர்ந்தன.

ஜுவாலைகள் அவ்வப்போது அவள் மார்புக்கு மேல் உயர்ந்தும், சிலசமயம் தாழ்ந்தும் விளையாடின. அந்த இளம்பெண் மிகவும் அழகாக இருந்தாள்.

அவள் கண்கள் இமைக்கவில்லை மாறாக அவை திறந்தே இருந்தன.

அவள் மார்புப் பகுதி உயர்ந்து தாழ்ந்தது. நீண்ட அவள் கருங்கூந்தல் முதுகுப்புறம் படர்ந்து கிடந்தது.

மூச்சை அடக்கிப் பிடித்தபடி சேதுவர்மா அந்தக் காட்சியைப் பார்த்தார். முதுகு காட்டுபவரின் உதடுகளிலிருந்து மந்திரங்கள் உதிர்ந்தன.

''இந்த மனிதர் இந்த ஹோமத்தை முழுமையாக நடத்தி விட்டால் ஆபத்து!'' வசந்தா சேதுவர்மாவின் காதில் கிசுகிசுத்தாள்.

''அப்படியா! ஏன்?'' சேதுவர்மாவும் ரகசியக் குரலில் கேட்டார்.

''ஏனா... அதன் பிறகு அந்த மனிதனை வேறு எவராலும் வெற்றி கொள்ள முடியாது. நீங்கள் உட்படத்தான்!'' வசந்தா கூறினாள்.

''அதைத் தடுக்க என்ன செய்யவேண்டும்?'' சேதுவர்மா கேட்டார்.

''அந்த ஹோமத்தை இந்தக் கட்டத்திலேயே தடுக்கப் போகிறேன்.'' அவள் கூறினாள்.

''எப்படி?''

''பொறுமையாக கவனியுங்கள்.'' அவள் கதவின் இடை வெளிக்கு நேராக வந்தாள்.

சேதுவர்மாவின் முன்பாக வசந்தா, அந்த இரண்டு கதவுகளுக்கும் இடையிலிருந்த இடைவெளியில் ஒரு புகை மாதிரிக் கடந்து போனாள்.

மேற்கொண்டு அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதைக் காணும் ஆவலுடன் சேதுவர்மா இடைவெளி வழியே உட்புறத்தைப் பார்த்தார்.

உள்ளே சென்ற வசந்தா அங்கிருந்த மாந்திரீகனின் முதுகுப் பக்கம் சென்று நின்றாள். அவர் அவளை கவனித்ததாகவோ உணர்ந்ததாகவோ தெரியவில்லை.

மாந்திரீகனின் இடது புறத்தில் பித்தளைக் குடம் ஒன்றில் தண்ணீர் இருந்தது. வசந்தா அதைக் கையில் எடுத்தாள்.

அதே நேரம் மாந்திரீகனுக்கு முன்புறமாக நின்றிருந்த இளம்பெண் வசந்தாவைப் பார்த்துவிட்டாள் என்று தோன்றியது. அவள் மாந்திரீகனை ஊன்றி கவனித்தாள்.

அவள் கண்களின் சலனத்தை மாந்திரீகன் உணர்ந்தார் என்று தோன்றியது.

மாந்திரீகன் திரும்ப முயன்றதும், வசந்தா தன் கையிலிருந்த நீரை ஹோமகுண்டத்தில் கவிழ்த்ததும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன.

ஆனால், நடந்தது என்னவோ எதிர்பார்த்ததற்கு விபரீதமாக இருந்தது. எரியும் நெருப்பில் விழுந்த தண்ணீர் நெருப்பை அணைப்பதற்கு பதிலாக அதைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தது - பெட்ரோல் ஊற்றிய மாதிரி.

நெருப்பு ஜுவாலைகள் மேல் மச்சில் மோதித் தரைப் பக்கமாக வளைந்தன.

ஒருசில விநாடிகளுக்குள் ஜுவாலைகளின் மறுபுறம் இருந்த இளம்பெண் மாயமாக மறைந்தாள்.

ஏறத்தாழ ஐந்து நிமிடங்களுக்குள் ஹோமகுண்டத்தின் ஜுவாலைகள் முற்றிலுமாக அணைந்தன.



உடனே எதுவும் நடக்காத மாதிரி வசந்தா, அந்த அறையிலிருந்து வெளியே வந்தாள்.

''என்ன வசந்தா, என்ன நடந்தது?'' சேதுவர்மா கேட்டார்.

''அந்த மாந்திரீகன் ஹோமகுண்டத்தில் தலைகுப்புற விழுந்துவிட்டார்.'' இயல்பான ஒரு நிகழ்ச்சி போல் வசந்தா பதிலளித்தாள்.

''அந்த இளம்பெண் என்ன ஆனாள்?''

''அவள் அந்த ஹோமாக்னியில் எரிந்திருக்க வேண்டும். வாருங்கள்... இனிமேல் நாம் இங்கிருக்கக் கூடாது.'' அவள் சேதுவர்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு இருளில் விரைவாக நடந்தாள்.

அறைக்கு வந்த பிறகு, அங்கு நடந்ததை விவரித்தாள்.

அப்படியொரு சம்பவம் அங்கு நடக்கக்கூடும் என்று அவள் எதிர்பாக்கவில்லை. அந்த ஹோமம் ஒழுங்காக முடியக்கூடாது என்று மட்டுமே அவள் நினைத்தாள்.

குடத்திலிருந்த தண்ணீரை ஹோமாக்னியில் ஊற்றினால், நெருப்பு அணையும் என்று வசந்தா நினைத்தாள். அதே நேரம் இளம் பெண்ணையும் எப்படியும் அங்கிருந்து காப்பாற்ற வேண்டுமென்று நினைத்திருந்தாள்.

ஆனால், நடந்ததோ வேறு!

''அந்தப் பெண் ஒடியொளிந்து தப்பித் திருப்பாளோ?'' சேதுவர்மா கேட்டார்.

''இருக்காது. அதற்கு வாய்ப்பே இல்லை. நான் அங்குதானே இருந்தேன்.'' வசந்தா மறுத்தாள்.

''அந்த மாந்திரீகனின் கதி...''

''அவர் முகம் நெருப்பில் விழுந்து வெந்திருக்கலாம். ஒருவேளை அவரது மாந்திரீக சக்தியால் அப்படி நடக்காமலும் போகலாம். மாந்திரீகர்கள் நெருப்பின் மீது நடப்பவர்களாயிற்றே.''

"அந்த மாந்திரீகர் யார்?"

"என் எதிரி." அதற்கான காரணத்தை விளக்கும் ஒரு கதையையும் சொன்னாள்.

சத்ருசம்ஹார ஹோமம் நடத்தியவர் பிரபல மாந்திரீகனான பீஷ்மநாராயணன் நம்பூதிரி. நாடுமுழுவதும் அவரைப் பற்றி அறிந்திருந்தது. துர்மந்திர வித்தைகளில் புகழ் பெற்றவர். எப்படிப் பட்ட மோசமான விஷயத்துக்கும் மந்திரத்தைத் தயங்காமல் பயன்படுத்துபவர்.

வசந்தாவைப் பொறுத்தவரை, அவளுக்கு ஒரு வரலாறு உண்டு. புகழ்பெற்ற பெரிங்காட்டு இல்லத்தைச் சேர்ந்தவள் வசந்தா. அவள் தாயார் ரேவதி அந்தர்ஜனம். அவள்தான் பரம்பரைக் கோயிலில் பூஜைகளையும் கவனித்து வந்தாள்.

ஒரு நாள் மாலை நேரத்தில் பூஜையை முடித்து, கோயிலைப் பூட்டிக்கொண்டு திரும்பும்போது அழகான வாலிபன் ஒருவன் வழியிலிருந்த ஆலமரத்தின் அடியில் நிற்பதைப் பார்த்தாள்.

முன்பின் அறிமுகமில்லாத இளைஞன்.

பூணூல், அவன் தொப்புள் வரை நீண்டு தொங்கியது.

அவன், அவளை நெருங்கி கை நீட்டினான்.

அவள், தன் கையிலிருந்த பிரசாதத்தை அவன் உள்ளங்கையில் போட்டாள்.

என்ன வியப்பு... அந்த பிரசாதம் அவன் கைகளில் விழவே இல்லை. மாயமாக மறைந்தது.

ரேவதி அந்தர்ஜனத்துக்கு சந்தேகம் தோன்றியது.

'வந்திருப்பவன் மனிதன்தானா?'

சூரியன் மேற்கில் மறைந்தது. அந்தப் பகுதியே சட்டென்று இருளில் அமிழத் தொடங்கியது.

கோயிலின் வடகிழக்கு மூலையில் உபயோகம் இல்லாமலிருந்த பழைய மடைப்பள்ளிப் பகுதிக்கு அவன், ரேவதி அந்தர்ஜனத்தை அழைத்துப் போனான்.



அவன் உடம்புக்குப் பிரத்தியேகமான மணமிருந்தது. அந்தப் பகுதியிலேயே இல்லாத ஒரு பூவின் நறுமணம்.

இல்லத்தை அடைந்த பிறகும் அவள் உடம்பில் அந்த இளைஞனின் வியர்வை மணம் கமழ்ந்தது.

"என்னம்மா... உன் உடம்பில் என்னமோ ஒரு வாசனை!" சாப்பிடும்போது, அவள் அம்மா கேட்டார்.

அவள் பதில் சொல்லவில்லை.

ஒரு மாத காலத்துக்குப் பிறகு ரேவதியின் திருமணம் நடந்தது. அதுவும் திடுமென்று நடந்த திருமணம். வடக்குப் பகுதியைச் சேர்ந்த நம்பூதிரி ஒருவர் மாப்பிள்ளை. அவருக்கு, அவளைவிட இருபது வயது அதிகம். சொத்துபத்துகள் ஏராளமாக இருந்தது அவரிடம்.

திருமணம் முடிந்து சரியாக ஒரு வார காலம் கூட அவள் கணவனுடன் வாழவில்லை. விளக்கமுடியாத ஏதோ ஒரு காரணத்தால் அவள் அம்மா வீட்டுக்குத் திரும்பி வந்தாள்.

சில நாட்களுக்குப் பிறகுதான் அந்த ரகசியம் வெளியானது. அது விரைவில் பரவி பெரிங்காட்டு இல்லத்தையும் அடைந்தது. கல்யாணம் செய்த மாப்பிள்ளை இரவு நேரமானால் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள கோயிலுக்குப் போய் விடுவாராம். விடிந்த பிறகுதான் அங்கிருந்து திரும்பி வருவாராம்.

ரேவதி மட்டும் அதைப் பற்றி எதுவும் சொல்லவில்லை.

பத்து மாதம் கழித்து ரேவதி ஒரு குழந்தையைப் பெற்றாள். அவள்தான் வசந்தா.

பதினேழாவது வயதில் வசந்தாவின் திருமணம் நடந்தது. மாப்பிள்ளை, புகழ்பெற்ற மாந்திரீகன் பீஷ்மநாராயணன். அது அவரது ஐந்தாவது திருமணமாம். முந்தைய நான்கு மனைவியரும் இறந்து விட்டார்களாம். ஆறு மாதங்களுக்குப் பிறகு வசந்தாவும் இறந்து போனதாக ரேவதியின் வீட்டுக்குச் சேதி வந்தது. மற்றவர்களைப் போன்றவளல்ல வசந்தா.

அதன் பிறகு பீஷ்மநாராயணனது மந்திரசக்தி எடுபட வில்லை.

எல்லாமே தடைப்பட்டுக் குறைப்பட்டது.

காரணம் வசந்தாதான் என்பது அவருக்கும் புரிந்தது.

அவளிடமிருந்த தேவசக்தியை மட்டும் ஆவாஹம் செய்து ஆணியில் இறக்கி, அதை எட்டி மரத்தில் அறைந்து வைத்திருந்தார். ஆனால், அவளது அடுத்த கட்டமான ரட்சஸ ஜென்மத்தில் அவரால், அவளைப் பிடிக்க முடியாமல் போனது.

அவளைத்தான் விஷ்ணுப்பரியா தன்னுடைய மாந்திரீக சக்தியால் வசப்படுத்தி உதவியாளராக மாற்றியிருந்தாள்.

பீஷ்மநாராயணன் அங்கு வந்து சேர்ந்தது முதல் வசந்தா தருணம் பார்த்திருந்தாள். நல்லவேளையாக அதே நேரம் சேதுவிடமிருந்தும் உதவி கிடைத்தது. சேதுவர்மா, எட்டி மரத்திலிருந்த ஆணியைப் பிடுங்கி அவளுக்கு உதவினார்.

அத்துடன் வசந்தா இழந்த தன்னுடைய எல்லா சக்திகளையும் திரும்பப் பெற்று சுதந்திரமானவளானாள்.

''அவர் அந்த சத்ருசம்ஹார ஹோமத்தை வெற்றிகரமாக முடித்திருந்தால், இந்த அரண்மனையையே கைப்பற்றியிருப்பார். அத்துடன் இந்த இடத்தின் தேவியும் சிறைப்பட்டிருப்பார்.'' வசந்தா கூறினாள்.

ஒருவிதத்தில் சொல்வதானால் வசந்தா தனக்கு உதவி செய்திருக்கிறாள் என்று சேதுவர்மாவுக்குப் புரிந்தது.

''இப்போது என்ன சொல்கிறீர்கள்?'' வசந்தா கேட்டாள்.

''நான் உனக்கு நன்றிக்கடன் பட்டுள்ளேன்'' சேதுவர்மா கூறினார்.

''உண்மைதானே?'' அவள், அவர் கண்களைப் பார்த்தவாறு கேட்டாள்.

''சத்தியமாக!'' சேதுவர்மா சிரிப்புடன் கூறினார்.

அவள், சேதுவர்மாவை நெருங்கி உட்கார்ந்தாள்.



சேதுவர்மாவின் மூக்கில் அவளது வியர்வையின் சுகந்தம் பரவியது.

மறுநாள் காலையில் டாக்டர் பாலச்சந்திரன் நிம்மதியற்ற மனத்துடன்தான் எழுந்தார். முந்தையநாள் இரவில் தனக்கு ஏற்பட்ட அனுபவம், ஒரு பயங்கரக் கனவு போலத் தோன்றியது. அவர் மனம் நடுங்கியது.

நிர்மலாவுக்கு என்ன நேர்ந்தது?

மிகவும் நல்லவள் என்று மதித்துப் போற்றிய நிர்மலாவா நேற்றிரவு தனது வீட்டுக்கு வந்தவள்?

அதுவும் உன்மத்தம் கொண்டவளைப் போல!

வீட்டிலிருந்து வெளியேறி சசிதரனது வீட்டைப் பார்த்த போது அவர் வெளியிலேயே நிற்பது தெரிந்தது.

''நானே உங்களைத் தேடி வந்து கொண்டிருந்தேன்.'' சசிதரன் கூறினார்.

பாலச்சந்திரனின் மனத்தில் சந்தேகம் பிறந்தது.

விஷயம் சசிதரனுக்குத் தெரிந்து விட்டதோ?

''ஏதோவது விசேஷமா?'' பாலச்சந்திரன் விசாரித்தார்.

''இன்று நம் வீட்டிலேயே டிபன் சாப்பிடச் சொல்லத்தான்.'' சசிதரன் சொன்னார்.

அந்த பதில் பாலச்சந்திரனுக்கு ஆறுதல் அளித்தது.

டிபன் சாப்பிட ஒப்புக்கொண்டார்.

டைனிங்டேபிளில் ஆவி பறக்கும் இட்லியும், கமகமவென்ற சாம்பார், சட்னி வகையறாக்களும் இருந்தன.

சசிதரனும், பாலச்சந்திரனும் நாற்காலிகளில் உட்கார்ந்தனர்.

நிர்மலா காபி எடுத்து வந்தாள்.

பாலச்சந்திரன் அவள் முகத்தை ஏறிட்டார்.

அவள் நெற்றியில் பிளாஸ்திரி ஒட்டப்பட்டிருந்தது.

## 24

**நெ**ற்றியில் பிளாஸ்திரியை கவனித்ததும் பாலச்சந்திரன் சந்தேகத்துடன் நிர்மலாவின் முகத்தைப் பார்த்தார்.

ஆனால், அவளிடம் எந்தவிதமான மாற்றமோ, பரபரப்போ தென்படவில்லை. நிர்மலா எப்போதும் போலவே இயல்பாகவே நடந்துகொண்டாள்.

இருவருக்கும் பரிமாறினாள். காபியை தம்ளர்களில் ஊற்றித் தந்தாள்.

டேப்ரிக்கார்டரை எறிந்து அவள் நெற்றியில் காயத்தை ஏற்படுத்தியது தான்தானே என்ற குற்ற உணர்வு பாலச்சந்திரனின் மனத்துள் எழுந்தது.

எங்கேயாவது அதை வெளிப்படுத்துகிறாளோ என்று அறிவதற்காக பாலச்சந்திரன் அவ்வப்போது அவளை கவனிக்கத் தவறவில்லை.

இல்லை, அப்படியெதுவும் தெரியவில்லை!

'நெற்றியில் என்ன காயம்?' என்று கேட்டுவிடலாம் என்று கூட நினைத்தார் பாலச்சந்திரன். ஆனால், உடனே டாக்டர் சசிதரன், பாலச்சந்திரனைப் பார்த்து இப்படிச் சொன்னார்.

''நேத்து ராத்திரி நிர்மலா பாத்ரூமில் வழுக்கிச் சுவரில் மோதிக்கிட்டா.''

''அப்படியா?'' பாலச்சந்திரன் கேட்டார்.

''நான் டூட்டி முடிஞ்சு திரும்பிவரும்போது வீட்டில் நிர்மலாவைக் காணோம். தேடிப்பார்த்தா கடைசியில் பாத்ரூமில் மயக்கம்போட்டு விழுந்துகிடந்தா'' சொன்ன சசிதரன், நிர்மலாவின் முகத்தைப் பார்த்தார்.

அப்போதும் அவள் முகத்தில் எந்தவித மாற்றமும் தென்படவில்லை. டிபனை முடித்துக்கொண்டு டாக்டர் பாலச்சந்திரன் அங்கிருந்து குழப்பத்துடன் கிளம்பினார்.



'தனக்கு நேர்ந்த முந்தைய இரவு அனுபவத்தை சசிதரனிடம் எப்படிச் சொல்வது?' என்று தடுமாறினார் அவர்.

சொல்லாமலிருப்பதும் தவறு இல்லையா?

கடைசியில் மீண்டும் ஒரு தடவைகூட சோதித்துப் பார்த்த பிறகு, தேவைப்பட்டால் சொல்லலாம் என்று தீர்மானித்தார்.

மாலை நேரத்தில் பாலச்சந்திரன் குவார்ட்டர்ஸை அடைந்த போது, டாக்டர் சிவகுமார் தன் வீட்டுக்கு முன்னால் நிற்பதை கவனித்தார்.

''வாருங்கள் உள்ளே!'' என்று சொன்ன பாலச்சந்திரன் சிவகுமாரை வீட்டுக்குள் அழைத்துப் போனார்.

இருவரும் வரவேற்பு அறையில் அமர்ந்தனர். சிவகுமார் ஒரு தடவை அந்த அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தார். அங்கு ஏதோ ஒன்று குறையாக இருப்பது போலத் தோன்றியது. சட்டென்று விளங்கியது.

''ஆமாம் உங்கள் டேப்ரிக்கார்டர் எங்கே?'' சிவகுமார் கேட்டார்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தவித்தார் பாலச்சந்திரன். உண்மையைச் சொன்னால் சிவகுமார் நம்புவாரா?

''ரிப்பேராகி விட்டது. சரிசெய்யக் கொடுத்திருக்கிறேன்.'' பாலச்சந்திரன் சொன்னார்.

''ப்ளாஸ்க்கில் டீ போட்டு வைத்திருந்தால் எடுங்களேன்... சாப்பிடலாம்! ஒரே களைப்பாக இருக்கிறது.'' சிவகுமார் சொன்னார்.

''எடுத்து வருகிறேன்.'' பாலச்சந்திரன் எழுந்து உள்ளே போனார்.

சிவகுமார் வலதுபுற மூலையிலிருந்த டெலிவிஷனை ஆன் செய்வதற்காக எழுந்தார். டி.வி-யை நெருங்கிய போதுதான் அதன் பின்னால் டேப் ரிக்கார்டர் கிடப்பதை கவனித்தார். அது நடுவில் பிளந்து இரண்டாக உடைந்திருந்தது.

சிவகுமார் அதைக் கையில் எடுத்தார்.

பாலச்சந்திரன் ஃப்ளாஸ்க்குடன் இரண்டு டீ கப்புகளையும் எடுத்து வந்தார். சிவகுமார் கையிலிருந்த டேப்ரிக்கார்டரைப் பார்த்தவுடன் முகம் களித்தார்.

''ரிப்பேர் பண்ணக் கொடுத்திருக்கிறதாச் சொன்னீங்க. இதென்ன கீழே விழுந்துடுச்சா? குழந்தைங்க சுவத்துல மோதி உடைச்சிட்டாங்களா?'' சிவகுமார் கேட்டார்.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் பாலச்சந்திரன் ஒரு கணம் தடுமாறினார். உண்மையில் நடந்ததைச் சொன்னால் சிவகுமார் நம்புவாரா?

சொல்லாவிட்டால் என்ன நினைப்பார்?

''நான் உண்மையைச் சொன்னால் நீங்கள் நம்புவீர்களோ என்னவோ?'' பாலச்சந்திரன் கப்புகளில் டீயை ஊற்றியபடி சொன்னார்.

''அப்படியென்ன நம்ப முடியாத சமாசாரம்?'' இப்படிக் கேட்கும்போதே சிவகுமார் தனக்கு நிகழ்ந்த அனுபவத்தை நினைத்துக் கொண்டார்.

'ஜன்னலை ஒட்டுமொத்தமாகப் பெயர்த்துப் போட்டதை நான் எப்படி இவரிடம் சொல்வது?'

''சரி என்ன இருந்தாலும் நடந்த உண்மையைச் சொல்லி விடுகிறேன். சொல்லாமல் இருக்க என் மனம் ஒப்புக் கொள்ள வில்லை.'' என்ற பாலச்சந்திரன் நடந்ததை சிவகுமாரிடம் விவரித்தார்.

கேட்ட சிவகுமாரின் முகத்தில் வியப்பு பரவியது. ஆனாலும் ஆச்சரியப்படாத ஒருவராகத் தன்னைச் சட்டென்று மாற்றிக் கொண்டார்.

சற்று நேரத்துக்குப் பிறகு சிவகுமார் தனக்கு நேர்ந்த அனுபவத்தை விவரித்தார்.

''அப்படியா,'' என்ற பாலச்சந்திரன் தொடர்ந்தார்: ''இன்று காலையில் நான் டாக்டர் சசிதரனின் குவார்ட்டர்ஸுக்கு



போனேன். நிர்மலா எதையும் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. அந்த முகத்தில் எந்தவிதமான மாற்றமும் தென்படவில்லை.''

''நீங்க சொல்கிற கோணத்தில் யோசித்தால் இதெல்லாம் எப்படி நடந்தது? ம்... மற்றொரு விஷயத்தைச் சொல்ல மறந்து விட்டேனே, அந்த நேரம் சரியாக அங்கு ஒரு சிவப்பு நிற மாருதி கார் வந்து நின்றது.'' சிவகுமார் குறிப்பிட்டார்.

''சரிதான். அந்தப் பெண்மணியிடம் இருப்பதும் அதே சிவப்பு நிற மாருதிதான்.'' பாலச்சந்திரன் சொன்னார்.

''யாருக்கென்று சொன்னீர்கள்?''

''ரத்னபிரபாதேவிக்கு!''

''அவருக்கு இங்கென்ன வேலை?''

''அது மற்றொரு கதை. அப்புறமாகச் சொல்கிறேன். நாம் இந்தச் செய்திகளை சசிதரனிடம் தெரிவிக்காமல் இருப்பது நல்லது.'' பாலச்சந்திரன் சொன்னார்.

''அதனால் நம்மை அவர் தவறாகப் புரிந்து கொண்டால்?''

''சொல்லாவிட்டால் இந்த சம்பவம் மறுபடியும் தொடராமல் இருக்குமா என்ன?''

''உங்களது கேள்வியும் நியாயம்தான். எதற்கும் சசிதரனிடம் கோடிகாட்டி விடலாம்.'' சிவகுமார் சொன்னார்.

பேசிக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. மாலை முதிர்ந்து விட்டிருந்தது.

டாக்டர் சிவகுமார் குவார்ட்டர்ஸிலிருந்து வெளியேறிய போது விளக்குகள் எரியத் தொடங்கின.

என்ன காரணத்தாலோ அன்று தெருவிளக்குகள் எரியாமலிருந்தன. வழக்கமாக அந்த குவார்ட்டர்ஸின் முன்னாலிருந்த விளக்குக் கம்பங்களில் வடக்குப்புற மூலையிலிருந்த விளக்கு மட்டுமே எரியும். அதையொட்டி அசோக மரங்கள் நெடிதாக வளர்ந்திருந்ததால் பெரும்பாலும் அந்தப் பகுதியில் இருள் நிறைந்திருக்கும்.

சிவகுமார் தனது வீட்டை நோக்கிச் செல்லும்போது சசிதரனது வீட்டைச் சும்மா பார்த்தார்.

நிர்மலா வாசலில் நின்றிருந்தாள். சிவகுமார் எதிர்பாராமல் அவளைப் பார்த்ததால் ஒருகணம் திடுக்கிட்டார்.

''எங்கே போயிட்டு வர்றீங்க டாக்டர்?'' நிர்மலா கேட்டாள்.

அவள் குரல் வெளிவந்த அதே நேரம் சிவகுமாரின் மயிர்க்கால்களில் சட்டென்று வியர்வை முத்துகள் அரும்பின.

அவளுக்கு பதில்சொல்ல முயன்றபோது சிவகுமாரின் நாக்கு வறண்டது.

''ஓகோ... டாக்டர் பாலச்சந்திரனுடன் பேசிவிட்டு வருகிறீர்களா?'' நிர்மலாவின் அடுத்த கேள்வி.

அந்தக் குரலில் ஏதோ வித்தியாசம் இருப்பதாக சிவகுமாருக்குத் தோன்றியது. எதுவும் பேசாமல் விரைவாகத் தனது குவார்ட்டர்ஸை நோக்கி நடந்தார்.

வீட்டுக்குள் வந்த பிறகும் அவர் மனம் அமைதி அடையவில்லை.

ரிசீவரை எடுத்தவர், நம்பரை டயல் செய்தார்.

எதிர்முனையில் பாலச்சந்திரன் பேசினார்.

''என்னங்க சிவகுமார்?''

''உங்கள் வீட்டிலிருந்து கிளம்பும்போது நிர்மலா, அவரது வீட்டு வாசலில் நின்றிருந்தார். உங்களிடம் பேசிவிட்டா வருகிறீர்கள் என்று என்னைக் கேட்டார்.''

''அப்படியா? ஒருவேளை ஒரு பேச்சுக்காகக் கூடக் கேட்டிருக்கலாம். அல்லது என் வீட்டுக்கு நீங்கள் வருவதைப் பார்த்திருக்கலாம்.''

''ம்... என்னவோ... எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை!'' சிவகுமார் ரிசீவரை கிராடிலில் வைத்தார். இருப்பினும் காரணமற்ற ஒரு பயம் அவரைச் சூழ்ந்தது.



இரவு நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு முன்னாலிருந்த ஹோட்டலுக்குப் போய் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பியபோது மணி ஒன்பதைத் தாண்டியிருந்தது.

தூக்கம் வராததால் ஆங்கில மாத இதழ் ஒன்றைப் புரட்டினார்.

அதிலிருந்த கட்டுரை ஒன்று சிவகுமாரின் கவனத்தைக் கவர்ந்தது. ஆவிகளைப் பற்றிய கட்டுரை அது.

அசாதாரணமான சில அனுபவங்களை விவரித்துவிட்டு 'உண்மையில் அவை உலகத்தில் உலவுகின்றன!' என்று குறிப்பிட்டிருந்தார் கட்டுரையாளர்.

ஒரு பெண்மணியின் உடம்பில் புகுந்து கொண்ட ஆவி, அவள் கணவனைக் கொலை செய்த சம்பவத்தை அதில் குறிப்பிட்டிருந்தார்.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னால் தாயத்து ஒன்றில் ஓர் ஆவியை அடக்கிக் கட்டிப்போட்டிருந்தார்கள். அதை மரப் பொந்து ஒன்றில் போட்டு வைத்திருந்தனர். மரத்தை வெட்டியபோது அந்தத் தாயத்து ஒரு பக்தரிடம் சிக்கியது. தங்கமாக இருந்ததால் அதை வெட்டி உருக்கி மோதிரம் செய்து கொண்டார் அவர். வெட்டித் திறந்ததால், அதற்குள் அடக்கம் செய்யப்பட்டிருந்த ஆவி விடுதலையாகி வெளியேறியது.

அந்த ஆவி, அவர் மனைவியின் உடம்பில் புகுந்து கொள்ளவும் செய்தது.

அதைப் படித்து முடித்ததும் சிவகுமாரின் சந்தேகம் விநாடிக்கு விநாடி அதிகரித்தது.

ஒருவேளை நிர்மலாவின் உடம்புக்குள்ளும் அப்படி ஏதாவது ஒன்று புகுந்திருக்கிறதோ என்னவோ?

கடிகாரத்தில் மணி பதினொன்று அடித்தது.

சிவகுமார் புத்தகத்தை மூடி வைத்தார்.

லைட்டை அணைத்துவிட்டுப் படுத்தார். ஒரு கட்டத்தில் கண்கள் செருகி உறக்கத்தில் நழுவத் தொடங்கின.

அவர் படுத்திருந்த படுக்கை அறையின் தாழ்ப்பாள் தானாகவே விலகுவது தெரிந்தது.

சந்தேகத்தை நிவர்த்தி செய்ய படுக்கையை ஒட்டியிருந்த லைட் சுவிட்ச்சில் விரலை வைத்து அழுத்தினார்.

அறையில் விளக்கு எரிந்தது.

நிர்மலா அவருக்கு எதிரில் நின்றிருந்தாள்! டாக்டர் சிவகுமார் திடுக்கிட்டு நடுங்கினார்.

"நீங்கள் ரெண்டுபேரும் பேசிக்கொண்டதை நானும் கேட்டேன். நான் யார் என்கிற உண்மை உங்களுக்குத் தெரிய வேண்டும் இல்லையா? நான் உண்மையில் நிர்மலா அல்ல; என் பெயர் வசுமதி என்பது!" பேசியவாறே அவள் சிவகுமாரை நெருங்கினாள்.

அவள் கைகள் சிவகுமாரை நோக்கி நீண்டன.

அந்தக் கைகளில் நீண்டு வளைந்த நகங்கள்.

அவள் கண்கள் நெருப்புத் தணல்கள் போல ஜொலித்தன.

அவள் சிவகுமாரை முரட்டுத்தனமாகக் கட்டில் மீது தள்ளினாள்.

கடிகாரத்தின் டிக்...டிக்...சத்தம் யாரோ பிடித்து நிறுத்தியது போல் சட்டென்று நின்றது!

டாக்டர் சிவகுமார் தன்னுடைய எல்லா சக்திகளையும் பயன்படுத்தி அவளைத் தடுக்க முயன்றார். முடியவில்லை. அந்த அளவுக்கு அவளது பைசாசிக பலம் சக்தி வாய்ந்ததாக இருந்தது.

**"ஹோ**மம் நிறைவேறாமல் நான் தோல்வியடைந்தது எப்படி?" பீஷ்மநாராயணன் நம்பூதிரி விஷ்ணுப்ரியாவிடம் விசாரித்தார்.

"அப்படி நடக்க இங்கு வாய்ப்பு எதுவுமில்லையே!" என்றாள் விஷ்ணுப்ரியா.

"நானும் அப்படித்தான் நினைத்தேன். யட்சி மற்றும் கந்தர்வாதிகள் கூட இங்கு வந்து மாந்திரீகம் மற்றும்



மந்திரங்களைக் கற்றுச் செல்வதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட இடத்தில் எனக்கு மட்டும் எப்படித் தடை ஏற்பட்டது என்று புரியவில்லை!" அவர் முறையிடுவதுபோல் பேசினார்.

எவ்வளவோ யோசித்துப் பார்த்தும் எந்த ஒரு வழியும் புலப்படவில்லை விஷ்ணுப்ரியாவுக்கு.

'தன்னுடைய கோவிலகத்துக்குள் வந்து ஹோமத்தைத் தடுக்கும் வல்லமை யாருக்கு உள்ளது?' விஷ்ணுப்ரியா அதைப் பற்றி யோசித்தாள்.

"யார் செய்திருந்தாலும் சரி... நானே அதற்கான பரிகாரத்தையும் செய்துவிடுகிறேன்!" அவள் சொன்னாள்.

"இந்த இடத்துக்கு யாராவது புதியவர்கள் வந்திருக்கிறார்களா என்ன?" பீஷ்மநாராயணன் நம்பூதிரி விசாரித்தார்.

"ஆமாம்... வந்திருக்கிறார் ஆனால், அவருக்கு மந்திர தந்திரங்களைப் பற்றி அவ்வளவாகத் தெரியாதே..."

"எதற்காக வந்திருக்கிறார் அவர்?"

"அதைச் சொல்வது முறையல்லவே? உங்களை மாதிரி தானே அவரும்."

அந்த பதில் பீஷ்மநாராயணனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அதுமட்டுமின்றி வந்திருக்கிற மனிதனை அவர் சந்தேகிக்கவும் செய்தார். விஷ்ணுப்ரியா இப்படிப் பேசியதால், 'வந்திருப்பவனிடம் ஏதோ ரகசியம் மறைந்திருக்க வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தார்.

"அறிமுகப்படுத்திக் கொள்ளலாமே என்று கேட்டேன்..." திருமேனி பேச்சை மாற்றினார்.

"அவர் ஓர் இளைஞர்!" விஷ்ணுப்ரியா கூறினாள்.

"இந்தக் காலத்து இளைஞர்கள் கூட மந்திரவாதத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்களே... பரவாயில்லை. கற்றுக் கொள்ளட்டும்."

திருமேனி தன்னுடைய அறைக்குச் சென்றார்.

தனக்கு ஏற்பட்ட தோல்வியை நினைத்து அவர் மனம் வேதனையில் தவித்தது.

அன்று இரவு தனது அறையிலிருந்து வெளியேறிய பீஷ்மநாராயணன் நம்பூதிரி நூல் நிலையத்தை நோக்கி நடந்தார்.

வாசலை நெருங்கியதும் உட்புறத்தில் யாரோ ரகசியக் குரலில் பேசுவதை கவனித்தார். சாவித்துவாரம் வழியாகப் பார்த்தார். உள்ளே இரண்டு பெண்கள் ஓலைச்சுவடி ஒன்றை வைத்துக்கொண்டு கவனமாக வாசிப்பது தெரிந்தது.

திருமேனி கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்.

அறைக்குள் கேட்ட காலடி ஓசையால், பெண்கள் இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

''யார் பீஷ்மநாராயணன்தானே?'' அந்தப் பெண்கள் இருவரும் ஒரே குரலில் ஏக காலத்தில் கேட்டனர்.

தன்னைப் பெயர் சொல்லி அழைக்கும் அந்த இருவரையும் திருமேனி ஆச்சரியத்துடன் பார்த்தார்.

''நீங்கள் நடத்திய சத்ருசம்ஹார ஹோமம் தடைப்பட்டு விட்டதில்லையா?'' ஒருத்தி கேட்டாள்.

## 25

மறுநாள் காலையில் சிவகுமார் வழக்கம்போல் தனது காரை துடைக்க வெளியே வராமல் போகவே, சசிதரன், சந்தேகம் கொண்டவராக சிவகுமாரது வீட்டை நோக்கி நடந்தார்.

தினமும் காலையில் தன்னுடைய காரை தானே தன் கைப்படத் துடைப்பது சிவகுமாரது வழக்கம்.

அவரது மாருதி கார் தூசி படிந்து வாசலிலேயே நின்றிருந்தது.

சிவகுமார் எங்கும் வெளியே போகவில்லை என்பதும் தெரிந்தது. போயிருந்தால் கார் இருக்காது.



காலிங்பெல்லை அழுத்தினார்.

உள்ளே ஒரு பறவையின் குரல் ஒலித்தது.

பல நிமிடங்களாகியும் எந்தவிதமான அசைவோ சத்தமோ இல்லை. மூன்று தடவைக்குமேல் கதவை பலமாகத் தட்டினார்.

நாலாவது தடவை தட்டியது சற்று அதிகமான பலத்துடன் என்று தோன்றியது. கதவு விரியத் திறந்து கொண்டது.

சசிதரன் நெற்றியைச் சுளித்தார்.

ஏதோ விபரீதம் நிகழ்ந்திருப்பதாகத் தெரிந்தது.

''சிவகுமார்!'' என்று அழைத்தவாறு சசிதரன் வீட்டுக்குள் நுழைந்தார்.

வரவேற்பு அறையிலும், சமையல் அறையிலும் அவரைக் காணவில்லை.

படுக்கையறையின் கதவு சாத்தியிருந்தது. சசிதரன் கதவைத் திறந்தார். அறை இருட்டாக இருந்தது.

உள்ளே நுழைந்து விளக்கு சுவிட்சைத் தட்டினார்.

அறைக்குள் வெளிச்சம் பரவியதும் கட்டிலைப் பார்த்தார். சிவகுமார் அங்கும் இல்லை.

மிச்சமிருந்தது குளியல் அறை மட்டும்தான்.

''சிவகுமார்...'' என்று குரல் கொடுத்தவாறே பாத்ரூமின் கதவைத் திறந்தார்.

திறந்த வேகத்திலேயே சசிதரன் சட்டென்று பின்வாங்கினார்.

சிவகுமாரின் உடம்பு வென்டிலேஷனில் சுருக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது.

சசிதரன் மிரண்டவராக வெளியே ஓடி வந்தார். நேராக அவர் போனது டாக்டர் பாலசந்திரனின் வீட்டுக்குத்தான். பாலச்சந்திரனும் வந்து அந்தக் கோரக் காட்சியைக் கண்டார்.

அவர் கண்களில் சந்தேகம் பரவத் தொடங்கியது. முந்தைய நாள் தான் இரண்டு பேரும் நிர்மலாவைப் பற்றிப் பேசினோம். அன்றே அதற்குரிய பலன் கிடைத்திருக்கிறதா?

நிலைமை இப்படியே தொடர்ந்தால் என்ன ஆவது? இந்தக் காரணங்களை எப்படி வெளிப்படுத்துவது?

சொன்னால் எவராவது நம்புவார்களா?

மதிப்பும் மரியாதையும் மிக்க ஒரு டாக்டரின் மனைவி... அதுவும் டாக்டர்... மாந்திரீகப் பாரம்பரியம் உள்ள ஒரு குடும்பத்தின் மருமகள்.

தான் கற்பனையாகக் கதை கட்டுவதாக மற்றவர்கள் கேலி செய்வார்கள்.

எனவே, மௌனமாக இருப்பதுதான் நல்லது என்று தோன்றியது.

போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் செய்தார்கள். இன்னும் சப்-இன்ஸ்பெக்டர் வந்து சேரவில்லை.

செய்தி விரைவிலேயே மருத்துவமனையையும் அடைந்தது.

சிவகுமாரின் குவார்ட்டர்ஸுக்குச் சுற்றிலும் மனிதர்கள் குழுமத் தொடங்கினர்.

சற்று நேரத்துக்குள் போலீஸார் தங்களது வழக்கமான பரிவாரங்களுடன் வந்து சேர்ந்தனர்.

குவார்ட்டர்ஸுக்குள் யாரையும் நுழைய விடாமல் தடுத்தனர் போலீஸார். முதல் கட்ட விசாரணையை முடித்து, சிவகுமாரின் உடலை போஸ்ட் மார்ட்டத்துக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மதியத்துக்குப் பிறகு போஸ்மார்ட்டம் ரிப்போர்ட் விவரத்தை டாக்டர் கேசவன், பாலச்சந்திரனிடம் தெரிவித்தார்.

''டாக்டர் சிவகுமார் யாருடனோ மிகவும் கடுமையாக எதிர்த்துப் போராடியிருக்க வேண்டும். அவரின் கழுத்து, மார்பு போன்ற பகுதிகளில் நகக்கீறல்கள் தென்படுகின்றன. கழுத்தை நெரித்து, மூச்சுத்திணறச் செய்து கொலை செய்திருக்கிறார்கள்.''

அதன் பிறகு பாத்ரூமில் தற்கொலை செய்து கொண்டது போல் தொங்கவிடப்பட்டிருக்கிறார்.



அசாதாரணமான பலம் பிரயோகித்து அவர் கழுத்து நெரிக்கப்பட்டிருக்கிறது என்பதை பி.எம்.ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருப்பதாகவும் கூறினார்.

''குறைந்தபட்சம் இரண்டு மனிதர்களாவது இந்தக் கொலையில் தொடர்பு கொண்டிருப்பார்கள்...'' என்றும் கேசவன் தனது கருத்தைத் தெரிவித்தார்.

அதையெல்லாம் கேட்கக் கேட்க டாக்டர் பாலச்சந்திரனின் மனத்தில் உண்மையான கொலையாளியின் உருவம் தெளிவடைந்து வந்தது.

ஒரு வகையில் சொல்வதானால் அவர் தர்மசங்கடமான நிலைமையில் இருந்தார். என்ன வந்தாலும் சரி... உண்மையைச் சொல்லிவிட வேண்டியதுதான் என்று கூட ஒரு கணம் துணிந்தார். பிறகு எதையோ உணர்ந்தவர் மாதிரி அந்த உணர்வையே அடக்கிக் கொண்டார். இப்போது அதைச் சொன்னால் ஏன் முதலிலேயே இதைச் சொல்லவில்லை என்றும் கேட்பார்கள். இந்த மாதிரியான கேள்விகளுக்கெல்லாம் தன்னிடம் பதில் இல்லையே!

மாலை நேரமானதும் டாக்டர் பாலச்சந்திரன் ஒருவிதமான திணறலை உணர்ந்தார். ரகசியம் வெளியாகிவிடக் கூடாது என்பதற்காக சிவகுமார் நிரந்தரமாக வாயடைக்கப்பட்டார் என்பதும் தெரிந்தது.

உண்மையிலேயே இதன் பின்னணியில் செயல்படும் சக்தி எது? அவரால் உடனடியாக எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

கடைசியில் ஓர் உபாயத்தைக் கண்டுபிடித்தார்.

சசிதரனின் அப்பா வாசுதேவன் நம்பூதிரியைச் சந்திப்பது தான் அந்த உபாயம்.

குவார்ட்டர்ஸில் இரவைக் கழிப்பதென்பது அவரைப் பொறுத்தவரை நினைத்துப் பார்க்கவும் முடியாத விஷயமாக பயமேற்படுத்தியது. எனவே, சசிதரனின் அப்பாவிடமே போவதென்று முடிவு செய்தார்.

சசிதரனிடம் இதைப் பற்றிப் பேச வேண்டாம் என்று தீர்மானித்தார்.

காரை ஸ்டார்ட் செய்து புறப்பட்டபோது கேட் அருகில் சசிதரன் நிற்பதை கவனித்தார். வழக்கம்போல் உலாவலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தார் சசிதரன்.

''எங்கே போகிறீர்கள் டாக்டர் இந்த நேரத்தில்?'' சசிதரன் கேட்டார்.

''டவுன் வரை போக வேண்டி உள்ளது'' என்றவர் மேலும் தாமதிக்காமல் ஆக்ஸிலேட்டரில் காலை வைத்து அழுத்தினார்.

மனையை அடைந்தபோது வாசுதேவன் நம்பூதிரி பூஜையறை வாசலில் நிலவிளக்கின் அருகே உட்கார்ந்திருந்தார்.

தெருவாசலைத் தாண்டி வருவது தன் மகனாக இருக்கும் என்று முதலில் நினைத்தார்.

மேலும் சற்று நெருங்கி வந்தபோதுதான் ஆள் அடையாளம் தெரிந்தது.

''உட்காருங்கள்!'' வாசுதேவன் நம்பூதிரி இருக்கையைச் சுட்டிக்காட்டினார்.

உட்கார்ந்தார்.

''ஏதாவது விசேஷமா... இந்த நேரத்தில் வந்திருக்கிறீர்கள்... எங்காவது போய்விட்டுத் திரும்புகிற பயணமா என்ன?'' திருமேனி கேட்டார்.

அவருக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாதவராக ஒரு கணம் தயங்கினார்.

என்ன சொல்லலாம்?

''இந்த வழியாகப் போகவேண்டிய ஒரு வேலை. அப்படியே உங்களையும் பார்க்கலாம் என்று வந்தேன்.'' பாலச்சந்திரன் பதிலளித்தார்.

''குவார்ட்டர்ஸில் ஒரு மரணம் நிகழ்ந்ததாகச் செய்தி வந்ததே. உண்மையில் என்ன நடந்தது?'' வாசுதேவன் நம்பூதிரி கேட்டார்.



மறுபடியும் பாலச்சந்திரன் நாக்கில் கடிவாளம் விழுந்தது போலானது.

''ஆமாம்... டாக்டர் சிவகுமார் இறந்து போனார். என்ன காரணம் என்று தெரியவில்லை.'' பாலச்சந்திரன் சொன்னார்.

''அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று நிர்மலா போனில் தகவல் சொன்னாள். அவள்தான் எனக்குச் செய்தி சொன்னவள். டாக்டர் சிவகுமார் ஒரு தடவை இங்கே வந்திருக்கிறார். அவர் மனைவி அம்மா வீட்டுக்குப் போயிருப்பதாகக் கூட சொன்னார்கள். அவர்தானே?'' வாசுதேவன் நம்பூதிரி கேட்டார்.

''ஆமாம்... அவரேதான்!'' பாலச்சந்திரன் ஒப்புக் கொண்டாலும் நிர்மலாதான் தகவல் தெரிவித்தவள் என்பதைக் கேள்விப்பட்டதாலும் அவர் உடம்பு ஒருமுறை அதிர்ந்தது.

'எதற்காக நிர்மலா இவருக்கு உடனே தகவல் தெரிவித்திருப்பாள்?' பாலச்சந்திரன் யோசித்தார்.

எப்படியிருந்தாலும் நடப்பதெல்லாம் நல்லதற்கு அல்ல என்பது மட்டும் புரிந்தது.

''நான் வந்திருப்பது முக்கியமான ஒரு விஷயத்துக்காக! '' பாலச்சந்திரன் பேச்சைத் தொடங்கினார்.

''விஷயம் என்னவென்று சொல்லுங்கள்!'' வாசுதேவன் நம்பூதிரி கேட்டார்.

''டாக்டர் சேதுவர்மாவை உடனே பார்த்தாக வேண்டும். சிவகுமாரின் மரணத்தைப் பற்றி அவரிடம் சொல்லியாக வேண்டும். அதையும் நானே நேரடியாகச் சொன்னால்தான் என் மனம் ஆறுதலடையும். அடுத்ததாக நான் சொல்வது... நீங்கள் ஒரு தடவை சசிதரனின் குவார்ட்டர்ஸுக்கு வரவேண்டும். அதற்குப் பக்கத்து வீட்டில்தான் சிவகுமார் இறந்திருக்கிறார். நிர்மலா போன் செய்திருப்பதைப் பார்த்தால் அவர் பயந்திருக்கிறார் என்று தோன்றுகிறது.''

பாலச்சந்திரன் மிகவும் வினயத்துடன் செய்தியைத் தெரிவித்தார்.

''நீங்கள் சொல்வதும் சரிதான். நானே இதை உங்களிடம் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். ஒன்று செய்தால் என்ன? இப்போதே நான் உங்களுடன் கிளம்பி வருகிறேன். என்ன சொல்கிறீர்கள்?''

பாலச்சந்திரன் இதை எதிர்பார்க்கவே இல்லை.

''ஓ தாராளமாக வாருங்கள். நான் சொன்ன சேதுவர்மாவின் விஷயம்?'' திருமேனிக்கு நினைவூட்டினார்.

''அது சற்றுத் தொலைவிலுள்ள இடம். இளயிடத்துக் கோவிலகம் என்று அதைச் சொல்வார்கள். கோழிக்கோட்டுக்கு அருகில்... அதையும் தாண்டிப் போக வேண்டும். உடனே போய்த்தான் ஆகவேண்டுமா என்ன?''

''ஆமாம்... உடனடியாகப் போகவேண்டும்.''

''அப்படியானால் நானே உங்களுக்கு வழி காட்டுகிறேன். கொஞ்சம் காத்திருந்தால், நான் உடை மாற்றிவிட்டு வந்து விடுவேன்.'' திருமேனி எழுந்தார்.

மனைவியிடம் விவரம் சொல்லிவிட்டு உடனடியாக வேறு உடையணிந்து வந்தார். கையில் மாற்றுத்துணி இரண்டும் எடுத்து வந்தார்.

இருவரும் புறப்பட்டனர்.

மருத்துவக் கல்லூரி வளாகத்தை அடைந்தனர்.

வாசுதேவன் நம்பூதிரி, வீட்டுக்குள் காலெடுத்து வைத்தவுடன் நிர்மலா வீட்டுக்குள் ஓடி மறைந்தாள்.

**ச**த்ருசம்ஹார ஹோமம் தோல்விபடைந்ததைப் பற்றி நூலக அறையிலிருந்த பெண்கள் இருவரும் பேசியதைக் கேட்ட பீஷ்மநாராயணன் வியப்பு அடைந்தார்.

''உங்களுக்கும் இந்த விவரம் தெரியுமா? அது எப்படி சாத்தியமானது?'' அவர் கேட்டார்.

''இதெல்லாம் தெரியாமலிருக்கிற விஷயமா என்ன?'' அவர்கள் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.



தன் முன்னால் இருப்பவர்கள் சாதாரணப் பெண்கள் அல்ல என்பது அப்போதே அவருக்குப் புரிந்தது.

''இந்த வயதில் நீங்களும் மந்திரவித்தைகளைக் கற்றுக் கொள்கிறீர்களா? நீங்கள் இப்போதே அதையெல்லாம் செயல்படுத்திப் பார்க்கலாமே?'' கேட்டார்.

அதைக் கேட்ட இருவரும் சிரித்துக் கொண்டனர்.

''அதெல்லாம் தெரியாமலில்லை. யாராவது அவற்றைத் திருப்பி ஏவினால் தடுத்துக் கொள்ள வேண்டாமா?'' அதைப் பற்றிப் படிக்கிறோம்.

''ஓகோ... அந்த அளவுக்கு வந்துவிட்டீர்களா? நல்லதுதான்... ஆமாம், என்னுடைய ஹோமம் தடைப்பட்டதை எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?''

''உங்களுடைய சங்கல்ப உருவம் இங்கே வந்திருந்தது.'' ஒருத்தி கூறினாள்.

''யார் அந்தச் சின்னப் பெண்ணா?'' பீஷ்ம நாராயணன் மலைப்புடன் கேட்டார்.

''ஆமாம்... அவளேதான்!''

''வழியில்லையே!''

''ஹோமகுண்டத்தின் அக்னி ஜுவாலையில் ஹோமிக்கப் பட்டவள் இங்கே வராமல் வேறு எங்கு போவாள்?, அவளை எங்களுடன் சேர்த்துக் கொண்டோம்.''

இந்த வார்த்தைகள் திருமேனியின் ஆச்சரியத்தை அதிகப் படுத்தின.

இப்படியொரு செய்தியை அவர் இப்போதுதான் கேள்விப் படுகிறார்.

''அப்படியானால், அந்தப்பெண் இறந்து விட்டாளா?'' திருமேனி தன்னைத்தானே கேட்டுக் கொண்டார்.

''ஆமாம்... அதுதான் உண்மை!'' ஒருத்தி கூறினாள்.

தான் தேவதையாக பாவித்து ஹோமத்துக்குப் பயன்படுத்திய இளம்பெண் இப்போது ஒரு ரட்சஸாக மாறிவிட்டது அப்போது தான் அவருக்குத் தெரிந்தது.

''நீங்கள் நடத்திய ஹோமம் தோல்வியில் முடிந்ததன் காரணம், கெட்ட நோக்கம்தான். இங்கு ஒருபோதும் அப்படியெல்லாம் நடந்தது கிடையாது!'' ஒருத்தி இயல்பாக பேசுவதுபோல் கூறினாள்.

''யாராவது திரைமறைவில் அதற்காகச் சதி செய்திருப்பார்களா?''

''அதுதான் நடந்திருக்கிறது. இப்போதே அது யாரென்று கண்டுபிடித்து அழிக்கவில்லையென்றால், பிற்பாடு உங்களால் எதுவும் செய்யமுடியாமல் போகும்!''

''அப்படியானால் அது யார் என்பதைக் கண்டுபிடிக்கத்தான் வேண்டும்!'' பீஷ்மநாராயணன் எழுந்தார்.

அவர் நூலக அறையிலிருந்து வெளியே வந்து வராந்தா வழியாக நடந்து, கீழ்ப்புறமாகச் செல்லும் படிகளை நெருங்கிய போது யாரோ படிகளின் கீழே நிற்பது தெரிந்தது.

ஊன்றி கவனித்தபோது ஒரு பெண் உருவம் என்பது விளங்கியது.

அவள் கையில் சங்கிலி விளக்கு ஒன்று எரிகிறது.

விளக்கை அவள் முன்புறமாக எடுத்துவந்தபோது முகம் தெரிந்தது.

அவர், ஹோமகுண்டத்தின் முன் கற்பித உருவமாக நிறுத்தியிருந்த அதே பெண்தான் அவள்!

## 26

**ஹோ**மகுண்டத்தின் பின்புறத்திலிருந்து மறைந்த பெண்ணை மீண்டும் பார்க்க நேர்ந்த பீஷ்மநாராயணன் ஒருகணம் அசைவற்று நின்றார்!



அவளை, அவருக்கு மிக நன்றாகத் தெரியும்.

அவள் அம்மாவிடம் பெரிய தொகை கொடுத்து அழைத்து வந்திருந்தார். 'செய்யப்போகும் மந்திர வேலைக்கு கன்னிப் பெண் ஒருத்தி உதவியாக இருக்க வேண்டும் என்பது நியதி' என்று சொல்லி அவள் அம்மாவிடம் ஒப்புதல் பெற்றிருந்தார். பாவம், அந்த அப்பாவித் தாய் அதை நம்பவும் செய்தாள்.

என்ன இருந்தாலும் அந்தப் பெண் அப்படி மறைந்து போவாள் என்று அவர் கற்பனை கூடச் செய்ததில்லை. அக்னி ஜ்வாலைக்குள் ஒன்றிக் கலந்துவிட்டாள் என்றுதான் அவர் நினைத்தார்.

அவள் இறந்தது உண்மையாக இருக்கும் பட்சத்தில், இது அவளின் ரட்சஸாக இருக்க வேண்டும் என்று உறுதியாக நம்பினார் திருமேனி.

''ஊர்மிளா!'' திருமேனி அவளை அழைத்தார். ஆனால், அவள் அதைக் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை.

குரூரம் நிரம்பிய விழிகளுடன் ஒரு தடவை அவரைப் பார்த்துவிட்டு அவள் பாட்டுக்குப் படியேறிச் சென்று மறைந்தாள்.

திருமேனிக்கு இப்போது அவளிடம் கோபம் ஏற்படவில்லை. மாறாக இவ்வளவெல்லாம் செய்து, தான் தொடங்கிய ஹோமத்தைக் கெடுத்த நபர்மீது மொத்தக் கோபமும் திரும்பியது.

'அந்த நபர் எப்படிப்பட்ட ஆணாகவோ, பெண்ணாகவோ இருந்தாலும் பரவாயில்லை. கண்டுபிடித்துப் பூண்டோடு அழிக்கவேண்டும்!' என்று விரதம் பூண்டார்.

அங்கிருந்து கிளம்பியவர் விஷ்ணுப்ரியாதேவியின் பூஜையறையை நோக்கி நடந்தார்.

கதவு திறந்து கிடந்தது.

உட்புறம் பார்த்தார். விஷ்ணுப்ரியா பூஜையில் மூழ்கியிருந்தாள்.

அவளுக்கு முன்னால் ஓர் ஆள் உயரமுள்ள பத்ரகாளி சிலை இருந்தது.

கீழ்ப்புறம் எரியும் நிலவிளக்கு ஜுவாலைகளின் சலனத்தில் அந்தச் சிலை உயிருள்ளது போல் தோன்றியது.

ரௌத்திரத்தை வெளிப்படுத்தும் கண்கள்... ரத்தத்தின் நிறம் பூண்ட நாக்கு... கழுத்தில் மண்டையோட்டு மாலை, இடுப்பில் எலும்புத் துண்டுகளால் கோக்கப்பட்ட அரைஞ்ஞாணம்.

விஷ்ணுப்ரியா அவ்வப்போது முன்புறம் எரியும் நெருப்பில் எதையோ வீசி எறிந்தாள். அது நெருப்பில் படும்போதெல்லாம் 'பும்... பும்' என்ற சத்தம் எழுந்தது.

'இந்த நள்ளிரவு வேளையில் விஷ்ணுப்ரியா எதற்காக இந்த பூஜையைச் செய்கிறாள்?' என்று யோசித்தார் பீஷ்மநாராயணன்.

ஏற்பாடுகளைப் பார்த்தால் அது சாதாரணமான பூஜை அல்ல என்று விளங்கியது.

சட்டென்று இரண்டு கால்களையும் கட்டியிருந்த சேவல் ஒன்றை எடுத்து விஷ்ணுப்ரியா மேற்புறமாக எறிந்தாள். அது துடித்தபடி கீழே வருவதற்குள் விஷ்ணுப்ரியாவின் கையில் இருபுற விளிம்பும் கூர்மையான வாள் ஒன்று தயாராக இருந்தது.

கோழி அமைதியடைந்தது.

அதன் தலை நெருப்புக்குண்டத்தில் விழுந்தது.

பீஷ்மநாராயணன் வியப்படைந்தார்.

'எந்த நோக்கத்துக்காக அவள் அந்தக் கோழியின் கழுத்தை அறுத்தாள்?'

தான் கூட இப்படிச் செய்ததில்லை!

"சே!" பீஷ்மநாராயணன் அசந்து போய்த் தன்னையும் மீறிப் பாராட்டினார்.

அதே நேரம் விஷ்ணுப்பிரியாவின் முன்புறமிருந்த சிலையின் கைகள் அசைந்தன.



மூச்சைப் பிடித்தபடி அவர் அந்தக் காட்சியைப் பார்த்தார்.

உணர்வற்று அந்தச் சிலையையே பார்த்தபோது, அதன் கையில் சுவடியொன்று தென்பட்டது. அது தங்க நிறத்தில் இருந்தது.

ஒரு விநாடி நேரத் தாமதத்துக்குப் பிறகு அந்தச் சுவடியை, ஏந்தியபடியிருந்த விஷ்ணுப்ரியாவின் கையில் போட்டது சிலை.

அதைப் பெற்றுக் கொண்டதும் மீண்டும் ஒரு கை நிறைய ஹோமத்தூளை வாரி நெருப்பில் எறிந்தாள் விஷ்ணுப்ரியா. நெருப்புத்துணுக்குகள் அந்தரத்தில் பரவிச் சிதறின.

நெருப்பு ஜுவாலைகள் தணிந்தபோது பத்ரகாளியின் விக்கிரகத்தை ஒரு திரைச்சீலை வந்து மூடியது.

உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்த விஷ்ணுப்ரியா திரும்பினாள்.

பீஷ்மநாராயணன் சட்டென்று வாசல் பகுதியிலிருந்து மறைந்தார். தன்னுடைய அறைக்கு வந்தவர், பத்ரகாளி, விஷ்ணுப்ரியாவுக்கு நல்கிய ஓலைச் சுவடியைப் பற்றி யோசிக்கத் தொடங்கினார்.

நிச்சயமாக அது அற்புதமான ஒரு சுவடியாக இருக்க வேண்டும். எனவே, எப்படியும் அதைக் கைப்பற்ற வேண்டுமென்று நினைத்தார்.

விஷ்ணுப்ரியா சுவடியைப் புரட்டிப் பார்த்தாள்.

தான் அதுவரை படித்தேயிராத வித்தியாசமான பலதும் அதில் இருந்தன.

மனித உடம்பில் புகுந்திருக்கும் பிரேத ஆத்மாவை உடம்பிலிருந்து அப்புறப்படுத்துவது முதல், பிரேத ஆத்மாவுக்குள் நுழைய உதவும் கோர மந்திரங்கள் வரை அதில் இருந்தன.

மரணமடைந்த ஒருவரின் உடம்புக்குள் மரணமடைந்ததிலிருந்து ஆறுமணி நேரத்துக்குள், மற்றொரு ஆத்மாவைக் குடியேற வைத்தால் மரணமடைந்தவர் புதிய ஆத்மாவுடன் உயிர்த்து எழுவார் என்றும் அது குறிப்பிட்டது.

இதன் மூலம் ஒரு மாந்திரீகன் தனக்காகவோ, மற்றவர்களுக்காகவோ, குறிப்பிட்ட ஒரு வீட்டிலுள்ள ஒரு நபரைக் கொன்றுவிட்டு, அந்த உடம்பில் தனது விருப்பத்திற்குரிய - தன் சொற்படி நடக்கக்கூடிய மற்றொரு ரட்சஸையோ மற்றதையோ ஏவிவிட்டால் அத்துடன் அந்தக் குடும்பத்தின் நிலையே தாறுமாறாகிவிடும். கட்டுப்பாட்டை மாந்திரீகன் தன் கையில் வைத்துக் கொள்ளவும் முடியும்.

விஷ்ணுப்ரியா சுவடியை தனது அறையிலுள்ள மரச்சுவரின் ரகசிய அறைக்குள் வைத்துப் பூட்டினாள். அந்த ரகசிய அறையின் சாவித்துவாரம் வெளியே தெரியாமலிருப்பதற்காக கண்ணாடி சட்டம் போட்டப்பட்ட யந்திரத் தகடு ஒன்றை அதன் மீது தொங்கவிட்டாள்.

மறுநாள் இரவில் சேதுவர்மா தன்னுடைய அறையில் அமர்ந்திருக்கும்போது வசந்தா வந்தாள்.

''சத்ருசம்ஹார ஹோமம் எதுவரை வந்திருக்கிறது?'' அவள் விசாரித்தாள்.

''செயல்படும் அளவுக்கு இன்னும் தயாராகவில்லை'' சேதுவர்மா கூறினார்.

''அவர் அதை முடிப்பதற்கு முன் நாம் நடத்தியாக வேண்டும்.'' வசந்தா வற்புறுத்தினாள்.

''அவருக்கும் எனக்கும் என்ன தொடர்பு? ஒருவேளை அவரே முதலில் அந்த ஹோமத்தை முடித்தால் அதனால் நமக்கு என்ன சேதாரம்?'' சேதுவர்மா கேட்டார்.

''ஓகோ, நீங்கள் இப்படி நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அவர் மட்டும் சத்ருசம்ஹார ஹோமத்தை நடத்தி வெற்றி பெற்றுவிட்டால், முதலில் தொலைப்பது உங்களைத்தான்?''

''என்னையா, எதற்காக?''

''எதற்காகவா? ஹோமம் முழுமையடைந்தால், அவர் எப்படிப்பட்டவருடனும் மோதி வெற்றி பெறும் வல்லமை



உடையவர் ஆகிவிடுவார். அதன் பிறகு அவர் என்ன செய்வார் தெரியுமா?''

''சொன்னால்தானே தெரியும்!'' சேதுவர்மா அவள் கண்களைப் பார்த்தார்.

வசந்தா மிகவும் அழகானது போல் தெரிந்தது. அவள் கண்களில் சுத்தம் செய்யப்பட்ட வெள்ளியின் பளபளப்பும், கன்னக்கதுப்புகளில் தாமரைப் பூவின் சிவப்பும் மென்மையும் தென்பட்டன.

இரண்டு பூவிதழ்களை எடுத்து ஒட்டி வைத்தது போலிருந்தன அவளின் பளபளப்பான உதடுகள்.

''சத்ருசம்ஹார ஹோமம் செய்து வெற்றி பெற்ற மனிதனை யாராலும் தோற்கடிக்க முடியாது. அப்படிப்பட்ட வெற்றியை அவர் பெற்றுவிட்டால், அதன் பிறகு இங்குள்ள ஒவ்வொருவரையும் பிடித்து எட்டிமரத்தில் அறைந்து விடுவார்'' வசந்தா கூறினாள்.

''விஷ்ணுப்ரியாவைக் கூடவா அவர் தொல்லைப்படுத்த முடியும்?'' சேதுவர்மா கேட்டார்.

''அதைப் பற்றி உறுதியாக எதுவும் சொல்வதற்கில்லை. விஷ்ணுப்ரியாவின் அபாரமான வல்லமையைப் பற்றி எவருக்கும் சரியாகத் தெரியாது. என்ன இருந்தாலும் அவருக்கும் எப்போது மோசமான தசை ஏற்படும் என்பதைச் சொல்ல முடியாதே!''

'அந்த மனிதர் இப்போது என்ன செய்து கொண்டிருப்பார்?' சேதுவர்மா அனுமானிக்க முயன்றார்.

வசந்தா சற்று நேரம் கண் மூடி மௌனமாக அமர்ந்திருந்தாள்.

''உடனே கிளம்புங்கள். நாம் சற்றும் தாமதிப்பதற்கில்லை.'' வசந்தா எழுந்தாள்.

அவர்கள் இருவரும் அவசர அவசரமாக வராந்தாக்களைக் கடந்தனர்.

வசந்தா வந்து நின்ற இடம், பூட்டப்பட்ட பூஜையறை வாசலின் முன்புறம்.

அந்தக் கதவு திறந்து கிடந்தது.

''நீங்கள் உள்ளே சென்று பாருங்கள். நான் இங்கேயே இருக்கிறேன்...'' வசந்தா கூறினாள்.

சேதுவர்மா முன்புறமாக நகர்ந்து எட்டிப் பார்த்தார்.

''யாருமில்லையே?'' சேதுவர்மாத் தலையைத் திருப்பி அவளிடம் கூறினார்.

''அப்படியிருக்க வழியே இல்லை!'' என்ற வசந்தா வாசல் பக்கமாக நகர்ந்து வந்தாள். உட்புறம் பார்த்த அவள் கண்கள் வியப்பால் விரிந்தன.

''அங்கிருந்த ஓவியம் எங்கே?'' அவள் மெதுவான குரலில் கேட்டாள்.

வசந்தாவின் கேள்வி உண்மைதான். டாக்டர் இந்திராபாயின் உருவம் கொண்ட ஓவியம் அப்போது அங்கு இல்லை!

சேதுவர்மா அப்போதுதான் அந்த இடத்தை ஊன்றி கவனித்தார்.

''உண்மைதான்! உள்ளே வாருங்கள் வசந்தா!'' சேதுவர்மா அவளை வற்புறுத்தினார்.

அவள் அறைக்குள் வந்தாள்.

இருவரும் படம் மாட்டப்பட்டிருந்த இடத்தை நெருங்கினர்.

''படத்தை அவர் எடுத்துக் கொண்டு போயிருக்க வேண்டும்.'' வசந்தா உறுதியான குரலில் சொன்னாள்.

''அந்தப் படம் அவருக்கு எதற்கு?''

''என் யூகம் சரியாக இருந்தால், இந்திரா பாய்தான் இந்தக் கோவிலகத்தின் முதல் மந்திரவாதினி. அந்த ஓவியத்தில் அவருடைய சக்தி படிந்திருப்பதாகப் பேச்சு!''

''அப்படியல்ல... பின்தொடரும் தலைமுறைக்குள் புகுந்து கொண்டு வருவதாக அல்லவா சொன்னார்கள்?''



''அதுவும் சரிதான். ஒரு சில சந்தர்ப்பங்களில் அவர் இந்த ஓவியத்துக்குள் புகுந்து கொள்வதும் உண்மை!''

''நீங்கள் சொல்வதை வைத்துப் பார்த்தால் கொண்டு சென்ற படத்தை பீஷ்மநாராயண் எரித்து அழிக்கவும் செய்யலாம்.''

''ஐயோ... அப்படிச் சொல்லாதீர்கள்!'' வசந்தா தன் இரண்டு காதுகளையும் பொத்தினாள். அந்த வார்த்தையை அவளால் தாங்க முடியவில்லை.

''அதற்கு நாம் என்ன செய்வது?'' சேதுவர்மா கேட்டார்.

''அவரது அறைக்குப் போய்ப் பார்க்கலாம். என்ன நடக்கிறது என்பதை அறிந்தே தீரவேண்டும்.'' வசந்தா பிடிவாதமாகச் சொன்னாள்.

வசந்தா சொல்வதில் ஏதோ உண்மை இருக்கிறது என்று அனுமானித்த சேதுவர்மா அவளுடன் நடந்தார்.

**வா**சுதேவன் நம்பூதிரி சசிதரனின் குவார்ட்டர்ஸில் நுழைந்த நொடியிலிருந்து டாக்டர் பாலச்சந்திரன், நிர்மலாவின் நடவடிக்கைகளைக் கூர்மையாக கவனித்தார்.

உள்ளே போன நிர்மலா வெகு நேரமாக வெளியே வரவில்லை.

சசிதரன் வரவேற்பு அறையில் இருந்தபடி பேசினார். குடும்ப சம்பந்தமாக எதையும் பேசவில்லை.

''நிர்மலா எங்கே?'' வாசுதேவன் நம்பூதிரி கேட்டார்.

''உள்ளேதான் இருக்கிறாள். நிர்மலா... அப்பா வந்திருக்கிறார் பார்... நீ கவனிக்கவில்லையா?'' சசிதரன் உட்புறம் பார்த்துச் சொன்னார்.

''இதோ வந்துட்டேன்...'' நிர்மலா உள்ளிருந்து குரல் கொடுத்தாள்.

ஆனால், வெளியே வரவில்லை.

'அப்பா, தப்பாக நினைத்துக் கொள்ளப் போகிறாரே' என்று சசிதரன் உட்புறம் போனார்.

''அப்பா வருத்தப்படுவார் இல்லையா... நீ அவர்கிட்ட மரியாதைக்காகவாவது இரண்டு வார்த்தை பேச வேண்டாமா?''

''எனக்கு உடம்பு சரியில்லை. டாக்டர் கேசவன் வீட்டு வேலைக்கரியைக் கூட்பிட்டு வருமாறு மகனை அனுப்பி வைத்திருக்கிறேன்.'' அவள் சமாதானம் சொன்னாள்.

அந்த வார்த்தைகள் சசிதரனுக்கு ஆறுதலாக இருந்தன.

மாந்திரீகராக இருப்பதால் எப்போதும் சுத்தபத்தமாக நடந்து கொள்பவர் வாசுதேவன் நம்பூதிரி. எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவள் அப்பா முன்னால் போக வேண்டியது தில்லை என்று சசிதரனும் சொன்னார்.

''நிர்மலாவுக்கு உடம்பு சரியில்லை. அடுத்த வீட்டு வேலைக்காரியை வரச் சொல்லியிருக்கிறாள். கொஞ்ச நேரத்தில் காபி தயாராகிவிடும்.'' சசிதரன் கூறினார்.

வாசுதேவன் நம்பூதிரி அதை ஒரு பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை.

இதெல்லாம் ஒரு நாடகம் என்பது டாக்டர் பாலச்சந்திரனுக்கு விளங்கவே செய்தது. உண்மையான காரணம் அதுவல்ல என்று எப்படி அந்த இடத்தில் மறுத்துச் சொல்ல முடியும்?

சற்று நேரத்தில் வேலைக்காரி காபி கொண்டு வந்து வைத்தாள்.

''என்னப்பா திடீரென்று?'' சசிதரன் கேட்டார்.

''காரணம் எதுவுமில்லை. வரவேண்டுமென்று தோன்றியது உடனே புறப்பட்டு விட்டேன்.''

''இருந்தாலும் நீங்கள் வந்ததும் நல்லதாகப் போய்விட்டது இந்தப் பகுதியில் எல்லாரும் ஒருவித பயத்தோடு இருக் கிறார்கள். திருட்டு பயம். வரவர திருடர்களின் தொல்லை தாங்க முடியவில்லை. எனக்கு நைட் டூட்டியாக இருப்பதால் ஒரு துணையாகவும் இருக்கும்!''

''இன்று நீ வேலைக்குப் போக வேண்டுமா?'' திருமேனி கேட்டார்.



''போக வேண்டாம். வாராந்திர விடுமுறை!''

அப்போது தொலைபேசி மணியடித்தது.

பாலச்சந்திரன் தொலைபேசியின் அருகில் உட்கார்ந் திருந்தார்.

''யாரென்று பாருங்கள்!'' சசிதரன், பாலச்சந்திரனிடம் சொன்னார்.

''நான் பாலச்சந்திரன் பேசுகிறேன். சசிதரனுக்கு இன்று லீவாயிற்றே... ஓகோ... டாக்டர் ரீட்டா இன்று லீவெடுத்துக் கொண்டாரா? ம்... அவரிடமே கொடுக்கிறேன்.'' பாலச்சந்திரன் ரிசீவரை சசிதரனிடம் கொடுத்தார்.

''ச்சே... நாக்கு அறம் பிடித்தது மாதிரி தெரிகிறது. டூட்டி டாக்டர் லீவானதால் உடனே வரவேண்டுமாம். இரண்டு ஆபரேஷன்கள் வேறு உள்ளதாம்.'' ரிசீவரை கிராடிலில் வைத்த சசிதரன் கூறினார்.

உண்மையில் அந்த வார்த்தைகளைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தவர் டாக்டர் பாலச்சந்திரன்தான்!

## 27

ஏராளமான அறைகளும் ரகசிய மறைவிடங்களும் உள்ள அந்தப் பெரிய அரண்மனையில் பீஷ்மநாராயணன் எங்கே வசிக்கிறார் என்பதை வசந்தா தெரிந்து வைத்திருந்தாள்.

மாந்திரீக வித்தையைக் கற்றுத் தேர்ச்சி பெறுவதற்காக அங்கு மனிதர்களும், அமானுஷ்ய சக்தி உள்ளவர்களும் வருடக் கணக்கில் குடியிருக்கிறார்கள் என்பதை அங்கு வந்து சேர்ந்த அன்றே வசந்தா தெரிந்து வைத்திருந்தாள்.

ரட்சஸுகள் கூட அங்கு குடியிருந்தன. இருளடைந்த வராந்தாக்களின் வழியாக நடந்து சென்றபோது, ஓரிடத்தில் வெளிச்சக்கீற்று ஒன்று தென்பட்டது. உடனே வசந்தா அந்தக் கதவை நெருங்கி இடைவெளி வழியாகப் பார்த்தாள்.

இந்திராபாயின் உருவப்படம் அங்கிருந்த சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது.

விசாலமான அறை அது. பீஷ்மநாராயணன் ஒரு ஹோமத்துக்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

''பக்கத்தில் வாருங்கள்.'' வசந்தா, சேதுவர்மாவைப் பார்த்துக் கூறினாள்.

அவர் அப்படியே செய்தார்.

''உள்ளே பாருங்கள்... அவர் எதற்கோ தயாராகிறார்!'' மெதுவான குரலில் பேசினாள்.

சேதுவர்மா உட்புறம் பார்த்தார்.

பீஷ்மநாராயணன் விறகுத் துண்டுகளை அடுக்கினார். அவ்வப்போது அவர் கண்கள் படத்தைத் திரும்பிப் பார்த்தன.

''அந்த ஓவியம் இந்தக் கோவிலகத்தின் சக்தி என்று நினைக்கிறேன். அது அழிந்தால் விஷ்ணுப்ரியா முற்றிலுமாக சக்தியை இழந்துவிட நேரிடலாம். எனவே, உடனே அவரிடம் விவரத்தைத் தெரியப்படுத்த வேண்டும்.'' வசந்தா கூறினாள்.

''முதலில் அதைச் செய்யுங்கள்!'' சேதுவர்மா அவசரப் படுத்தினார்.

''ஐயோ நான் போகக்கூடாது. இதையெல்லாம் நான் எப்படித் தெரிந்து கொண்டேன் என்று என்மீது சந்தேகம் ஏற்படும்.''

''சந்தேகமா... எதற்கு?''

''எங்களைப் போன்றவர்கள் இதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை. அது மட்டுமல்ல, நான் ஒரு வேலைக்காரியல்லவா?'' அவள் கேட்டாள்.

''இருந்தாலும் நெருக்கமானவள் அல்லவா?'' சேதுவர்மா கேட்டார்.

''நல்லவேளை! விஷ்ணுப்ரியாவின் முன்னால் இப்படியெல்லாம் சொல்லி வைக்காதீர்கள். நான் உங்களை மாதிரியில்லையே...'' வசந்தா பின்வாங்கினாள்.



''அப்படியானால், நானே போகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்.'' சேதுவர்மா அங்கிருந்து புறப்பட முயன்றார்.

''சற்றுப் பொறுங்கள்... நானும் வருகிறேன். நான் இங்கு நிற்பதை அவர் தெரிந்து கொண்டால் ஆபத்து.'' அவள் சேதுவர்மாவைப் பின்தொடர்ந்தாள்.

அதே நேரம் விஷ்ணுப்ரியாதேவி தன்னுடைய அறையில் இருந்தபடி அங்கு நடப்பதையெல்லாம் கவனித்தாள்.

சுவரை ஒட்டி வைத்திருந்த கோள வடிவக் கண்ணாடி மீது அவள் பார்வை பதிந்திருந்தது. அதில் பீஷ்மநாராயணனின் அறை தெளிவாகத் தெரிந்தது.

சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த இந்திராபாயின் படம் தெளிவாகத் தெரிந்தது. பீஷ்மநாராயணன் ஹோமகுண்டத்தில் நெருப்புப் பற்ற வைப்பதில் தீவிரமாக இருந்தார்.

ஹோமகுண்டத்தில் நெருப்பு கொழுந்து விட்டு எரியத் தொடங்கும்போது, விஷ்ணுப்ரியா அந்தக் கோளத்தை ஒரு புறமாகச் சுழற்றினாள்.

அதே நேரம் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. விஷ்ணுப்ரியா தேவி எழுந்து வந்து கதவைத் திறந்தாள்.

''யார் சேதுவர்மாவா... உள்ளே வாருங்கள்.'' வரவேற்றாள்.

''நான் ஒரு காட்சியைப் பார்த்தேன். அதை உங்களிடம் சொல்வதற்காக வந்திருக்கிறேன்.'' சேதுவர்மா அறைக்குள் நுழையாமலே கூறினார்.

''என்ன நடந்தது? அன்று நடந்ததைப் போல் ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொண்டீர்களா?''

''பீஷ்மநாராயணன் இந்திராபாயின் ஓவியத்தை எரிக்கப் போகிறார்.''

''உங்களுக்கு எப்படி அது தெரிந்தது?''

''யதேச்சையாகப் பார்த்தேன். அதனால்தான் உங்களிடம் சொல்ல ஓடிவந்தேன்.''

''அந்தப் படத்தைப் பார்த்து ஆள் யாரென்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' விஷ்ணுப்ரியா கேட்டாள்.

அதற்கு என்ன பதில் சொல்வதென்று சேதுவர்மாவுக்குப் புரியவில்லை.

''என்ன சத்தத்தையே காணோம்... எல்லாம் தெரியும். நான் எல்லாவற்றையும் கவனிக்கவே செய்கிறேன். சரி உள்ளே வாருங்கள்!''

சேதுவர்மா அறைக்குள் நுழைந்தார்.

'படத்தை அழிக்கப் போகிறார்கள் என்பதைக் கூறிய பிறகும் எந்தவிதமான பதற்றமும் இல்லாமல் இருக்கிறாளே!' சேதுவர்மா மனத்துள் நினைத்தார்.

''இதைப் பாருங்கள்!'' விஷ்ணுப்ரியா கோள வடிவக் கண்ணாடியைத் திருப்பினாள்.

அதில் பீஷ்மநாராயணனின் அறையும் அங்கு நடப்பதும் தெளிவாகத் தெரிந்தன. ஹோமகுண்டத்தில் நெருப்பு ஜுவாலைகள் கொழுந்துவிட்டு எரிந்தன.

''இப்படியே பார்த்தால் போதுமா அல்லது நேரிலேயே போய்ப் பார்க்கலாமா?'' அவள் கேட்டாள்.

சேதுவர்மா எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். என்ன பதில் சொல்வது?

''அந்த ஓவியம் அழிந்துவிடப் போகிறதே என்று நீங்கள் பயப்படுவது புரிகிறது. பயப்படாதீர்கள். நீங்கள் அதைக் கண்ணாரப் பார்க்க வேண்டுமானால் நேரடியாகக் காட்டுகிறேன்.'' அவள் எழுந்தாள்.

கட்டிலிலிருந்து அவள் எழுந்தபோது அவள் காலிலிருந்த கொலுசுகள் மணி நாதம் எழுப்பின. கைகளிலிருந்த வளையல்கள் ஒன்றுடன் ஒன்று மோதிச் சத்தம் எழுப்பின. அவள் இடுப்பிலிருந்த அரைஞ்ஞாண் கொடியிலிருந்த மணிகள் குலுங்கிச் சிரித்தன.



அந்த அறையைவிட்டு அவர்கள் வெளியேறும்போது 'சல்சல்' என்கிற ஒலி சுவர்களில் மோதி எதிரொலித்தது.

விஷ்ணுப்ரியா முன்புறமாக நடந்தாள்.

அவளிடம் எந்த விதமான பதற்றமும் தென்படவில்லை. மிகவும் நிதானமாக நடந்தாள்.

விஷ்ணுப்ரியாவைப் பார்த்ததும் வசந்தா சட்டென்று ஒளிந்தாள். அவர்கள் தன்னைக் கடந்த பிறகு சிறிது இடைவெளியில் அவர்களைப் பின்தொடர்ந்தாள் வசந்தா.

பீஷ்மநாராயணனின் அறை வாசலின் முன்னால் அவர்கள் நின்றனர்.

உட்புறத்திலிருந்து அகில் கட்டைகள் எரியும் மணம் வெளியே வந்தது.

''அதோ... அந்த மனிதர்...'' சேதுவர்மா தன்னையும் மீறி வார்த்தைகளை உதிர்த்தார்.

''சற்றுப் பொறுங்கள்... நடப்பதைப் பார்ப்போம்.'' விஷ்ணுப்ரியா வாசலை ஒட்டி நின்றாள்.

நெருப்பு ஜுவாலைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஆயிரம் நாக்குகளைப் போல் மேற்புறமாக உயர்ந்தன.

சட்டென்று எழுந்த பீஷ்மநாராயணன் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த ஓவியத்தை எடுத்து நெருப்பு ஜுவாலைகளின் மீது வைத்தார்.

அடுத்த விநாடி நெருப்பு பயங்கரமான வேகத்துடன் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

''ஐயோ!'' என்று சேதுவர்மா தன்னையும் மீறிக் குரல் கொடுத்தார்.

திரும்பிப் பார்த்தபோது அருகில் நின்றிருந்த விஷ்ணு ப்ரியா காணாமல் போயிருந்தாள்.

எதுவும் புரியாமல் மீண்டும் தீ ஜுவாலைகளையே பார்த்த சேதுவர்மாவின் தோளில் ஒரு கை வந்து விழுந்தது.

திரும்பிப் பார்த்தபோது வசந்தா நின்றிருந்தாள்.

"இனிமேல் நாம் இங்கே நிற்க வேண்டாம். எதிர்பார்க்காத என்னென்னவோ நடந்து விட்டன." அவள் சேதுவர்மாவின் தோளைப் பிடித்து இழுத்தாள். அவரும் அவளைப் பின் தொடர்ந்தார்.

டாக்டர் சசிதரன் காரை ஸ்டார்ட் செய்து மருத்துவ மனையை நோக்கி விரைந்தார்.

தன்னுடைய நோக்கம் நிறைவேறியதில் டாக்டர் பாலச்சந்திரன் மகிழ்ந்தார்.

'வாசுதேவன் நம்பூதிரி சசிதரனின் வீட்டுக்கு வந்தால் அன்று சசிதரன் வீட்டில் இருக்கக்கூடாது!' என்று பாலச்சந்திரன் ஏற்கெனவே தீர்மானித்திருந்தார். அதற்கேற்றாற்போலவே எல்லாம் நடந்துவிட்டன.

நிர்மலா சாப்பாடு பரிமாறினாள்.

"அப்படியானால், நான் கிளம்புகிறேன்." பாலச்சந்திரன் எழுந்தார்.

"சாப்பிட்டுவிட்டுப் போகலாம்..." நிர்மலா கூறினாள்.

பாலச்சந்திரன் அவளை ஊன்றிக் கவனித்தார்.

அவளிடம் இப்போது எந்தவிதமான மாற்றமும் தென்படவில்லை.

சந்தேகம் விலகாதவராக பாலச்சந்திரன் கை கழுவிவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தார்.

வாசுதேவன் நம்பூதிரி, டாக்டர் பாலச்சந்திரனைப் பார்த்த பிறகு சமையல்கட்டை நோக்கி நடந்த நிர்மலாவைப் பார்த்தார்.

நிர்மலாவிடம் எந்தவிதமான மாற்றமும் இருப்பதாக அவருக்குத் தெரியவில்லை.

வழக்கம் போல இயல்பாகவே அவள் நடந்து கொண்டாள். சாப்பாட்டுக்குப் பிறகு திருமேனியும் பாலச்சந்திரனும் வரவேற்பு



அறையில் உட்கார்ந்து பேசும்போது நிர்மலாவும் குழந்தைகளும் மற்றோர் அறைக்குள் சிரித்துப் பேசுவது கேட்டது.

குழந்தைகள் தூக்கத்துக்காக ஏங்கின.

"அவள் இயல்பாகவே இருக்கிறாள். எந்தவிதமான பயமோ பதற்றமோ தென்படவில்லை!" திருமேனி சொன்னார்.

"உறுதியாகச் சொல்ல முடியாது. நெற்றியில் போட்டிருக்கிற பிளாஸ்திரியை இன்னும் எடுக்கவில்லை. காயம் இன்னும் ஆறவில்லையென்று தோன்றுகிறது!" பாலச்சந்திரன் பழைய சம்பவத்தை நினைவுகூர்ந்தவராகப் பேசினார்.

"எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். நான் இங்கேயே இருக்கிறேனே, பார்த்துவிடலாம்" திருமேனி கூறினார்.

"ஒரே ஒரு வேண்டுகோள். எந்தக் காரணம் கொண்டும் நீங்கள் தூங்கிவிடக் கூடாது. நான் கிளம்பட்டுமா?" பாலச்சந்திரன் எச்சரிக்கை செய்தார்.

பாலச்சந்திரன் எழுந்து வெளியேறினார்.

தனது வீட்டுக்கு வந்த பாலச்சந்திரன் கிரில் பதித்த வராந்தாவில் சற்று நேரம் ஓய்வெடுத்தார்.

கடிகாரத்தில் மணி பத்து அடித்தது.

கண்ணிமைகள் தூக்கக் கலக்கத்தில் மூடத் தொடங்கியபோது கதவை மூடித் தாழிட்டார்.

மணி பன்னிரண்டு தாண்டியது.

சிவப்பு நிற மாருதி கார் மேற்குத் திசையிலிருந்து வந்து இடது புறமாகத் திரும்பியது. இரு புறமும் வளர்ந்திருந்த மரங்கள் ரோட்டில் நிழல் பரப்பின.

கார் ஒரு மாமரத்தின் அடியில் நின்றது.

கார் நின்றிருந்த இடத்தின் மேற்குத் திசையில் டாக்டர் சசிதரனின் வீடு இருந்தது. காரிலிருந்து இறங்கிய ரத்ன பிரபாதேவி, டாக்டர் சசிதரனின் வீட்டு கேட்டுக்கு முன்னால் வந்து நின்றாள்.

"வசுமதி!" மெதுவான குரலில் அழைத்தாள்.

"நான் இங்கே இருக்கிறேன்" தென்புற மூலையில் செடிகள் அசைந்தன.

"ஒன்றும் சிக்கலில்லையே?" ரத்னபிரபா கேட்டாள்.

"ஏராளமான தடைகள்!" வசுமதி கூறினாள்.

"இன்றைக்கு அப்படி எதுவுமில்லையே?"

"பெரிய ஒரு தடை. அவர் அப்பா வந்திருக்கிறார். அவர் சாதாரண மனிதரல்ல!"

"அவர்தானே... பயப்படாதே. என்னிடம் விளையாடித் தோல்வியடைந்தவர்தான்!"

"இப்போது நான் என்ன செய்வது?" வசுமதி கேட்டாள்.

"அந்த டாக்டரைத் தீர்த்துக்கட்ட வேண்டும். மிகப் பெரிய எதிராளியாக மாறியிருக்கிறார்."

"யார் இந்தப் பக்கம் வசிப்பவர்தானே?"

"ஆமாம். அதே மனிதர்தான். உன்னுடைய நெற்றியில் காயம் ஏற்படுத்திய டாக்டர். எப்படியாவது நீ அந்த வீட்டுக்குள் நுழைய வேண்டும். இப்போது உனக்கு அந்த உடம்பு வேண்டாம். நிர்மலாவும், அவள் மாமனாரும் நல்ல தூக்கத்தில் இருக்கிறார்கள்."

"அந்தக் கிழட்டு நம்பூதிரி இன்னும் தூங்கவில்லை. வெறுமனே புரண்டு கொண்டிருக்கிறார்."

"அதைப் பற்றிப் பயப்படாதே. அந்த மனிதர் இனிமேல் படுக்கையிலிருந்து எழுந்திருக்க மாட்டார்." ரத்னபிரபா கூறினாள்.

"நீங்கள் சொன்னதை நிறைவேற்ற முயற்சி செய்கிறேன்."

செடிகளின் அசைவு குவார்ட்டர்ஸின் வாசல்வரை வந்து பிறகு அசைவற்றுப் போனது.

நிர்மலா மெதுவாகக் கட்டிலிலிருந்து எழுந்தாள்.



குழந்தைகள் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். அவள் தன் வலது கையைக் குழந்தைகளின் தலைக்கு மேல் அசைத்தாள்.

படுக்கையறையிலிருந்து வெளியே வந்தாள். வாசுதேவன் நம்பூதிரி சோபாவில் படுத்திருந்தார். கதவு திறக்கப்படும் சத்தத்தைக் கேட்டு அவர் கண் திறந்தார்.

அறை ஒரே இருட்டாக இருந்தது. கண்களுக்கு எதுவும் புலப்படவில்லை.

"யாரது?" வாசுதேவன் நம்பூதிரி கேட்டார்.

"நான்தான்!" பெண் குரல் பதிலளித்தது.

அது நிர்மலாவின் குரல் இல்லையென்று அவருக்குப் புரிந்தது. அவர் கட்டிலிலிருந்து எழுந்திருக்க முயன்றார். ஆனால், முடியவில்லை.

படுத்த நிலையிலேயே மோசன மந்திரம் ஜெபித்தார். ஆனால், கண்ணுக்குத் தெரியாமல் தன்னைப் பிணைத்திருக்கும் கட்டுகளிலிருந்து அவரால் விடுபட முடியவில்லை. தன்னுடன் விளையாடும் எதிராளி தன்னைவிட பலம் வாய்ந்தவர் என்பது தெரிந்தது.

ஆனால், விரைவிலேயே அவரது மாந்திரீக அறிவு எதிராளியைச் சுலபமாக அடையாளம் கண்டுகொண்டது. ரத்னபிரபாவின் வலிமையான கைகள்தான் இதைச் செய்துள்ளன என்பது புரிந்தது.

நிர்மலா குவார்ட்டர்ஸிலிருந்து வெளியே வந்தாள். கேட்டின் வெளியே நின்றிருந்த ரத்னபிரபாவின் அருகே வந்தாள்.

"தாமதிக்காதே. ஒவ்வொருத்தராக எல்லாரையும் தீர்த்துக்கட்ட வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், அவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து எனக்கு எதிராகத் திரண்டு எழுவார்கள். அப்படி ஏதாவது நிகழ்ந்தால், அது உனக்கும் ஆபத்து!" ரத்னபிரபா உபதேசித்தாள்.

"இப்போது என்ன செய்ய வேண்டும்?" வசுமதி கேட்டாள்.

"டாக்டர் பாலச்சந்திரன் என்கிற தொல்லையை ஒழிக்க வேண்டும். ஒன்று அவருடன் நீ உறவுகொள்ள வேண்டும். அப்படிச் செய்துவிட்டால், அதன் பிறகு அவர் என் சொற்படி நடப்பார். இல்லாவிட்டால் அவர் கதையை முடித்துவிடு. இரண்டில் ஒன்று நடக்க வேண்டும். உனக்கு எது வசதியோ அப்படியே செய்து கொள்!" ரத்னபிரபா கூறினாள்.

அதைக் கேட்ட வசுமதி மகிழ்ச்சி நிறைந்த மனத்துடன் டாக்டர் பாலச்சந்திரனின் குவார்ட்டர்ஸை நோக்கி நடந்தாள்.

ரத்னபிரபா அங்கேயே நின்றிருந்தாள்.

## 28

நிர்மலா, டாக்டர் பாலச்சந்திரன் வீட்டு வாசலுக்கு முன்னால் வந்து நின்றாள்.

ரத்னபிரபா அவளையே பார்த்தவாறு நின்றிருந்தாள்.

பாலச்சந்திரனது வீட்டுக்குள் காலிங்பெல் ஒலித்தது.

அதேநேரம் கடிகாரத்தில் மணி பன்னிரண்டு அடிக்கவும் செய்தது.

'இந்த நேரத்தில் வந்திருப்பது யாராக இருக்கும்?' பாலச்சந்திரன் யோசித்தார்.

படுக்கையறையில் நீலநிற இரவு விளக்கு எரிகிறது.

தான் கவனிக்கும் நோயாளி ஒருவர் மிகவும் சிக்கலான நிலைமையில் இருந்தாள். அந்த விவரத்தைத் தெரிந்து கொண்ட பிறகுதான் அவர் மருத்துவமனையிலிருந்து வந்திருந்தார். எனவே கதவைத் திறப்பதற்காக எழுந்து வந்தார்.

ஸ்கேனிங் செய்ததில் அந்த நோயாளியின் வயிற்றுக்குள் இரட்டைக் குழந்தைகள் இருப்பதும் அதனால் எந்த நேரமும் ஒரு ஆபரேஷன் தேவைப்படலாம் என்றும் முடிவு செய்திருந்தார்.



அந்த நோயாளி தொடர்பாக யாராவது வந்திருப்பார்கள் என்று நினைத்த டாக்டர் பாலச்சந்திரன் எழுந்து வரவேற்பு அறைக்கு வந்தார். வெளிக்கதவை நெருங்கி அதைத் திறந்தார்.

வெளியே யாரோ நிற்பது தெரிந்தது.

"என்ன ... யாரது?" டாக்டர் கேட்டார்.

"நான்தான்... சீக்கிரம் வாருங்கள். ரொம்பவும் அத்தியாவசியம்!" வெளியே முன்பின் பழக்கமில்லாத குரல் ஒன்று கேட்டது.

ஆஸ்பத்திரியில் தான் பார்த்துவிட்டு வந்த நோயாளியுடன் துணைக்கு வந்த பெண்மணியின் குரல் மாதிரியே இருந்தது. நிச்சயமாக அது நிர்மலாவின் குரல் அல்ல.

வராந்தா லைட்டைப் போட்டார்.

'டப்' என்ற சத்தத்துடன் பல்பு வெடித்தது.

சமீபகாலமாக இதெல்லாம் சகஜம். வோல்ட்டேஜ் அதிகரிக்கும்போது இப்படி நடப்பதுண்டு. ஏற்கெனவே அவருக்கு இத்தகைய அனுபவம் ஒன்றிரண்டு தடவை நேர்ந்திருக்கிறது.

எனவே, வெளிவாசலைப் பார்த்துக் கேட்டார்: "யாரது? எதுவும் தெரியவில்லை..."

"ஆஸ்பத்திரியிலிருந்து வருகிறோம். சீக்கிரமாக வாருங்கள்." வெளியில் நின்றிருந்த பெண்மணி பதைபதைப்புடன் பதிலளித்தாள்.

"இதோ வந்து விட்டேன்..." என்றவாறு சட்டையை எடுப்பதற்காக உட்புறம் விரைந்தார்.

அந்த நேரம் வேறு எந்த விதமான சந்தேகமும் எழவில்லை. அப்போதுதான் ஹேங்கரில் மாட்டியிருந்த சட்டை முதுகுப்பக்கம் கிழிந்திருப்பதைக் கவனித்தார். அவசர அவசரமாக பீரோவைத் திறந்து வேறொரு சட்டையை எடுத்துத் திரும்புவதற்குள்...

வாசலுக்கு வந்திருந்தாள் நிர்மலா!

"என்னங்க நிர்மலா... இந்த நேரத்தில்?" டாக்டர் கேட்டார்.

"நான் நிர்மலா இல்லை... என் பெயர் வசுமதி." அவள் சிரித்தாள்.

அவள் சிரிப்பில் குரூரம் பளிச்சிட்டது.

சட்டென்று டாக்டர் சிவகுமாருக்கு நேர்ந்த ஆபத்து அவர் மூளைக்குள் மின்னி மறைந்தது.

தன் முன்னால் நிற்பது நிர்மலா அல்ல; அவள் உடம்புக்குள் புகுந்து கொண்ட ஏதோ ஒரு ரட்சஸ் என்பது புரிந்தது.

இந்த சமயத்தில் எதையாவது சொல்லித் தப்பிக்கப் பார்ப்பது தான் புத்திசாலித்தனம். அல்லது தன் உயிர் செல்லாக்காசாகி விடும் என்று அவருக்குப் புரிந்தது.

யதேச்சையாக அவர் பார்வை மேஜை மீதிருந்த மின்சார அயர்ன் பாக்ஸ் மீது பாய்ந்தது. அதைப் பயன்படுத்தும்போது அன்று காலையில் கூட ஷாக் அடித்ததும் ஞாபகம் வந்தது.

அதன் பிறகு காலம் தாழ்த்தாமல் அயர்ன்பாக்ஸின் பிளக்கைச் செருகி, சுவிட்சைப் போட்டு, கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு, தேய்க்கப் பயன்படும் அடிப்பகுதியை முன்புறமிருந்த நிர்மலாவின் மீது பதிக்க முயன்றார்.

பைசாசிகமான ஒரு சிரிப்புடன் தன் வலது கையை நீட்டிய அவள், அந்த அயர்ன் பாக்ஸைப் பிடித்தாள்.

அடுத்து விநாடி "ஆ" என்ற அலறலுடன் அவள் உடம்பு நடுங்கத் தொடங்கியது.

தன்னுடைய புதிய கண்டுபிடிப்பு வெற்றி பெற்றதிலுள்ள மகிழ்ச்சியுடன் டாக்டர் பாலச்சந்திரன் மின்சார அயர்ன் பாக்ஸுடன் திரும்பவும் அவளை நெருங்கினார்.

பயம் நிறைந்த கண்களுடன் அவள் திரும்பி ஓடத் தொடங்கினாள். அவள் வந்து நின்றது ரத்னபிரபாதேவியின் முன்பாக.

"என்ன... உனக்கு என்ன ஆச்சு?" அவள் விசாரித்தாள்.



"இதோ பாருங்கள்!" அவள் தன் உள்ளங்கைகளைக் காட்டினாள்.

"என்ன நடந்தது?"

"எதனாலோ என்னை அடித்தார். மேற்கொண்டு என்னால் அங்கு நிற்க முடியவில்லை!"

"ம்... அப்படியா... சரி நீ போகலாம்..." ரத்னபிரபா அவசரமாகத் திரும்பி காரில் ஏறினாள். கார் ஸ்டார்ட் செய்யும் சத்தத்தை பாலச்சந்திரனும் கவனித்தார். ஜன்னலருகில் நின்றவாறு அவர் நடப்பதை கவனித்தார்.

அப்போது இளயிடத்து கோவிலகத்துள் மற்றொரு சம்பவம் நடைபெற்றது.

பீஷ்மநாராயணன் ஹோமகுண்டத்தின் அக்னி ஜுவாலைகள் மீது இந்திராபாயின் ஓவியத்தை எடுத்து வைத்தார்.

அவர் கண்முன்பாக அதிசயமான காட்சி ஒன்று அரங்கேறியது.

அந்த ஓவியத்தின் விழிகள் அசைந்தன. ஓவியத்துக்கு உயிர் வந்தது போல் தோன்றியது.

அந்த கேன்வாஸ் திரைச்சீலையிலிருந்து இந்திராபாயின் உருவம் மெதுவாக வெளியேறியது.

"இந்த இடத்துக்கு மாந்திரீக வித்தை கற்றுகொள்ள வந்து கடைசியில் என்னையே அழித்துவிட முயற்சி செய்கிறீர்கள்" அந்த உருவத்தின் இரண்டு கைகளும் உயர்ந்து பீஷ்மநாராயணனின் கழுத்தை நோக்கி நீண்டன. அந்தக் கைகள் அவர் கழுத்தைச் சட்டென்று இறுக்கிப் பிடித்தன.

பீஷ்மநாராயணனின் கால்கள் தரையிலிருந்து உயரத் தொடங்கின. ஹோம குண்டத்தில் சட்டம், மரப்பொருள்கள் ஆகியவை பலவிதமான ஓசைகளுடன் கொழுந்துவிட்டு எரிந்தது. ஜுவாலைகளுக்கு நேராக அவரை உயர்த்திப் பிடித்தாள்.

அந்த உடலிலிருந்த உடையில் நெருப்பு பரவத் தொடங்கியது.

பீஷ்ம நாராயணன் பூனையின் வாயில் அகப்பட்ட எலியைப் போல் திமிறித் துடித்தார். கால்களைக் கன்னா பின்னாவென்று போட்டு அடித்துக் கொண்டார்.

தீ ஜுவாலைகள் விரைவில் அவர் உடலை மறைத்தன. அத்துடன் அவற்றின் வலுவும் அதிகரித்ததாகத் தோன்றியது.

மரண வேதனையுடன் துடித்த அந்த மனிதரைப் பார்த்து அந்தப் பெண் உருவம் அட்டகாசமாகச் சிரித்தது! சற்று நேரத்துக்குள் அந்த மாந்திரீகர் நெருப்புக்குள் மறைந்து போனார். பெண் உருவம் கையிலிருந்த தூசியைத் தட்டுவது போல் நெருப்பில் உதறியது.

"அந்த அலறல் உங்களுக்குக் கேட்டதா?" சேதுவர்மா, வசந்தாவைப் பார்த்துக் கேட்டார்.

"நாம் ஹோமகுண்டத்தை நெருங்கிப் பார்க்கலாமா?" வசந்தாவிடமிருந்து தன் கைகளை விலக்கிக்கொண்டவர் முன்புறமாக விரைந்தார்.

"போகலாம்!" அவள் எழுந்தாள்.

இருவரும் விரைவாகச் சத்தம் வந்த திசையை நோக்கி நடந்தனர்.

பீஷ்மநாராயணனது அறைவாசலில் வந்து நின்றனர்.

திறந்திருந்த கதவின் இடைவெளி வழியாக வராந்தாவின் எதிர்ச்சுவரில் நெருப்பு கொழுந்துவிட்டு எரியும் பிரதிபலிப்புத் தெரிந்தது. அந்த அறையே நெருப்பில் எரிவதாகத் தோன்றியது.

"என்னமோ நடந்திருக்கிறது!" வசந்தா கூறினாள்.

இருவரும் வாசலை நெருங்கி உட்புறம் பார்த்தனர்.

உள்ளே தெரிந்த காட்சி மிகவும் பயங்கரமாக இருந்தது.



மேல்மச்சைத் தொடுமளவு உயர்ந்து நின்றிருந்த இந்திரா பாயின் வலதுகையில் அலறியவாறு துடிக்கும் பீஷ்மநாராயணனின் உருவம் தெரிந்தது.

விஷ்ணுப்ரியாவை அந்தப் பகுதியில் எங்குமே காண வில்லை.

"விஷ்ணுப்ரியா எங்கே போனார்?" சேதுவர்மா கேட்டார்.

வசந்தாவின் கண்கள் அந்த அறையைத் துழாவின. உண்மைதான் விஷ்ணுப்ரியாவைக் காணவில்லை!'

"ஒன்று செய்தால் என்ன?" சேதுவர்மா, வசந்தாவின் பக்கம் திரும்பிக் கேட்டார்.

"இதுவரை பார்த்ததெல்லாம் போதாதா?" வசந்தா கேட்டாள்.

"நான் உடனடியாக விஷ்ணுப்ரியாவைப் பார்த்தே ஆக வேண்டும் வசந்தா!"

"சரி, வாருங்கள் போகலாம்."

அங்கு நடந்த சம்பவங்களை விஷ்ணுப்ரியாவிடம் தெரிவிக்க வேண்டுமென்று விரும்பினார் சேதுவர்மா.

இருவரும் விஷ்ணுப்ரியாவின் அறைக்கு வந்தனர்.

ஆனால், அங்கும் விஷ்ணுப்ரியா இல்லை!

**ம**றுநாள் விடியற்காலை வேளையில் விஷ்ணுப்ரியா கோவிலகத்தின் பின்புறமிருந்த குளக்கரைக்கு வந்தாள்.

குளத்தின் இந்தக் கரையில் இருந்தபடி எதிர்க் கரையிலிருந்த எட்டிமரத்தைச் சற்றுநேரம் பார்த்தாள்.

ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, யாரும் அங்கு இல்லை என்பதை உறுதி செய்து பிறகு புதர்ச்செடிகளின் ஊடாக நடந்து எட்டி மரத்தை நெருங்கினாள்.

இடது கையில் வைத்திருந்த ஆணியை எட்டிமரத்தில் அறைந்தாள்.

''பீஷ்ம நாராயணா, உன் மொத்த ஜென்மங்களும் இத்துடன் முடிவடைகிறது. ஒரு பிரம்மரட்சஸ் என்ற முறையில் இனிமேல் உன்னை நான் கவனித்துக் கொள்கிறேன்!'' என்ற விஷ்ணுப்ரியா ஆணித் துவாரத்தில் எலுமிச்சம்பழம் ஒன்றையும் நுழைத்து அந்தத் துவாரத்தை வெளியே தெரியாமல் மறைத்தாள்.

பார்வை அங்கிருந்து நகர்ந்தபோது ஏதோ ஒரு சந்தேகம் தற்போது ஆணியடித்த பகுதிக்கு அருகிலேயே மற்றொரு துளை தென்பட்டது.

துவாரத்தை ஒரு தடவை தடவிப் பார்த்தாள்.

''யாரோ தப்பித்திருக்கிறார்கள்!'' விஷ்ணுப்ரியா தனக்குதானே சொல்லிக் கொண்டாள்.

திரும்பி வரும்போது விஷ்ணுப்ரியாவின் மனம் ஏனோ நிம்மதியின்றித் தவித்தது. எட்டிமரத்தில் அறையப்பட்டிருந்த ஒரு ரட்சஸ் எப்படியோ தப்பித்து விடுதலை அடைந்திருக்கிறது!

அப்படியானால், விடுதலையடைந்த ரட்சஸ் தனது நடவடிக்கைகளை கவனிக்கலாம். தனக்கு ஏதாவது இடையூறு தரலாம் என்கிற பயம் அவளுள் எழுந்தது.

வழக்கம்போல் விடியற்காலையில் குளியலை முடித்துக் கொண்டு கந்தர்வன் கோயிலுக்கு வணங்க வந்த வசந்தா, எட்டி மரத்தின் அடிப்பகுதியில் நின்றிருந்த விஷ்ணுப்பரியாவைப் பார்த்து சந்தேகம் கொண்டாள். 'எதற்காக இவர், அங்கே நிற்கிறார்?'

விஷ்ணுப்ரியாவும் வசந்தாவைப் பார்த்துவிட்டாள். குளத்தின் இக்கரைக்கு வந்தாள்.

''சேதுவுக்குச் சிற்றுண்டி கொடுத்து விட்டாயா?'' வசந்தாவிடம் கேட்டாள்.

''இல்லை, இனிமேல்தான்!'' வசந்தா கூறினாள்.

''இன்று ஏன் இவ்வளவு தாமதமானது?'' விஷ்ணுப்ரியா விசாரித்தாள்.



சேதுவர்மாதான் அதற்குக் காரணம் என்பதை அவள் எப்படி விஷ்ணுப்ரியாவிடம் சொல்ல முடியும்?

''இந்த இடத்தின் நடைமுறையை ஒருபோதும் தவறவிடக் கூடாது.'' எச்சரிக்கைத் தொனியில் சொன்ன விஷ்ணுப்ரியா அங்கிருந்து நடந்தாள்.

விஷ்ணுப்ரியா தனது அறைக்குள் வந்த பிறகும், எட்டி மரத்தில் தென்பட்ட மற்றோர் ஆணி துவாரத்தைப் பற்றியே யோசித்தாள்.

அவளுடைய அதிகாரத்துக்குட்பட்ட எல்லைக்குள், அவளுக்குத் தெரியாமல் எப்படி ஒரு ரட்சஸ் விடுதலையடைந்தது என்பது அவளுக்குப் பிடிபடவில்லை!

எப்படியும் அந்த ரகசியத்தைக் கண்டுப்பிடித்தே தீருவதென்று மனத்துள் முடிவெடுத்தாள் விஷ்ணுப்ரியா.

நிர்மலா திரும்பவும் தன்னுடைய குவார்ட்டர்ட்டர்ஸுக்கு வந்தாள். டாக்டர் பாலச்சந்திரனை அழிக்க முடியாமல் போனதில் அவள் வருத்தம் அளவிட முடியாததாக இருந்தது.

ரத்னபிரபா அங்கிருந்து நகர்ந்த பிறகு வாசுதேவன் நம்பூதிரி தன்னுடைய மாயக்கட்டுகளிலிருந்து விடுபட்டார்.

நிர்மலா வீட்டுக்குள் வரும் சத்தம் கேட்டது. படுத்திருந்த இடத்திலிருந்து எழுந்த அவர் நிர்மலாவும் குழந்தைகளும் படுத்திருந்த அறை வாசலுக்கு வந்தார்.

அறைக்குள் ஒரே இருட்டாக இருந்தது.

அவர் லைட்டை எரியவிட்டார்.

உள்ளே நிர்மலாவும் குழந்தைகளும் கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர்.

வாசுதேவன் நம்பூதிரி வியப்புடன் நிர்மலாவை கவனித்தார்.

சற்று முன்னர் நடந்ததெல்லாம் ஒருவேளை கனவாக இருக்குமோ என்று தோன்றியது.

எதற்கும் சசிதரன் வரட்டும் என்று ஆறுதலடைந்தவராக மறுபடியும் வந்து படுத்தார்.

சசிதரன் விடியற்காலையில் வந்தார்.

நிர்மலாவிடம் எந்தவித மாற்றமும் தென்படாததால், தான் பார்த்ததை எப்படி மகனிடம் சொல்வதென்று புரியாமல் விழித்தார் வாசுதேவன் நம்பூதிரி.

சசிதரன் காபி சாப்பிட்டவுடன் பாலச்சந்திரனின் குவார்ட்டர்ஸை அடைந்தார்.

''சேதுவைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தகவல் வந்ததா?'' பாலச்சந்திரன் கேட்டார்.

''ஒன்றும் தெரியவில்லை. ஆமாம் நீங்கள் திடுமென்று அவரைப்பற்றி விசாரிக்கக் காரணம்?'' சசிதரன் கேட்டார்.

''உடனடியாக, அவசியமான ஒரு காரணத்துக்காக நான் அவரை சந்திக்க வேண்டியிருக்கிறது. அல்லது அந்த இடத்துக்கு நான் போக வேண்டியிருக்கும்.''

''திடீரென்று நீங்கள் இப்படியொரு தீர்மானத்துக்கு வர என்ன காரணம்?''

''காரணம் இருக்கிறது. அதை அவரிடம் சொல்லாவிட்டால் எனக்கு நிம்மதி இருக்காது!''

''ஏன் இவ்வளவு படபடப்பாகப் பேசுகிறீர்கள். என்னிடம் அதைச் சொல்லக் கூடாதா?''

''உங்களிடம் அதைச் சொல்ல முடியாது. சேதுவர்மாவை நான் கண்டிப்பாகப் பார்த்தாக வேண்டும்.''

''நீங்கள் இவ்வளவு பிடிவாதமாக இருந்தால், வீட்டுக்கு வாருங்கள். அப்பா இருக்கிறார். அவரிடம் சேதுவர்மாவின் இருப்பிடத்தைப் பற்றிக் கேட்டால் விளக்கமாகச் சொல்வார்.''

இருவரும் சசிதரனின் குவார்ட்டர்ஸுக்கு வந்தனர்.



## 29

இருவரும் குவார்ட்டர்ஸுக்குள் நுழைந்தபோது வாசுதேவன் நம்பூதிரி வெற்றிலை போடுவதில் தீவிரமானார்.

''வாருங்கள் பாலச்சந்திரன்... உட்காருங்கள். இங்கு வந்த பிறகு சரியாக வெற்றிலை போடக்கூட முடியவில்லை. முதல் விஷயம் இந்தச் சிறிய வீட்டுக்குள் சுற்றிச் சுற்றி வருவதே என்னமோ மாதிரியிருக்கிறது. என்ன செய்வது, நகர வாழ்க்கை இப்படிப்பட்டது!'' வெற்றிலையில் சுண்ணாம்பு தேய்த்தபடி பேசினார்.

சசிதரன் நேராகக் குளியலறைக்குப் போனார்.

''ஒரு முக்கியமான விஷயமாக வந்திருக்கிறேன்.'' பாலச்சந்திரன் பேச்சை ஆரம்பித்தார்.

''சொல்லுங்கள்!''

அதற்குள் நிர்மலா காபி எடுத்து வந்தாள். அவள் வலது கையில் பிளாஸ்திரி ஒட்டப்பட்டிருந்தது.

''கையில் என்னங்க?'' ஒன்றும் தெரியாதவரைப் போல் பாலச்சந்திரன் கேட்டார்.

''என்னன்னே தெரியலை. பொழுது விடிஞ்சபோது பார்த்தா கையில கொப்பளம்'' நிர்மலா கூறினாள்.

''ராத்திரியில ஏதாவது மோசமான கனவு கண்டீங்களா?'' பாலசந்திரன் கேட்டார்.

''ஏன் இப்படிக் கேக்குறீங்க?''

''சும்மாதான். நல்லா யோசனை பண்ணிப் பாருங்க!''

நிர்மலா சற்றுநேரம் மௌனமாக இருந்தாள். அவள் கஷ்டப்பட்டு நினைவுகளிலிருந்து எதையோ தேடியெடுக்க முயல்வதாகத் தோன்றியது.

அதற்குள் சசிதரன் குளியலை முடித்துவிட்டு வந்து சேர்ந்தார்.

''என்ன பாலச்சந்திரன் சார் ஏதோ விசாரணை நடக்கிறார் போல் தெரிகிறதே!'' சசிதரன் கேட்டார்.

''ராத்திரியில் ஏதாவது கெட்ட கனவு கண்டார்களா என்று கேட்டுக் கொண்டிருந்தேன்.''

''ஏன் என்ன சேதி?''

''பாருங்களேன் நிர்மலாவின் கை வெந்து போயிருக்கிறது எப்படி இதுமாதிரி ஆனதென்று நிர்மலாவுக்குத் தெரியவில்லையாம்...'' பாலச்சந்திரன், சசிதரனைப் பார்த்தவாறு கூறினார்.

சசிதரன் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார். அவருக்கு விஷயம் இன்னதென்று விளங்கவில்லை.

''என்ன ஆச்சு நிர்மலா?'' அவளை நெருங்கிய சசிதரன் கையைப் பிடித்துப் பார்த்துக் கேட்டார்.

''குக்கரின் பிடி உடைந்து போயிருக்கிறது இல்லையா, ஒருவேளை அதனால் ஏற்பட்டிருக்குமோ என்னமோ?'' நிர்மலா கூறினாள்.

''கொப்பளத்தைப் பார்த்தால் இஸ்திரிப் பெட்டியில் வெந்தது போலல்லவா தெரிகிறது.'' பாலச்சந்திரன் சோபாவிலிருந்து எழுந்திருக்காமல் கூறினார்.

பாலச்சந்திரனுக்கு எப்படி இவ்வளவு சரியாக விஷயம் தெரிந்திருக்கும் என்று சசிதரன் யோசித்தார். ஒருவேளை இந்தக் காயத்தை ஏற்கெனவே பார்த்து விட்டாரோ என்னவோ?

'தான்தான் அந்தக் கையை அப்படிச் செய்தோம்' என்பதைச் சொல்லவும் அவருக்கு மனம் வரவில்லை. அப்படிச் சொன்னால் தொடர்ந்து எல்லாவற்றையும் சொல்ல வேண்டி வரலாம். அது சிக்கலாக மாறலாம்.

சேதுவர்மாவைப் பார்த்த பிறகு மேற்கொண்டு நடக்க வேண்டியதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

''சசிதரா, பாலச்சந்திரன் உடனே சேதுவர்மாவை பார்த்தாக வேண்டுமென்று ஒற்றைக் காலில் நிற்கிறார். வழி கேட்கிறார்'' வாசுதேவன் நம்பூதிரி கூறினார்.



''உடனடியாகப் பார்க்குமளவு அவ்வளவு அவசரமான காரியம் ஏதாவது உண்டா என்ன?''

''ஆமாம் தவிர்க்க முடியாத தலைபோகிற அவசியம். கண்டிப்பாகப் பார்த்தே ஆக வேண்டும்.'' பாலச்சந்திரன் பிடிவாதமாகக் கூறினார்.

வாசுதேவன் நம்பூதிரி, பாலச்சந்திரனிடம் வழியை விவரித்தார்.

மறுநாள் காலையில் புறப்படுவதென்று பாலச்சந்திரன் தீர்மானித்தார்.

சொந்த காரில் புறப்படாமல் டாக்ஸி ஒன்றை அமர்த்திக் கொண்டு இளயிடத்துக் கோவிலகத்தை நோக்கிப் பயணமானார்.

புறப்படுவதற்கு முன்னால் டாக்டர் சசிதரனை அருகே அழைத்துச் சூசகமாகத் தெரிவித்தார்: ''ராத்திரி நேரத்தில் நிர்மலாவை கொஞ்சம் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!''

என்ன விஷயம் என்று எவ்வளவோ கேட்டும் பாலச்சந்திரன் வேறெதுவும் சொல்லவில்லை. உடனே புறப்பட்டுவிட்டார்.

பாலச்சந்திரன் சொன்ன வார்த்தையின் பொருள் சசிதரனுக்கு உண்மையில் விளங்கவில்லை.

அன்று இரவு சுமார் எட்டுமணியளவில் ரத்னபிரபாதேவி தன்னுடைய சிவப்பு மாருதியை டாக்டர் பாலச்சந்திரன் வீட்டுக்கு முன்னால் நிறுத்தினாள்.

பாலச்சந்திரனது கார் வெளியே நிற்கிறது.

'அப்படியானால் அவர் வீட்டுக்குள்தான் இருக்கவேண்டும்' என்று நினைத்தவளாக காலிங்பெல் சுவிட்ச்சை அழுத்தினாள்.

சற்று நேரம் காத்திருந்தாள். உள்ளேயிருந்து எந்த விதமான சத்தமும் கேட்காததால் பக்கத்திலிருந்த டாக்டர் சசிதரனின் வீட்டுக்கு வந்தாள்.

பெல் அடித்ததும் கதவு உடனே திறக்கப்பட்டது.

ரத்னபிரபாவைப் பார்த்ததும் சசிதரன் ஒருகணம் அதிர்ந்தார்.

''டாக்டர் பாலச்சந்திரன் ஊரில் இல்லையா?'' கேட்டாள்.

''ஆமாம்!''

''எங்கே போயிருக்கிறார்?''

''எங்கே...'' சட்டென்று உண்மையைச் சொல்ல வேண்டாம் என்று நினைத்தவராக... ''ஒன்றும் சொல்லவில்லையே?''

''நைட் டூட்டியா அவருக்கு?''

''இருக்கலாம்.''

''கார் வாசலிலேயே நிற்கிறது!''

''சில நேரம் நடந்துகூடப் போவார்.''

''நிர்மலா என்ன செய்கிறாள்?''

''சமையல் செய்கிறாள்.''

அப்போது வாசுதேவன் நம்பூதிரி அங்கு வந்து சேர்ந்தார். ரத்னபிரபா நிழல் பக்கமாக ஒதுங்கினாள்.

வந்திருப்பது யாரென்று வாசுதேவன் நம்பூதிரிக்கு விளங்கவில்லை. எனவே கேட்டார்:

''யாரது?''

''டாக்டரைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறேன்.'' ரத்னபிரபா அங்கிருந்தவாறு குரல் கொடுத்தாள்.

''பிறகு ஏன் அங்கேயே நின்று விட்டீர்கள்? உள்ளே வரவேண்டியதுதானே?'' வாசுதேவன் நம்பூதிரி கூறினார்.

ஆனால், சசிதரன் வந்திருப்பவள் ரத்னபிரபா என்பதை அப்பாவிடம் கூறினார்.

வாசுதேவன் நம்பூதிரி அதைக் கேட்டுக் கல்லாகச் சமைந்தார்.

'அவளது வருகைக்கு ஏதோ ஒரு துர்நோக்கமிருக்கிறது!' என்பது புரிந்தது.



நேராக மருத்துவமனைக்குச் சென்ற ரத்னபிரபா, பாலச்சந்திரன் டூட்டியில் இருக்கிறாரா என்று விசாரித்தாள்.

வரவில்லை என்ற பதில் கிடைத்ததும் சந்தேகமும் கோபமும் கொண்டவளாகத் தனது இருப்பிடத்துக்குத் திரும்பினாள்.

நேராக பூஜையறைக்கு வந்தாள்.

உள்ளேயிருந்த பைசாசிக உருவத்துக்கு முன்னால் வந்து நின்றாள்.

இடதுகைப் பெருவிரலை, முன்புறமிருந்த கத்தியால் கீறி, திரண்டு வந்த ரத்தத் துளிகளை அந்த விகார உருவத்தின் வாயில் தேய்த்தாள்.

அந்த உதடுகள் அசையத் தொடங்கின.

ரத்தத்துளிகளை அந்த உதடுகள் சுவைத்துத் தொண்டைக்குள் இறக்கியது.

''பாலச்சந்திரன் எங்கே போயிருக்கிறான்?'' அந்த உருவத்திடம் கேட்டாள்.

''உன்னை அழிக்கப் போயிருக்கிறான்!'' விகார உருவம் பதிலளித்தது.

''என்னை அழிப்பதற்கா? அப்படியானால் நீ எதற்கு இருக்கிறாய்?'' ரத்னபிரபா குரூரமாகச் சிரித்தபடி கேட்டாள்.

''அதற்கு நான் என்ன செய்ய?''

''நான் அழிந்தால், அதனால் நீ பாதிப்படைய மாட்டாயா?'' கேட்ட ரத்னபிரபா மறுபடியும் அதன் உதடுகளில் ரத்தத் துளிகளைத் தேய்த்தாள். அந்த உதடுகள் மறுபடி பிளந்தன. ரத்தம் மறைந்தது.

''அதெப்படி? எனக்கு ஒருபோதும் அழிவில்லை. நீ அழிந்தால், உன்னை மாதிரி வேறு யாராவது ஒருத்தி எனக்குக் கிடைப்பாள்!'' விகார வடிவம் பதிலளித்தது.

''அப்படியானால் இத்தனை நாட்களாக நான் உனக்குத் தந்த பலிகள்... பூஜைகள் எல்லாம் வியர்த்தம்தானா?'' ரத்னபிரபா கோபத்துடன் இரைந்தாள்.

''யோசித்துப் பார்... அதெல்லாம் உன்னுடைய காரிய ஸித்திக்காகத்தானே? எனக்காக வேண்டியா செய்தாய்?''

ரத்னபிரபாவின் கோபம் இரண்டு மடங்காக உயர்ந்தது.

''அப்படியானால் உன்னை அழிப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.'' ரத்னபிரபா ஹோமகுண்டத்தில் ஊற்றுவதற்காக நெய் ஜாடியைப் பார்த்தாள்.

''இவ்வளவு அறிவிலியாக இருக்கிறாயே? நான் யாரென்று உனக்குத் தெரியுமில்லையா? ஜோதிர்மயி! எனக்கு ஒரு போதும் மரணமில்லை. நீ படித்திருப்பதை விட எத்தனையோ மடங்கு அதிகமாக நான் படித்திருக்கிறேன்.''

''உளுத்துப் போன உன்னுடைய இந்த உடம்பை எரித்துச் சாம்பலாக்கப் போகிறேன்!'' ரத்னபிரபாவின் கண்கள் ஜொலித்தன.

''நல்ல காரியம். அதன் பிறகு ரத்னபிரபா இருக்கப் போவதில்லை. இந்த ஜோதிர்மயி வேறொரு நல்ல உடம்புக்குள் புகுந்து கொள்வாள். அவ்வளவுதான்!''

ரத்னபிரபா திடுக்கிட்டாள்.

''சரி... நாம் எதற்காக வீணாகச் சண்டை போட வேண்டும்? நான் ஒருபோதும் உன்னை அழிக்க மாட்டேன். கோபத்தில் பேசிவிட்டேன். எனக்கு வேண்டியது பாலச்சந்திரனைப் பற்றிய தகவல்கள். சொல்ல முடியுமா?''

''அவன் போயிருப்பது இளயிடத்து கோவிலகத்துக்கு. விஷ்ணுப்ரியாவிடம் போயிருக்கிறான். அவள் என் சகோதரி. ஆனால், நாங்கள் தற்போது பரஸ்பர விரோதிகள். அவள் இங்கேயும் வந்திருந்தாள், ஒரு டாக்டரின் வேஷத்தில். இப்போது நாங்கள் மோதிக்கொள்ளும் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது!''

''அப்படியானால், அதை முளையிலேயே கிள்ளி எறிவதுதானே அழகு!'' ரத்னபிரபா நயந்து கேட்டாள்.

''முதலில் அவன் கற்றுக் கொண்டு வரட்டும். பிறகு அதையும் பார்த்து விடுவோம்.'' ஜோதிர்மயி கூறினாள்.



''நீ மட்டும் உதவி செய்தால் நான் அங்கேயே போய் இரண்டு பேரையும் அழித்து விடுகிறேன்!''

''நீ ஒரு ரட்சஸை அனுப்பினாயேம அவள் ஒருத்தி போதுமே.''

''சேதுவர்மா இன்னும் உயிருடன் இருக்கிறாற் போல் தோன்றுகிறது.''

''இப்போது சேதுவர்மாவுக்கு மற்றொரு நல்ல துணையும் கிடைத்திருக்கிறது.''

''ஓகோ! அவள்தான் இப்போது சேதுவர்மாவுக்கு உதவுகிறாளா?'' ரத்னபிரபா கேட்டாள்.

''அவளை முதலில் தொலைக்கவில்லை என்றால் சேதுவர்மா மந்திர தந்திரங்களில் தேர்ந்து விரைவிலேயே திரும்பி வருவார். அதன்பிறகு நீ இருக்க மாட்டாய்.''

''நான் மட்டும்தானா? உன்னையும்தானே அவன் அழிப்பான்.''

''அவனால் என்னை எதிர்த்து அழிக்க முடியும் என்று தோன்றவில்லை! என்னை அழிப்பதற்கான மந்திரச் சுவடிகள் இன்னும் அங்கிருந்து வெளிப்படவில்லை. என்ன இருந்தாலும் நீ இந்த வேஷத்தில் அங்கு போவது நல்லதல்ல.''

''வேறு எப்படிப் போவதாம்?''

''வேறொரு பெண்மணியாகப் போ!''

''அப்படியே போகிறேன்!'' ரத்னபிரபா அறையிலிருந்து வெளியேறினாள்.

**டா**க்டர் பாலச்சந்திரன் இளயிடத்துக் கோவிலகத்தை அடைந்து சேதுவர்மாவை சந்தித்து அங்கு நடந்த எல்லாவற்றையும் விவரித்தார்.

சேதுவர்மா மௌனமாக எல்லாவற்றையும் கேட்ட பிறகு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

"எப்படியாவது நிர்மலாவைக் காப்பாற்ற வேண்டும். இல்லாவிட்டால், நிலைமை மிகவும் விபரீதமாகிவிடும். நீங்கள் அங்கு வந்தால்தான் அதுவும் நடக்கும். உடனே புறப்படுங்கள்." பாலச்சந்திரன் வற்புறுத்தினார்.

"நீங்கள் சொல்வது போல் நான் உடனடியாகப் புறப்பட்டு வருவதால் எந்தவிதமான பிரயோஜனமும் கிடையாது. நான் இந்த நிலைமையில் களத்தில் இறங்கினால், ஜெயிப்பது ரத்னபிரபாவாக இருப்பாள். அப்படி ஏதாவது நிகழ்ந்தால் நிலைமை மிகவும் விபரீதமாகும்!" சேதுவர்மா கூறினார்.

"அப்படியானால் நான் என்ன செய்வது?" பாலச்சந்திரன் கேட்டார்.

"நீங்கள் எதைப் பற்றிப் பேசுகிறீர்கள்?" வாசலைக் கடந்தபடி வசந்தா கேட்டாள்.

"எங்கள் ஊர்ச் செய்திகளைப் பேசிக் கொண்டிருக்கிறோம். அங்கு எதிர்பாராத சம்பவங்கள் என்னவெல்லாமோ நடந்திருக்கின்றன!" சேதுவர்மா கூறினார்.

"ஒன்று செய்தால் என்ன? நான் இவருடன் கிளம்பட்டுமா? எனக்கும் நிர்மலாவை ஒரு தடவை பார்க்க வேண்டும் போலிருக்கிறது!" வசந்தா கூறினாள்.

"வசந்தா, உனக்கு ஓரளவுக்கு விஷயம் புரிந்துவிட்டது போல் தெரிகிறதே!" சேதுவர்மா கேட்டார்.

"நீங்கள் பேசியதையெல்லாம் கேட்டேன்." சிரித்தவாறு சொன்னாள்.

"வசந்தா, நீ இங்கிருந்து கிளம்பிவிட்டால் நான் தனியாளாகி விடமாட்டேனா?" சேதுவர்மா கேட்டார்.

"கவலைப்படாதீர்கள். அதற்கான மாற்று ஏற்பாடுகளை நான் செய்து விடுகிறேன். கவலை வேண்டாம்." வசந்தா ஆறுதலாகச் சொன்னாள்.

மறுநாள் பாலச்சந்திரன் புறப்படத் தயாரானார். வசந்தா சற்றுக் கழித்து வருவதாகச் சொன்னாள்.



"இடம் எதுவென்று தெரியுமா வசந்தா?" சேதுவர்மா கேட்டார்.

"அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்." வசந்தா புன்னகையுடன் கூறினாள்.

பாலச்சந்திரன் குவார்ட்டர்ஸை அடையும்போது மணி ஒன்பதுக்கு மேல் ஆகிவிட்டது.

## 30

இரவு மணி பத்துக்கு மேலாகிவிட்டது.

டாக்டர் பாலச்சந்திரன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு கட்டிலில் படுத்துவாறு மாத இதழ் ஒன்றைப் புரட்டினார்.

கண்ணாடி ஜன்னல் வழியாக வெளியே வளர்ந்திருந்த மாமரத்தின் கிளைகள் காற்றில் அசைவது தெரிந்தது. மென்மையான காற்று வீசியது. குளிர் காற்று, மழை பெய்யலாம் என்று கட்டியம் கூறியது.

தெற்குப்புறமிருந்த மெயின் ரோட்டில் போக்குவரத்து ஓய்ந்தாற் போலிருந்தது. கடைசி பஸ் இன்னும் போகவில்லை.

தெருவிளக்குகள் திடுமென்று அணைந்தன.

காற்று வலுவுடன் வீசியது. பொடிச்சரளைக் கற்களை வீசியெறிந்தது போல் மழை சடசடவென்று பெய்யத் தொடங்கியது.

மாத இதழின் ஆறேழு தாள்கள் காற்றில் படபடத்துப் புரண்டன.

கடிகாரத்தில் மணி பத்தரை.

'எதிர்பார்த்ததைப் போல் எதுவும் நடக்காது போலிருக்கிறதே!' என்று நினைத்தவராக எழுந்து விளக்கை அணைத்து விட்டுப் படுத்தார்.

'வந்து விடுகிறேன்' என்று சொல்லியிருந்தாலும் வசந்தா இன்னும் வந்து சேரவில்லை. எப்படியும் வந்து விடுவாள். காரணம் சேதுவர்மா மீது அவளுக்கு அந்த அளவுக்கு அன்பு இருந்தது. அது பாலச்சந்திரனுக்கும் தெரியும். தான் சேது வர்மாவின் நெருங்கிய நண்பன் என்பதும் வசந்தாவுக்குத் தெரியும்.

காற்றின் வலுவால் எங்கெங்கெல்லாமோ ஜன்னல் கதவுகள் வலுவுடன் மோதி அடைபடுவது கேட்டது. மழையின் வேகம் அதிகரித்தது.

கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

முதலில் காற்றின் சத்தம்தான் என்று நினைத்துப் பேசாம லிருந்தார். தொடர்ந்து கதவைத் தட்டும் சத்தம் கேட்கவே, எழுந்து லைட்டை எரியவிட்டார். வசந்தா வந்திருக்க வேண்டுமென்று நினைத்தார்.

படுக்கையறையிலிருந்து வராந்தாவுக்கு வந்தார்.

''யாரது?'' பாலச்சந்திரன் கேட்டார்.

''நிர்மலா... நிர்மலா வந்திருக்கிறேன்.'' பதில் குரல் கேட்டது.

''இங்கு வரவேண்டாம் என்று சொல்லியிருந்தேனே?'' பாலச்சந்திரன் கதவைத் திறக்கவில்லை.

''முக்கியமான ஒரு விஷயம் சொல்ல வேண்டும். முதலில் கதவைத் திறந்து விடுங்கள்.'' அவள் தாழ்ப்பாளைத் தள்ளினாள்.

''வரவரப் பெரிய தொல்லையாகி விட்டதே. நான்தான் இஸ்திரிப் பெட்டியால் கையில் நெருப்புக் காயம்படச் செய்து அனுப்பினேனே. அதெல்லாம் போதவில்லையா?'' பாலச்சந்திரன் தாழ்ப்பாளைத் திறந்துவிட்டு, வரவேற்பு அறைப் பக்கமாக ஒதுங்கினார்.

அவள் உள்ளே வந்தாள்.

''என்ன சொல்ல வேண்டுமோ, அதைச் சீக்கிரம் சொல்லித் தொலையுங்கள்.'' பாலசந்திரன் அலுப்புடனும் கோபத்துடனும் பேசினார்.



''வெளியே சொல்லி விளக்க முடியாத அளவுக்கு உங்கள் மீது எனக்கு அன்பு இருக்கிறது'' சிருங்காரம் நிறைந்த குரலில் கூறினாள்.

''நீ நிர்மலா இல்லையென்று எனக்குத் தெரியும்!'' உண்மையில் நிர்மலாவின் உடம்புக்குள் புகுந்திருக்கிற நீ ஒரு பிசாசு. எனக்கு உன்னிடம் எந்தவிதமான பயமும் கிடையாது!'' பாலச்சந்திரன் உட்புறமாக நகர்ந்தார்.

அந்த வார்த்தைகளைக் கேட்டு அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

''அது சரி. அப்படியானால் உங்களை நான் சும்மா விட்டுவிடுவேன் என்று நினைக்கிறீர்களா? அந்தப் பக்கத்தில் இருந்த உங்கள் நண்பரை நான் என்ன செய்தேன் என்று உங்களுக்குத் தெரிய வேண்டாமா?'' அவள் தன் இரண்டு கைகளையும் முன்புறமாக நீட்டினாள். ஆனால், அவள் தான் நின்றிருந்த இடத்திலிருந்து அசையவே இல்லை.

அந்தக் கைகள் மட்டும் நீண்டன.

பாலச்சந்திரனின் கழுத்துக்கு மிக அருகில் வந்தன அந்தக்கைகள். அவர் பின்புறமாக நகர முற்பட்டபோது சுவர் முதுகில் பட்டுத் தடைசெய்தது.

சுற்றுமுற்றும் பார்த்தார். அதிலிருந்து தப்பிக்க எந்த ஒரு வழியுமில்லை!

கீழ்ப்புறம் அலங்காரத்துக்காக ஒரு பெரிய மண் பானை வைக்கப்பட்டிருந்தது. மெதுவாகச் சாய்ந்து அதைக் கையில் எடுத்தார் பாலச்சந்திரன்.

குடத்தை மேற்புறமாக உயர்த்தி, அதை வலுவுடன் அவள் மீது எறிந்தார்.

அந்த மண் குடம் அவள் தலையில் மோதி சின்னஞ்சிறு துண்டுகளாகத் தெறித்துச் சிதறின.

அதற்குள் அவள் கைகள், அவர் கழுத்தைப் பிடித்துவிட்டன.

அன்று ஒன்பது மணியானபோது ரத்னபிரபா தனது பங்களாவிலிருந்து புறப்பட்டாள்.

பங்களாவின் வெளியே வந்தவள் ஒரு தடவை தனது சிவப்பு மாருதியைப் பார்த்தாள். பிறகு என்ன நினைத்தாளோ, வேகவேகமாக கேட்டைத் திறந்து வெளியே வந்தாள்.

''காரில் போவதுதானே நல்லது.'' அவளுக்குப் பின் புறத்திலிருந்து ஆண் குரல் ஒன்று ஒலித்தது. ரத்னபிரபா திரும்பிப் பார்த்தாள்.

''கார் சரிப்படாது!'' பதிலளித்தாள்.

நடுத்தர வயது மனிதன் ஒருவன் வாசலருகில் நின்றிருந் தான். நல்ல உயரம். அதற்கேற்ற உடம்பு கிட்டத்தட்ட சேதுவர்மாவின் முகம் போலவே இருந்தது அவன் முகம்.

''பிறகு எப்படி அந்த இடத்துக்குப் போவது?'' அவன் விசாரித்தான்.

''வேறு வழியிருக்கிறது. நான் போய்விட்டு வருகிறேன்.'' அவள் நடந்தபடி பேசினாள்.

பண்ணார மூலையை அடைந்தவள் அங்கு நின்றாள்.

''மாதவி...'' அழைத்தாள்.

ஆலமரத்தின் அடிப்புற இருட்டிலிருந்து ஒரு பெண் குரல் பதில் கொடுத்தது.

''நீ ஒரு டாக்ஸி கொண்டுவா. நான் இங்கேயே நிற்கிறேன்.'' ரத்னபிரபா சொன்னாள்.

ஓர் உருவம் இருளை ஊடுருவியது.

அந்தச் சிறிய சந்திப்பில் இரண்டு டாக்ஸிகள் நின்றிருந்தன. ஒன்றுக்குள் டிரைவர் போதையுடன் ஸீட்டில் சாய்ந்தபடி சன்னமான உறக்கத்திலிருந்தார்.

மற்றொன்றில் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு ஏதோ ஒரு காதல் பாட்டைத் தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டிருந்தார் அதன் டிரைவர்.



''யாரது... சின்னப்பெண் மாதிரி தெரிகிறதே?'' சிகரெட் புகைப்பவர் தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.

மாதவி அந்த டாக்ஸியை நெருங்கினாள்.

''ஹலோ... டாக்ஸி வருமா?'' கேட்டாள்.

''நீ யாரும்மா, ஏரியாவுக்கு புதுசா இருக்கிறே?'' டிரைவர் சிரித்தபடி கேட்டார்.

''புதுசெல்லாம் கிடையாது, கேட்டதுக்கு பதில் சொல்லுங்க.'' அவள் கதவைத் திறந்து பின்ஸீட்டில் உட்கார்ந்தாள்.

''ம்... அந்த வழியில் நேராகப் போங்கள்.'' வழி சொல்லித் தந்தாள்.

வளைவு வந்தபோது டிரைவருக்கு ஏதோ தோன்றியிருக்க வேண்டும். இடதுபுறமாக டாக்ஸியைத் திருப்ப முயன்றார்.

ஆனால், டாக்ஸி திரும்பாமல் அவள் சொன்ன வழியிலேயே விரைந்தது.

'ஒருவேளை நான்தான் திருப்பாமல், திருப்பியதாக நினைத் தேனோ என்னவோ?' என்று டிரைவர் சந்தேகம் கொண்டார்.

மேலும் சற்றுத்தூரம் போன பிறகு வலது புறமிருந்த பாதையில் வண்டியைத் திருப்ப முயன்றார்.

''அப்படியல்ல... பண்ணாரமூலைக்குப் போக வேண்டும் நான்.'' மாதவி கூறினாள்.

''பாதை எனக்கும் தெரியும். இருந்தாலும்...'' என்றவாறே அவளைப் பார்ப்பதற்கு வசதியாக உட்புற லைட்டை எரியவிட்டான்.

''ஓகோ... அதற்குத்தானா... பண்ணார மூலையில் அதற் கேற்றபடி எல்லா வசதிகளும் இருக்கிறதே.'' அவள் சிரிப்புடன் கூறினாள்.

அந்த பதில் டிரைவரை மகிழ்ச்சிப்படுத்தியிருக்க வேண்டும். டாக்ஸியை ரிவர்ஸ் எடுத்து பண்ணார மூலையை நோக்கி விரைவாகச் செலுத்தத் தொடங்கினார்.

சற்று தூரத்திலேயே ஆலமரத்தின் கீழ் ஒரு பெண்மணி நிற்பது தெரிந்தது.

"அதோ நிற்கிறார்களே... அவர்கள்தானா?"

"ஆமாம். எங்க எஜமானி அவங்கதான். கார்ல வரப் போறாங்க!"

ஆலமரத்தின் அடியில் கார் நின்றது. மாதவி காரிலிருந்து இறங்கினாள்.

ரத்னபிரபா அந்த இருக்கையில் ஏறி அமர்ந்தாள்.

"நீ போ மாதவி. நான் வருவது வரை வீட்டைப் பார்த்துக் கொள். யார் வந்தாலும் வீட்டுக்குள் விடாதே ஜாக்கிரதை!" எச்சரிக்கை செய்தவள் டிரைவரின் பக்கம் திரும்பி, "வண்டியை எடுங்கள். நான் வழி சொல்லித் தருகிறேன்" என்றாள்.

கார் புறப்பட்டது.

"சுமார் எவ்வளவு நேரம் பயணம் செய்ய வேண்டி இருக்கும்?"

"ஐந்து மணி நேரமாகலாம்!"

டிரைவர் ஆக்ஸிலேட்டரை அழுத்த... கார் விரைந்தது.

ரத்னபிரபா காரில் சாய்ந்து உறங்கத் தொடங்கினாள்.

சரியாக நான்கு மணி நேரத்துக்குப் பிறகு கண் விழித்தாள்.

"அதோ அந்த சந்திப்பில் வலதுபுறமாகத் திரும்ப வேண்டும். மற்றதை அப்புறம் சொல்கிறேன்."

கோவிலகத்தை நோக்கிச் செல்லும் ஆள்நடமாட்டமற்ற பகுதியை அடைந்ததும் டிரைவர் காரை நிறுத்தினார்.

"என்ன... ரிப்பேர் ஏதுமில்லையே?" ரத்னபிரபா கேட்டாள்.

"இல்லை. அந்தப் பெண் சொன்னது..." டிரைவர் இருக்கையிலிருந்து இறங்கிப் பின் ஸீட்டுக்கு வந்தான்.



"ஓகோ... நீங்கள் அந்த மாதிரி மனிதரா?" ரத்னபிரபா காரிலிருந்தவாறு இடது கையை வெளியே நீட்டி வலுவாக உட்புறம் இழுத்தாள்.

கனம் குறைந்த ஒரு பொம்மை மாதிரி அவன் பொத்தென்று காருக்குள் வந்து விழுந்தான். மறுவிநாடியே அவன் மூச்சற்றுப் போனான்.

ரத்னபிரபா காரிலிருந்து இறங்கினாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். இடதுபுறம் செங்குத்தான சரிவு அபாயகரமாகக் கீழ்நோக்கி நீண்டிருந்தது. பின்புற மட்கார்டைப் பிடித்து உயர்த்தி, காரை அந்தச் சரிவுக்குள் தள்ளினாள்.

இரும்புத் தகடுகள் பாறையில் மோதி உராயும் சத்தத்துடன் டாக்ஸி இருளில் ஊர்ந்து மறைந்தது.

அங்கிருந்து கோவிலகம் பக்கத்தில்தான்.

ரத்னபிரபா கோவிலகத்தை அடைந்து தெருவாசலைத் தாண்டினாள்.

மிகவும் பழக்கமான பகுதியைப் போல் அந்தக் கோவிலகத்தை ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தாள். பின்பு வராந்தாவுக்கு வந்து இடதுபுறமிருந்த மாடிப்படி வழியாக முதல் மாடிக்கு வந்தாள்.

அந்த இருளிலும் அவளுக்கு வழி துல்லியமாகத் தெரிந்தது.

விஷ்ணுப்ரியாவின் அறையை அடைந்து வாசலுக்கு முன்னால் நின்றாள்.

கதவைத் தட்டினாள்.

"யாரது?" உள்ளிருந்து குரல் கேட்டது.

"நான்தான் கதவைத் திற!" ரத்னபிரபா கூறினாள்.

"ஜோதிர்மயி!" விஷ்ணுப்ரியா மந்திரிப்பதுபோல் சொன்னாள். அவள் நெற்றியில் சுளிவுகள் உயர்ந்தன.

# 31

எட்டி மரத்தின் அடியில் வந்து நின்றாள்.

''யாரது?'' ரத்னபிரபா கேட்டாள்.

''நான்தான் நீலி...''

''உன்கிட்டச் சொல்லியனுப்பின விஷயத்தை இன்னுமா நீ செஞ்சு முடிக்கலை?''

''இதுவரை அதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அந்த மனிதனும் அவ்வளவு சுலபத்தில் சிக்குகிற மாதிரி தெரியவில்லை. இன்னொரு விஷயம்... அவனுக்கு உதவ வேறொருத்தியும் இருக்கிறாள்.'' நீலி கூறினாள்.

''அது யார்?'' ரத்னபிரபா கேட்டாள்.

''பெயர் வசந்தா. அவளும் இந்த எட்டி மரத்தில் அறையப்பட்டிருந்தாள். அந்த மனிதன், அவளை இங்கிருந்து விடுதலை செய்தார். அத்துடன் அவளுக்குத் தனது முழு பலமும் திரும்பி வந்துவிட்டது.''

''சரி. அவளது முன்கதை என்ன?''

நீலி அதை விவரித்தாள். அந்தக் கதையைக் கேட்ட ரத்னபிரபா வியப்பு அடைந்தாள்.

'ஓகோ... இந்த இடத்தில் இப்படியொருத்தியா? அவள் தன்னைவிட சக்தி வாய்ந்தவளாகவும் தெரிகிறாள். நிலைமை இப்படியே போனால்...' ரத்னபிரபா யோசித்தாள்.

''அவள் ரட்சஸ் அல்ல; மோகினி!'' நீலி கூறினாள்.

''எதுவாக இருந்தாலும் சரி. நான் அவளை உடனே பார்த்தாக வேண்டும்.'' ரத்னபிரபா திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

நேராக விஷ்ணுப்ரியாவின் அறைக்கு வந்தாள்.

''நீ எதற்காக மறுபடியும் வந்திருக்கிறாய்?'' விஷ்ணுப்ரியா கேட்டாள்.



''இங்கே சேதுவர்மா என்பவன் வந்திருக்கிறானே, அவன் என் எதிரி. அவனை இங்கிருந்து திரும்ப உயிரோடு அனுப்ப நான் விரும்பவில்லை.'' ரத்னபிரபா உறுதியான குரலில் கூறினாள்.

''அதைச் சொல்ல உனக்கு என்ன உரிமை இருக்கிறது?''

''இதை வைத்துக்கொண்டு ஒரு விவாதம் நடத்த நான் விரும்பவில்லை. இந்த இடத்தைப் பொறுத்தவரை நாம் இருவரும் சமமானவர்கள். நாம் ஒன்றாக இங்குதான் படித்தோம்.''

''உனது கேள்வியும் எண்ணமும் எதுவாக இருந்தாலும், நீ மற்றொரு மனிதனை அழிப்பதை நான் அனுமதிக்க முடியாது!''

''நீ அந்த மனிதனிடம் இந்த அளவுக்குப் பற்று வைக்கக் காரணம்?''

''அவர் இங்கு மந்திரவித்தை கற்றுக்கொள்ள வந்திருக்கிறார். அதற்கு எல்லாருக்குமே உரிமை உள்ளது. அந்த அடிப்படையில் தானே நாமும் இங்கு வந்தோம். அது மட்டுமல்லாமல், இதையெல்லாம் தீர்மானிக்க வேண்டியது நாம் அல்ல.''

''ஓகோ... நீ அவளைப் பற்றிக் கூறுகிறாயா?''

''ஆமாம்... அந்த சக்தி இந்திராபாய்க்கு மட்டுமே உரியது.''

''அவளது சக்தி நிலைபெற்றிருப்பது வரை நம்மால் எதுவும் செய்ய முடியாது என்றா சொல்கிறாய்?''

''அதுதான் உண்மை!''

''ஓகோ...'' ரத்னபிரபா அங்கிருந்து விசுக்கென்று எழுந்து போனாள்.

இரவு மணி பன்னிரண்டைத் தாண்டிவிட்டது.

கோவிலகத்துக்குள் எங்கெல்லாமோ, யாரெல்லாமோ நடக்கும் காலடியோசைகள் கேட்டன.

ஏறத்தாழ ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் விசாலமாகப் பரந்து விரிந்திருந்த பிரமாண்டமான அந்த மாளிகைக்குள் வசிப்பவரில்

பெரும்பாலானவர்கள் ஒருவருக்கொருவர் அறிமுகம் இல்லாத வர்கள்தான்.

மாந்திரீகத்தைக் கற்றுக் கொண்டவர்களும், அப்படி இல்லாத வர்களும்கூட அங்கு இருந்தனர். அவர்களில் மனிதர்களும், மனிதர்களல்லாதவர்களும் கூட இருந்தனர்.

இரவின் யாமங்களில், இருளடைந்த அந்தக் கோவிலக வராந்தாக்களில் வெறும் தீபங்கள் நகரும். தீபம் ஏந்தியிருப்ப வர்களுக்கு உருவம் இருக்காது.

அப்படிப்பட்ட தீபங்கள் எதிரெதிர் திசைகளில் வந்து ஒன்றையொன்று கடந்து போவதும் உண்டு.

சேதுவர்மா எழுந்தார்.

விஷ்ணுப்ரியா கொடுத்திருந்த தங்கத் தகட்டில் எழுதப்பட்ட மந்திரச் சுவடியை எடுத்து மடியில் பத்திரமாக வைத்துக் கொண்டார். அறைக் கதவைத் திறந்து வெளியேறினார்.

இந்திராபாயின் ஓவியம் இருந்த அறையை நோக்கி நடந்தார். படத்தில் பார்த்த ஒரு கையின் ரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். சேதுவர்மா இருளடைந்த வராந்தாக்களின் வழியாக நடந்தார்.

சற்றுத் தொலைவு நடந்தபோது தொலைவில் சன்னமான வெளிச்சம் ஒன்று தட்டுப்பட்டது. அவர் பார்த்துக் கொண் டிருக்கும் போது அது ஒரு தீப ஒளியாக மாறியது. ஊன்றி கவனித்தபோது அது சங்கிலிவிளக்கு என்பது புரிந்தது.

'வருவது யாராக இருக்கும்?' சேதுவர்மா யூகிக்க முயன்றார். நிச்சயமாக வசந்தாவாக இருக்க முடியாது. அவள் பாலச்சந்திரனுடன் போவதாகச் சொல்லியிருந்தாள். அதன் பிறகு அவள் தென்படவே இல்லை. அங்கு என்ன நடந்ததோ, ஒன்றும் தெரியவில்லை. வெளிச்சம் கண்ணுக்குத் தட்டுப்பட்டதும் சேதுவர்மா அப்படியே நின்றார். வெளிச்சம் அவர் இருந்த திசையை நோக்கி நகர்ந்தது. ஆனால், அதைத் தாங்கியிருக்கும் உருவம் ஏதும் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை.



வெறும் தீபவிளக்கு மட்டும் அந்தரத்தில் இப்படி நீந்திவர முடியுமா என்ன!

சேதுவர்மா முன்புறமாக நகர்ந்தபோது இடது, வலது புறங்களில் இரண்டு பாதைகள் பிரிந்தன. சேதுவர்மா இடதுபுறமாக ஒதுங்கி நின்றார்.

தீபத்துடன் விளக்கு நெருங்கி வந்தது. மெதுவாக நகர்ந்து அது அவரை நெருங்கியது. அப்போதும் அதைப் பிடித்திருக்கும் உருவம் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை.

திகைப்புடன் சேதுவர்மா அதையே பார்த்தபடி நின்றிருந்தார். தீப ஒளி வலது புறமாகத் திரும்பிச் சென்றது.

'அந்த தீபத்தைத் தொடர்ந்தால் என்ன?' என்று சேது வர்மாவுக்குத் தோன்றியது.

'எங்கேதான் போகிறது அந்த ஒளி?'

மெதுவாக அதைப் பின்தொடர்ந்தார்.

சற்று தூரம் போவதற்குள் அந்த ஒளி கீழ்ப்புறமாக இறங்கி மறைவதாகத் தோன்றியது.

அப்போதுதான் இந்த வழியில், தான் இதுவரை வந்ததே இல்லை என்பது புரிந்தது.

ஒளி இறங்கிய பகுதியை அடைந்தபோது கீழ்ப்புறமாகப் படிக்கட்டுகள் இறங்குவது தெரிந்தது. சேதுவர்மா படிக்கட்டு களையே பார்த்தவாறு சற்று நேரம் நின்றார்.

படிகள் தெளிவாகத் தெரிந்தன.

கீழ்ப்புறமாகச் செல்ல வேண்டும் என்று நினைத்த சேதுவர்மாவுக்கு அது தரைப்பகுதியின் கீழ் உள்ள சுரங்கப் பாதை என்பது தெரிந்தது. இருப்பினும் அது எந்த இடத்தில் முடிவடைகிறது என்று தெரிந்து கொள்ள ஆர்வம் பிறந்தது.

மடியிலிருந்த ஓலைச்சுவடியின் மீது கையை வைத்தபடி கீழ்ப்புறமாகப் படியின் மீது காலெடுத்து வைத்தார்.

சட்டென்று மேற்புறத்திலிருந்து காதைத் துளைக்கும் ஒரு சத்தம் எழுந்து படிக்கட்டுகள் வழியாக கீழ்ப்புறமாகப் பாய்ந்து சென்றது.

தைரியத்தை இழக்காதவராக சேதுவர்மா படிகளில் இறங்கத் தொடங்கினார். கீழ்த்தளத்தை அடைந்தபோது இடது புறத்திலிருந்த கதவு ஒன்று திறந்திருப்பதையும் அதன் உட்புறத்திலிருந்து வெளிச்சம் வருவதையும் கண்டார்.

அறைக்குள் என்ன இருக்கிறது என்று எட்டிப் பார்த்தார்.

சேதுவர்மா ஒரு கணம் திடுக்கிட்டார்.

தரை மீது சங்கிலி விளக்கு ஒன்று எரிகிறது. அதன் அருகில் சுவரில் சாய்ந்தபடி பெண் உருவம் ஒன்று உட்கார்ந்திருந்தது.

எவர் பார்த்தாலும் நடுநடுங்கிப் போகும் ஒரு காட்சியாக இருந்தது அது. வெறும் எலும்புக் கூடாலான உருவம்.

அழகான சரிகை வைத்த புடவை மற்றும் ரவிக்கை அணிந்திருந்தது. மண்டையோட்டுப் பகுதியிலிருந்து கீழ்ப்புறமாக இறங்கித் தொங்கிய முடி மட்டுமே அது ஒரு பெண் உருவம் என்று அடையாளம் காட்டியது.

கழுத்துப் பகுதியில் நகைகள் இருந்தன. விரல் எலும்புகளில் மோதிரங்கள்; மோதிரங்களில் வைரக்கற்கள் சுடர்விட்டன.

அந்த விளக்கு சற்று மேல்நோக்கி அந்தரத்தில் உயர்ந்து மூன்று தடைவ அந்த உருவத்தை வலம் வந்தது.

அப்போது அந்த உருவத்தில் சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

மெதுவாக அந்த எலும்புக் கூடுகளின் மீது தசைப்பற்று படியத் தொடங்கியது. முகத்தில் கண்கள் இருக்க வேண்டிய இருளடர்ந்த குழிகளில் கண்விழிகள் பளபளக்கத் தொடங்கின.

எலும்புகள் மெதுவாக தசையால் முழுவதுமாக மூடப்பட்டன.



ஒரு சில நிமிடங்களுக்குள் அது முழுமையான ஒரு பெண்ணுருவமானது.

அந்த உருவம்.

இந்திராபாய்!

நான் அன்று ஓவியத்தில் பார்த்த உருவத்துக்கு இப்போது முழு வடிவம் கிடைத்திருக்கிறது!

டாக்டர் சேதுவர்மாவுக்கு முன்னால் தென்பட்டது சாட்சாத் இந்திராபாய்!

விஷ்ணுப்ரியாவுக்கு சக்தியளிக்கும் மகா மாந்திரீக சக்தியுள்ள இந்திராபாயின் சரியான இருப்பிடம் அதுதான்.

சேதுவர்மா வியப்பு நிறைந்த மனத்துடன் அந்த உருவத்தை அசைவற்றவராகப் பார்த்தபோது, இந்திராபாயின் நாக்கு அசைந்தது.

''அந்தக் கை எங்கே?''

''அந்தப் பெட்டிக்குள் இருக்கிறது.'' தீபம் எரியும் பகுதியிலிருந்து குரல் எழுந்தது.

''ஏன் அதை எடுத்து வரவில்லை?''

''எடுக்க முயற்சி செய்தேன். ஆனால், முடியவில்லை.''

''திரும்பவும் முயற்சி செய்திருக்கக் கூடாதா?''

முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை.

''என்னுடைய எல்லா சக்திகளையும் நான் முழுமையாகத் திரும்பப் பெற வேண்டுமானால், அந்தக் கை இருந்தால் மட்டுமே முடியும்... போதாக்குறைக்கு அவள் திரும்பவும் இங்கு வந்திருக்கிறாள்!''

''நான் திரும்பவும் முயற்சி செய்கிறேன்.''

''ம்...''

டாக்டர் சேதுவர்மா கண் முன்பாக அந்த உருவம் பழைய நிலைக்குத் திரும்பியது.

''அந்தக் கை!'' சேதுவர்மா மந்திரிப்பதுபோல் சொல்லிக் கொண்டார்.

சேதுவர்மா அங்கிருந்து கிளம்பினார்.

கடிகாரத்தைப் பார்த்தார்.

மணி இரண்டு.

அந்த நேரத்திலேயே அந்த கையைப் பெட்டியிலிருந்து எடுத்து, நிலவறைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று முடிவு செய்து, வாசலை நெருங்கினார் சேதுவர்மா.

''எங்கே போகிறீர்கள்?'' தனக்குப் பழக்கமான குரலைக் கேட்டார்.

''யார் வசந்தாவா?''

''உள்ளே வாருங்கள்.'' சேதுவர்மா திரும்பி வந்தார்.

வசந்தா அறைக்குள் நுழைந்தாள்.

''போன காரியம் என்ன ஆனது?''

அன்று இரவில் நடந்த சம்பவத்தை வசந்தா விவரித்தாள்.

டாக்டர் பாலச்சந்திரன் மேற்கொண்டு நகர முடியாமல் சுவரில் சாய்ந்து நின்றார்.

நிர்மலா அவர் கழுத்தைப் பிடித்தாள்.

அப்போதுதான் வசந்தா அங்கே தென்பட்டாள்.

''கையை எடு!'' வசந்தாவின் குரல் கடுமையாக ஒரு கட்டளை போல் ஒலித்தது.

''நீ யார்?'' நிர்மலாவுக்குள் இருந்த ரட்சஸ் கேட்டது.

''சொன்னால் உனக்கு விளங்காது.'' வசந்தா பதிலளித்தாள். ''நீ யாருடையதோ ரட்சஸ்! நான் அப்படியல்ல... அதனால் தான் சொல்கிறேன்.''



வசந்தா, நிர்மலாவின் தலைமுடியைப் பிடித்துப் பின்புறமாக இழுத்தாள்.

நிர்மலா பிடியை விட்டுவிட்டுப் பின்புறமாக இழுபட்டாள்.

வசந்தா, நிர்மலாவின் முடியைப் பிடித்துத் தரையில் போட்டு அடிக்க முயன்றபோது, பாலச்சந்திரன் தடுத்தார். ''அந்த உடம்புக்கு எந்தவிதமான சேதமும் ஏற்படக்கூடாது வசந்தா!''

''மன்னித்து விடுங்கள்... நான் அந்த விஷயத்தை மறந்து விட்டேன். வாடி... என்னுடன் வா!'' வசந்தா, நிர்மலாவின் இடது கைச் சுண்டுவிரல் நகத்தின் பின்னால் தன் நகத்தைத் தாழ்த்தினாள்.

நிர்மலா அலறினாள்.

''ஐயோ... நான் போய்விடுகிறேன். மேற்கொண்டு என்னை எதுவும் செய்யாதீர்கள்!''

''ம்... புறப்படு. இனி இந்த உடம்பில் புகுந்தால் உன்னை அழிக்காமல் விடமாட்டேன்!'' வசந்தா தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி, நிர்மலாவின் கை மோதிரவிரலில் போட்டு விட்டாள்.

உடனே நிர்மலா மயக்கமடைந்து தரையில் விழுந்தாள்.

சற்று நேரத்துக்குள் மயக்கம் தெளிந்து எழுந்தாள்.

''ஐயோ... நான் எப்படி இங்கு வந்து சேர்ந்தேன்?'' சுற்றுப்புறத்தை உணர்ந்த பிறகு கேட்டாள்.

''பயப்படாதீர்கள் நிர்மலா... அதெல்லாம் அப்படி நடந்து விட்டது!'' பாலச்சந்திரன் ஆறுதலளித்தார்.

''என்ன நடந்தது? எனக்கு எதுவும் புரியவில்லை. என் குழந்தைகள் எங்கே?'' சுற்றுமுற்றும் மலங்கமலங்க விழித்தபடி கேட்டாள்.

''ஒரு மோசமான கனவு கண்டதால், நீங்கள் இந்த இடத்துக்கு வந்து சேர்ந்தீர்கள். கொஞ்சம் பொறுங்கள்... நானே உங்களைக் கொண்டுபோய் விடுகிறேன்.'' பாலச்சந்திரன் கதவைத் திறந்தார்.

கனவில் நடப்பதைப்போல் பாலச்சந்திரனைத் தொடர்ந்த நிர்மலா, தனது குவார்ட்டர்ஸின் முன்புறம் வந்து சேர்ந்தாள்.

வாசல் கதவு திறந்து கிடந்தது.

நிர்மலா வீட்டுக்குள் நுழைந்து கதவை மூடித் தாழிட்ட பிறகு பாலச்சந்திரன் திரும்பி நடந்தார்.

எல்லாவற்றையும் கேட்ட சேதுவர்மா கடைசியில் சொன்னார். ''டாக்டர் சசிதரனுக்கு இதெல்லாம் தெரியவே தெரியாதா?''

''தெரியாது!'' வசந்தா கூறினாள்.

''அப்படியானால் நாம் ஒரு வேலை செய்ய வேண்டும்.''

''சொல்லுங்கள்!'' வசந்தா கேட்டாள்.

''என்னுடன் வா!'' சேதுவர்மா அவளை அழைத்தபடி நடக்கத் தொடங்கினார்.

## 32

**''நா**ம் எங்கே போகிறோம்?'' வசந்தா கேட்டாள்.

''எல்லாவற்றையும் அப்புறம் சொல்கிறேன்.'' முன்புறமாக நடந்தவாறு சேதுவர்மா பதிலளித்தார்.

''இல்லை... எனக்கு விவரம் தெரிந்தாக வேண்டும். இந்த அரண்மனைக்குள் என்னவெல்லாம் ரகசியங்கள் உள்ளன என்பது உங்களுக்கு சரியாகத் தெரியாது. நம்ப முடியாததும், விசித்திரமுமான பல விஷயங்கள் இதற்குள் உண்டு. அதனால் தான் கேட்கிறேன். சொல்லுங்கள்.'' வசந்தா வற்புறுத்தினாள்.

''இந்திராபாயின் ஓவியத்தில் ஒரு கை இல்லாமலிருந்தது ஞாபகமிருக்கிறதா உனக்கு?''

''தெரியும். ஓவியம் வரைந்தபோதே அதில் அந்தப் பகுதி வரையப்படவில்லை.''

''எதனால்... வரையவில்லை?''



''கை இல்லாததால்தான்.''

''அந்தக் கை எங்கே போனது?''

''நான் இங்கே வந்தபோதே அந்தக் கையைக் காணவில்லை. அநேகமாகத் தொலைந்திருக்கலாம்.''

''இல்லை... அது பெட்டிக்குள் பத்திரமாக இருக்கிறது.''

''நிஜமாகவா சொல்கிறீர்கள்? உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''எதிர்பாராமல் கண்டுபிடித்தேன்!''

''அப்படியானால், அதை எடுத்து உடனே அந்த உருவத்தில் பொருத்த வேண்டும். அந்த சக்தியை யாரால் ஆவாஹணம் செய்ய முடியுமோ அப்படிச் செய்பவருக்கு உன்னதமான செயல்கள் சாத்தியமாகும்! ஆகாயத்தில் பறக்கலாம். ஒலியைவிட வேகமாகப் பயணம் செய்யலாம்.''

''உண்மையாகவா? அவ்வளவு வல்லமைகள் கைவரப் பெறுமா?''

''நான் சொன்னதெல்லாம் உண்மை!''

''இவ்வளவு விஷயங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டு ஏன் அந்தக் கையை இதுவரை கண்டுபிடிக்கவில்லை?''

''ஒருவேளை நான் அந்தக் கையைக் கண்டுபிடித்திருந்தால் கூட என்னால் அதை எடுக்க முடியாது?''

''அந்தக் கை எப்படித் துண்டாகி மறைந்தது என்று தெரியுமா?''

''தெரியாது. ஏதாவது ஒரு சுவடியில் அதைப் பற்றிய விவரம் கிடைக்கலாம்.''

''அதற்காகத்தான் போகிறோம் புறப்படு.''

இருவரும் நடக்கத் தொடங்கினர்.

வராந்தாக்களைக் கடந்து அந்த அறையின் முன்புறத்தை அடைந்தனர்.

''இதற்குள்தான் அந்தக் கை இருக்கிறது!'' சேதுவர்மா கூறினார்.

வசந்தா கதவைத் திறந்தாள்.

இருவரும் உள்ளே நுழைந்தனர்.

சேதுவர்மா, கையிருக்கும் பெட்டியைத் திறந்தார். அதற்குள் சிவப்புநிறப் பட்டுத் துணியில் பொதிந்து வைத்திருந்த கை இருந்தது.

சேதுவர்மா பட்டுத் துணியை விலக்கினார்.

''ஆ...!'' வசந்தா தன்னையும் மீறிக் கூவினாள்.

''என்ன வசந்தா, என்ன ஆகிவிட்டது?'' சேதுவர்மா கேட்டார்.

''அதோ அந்தக் கை...''

''தயங்காமல் சொல்லுங்கள்!''

''அதோ அதன் விரல்கள் அசைகின்றன.'' வசந்தா திக்பிரமை பிடித்தவள்போல் கூறினாள்.

அவள் சொன்னது உண்மைதான். அந்தக் கைவிரல்கள் மெதுவாக விரல்களை நீட்டியும் மடக்கியும் அசைந்தன.

சேதுவர்மா அதை ஊன்றிப் பார்த்தபோது, விரல்கள் பழையபடி அசைவற்றுப் போயின.

''வசந்தா, விரல்கள் அசைவதாகத் தோன்றியது ஒருவேளை உங்கள் பிரமையாக இருக்கலாம்.'' சேதுவர்மா கூறினார்.

''இல்லை... நான் என் கண்ணாலேயே பார்த்தேன்!'' வசந்தா உறுதியான குரலில் கூறினாள்.

''எப்படி இருந்தாலும் சரி. நான் இதை எடுத்து வருகிறேன்.'' என்றபடி கையைப் பழையபடி பட்டுத்துணியில் பொதிந்தார். சாதாரணமாக ஒரு கைக்கு என்ன எடை இருக்குமோ அது அந்தக் கைக்கும் இருந்தது.



இருவரும் அறையிலிருந்து வெளியேறினர்.

இந்திராபாயின் உருவமிருந்த அறைக்குப் போக வேண்டுமெனில், மீண்டும் நீண்ட தூரம் நடக்க வேண்டி இருந்தது.

இருவரும் இருள் நிறைந்த பாதை வழியாக நிலவறையின் மேற்புறப் படிக்கட்டை அடைந்தனர்.

வசந்தா முன்புறமாக நடந்தாள்.

நாலைந்து படிகள் இறங்கியதும் அவள் எதையோ கவனித்ததுபோல் சட்டென்று நின்றாள்.

''நில்லுங்கள்... யாரோ வருவதுபோல் தெரிகிறது.'' வசந்தா இருளின் பக்கமாக வேகவேகமாக மேலேறி ஓர் ஓரமாக ஒதுங்கினாள். சேதுவர்மாவும் அவளை அவசர அவசரமாகப் பின்தொடர்ந்தார்.

இப்போதும் ஒரு சங்கிலி விளக்கின் வெளிச்சம் தெரிந்தது.

அந்த வெளிச்சம் வளைவில் திரும்பிப் படிகளில் இறங்கியது.

யாரோ அந்த விளக்கின் பின்னால் இருந்தனர். ஆனால், அது யாரென்று தெரியவில்லை!

ஏறத்தாழப் படிகளின் மையப்பகுதிக்கு வந்ததும் அந்த உருவத்தை சேதுவர்மா கவனித்தார்.

அந்த விநாடியில் அவர் திடுக்கிட்டார்.

வந்தவள் ரத்னபிரபாதேவி!

'அவள் இங்கேயும் வந்துவிட்டாளா?' சேதுவர்மாவின் மனம் கேள்வி கேட்டது.

''அது அவளேதான். அதாவது ஜோதிர்மயி'' வசந்தா மேலும் இருளுக்குள் பதுங்கியபடி கூறினாள். அவர்களுக்குப் பின்னால் இருந்த கதவு தாழிடப்படாமல் இருந்தது. சட்டென்று அதற்குள் நுழைந்த வசந்தா, சேதுவர்மாவையும் உட்புறம் இழுத்துக் கதவைச் சத்தம் எழுப்பாமல் மூடினாள்.

ரத்னபிரபாதேவி கீழ்த்தளத்துக்கு வந்து சேர்ந்தாள்.

அவர்கள் இருவரும் ஒளிந்திருந்த அறையைக் கடந்து போனாள் ரத்னபிரபா.

இருவரும் பழையபடி வெளிவந்து மாடிப்பகுதியில் இறங்கினர்.

"எதையோ தெரிந்து கொள்வதற்காக வந்திருக்கிறாள் என்று நினைக்கிறேன்." வசந்தா கூறினாள்.

"உண்மைதான். ஒருவேளை நான் இங்கு இருப்பதைத் தெரிந்துகொண்டு வந்திருக்கலாம்."

"எனக்கென்னமோ அப்படித் தெரியவில்லை. மேற்கொண்டு எதையாவது கற்றுக் கொள்ளவோ, அல்லது இந்திராபாயை அழிக்கவோ வந்திருப்பாள். அப்படித்தான் எனக்குத் தோன்று கிறது!"

"இவள் எதற்காக இந்திராபாயை அழிக்க வேண்டும்?"

"இவள் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள, அது அவசியம்!"

அவள் சொன்னதன் அர்த்தம் சேதுவர்மாவுக்கு விளங்கவில்லை.

இருவரும் இந்திராபாயின் ஓவியம் இருந்த அறையை அடைந்தனர்.

"நாம் போக வேண்டியது இந்திராபாயின் உருவம் இருக்கிற அறைக்கு அல்லவா?" சேதுவர்மா கேட்டார்.

"முதலில் அந்த ஓவியத்தை ஒரு தடவை பார்த்துவிடுவோம். அது மட்டுமன்றி ரத்னபிரபா அந்த அறைக்குள் இருக்கிறாளா என்பதையும் தெரிந்து கொள்ளலாம்." வசந்தா சாவியை எடுத்து அந்த அறையின் கதவைத் திறந்தாள்.

உள்ளே ஓவியம் முன்பிருந்ததைவிட சற்று இடம் மாறியது போலிருந்தது. ஓவியத்தின் ஓரப்பகுதிகளில் லேசாகப் புகை படிந்திருந்தது. நெருப்புக் கொழுந்துகள் அந்த ஓவியம் இருந்த கேன்வாஸை சேதப்படுத்த முடியாமல் போயிற்றோ என்னவோ?



"இது இடம் மாறியிருப்பதைப் பார்த்தால் ரத்னபிரபா இதை அழிக்க முயன்றிருப்பதாகத் தெரிகிறது." வசந்தா கூறினாள்.

சேதுவர்மா ஓவியத்தை ஊன்றி கவனித்தார்.

அந்த ஓவியத்தின் பகுதிகளை ஆங்காங்கே கத்தியால் கிழிக்க முற்பட்ட அடையாளங்கள் தெரிந்தன. அவை வெறும் கீறல்களாகவே இருந்தன. கேன்வாஸ் உண்மையில் கிழிபட வில்லை!

"கை இருக்க வேண்டிய பகுதியைச் சேலைத் தலைப்பால் மறைத்து ஓவியம் வரைந்திருக்கிறார்கள்" சேதுவர்மா சுட்டிக் காட்டினார்.

"ஆமாம்... கை சேதமடைந்த பிறகு இந்த ஓவியத்தை வரைந்திருக்க வேண்டும்!" வசந்தா கூறினாள்.

"உனக்கு இதைப் பற்றி வேறு எதுவும் தெரியாதா?"

"தெரியாது!" வசந்தா பதிலளித்தாள்.

"இந்த ஓவியம் இனிமேல் இங்கு இருக்கக் கூடாது. சேதமடை யலாம்" என்றவாறு அதைக் கையில் எடுக்கப் போனார் சேதுவர்மா.

"இப்போது அதை எடுக்காதீர்கள். கையைக் கொண்டுபொய் உருவத்தில் பொருத்திய பிறகு வந்து இதைப் பார்த்துக் கொள்ளலாம்." வசந்தா தடுத்தாள்.

அதுவும் நல்ல யோசனைதான் என்று தோன்றியதால் சேதுவர்மா ஒப்புக்கொண்டார். இவரும் அங்கிருந்து கிளம்பினர்.

இந்திராபாயின் எலும்புக்கூடு வடிவமிருந்த அறையை அடைந்து கதவைத் திறந்தனர்.

சேதுவர்மா, பட்டுத்துணியை விலக்கி, கையை வெளியே எடுத்து அந்த உருவத்தின் கையற்ற பகுதிக்கு அருகே கொண்டு போனார்.

இரும்பை காந்தம் ஈர்ப்பதுபோல் அந்த எலும்புக்கூடு கையைச் சட்டென்று வாங்கிக் கொண்டது. அந்த விநாடியிலிருந்து அந்த உருவம் மாற்றமடையத் தொடங்கியது.

ஒரு சில விநாடிகளுக்குள் அந்த உருவம் அழகு நிறைந்த இளம்பெண்ணாக மாறியது.

சேதுவர்மாவும், வசந்தாவும் பீதியுடன் சற்று விலகி நின்றிருந்தனர்.

"நீங்கள் எதற்காக பயப்பட வேண்டும்?" அந்த உருவம் கேட்டது. அந்தக் குரல் இனிமையாகவும், கவர்ச்சியாகவும் இருந்தது.

"பயப்படவில்லை..." சேதுவர்மா சிரித்தபடி கூறினார்.

"முந்தைய காட்சியைப் பார்த்தால் எப்படிப்பட்டவரும் பயப்படவே செய்வார்கள். இனிமேல் அந்த உருவம் திரும்பாது. இனிமேல் இந்த உருவம் மாறவே மாறாது!" அந்தப் புது உருவம் பேசியது.

வசந்தாவும் சேதுவர்மாவும் அந்த உருவத்தையே பார்த்தனர்.

"இது வசந்தா தானே?" புது உருவம் கேட்டது.

"ஆமாம்."

"நீ விடுதலை அடைந்து விட்டாயா?"

"ஆமாம்... இவர்தான் எனது பழைய சக்தியை மீட்டுத் தந்தவர்!"

"நல்லது. இனி ஒருபோதும் இந்த உருவத்தை இழந்து விடாமல் பார்த்துக்கொள் வசந்தா. நான் உங்களுக்காக ஏதாவது செய்ய வேண்டுமா?"

'இவர் ஆபத்தான ஒரு கட்டத்திலிருக்கிறார். ஜோதிர்மயி தேவியை தன் உடலில் சுமக்கும் ரத்னபிரபாதேவிதான் இவரது எதிராளி!" வசந்தா கூறினாள்.

"அவள் இங்குதானே இருக்கிறாள். ஆனால், அவளது உண்மையான வடிவம் நிலைத்து இருப்பது வரையில் நான் எதுவும் செய்யு முடியாது. அந்த உருவத்தை நீங்கள் அழித்து



விட்டால்... நான் உங்களுக்கு உதவ முடியும்!" இந்திராபாய் கூறினாள்.

"முயற்சி செய்கிறோம்!"

"நீங்கள் இங்கிருந்து வெளியேறும்போது தங்கத் தகட்டாலான மந்திரச் சுவடியை எடுத்துக் கொண்டு போங்கள். அது உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்."

"நானும் இவருடன் போக வேண்டுமா?" வசந்தா கேட்டாள்.

"கண்டிப்பாகப் போய்த்தான் தீரவேண்டும்!"

"அப்படியானால் போகிறேன்!" வசந்தா ஒப்புக்கொண்டாள்.

மறுநாள் சேதுவர்மாவும், வசந்தாவும் கோவிலகத்திலிருந்து புறப்படத் தீர்மானித்தனர். அதற்கு முன் விஷ்ணுப்ரியாவை சந்தித்து விடைபெற விரும்பினர்.

அவளது அறை பூட்டிக் கிடந்தது.

எத்தனையோ முறை குரல் கொடுத்தும் கதவு திறந்த பாடில்லை. சேதுவர்மா மிகவும் வலுவுடன் தள்ளியதும் ஒரு பாதிக்கதவு உள்வாங்கித திறந்து கொண்டது.

இருவரும் உள்ளே நுழைந்தனர்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி மிகவும் பங்கரமானதாக இருந்தது.

விஷ்ணுப்பிரியா, கட்டிலின்மீது ரத்தத்தில் குளித்தது போல் விழுந்து கிடந்தாள்.

ஏறத்தாழ முக்கால் நிர்வாணமான அந்த உடலின் வயிற்றுப் பகுதி கீறப்பட்டிருந்தது. குடல் பகுதிகள் சில வெளியே சிதறியிருந்தன.

கண்கள் வெளிப்புறம் துருத்திக்கொண்டு பயங்கரமாக நிலை குத்தியிருந்தன.

"ரத்னபிரபாதான் இதைச் செய்திருக்க வேண்டும்!" வசந்தா கூறினாள்.

''எதற்காக?''

''அந்த சுவடியை விஷ்ணுப்ரியா உங்களிடம் தந்துவிட்டார் இல்லையா? ரத்னபிரபா இதைத் தெரிந்து கொண்டிருக்கலாம்.''

''விஷ்ணுப்ரியாவைக் கொல்லும் அளவுக்கு ரத்ன பிரபாவுக்கு வல்லமை இருக்கிறதா?''

''ஒருசில சந்தர்ப்பங்களில் விஷ்ணுப்ரியா சாதாரணமான மனிதப் பெண்தான். அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ரத்னபிரபா வந்திருக்க வேண்டும்.''

''அப்படியானால் நாம் தாமதிப்பது நல்லதல்ல. உடனே இங்கிருந்து புறப்படவேண்டும். இல்லாவிட்டால் ரத்னபிரபா நமக்கு ஏதாவது தொல்லை கொடுக்கலாம்!''

''அதற்காக இந்த நள்ளிரவிலா புறப்படுவது?'' வசந்தா கேட்டாள்.

''அதனாலென்ன... உடனே புறப்படுவதுதான் நல்லது!''

சேதுவர்மா தனது தோள் பையில் தங்கத் தகட்டாலான ஓலைச் சுவடியை பத்திரப்படுத்தினார். இருவரும் கோவி லகத்தின் வராந்தாவுக்கு வந்தனர்.

''இந்த நேரத்தில் நீங்கள் இருவரும் எங்கே போகிறீர்கள்?'' சத்தம் வந்த திசையை நோக்கி இருவரும் ஏககாலத்தில் திரும்பினர்.

அன்றொரு நாள் நூலக அறையில் பார்த்த பைசாசிக உருவங்கள் இரண்டும் நின்றிருந்தன.

''நாங்கள் புறப்படுகிறோம்!'' வசந்தா கூறினாள்.

''இரவு நேரத்தில் இங்கிருந்து யாரும் வெளியேறக் கூடாது என்பது கட்டளை!''

''அது யாருடைய கட்டளை?''

''ஜோதிர்மயி வந்திருக்கிறார். தெரியாதா உங்களுக்கு?'' இருவருள் ஒருத்தி முன்புறமாக நகர்ந்து அவர்களைத் தடுத்தாள்.



''அதற்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு? நாங்கள் போகிறோம்.'' வசந்தா முன்புறமாக நகர்ந்து அவள் கையைப் பிடித்து இழுத்தாள்.

''ஒழுங்காகக் கையை விடு. இல்லாவிட்டால் உன்னைப் பலகாரம்போல் சாப்பிட்டு விடுவேன்.'' சொல்லியபடி அவள் வசந்தாவை இழுத்துப் பிடித்தாள்.

ஆனால், கலங்காத வசந்தா, எட்டிப் பாய்ந்து அவள் தலைமுடியைப் பற்றிப் பிடித்தாள். விசையாக ஒரு சுழற்றுச் சுழற்றி வெளிப்புறமாக வீசி எறிந்தாள். விர்ரென்று பாய்ந்தவள் சற்று நேரம் அந்தரத்திலேயே உழன்று தரையில் பொத்தென்று விழுந்தாள்.

அந்த நேரத்திலேயே அவர்கள் புறப்பட்டனர். விடியற்காலை நேரத்தில் சரியாக பஸ் ஸ்டாண்டை அடைந்தனர்.

பஸ்ஸுக்காகக் காத்திருந்த பிற பயணிகள் அழகியான வசந்தாவைப் பார்த்து வியப்பு அடைந்தனர்.

மறுநாள் காலையில் லீவை முடித்துக்கொண்டு சேதுவர்மா டூட்டியில் சேர்ந்தார்.

அன்று அவருக்கு நைட் டூட்டி. இரவு எட்டு மணியானபோது புறப்பட்டார் சேதுவர்மா. அப்போது அங்கு வந்த வசந்தா கூறினாள்: ''நானும் உங்களுடன் ஆஸ்பத்திரிக்கு வருகிறேன்.''

டாக்டர் சேதுவர்மா சந்தேகம் நிறைந்த கண்களுடன் வசந்தாவைப் பார்த்தார்.

## 33

''என்ன இப்படிப் பார்க்கிறீர்கள்?'' வசந்தா கேட்டாள்.

''காரணம் இருக்கிறது!'' சேதுவர்மா திரும்பி நின்றார்.

''என்னைப் பார்த்தால் பயமாகத் தெரிகிறதா?'' அவள் சிரித்தபடி கேட்டாள்.

''பரவாயில்லையே... நான் எதுக்காக வசந்தா, உன்னைப் பார்த்து பயப்படணும்? குறிப்பாகச் சொல்லணும்னா என் உயிர்கூட உன் உரிமைதான்.'' சேதுவர்மா வசந்தாவை நெருங்கி அவள் தோளில் கை வைத்தார்.

''நான் அங்கே வந்தாலும், என்னை யாரும் பார்க்க முடியாது. போதுமா?'' வசந்தா கூறினாள்.

''அப்படியானால் வா. ஆமாம் நான் மட்டும் பார்க்கலாம் இல்லையா?''

''பார்க்கலாம்!''

''அப்படியானால் புறப்படு!'' சேதுவர்மா காரில் ஏறி ஸ்டார்ட் செய்தவுடன் வசந்தா வந்து ஏறிக் கொண்டாள்.

ஆஸ்பத்திரியின் கிழக்குப் புறமிருந்த கார் பார்க்கிங்கில் காரை நிறுத்தினார்.

லிஃப்டில் அவர்களைத் தவிர வேறு சிலரும் பயணம் செய்தனர். வசந்தா ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றாள்.

விடுமுறைக்குப் பின் வேலைக்கு வந்திருக்கிற சேது வர்மாவைப் பார்க்க ஊழியர்கள் வரிசையாக வந்தனர். 'இத்தனை நாட்களாக எங்கே போயிருந்தீர்கள்?' என்றே பெரும்பாலா வர்கள் கேட்டனர்.

''ஒரு நெடும்பயணம் போயிருந்தேன்!'' என்று மட்டும் சேதுவர்மா பதிலளித்தார்.

தங்கம்மா நர்ஸ்தான் கடைசியாக வந்தாள்.

''டாக்டர் இவ்வளவு நாளா எங்கே தலை மறைவாப் போயிட்டீங்க?'' சற்று சுதந்திரம் எடுத்துக் கொண்டு கேட்டாள்.

''சும்மாதான்... ஒரு சேஞ்சுக்காக அப்படியே ஊரைச்சுத்திப் பார்த்துட்டு வந்தேன். எத்தனை வருஷமா இந்த ஆஸ்பத்திரி கூண்டுக்குள்ளேயே கிடக்கிறேன்?''

''அந்தப் பெண்மணி எத்தனையோ தடவை உங்களை விசாரிச்சுக்கிட்டு இங்கே வந்திருந்தாங்க.''



''யார்?'' சேதுவர்மா கேட்டார்.

''பியூட்டி பார்லர் நடத்தும் பெண்மணி. ஒவ்வொரு தடவையும் உங்களைக் கேட்டார்.''

''எப்போ வந்தாங்க. ராத்திரியிலயா, பகல்லயா?''

''ராத்திரி நேரத்துலதான் வந்தாங்க.''

''ஓகோ...'' என்று கேட்டுக்கொண்ட சேதுவர்மா ஒரு தடவை வசந்தாவைப் பார்த்தார்.

அவளுக்கு விஷயம் புரிந்தது.

''இப்ப, சமீப காலமா அவங்க வர்றதில்லை!'' சொல்லிவிட்டு தங்கம்மா அங்கிருந்து நகர்ந்தாள்.

''உங்களைத் தேடி இங்கே நிறையத் தடவை வந்திருக் கிறாள்!'' வசந்தா கூறினாள்.

''தங்கம்மா இன்னார் என்று பெயர் சொல்லாதபோதே, எப்படி ஆள் இவள்தான் என்று புரிந்தது வசந்தா?'' சேதுவர்மா கேட்டார்.

''புரியாததற்கு இதில் என்ன இருக்கிறது?''

அவர்கள் இருவரும் பேசும்போது ஒரு பெண்மணி அந்த வாசலைத் தாண்டிப் போனாள்.

வசந்தா உடனே அங்கிருந்து வெளியேறி அந்தப் பெண்மணியைத் தொடர்ந்தாள். முன்னால் நடந்தவள் சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

வசந்தாவைப் பார்ப்பதற்காக அவள் திரும்பியபோது சேதுவர்மாவும் அந்த முகத்தைப் பார்க்கத் தயங்கவில்லை. ஒரு கணம் வியப்பு அடைந்தார். 'வசந்தா வேறு யாருடைய கண்ணுக்கும் தட்டுப்படமாட்டேன்! என்றல்லவா சொன்னாள். பிறகு எப்படி முன்னால் நடப்பவள் வசந்தாவைத் திரும்பிப் பார்க்கிறாள்! அப்படியானால் வசந்தாவை அடையாளம் தெரிந்து கொண்ட அவள் உண்மையில் யார்?'

அறையைவிட்டு வெளியே வந்த சேதுவர்மா அவளையே பார்த்தார்.

வேகமாக நடந்தவள் இடது புறமாகத் திரும்பி சட்டென்று மறைந்தாள். ஆனால், வசந்தா அவளைப் பின்தொடர்ந்தாள்.

வெளிச்சம் குறைவான வராந்தாவை அடைந்தவுடன் அவள் நின்றாள்.

''யார் நீ?'' வசந்தா கேட்டாள்.

''பெயர் வசுந்தரா!'' பதிலளித்தாள் புதியவள்.

''இங்கே எதுக்காக வந்திருக்கிறே?'' மிரட்டும் தொனியில் கேட்டாள் வசந்தா.

''ஜோதிர்மயி தேவி என்னை அனுப்பி வைத்திருக்கிறார்...'' அவள் சுவரோடு ஒட்டி நின்றாள்.

அந்த இடம் வழி முற்றுப்பெறும் ஓர் இடுக்காக இருந்தது.

மருத்துவமனை முழுவதற்குமான மின்சார இணைப்புகள் அங்கிருந்துதான் கிளை கிளையாக, நரம்பு நரம்பாகப் பிரிந்தன. பெரிய சுவிட்சுகள், பளிங்குக் கேரியர்கள் வரிசையாக இருந்தன. அந்த இடத்தில் பல்பு ஒன்று மங்கலான வெளிச்சத்துடன் எரிந்தது.

ஏராளமாகச் சிலந்திவலை பின்னப்பட்டிருந்த மேற் பகுதியில் இருந்து குறிப்பிட்ட ஒரு பகுதியில் மட்டும் வெளிச்சம் விழுந்து கொண்டிருந்தது.

ரத்னபிரபா கோவிலகத்துக்குப் போவதற்கு முன் ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் வசுந்தராவின் உடலில் ஒரு ரட்சஸை ஏவிவிட்டு, அதனிடம் சில விஸயங்களை ஒப்படைத் திருந்தாள்.

''சொல்... நீ எதற்காக இங்கு வந்திருக்கிறாய்?'' வசந்தா கேட்டாள்.

''யார், என்ன கேட்டாலும் எந்த விதமான பதிலும் சொல்லக் கூடாது என்பதே எனக்குப் போடப்பட்டுள்ள கட்டளை.''



''இருக்கலாம். ஆனால், நான் கேட்டால் நீ பதில் சொல்லித் தான் ஆக வேண்டும். எனக்கு, உன்னைவிட சக்தி அதிகம் என்பது தெரியுமா?''

''இருந்தாலும் நான் சொல்லமாட்டேன்!''

''ஓகோ... அப்படியா?'' வசந்தா எதிரிலிருந்த பெண் மணியை சுவிட்ச் போர்டு பக்கமாகத் தள்ளி நிறுத்தினாள், ஒரே தள்ளுதலில்.

சட்டென்று ஒரு பெரிய ஃபீஸ் காரியரை உருவினாள்.

வசுந்தராவின் வலது கையைப் பிடித்துச் சட்டென்று ஃபீஸ் காரியரின் இடைவெளிக்குள் திணித்தாள்.

''ஸ்... ஸ்'' என்று ஒரு சத்தம் எழுந்தது. தொடர்ந்து ஓர் அலறல். மறுவிநாடி வசுந்தரா தரையில் விழுந்தாள்.

அவள் விழுந்த சத்தம் கேட்டு ஆட்கள் மற்ற இடங்களிலிருந்து ஓடி வந்தனர்.

''கரண்ட் அடிச்சு விழுந்துட்டாங்க!''முதலில் ஓடிவந்த பெண் ஒருத்தி குரல் கொடுத்தாள்.

டாக்டர் சேதுவர்மா அந்த இடத்துக்கு வந்தார். கீழே விழுந்து கிடந்த வசுந்தராவின் நாடி பிடித்துப் பார்த்தார். உடனேயே அவள் உடம்பின் சில பகுதிகளை அவசர அவசரமாகத் தேய்த்துவிடத் தொடங்கினார்.

அவள் கண்களைத் திறந்தாள்.

''இந்தம்மாவைக் கொண்டுபோய் ஒரு பெட்ல படுக்க வையுங்க.'' டாக்டர் சேதுவர்மா, நர்ஸிடம் கூறினார்.

விரைவிலேயே மயக்கம் தெளிந்து விழித்தாலும் என்ன நடந்தது என்பதை அவளால் விளக்க முடியவில்லை.

வசந்தா, நடந்ததை சேதுவர்மாவிடம் விவரித்தாள்.

''அப்படியானால் இதைப்போல் வேறு சிலரும் இருக்கலாம் இல்லையா?'' சேதுவர்மா கேட்டார்.

''இருக்கலாம்!''

அதே நேரம் பிரசவ வார்டிலிருந்து ஓர் அலறல் எழுந்தது. ''என் குழந்தையைக் காணவில்லை!''

எல்லோரும் அந்தப் பக்கம் ஓடினார்கள்.

அவள் சொன்னது உண்மைதான்!

''எப்போதிருந்து காணவில்லை?'' டாக்டர் விசாரித்தார்.

''இதோ... இப்போகூட இருந்தது டாக்டர். கண்மூடித் திறப்பதற்குள் மாயமா மறைஞ்சிடுச்சு!''

வேலையாட்கள் உடனே நான்கு புறமும் ஓடித் தேடினார்கள்.

ஆனால், குழந்தை அகப்படவில்லை.

டாக்டர், வசந்தாவை தேடினார். அவளும் அப்போது அங்கு இல்லை.

ஆஸ்பத்திரி வாசலிலிருந்த காவலாளி சோமன் பீடியொன்றைப் பற்ற வைத்துக்கொண்டு வாசலில் நின்றிருந்தான்.

அப்போதுதான் உட்புறத்திலிருந்து பெண் ஒருத்தி ஓடி வந்தாள். அவள் எதையோ துணிப்பொட்டலத்துக்குள் வைத்திருந்தாள்.

''என்னம்மா அது?'' சோமன் அதட்டினான்.

எந்தவிதமான பதிலும் சொல்லாமல் வாசலைத் தாண்ட அவள் முயற்சி செய்தாள்.

சோமன் பாய்ந்து அவளைத் தடுத்தான்.

ஆனால், அவள் சோமனை ஒரு கையால் சுலபமாகத் தட்டிவிட்டு வெளியேறினாள். சோமன் கேட்டுக்கு வெளியே தரையில் விழுந்து உருண்டான்.

முப்பத்தைந்து வயதான சோமன் இரண்டு மூன்று பேரை ஒரே நேரத்தில் சமாளிக்கக் கூடியவன். அப்படிப்பட்டவனை ஒரு பெண் சுலபமாகத் தட்டிவிட்டுப் போவதா?



சோமன் சுதாரித்து எழுவதற்குள் ஸ்டார்ட் ஆகி நின்று கொண்டிருந்த சிவப்புநிற மாருதிக் காருக்குள் ஏறினாள். கார் புறப்பட்டது.

காரைப் பின்தொடர்ந்து சோமன் சிறிது தூரம் ஓடினான். ஆனால், கார் விரைந்து சீறிப்பாய்ந்து மறைந்தது.

ரத்னபிரபாதான் காரை ஓட்டியவள்.

கோவிலகம் அரண்மனையில் இந்திராபாய் சக்தி பெற்றுவிட்டாள் என்பதை அறிந்த ரத்னபிரபா அன்று மாலை நேரத்தில் தனது இருப்பிடத்துக்குத் திரும்பியிருந்தாள்.

ஜோதிர்மயிக்கு அதிகமாக பலிகொடுத்து மேலும் சக்திகள் பெறுவது அவளது நோக்கம்.

நகரத்திலிருந்து பிரிந்து பண்ணார மூலையை நோக்கித் திரும்பியது கார்.

கார் ஓட்டும் ரத்னபிரபா அப்போது ஒரு காட்சியைக் கண்டாள்.

காரின் முன்புற விண்ட்ஷீல்டின் மீது ஓர் உருவம் தென்பட்டது.

அது தலைகீழாகப் படுத்தபடி அவளையே உற்றுப் பார்த்தது.

அதன் தலைமுடி கண்ணாடிமீது பரவிக் கிடந்தது.

ரத்னபிரபா காரை நிறுத்தினாள்.

மாந்திரீக சக்திகள் கைவரப் பெற்றிருந்த ரத்னபிரபாவுக்கே அது ஆச்சரியப்படத்தக்க ஒரு காட்சியாக இருந்தது.

ரத்னபிரபா காரின் கதவைத் திறக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை. மறுபடி முயன்றாள்.

''நீ யார்?'' ரத்னபிரபா கேட்டாள்.

''வசந்தா!'' அந்த உருவம் பதிலளித்தது.

''உனக்கு என்ன வேண்டும்?''

"அந்தக் குழந்தை!"

"அது கிடைக்காது!" ரத்னபிரபா ஆக்ஸிலேட்டரில் காலை அழுத்தி, வண்டியை மெதுவாகச் செலுத்தினாள்.

உடனே வசந்தா முன்புறக் கண்ணாடி வழியாகக் கையை உட்புறம் செலுத்தினாள்.

ரத்னபிரபா ஒரு கணம் அதிர்ந்தாள்.

'கண்ணாடியை உடைக்காமல் ஒரு கை இப்படி கண்ணாடியை ஊடுருவ முடியுமா என்ன? அந்தக் கை நீண்டு எந்தவிதத் தயக்கமும் இன்றி ரத்னபிரபாவின் அருகிலிருந்த பெண்ணின் மடியிலிருந்த குழந்தையை எடுத்துக்கொண்டது.

முன்புறக் கண்ணாடியைத் தாண்டி குழந்தை வெளியே வரவில்லை, கண்ணாடி குழந்தையைத் தடுத்தது.

வசந்தா இடது கையால், காரின் கண்ணாடியை உடைக்க முயன்றாள். ஆனால், கண்ணாடியை உடைக்காமல் அந்தக் கையும் கண்ணாடியை ஊடுருவியது.

தான் தோல்வியடைகிறோம் என்பது வசந்தாவுக்குத் தெரிந்தது.

தன் உடல் அப்போது ஸ்தூல வடிவில் இல்லையென்பதை உணர்ந்தாள் வசந்தா.

காருக்குள் இருந்த ரத்னபிரபா, அங்கிருந்த பெண்மணி ஆகியோரின் உடம்பில் தன்னால் புகுந்துகொள்ள முடியாது என்பதும் விளங்கியது.

மீண்டும் ஒரு தடவை அவள் முன்புறக் கண்ணாடியை உடைக்க முயன்று, தோல்வியடைந்தாள்.

ரத்னபிரபாவின் முகத்தில் சந்தேகம் படியத் தொடங்கியது.

காரின் முன்னால் தலைகீழாகக் கிடக்கும் பெண்ணுக்கு ஸ்தூல வடிவம் கிடையாது என்பதை ரத்னபிரபா உணர்ந்தாள். அப்படியானால் தான் வெற்றி பெறுவது உறுதி என்று நம்பினாள்.



இருப்பினும் அவளால் காரிலிருந்து வெளியேற முடியவில்லை.

குழந்தை காணாமல் போன விஷயம் மருத்துவமனையில் ஒரு பெரிய பூகம்பத்தை ஏற்படுத்தியிருந்தது. இதற்கு முன்னர் நிகழ்ந்ததெல்லாம் ஆட்கள் கவனிக்காதபோதுதான். ஆனால், இப்போது கண் முன்பாகவே மாயமாக மறைந்திருக்கிறதே!

அதே சமயம் ஒரு பெண், குழந்தையுடன் கேட்டைத் தாண்டி ஓடியதையும் சிலர் கவனித்துள்ளனர். சோமனைத் தள்ளிவிட்டு அவள் காரில் ஏறியதையும் மற்றவர்கள் கவனித்தனர்.

செய்தி, தீயைவிட வேகமாகப் பரவியது.

சேதுவர்மா யோசனையில் ஆழ்ந்தார்.

செய்தியறிந்து பாலசந்திரனும் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார்.

"குழந்தை எங்கே போயிருக்கும்?" பாலச்சந்திரன் தனக்குத்தானே கேட்பதுபோல் சொல்லிக் கொண்டார்.

"ஒரே ஒரு வழிதான் இருக்கிறது!" சேதுவர்மா காரின் சாவியைக் கையில் எடுத்தபடி கூறினார்.

## 34

**கா**ர் மருத்துவமனை கேட்டைத் தாண்டி மெயின் ரோட்டுக்கு வந்தது.

"இந்த நேரங்கெட்ட நேரத்தில் நாம் அங்கு போனால் என்ன?" டாக்டர் பாலச்சந்திரன் சந்தேகம் எழுப்பினார்.

"போகலாமே... இப்போது எனக்கு எந்தவிதமான பயமும் கிடையாது." டாக்டர் சேதுவர்மா ஆக்ஸிலேட்டரில் காலை அழுத்தியபடி கூறினார்.

சேதுவர்மா என்ன சொல்கிறார் என்று டாக்டர் பாலச்சந்திரனுக்கு விளங்கவில்லை.

கார் வேகமாகப் பாய்ந்தது.

ரத்னபிரபாவின் காரின் மேற்புறம் படுத்திருந்த வசந்தாவால் குழந்தையை வெளியே எடுக்க முடியவில்லை. அதே நேரம் ரத்ன பிரபாவால் காரைக் கிளப்பவோ, காரிலிருந்து வெளியேறவோ முடியவில்லை.

ஆனால் கார் நகர முடியாதபடி செய்ததில் வசந்தாவுக்கு ஒரு திருப்தி தெரிந்தது. கார் பண்ணார மூலையிலேயே உறுமியபடி நின்றிருந்தது.

உடனடியாக தான் எதையாவது செய்தே ஆக வேண்டும் என்பதை வசந்தா உணர்ந்தாள். இல்லாவிட்டால், சற்று நேரத்துக்குள் ரத்னபிரபா மாற்று நடவடிக்கையில் இறங்கலாம்.

முன்னொரு நாள் நூலக அறையில் படித்த ஒரு சுவடியிலிருந்த வித்தை அவளுக்கு ஞாபகம் வந்தது.

'ஓம்...' என்கிற திவ்விய மந்திரத்தை உச்சரித்தவாறு தன்னில் அடங்கியுள்ள சக்தி முழுவதையும் வலது கைச் சுண்டுவிரலுக்குக் கொண்டு வரவேண்டும். அதன் பிறகு அந்த விரலால் கண்ணாடியை வலுவாகக் குத்த வேண்டும். அப்படியே செய் தாள். அதே நேரத்தில் காருக்கு வெளியே குழந்தையை மட்டு மல்ல, வேறு எப்படிப் பட்டவரையும் தூக்கியெறியும் வல்லமை இருந்தது வசந்தாவிடம்.

கண்ணாடி மற்றும் இரும்பை ஊடுருவி சக்தியைச் செலுத்தும் வல்லமை மட்டும் அவளுக்கு இல்லை.

வசந்தா, 'ஓம்'கார மந்திரத்தைக் கூறியவாறு கண்ணாடியைப் பலமாகக் குத்தினாள்.

ஒருவிதச் சத்தத்துடன் கண்ணாடி உடைந்து துண்டுகள் வெளியேயும் உள்ளேயும் சிதறி விழுந்தன. குழந்தையைவிடப் பெரியதாக இருந்த கண்ணாடி இடைவெளிவழியாக வசந்தா குழந்தையை வெளியே எடுத்தாள். பின்புறமாக நகர்ந்தாள்.

ரத்னபிரபா அவளைப் பின்தொடர முற்படவில்லை. தொடர்ந்தால்... ஒருவேளை அது ஏதாவது புதிய சிக்கலை ஏற்படுத்தலாம் என்று நினைத்தாள்.



ரத்னபிரபா பங்களாவை அடைந்தாள்.

அவள் அங்கு வந்து சேர்ந்தபோது ஒரு அம்பாஸிடர் வண்டி வாசலுக்கருகே காத்திருந்தது. வீட்டு வாசல் கதவு திறந்திருந்தது.

ரத்னபிரபா உள்ளே நுழைந்தாள். அவளுடன் வந்தவள் படியேறி இருட்டுக்குள் மறைந்தாள்.

பிரதாப வர்மா வரவேற்பு அறையின் சோபாவில் உட்கார்ந்திருந்தார்.

"வந்து ரொம்ப நேரமாச்சா?" ரத்னபிரபா கேட்டாள்.

"நான் எதிர்பார்த்ததற்கு மாறாக விபரீதமாக நடக்கின்றன சம்பவங்கள்." ரத்னபிரபா கூறினாள்.

"அப்படியென்றால்?"

"நான் இலங்கையில் படித்த மாந்திரீக வித்தையுடன், ஆவிகளை என் சொந்த உடம்புக்குள் புகச்செய்வது வரை கற்றிருக்கிறேன். அதை மற்றவர்களின் உடம்புக்குள் செலுத்தவும் முடியும். அதெல்லாம் பெருமளவு வெற்றி பெறவும் செய்தது."

"பிறகு?"

"டாக்டர் சேதுவர்மாவுக்கு அவரே எதிர்பார்க்காத ஒருசில பொருள்கள் கிடைத்திருக்கின்றன. அதனால் அவர் என் மூர்த்தியின் மூலம் வரை கண்டுபிடித்துவிட்டார்!"

"ஓகோ... அந்த அளவுக்குப் போய் விட்டாரா?"

"ஆமாம். அந்த மூலம் இளயிடத்துக் கோவிலகம். இதோ இந்த பங்களா இருக்கும் இடத்தில் முன்னால் ஓர் இல்லம் இருந்தது. இங்கே உயிர் வாழ்ந்திருந்தவர் ஜோதிர்மயிதேவி. அவர்தான் என் உபாசனா மூர்த்தி. அவர் மாந்திரீக வித்தை கற்றுக் கொண்டதும் அதே இளயிடத்துக் கோவிலகத்தில்தான். அங்கு இந்திராபாய் என்கிற மற்றொரு பெண்மணியும் இருந்தாள். இந்த இருவருமே சமகாலத்தவர்கள்."

பிரதாப வர்மா கதை கேட்பவரைப் போல் ரத்னபிரபாவின் முகத்தையே பார்த்தார். பிறகு கேட்டார்: "அப்படியானால் ஜோதிர்மயி இப்போதும் இருக்கிறாரா...

''இருக்கிறார்!'' ரத்னபிரபா கூறினாள்.

''என்ன.... நிஜமாகவா சொல்கிறீர்கள்?'' பிரதாபவர்மா வியப்பு அடைந்தவராகக் கேட்டார்.

''நீங்கள் அவரை சந்திக்க விரும்புகிறீர்களா?'' ரத்னபிரபா கேட்டாள்.

பிரதாப வர்மாவைப் பொறுத்தவரை அது ஒரு நம்ப முடியாத விஷயமாக இருந்தது. நூற்றாண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்தவர் என்று கூறப்படும் ஜோதிர்மயிதேவி இப்போதும் உயிருடன் இருக்கிறாரா?

''பார்த்தால் தேவலை!''

''அப்படியானால் வாருங்கள்!'' ரத்னபிரபா அவரை அழைத்தாள்.

இருவரும் மாடிப்படிகளைக் கடந்து வராந்தாவின் இருண்ட பாதையில் நடந்து ஓர் அறை வாசலுக்கு வந்தனர்.

ரத்னபிரபா கதவைத் திறந்தாள்.

உள்ளே நுழைந்தாள்.

சரியான ஒரு பூஜையறை என்று சொல்லும்படி அதற்குரிய எல்லாவிதமான பொருள்களுடனும் கச்சிதமாக இருந்தது அறை. பிரதாப வர்மா எல்லாவற்றையும் வியப்புடன் பார்த்தார்.

ரத்னபிரபா ஒருபுறச் சுவரை நெருங்கினாள். அங்கிருந்த போட்டோவை விலக்கி, அதன் பின்புறத்திலிருந்த சிற்றறைக்குள் கையைவிட்டு சக்கரம் போன்ற ஒன்றைச் சுழற்றினாள்.

அந்த இடத்தில் ஒரு கதவு இருக்கிறது என்று சொல்ல முடியாத விதத்தில் சுவர் இரண்டாகப் பிளந்து நகர்ந்தது.

பிரதாப வர்மா திடுக்கிட்டார்.

அந்த அறைக்குள் விகாரமும், பைசாசிகமுமான உருவம் ஒன்று சாத்தி வைக்கப்பட்டிருந்தது. எலும்புக்கூட்டுக்கு உடை உடுத்தி உட்கார வைத்ததைப் போல் இருந்தது.



''கடவுளே... என்ன இது!'' பிரதாப வர்மா தன்னையும் மீறிக் கேட்டுவிட்டார்.

''இவர்தான் ஜோதிர்மயிதேவி! ஒரு காலத்தில் இந்த நாட்டையே கலங்கடித்து அடக்கி ஆட்சி செய்த பரம்பரையின் கடைசி வாரிசு. அந்த மாந்திரீக சக்தியின் வல்லமையால்தான் இப்போதும் இப்படி இருக்கிறார்.''

''இதற்கு உயிர் இருப்பதாகவா சொல்கிறீர்கள்?''

''ஆமாம்... அதையும் பார்த்துக் கொள்ளுங்கள்.''

''ம்... சரி... நடக்கட்டும்!''

ரத்னபிரபா அந்த உருவத்தின் முன்னால் அமர்ந்தாள். ஹோமகுண்டத்தின் அருகே இருந்த கூர்மையான வாளைக் கையில் எடுத்தாள்.

''பயப்படக்கூடாது!'' என்று வர்மாவைப் பார்த்துக் கூறியபிறகு, அந்த வாளை மேற்புறமாக வீசிவிட்டு சட்டென்று தன் தலையை அதற்கு நேராகக் காட்டியபடி நின்றாள்.

வாள், நெற்றியில் ஆழமாகக் கீறிவிட்டுக் கீழே விழுந்தது. ரத்தம் பீய்ச்சியடித்தது.

குழாய் போட்டதுபோல் ரத்தத் துளிகள் எதிரில் உட்கார்ந்திருந்த எலும்புக்கூட்டின் இதழ்ப்பகுதிக்குள் சென்று விழுந்து மறைந்தன.

சுளிவுகள் விழுந்து நசுங்கியது போலிருந்த அதன் வாய்ப்பகுதியில் பற்களுக்கு இடையில் ரத்தத்தின் பொட்டுகள் மின்னின.

அந்தப் பகுதி மெதுவாக அசைந்தது.

ரத்தத்துளிகள் அப்போதும் தொடர்ந்து அந்த இடைவெளிக்குள் பாய்ந்தன.

பிரதாப வர்மா கண் முன்பாகவே அந்த உருவம், மாற்றம் பெறத் தொடங்கியது. கண்கள் இருக்க வேண்டிய கருமையான

குழிகளில் கண்விழிகள் பளபளப்புடன் உருண்டு முன்புறமாக நகர்ந்தன.

மூக்குப் பகுதி வளர்ந்தது.

கன்னக் கதுப்புப் பகுதியில் சுளிவடைந்து உலர்ந்திருந்த தசைத் துணுக்குகள் உருண்டு திரண்டு செம்மையடையத் தொடங்கியது.

''எதற்காக வந்திருக்கிறாய்?'' அந்த உருவம் கேட்டது.

''நான் இத்தனை நாட்களாகச் செய்து வந்ததெல்லாம் பயனற்றதுபோல் தோன்றுகிறது. இதோ இந்த மனிதருக்காகத் தான் நான் இதையெல்லாம் செய்தேன். ஆனால், எதுவும் பலிக்கவில்லை!''

''எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது. ஆனால் நீ குறிப்பிட்ட மனிதனை இந்த இடத்துக்குக் கொண்டு வந்துவிட்டால், நீ நினைப்பதை நடத்த நான் உதவ முடியும்!''

''இது என்ன புதிதாக?''

''அவன் இப்போது ஏராளமான விஷயங்களை கற்றிருக் கிறான். அவன் கையில் பத்ரகாளி கொடுத்த தங்கத்தகடாலான ஏட்டுச்சுவடி இருக்கிறது. அது அவனிடம் இருக்கும்வரை அவனை யாரும் எதுவும் செய்ய முடியாது!''

''அதை அவனிடமிருந்து அகற்ற என்ன வழி?''

''எப்படியாவது அதை நீ கைப்பற்ற முயற்சி செய்!'' ஜோதிர்மயி கூறினாள்.

''என்னால் அது முடியுமா?''

''முடியும். வசந்தா என்கிற மோகினி அவனுக்கு உதவு கிறாள். தேவ அம்சம் வாய்ந்தவள். அவளுக்கு விடுதலை யளித்தவன் அவன்தான். அதனால்தான் அவள், அவனுடன் நிழல்போல் தொடர்ந்து உதவுகிறாள். நாளைக்கு துர்கா அஷ்டமி நாள். தேவி நீராடப்போகும்போது எல்லா மோகினிகளும் அவளுடன் துணையாகப் போவார்கள். அவளும் செல்வாள்.



அந்த சந்தர்ப்பத்தில் நீ அவனைத் தாக்கிச் சுவடியை அபகரிக்கலாம்.''

''இப்படிச் சொன்னால்... அதற்கான வழியையும் சொல்லித் தாருங்கள்.'' ரத்னபிரபா கேட்டாள்.

''நாளை இரவு நீ வசந்தாவின் வடிவத்தில் அவனை நெருங்கு. நீ அருகில் இருக்கும்போது உன் முன்னால் சுவடியைத் தன் உடலிலிருந்து வெளியே எடுத்து வைப்பான். அந்த சந்தர்ப்பம்தான் அவனைத் தாக்க உனக்கு ஏற்றது!''

''ஒருவேளை அவன் என்னை அடையாளம் தெரிந்து கொண்டால்...?'' ரத்னபிரபா சந்தேகம் எழுப்பினாள்.

''சந்தேகிக்க மாட்டான். நான் உன்னுள் ஆவேசித்திருப் பேன். பயப்படாதே!'' ஜோதிர்மயி கூறினாள்.

டாக்டர் சேதுவர்மாவும், பாலச்சந்திரனும் பண்ணார மூலைக்கு வந்து சேர்ந்தனர்.

இருவரும் காரிலிருந்து இறங்கினர்.

வசந்தா அங்கேயே நின்றிருந்தாள்.

''என்ன நடந்தது?'' பாலச்சந்திரன் கேட்டார்.

''முதலில் இந்தக் குழந்தையைப் பிடியுங்கள்.'' வசந்தா தன் கையிலிருந்த குழந்தையை அவரிடம் கொடுத்தாள்.

''தாமதிக்காமல் இந்தக் குழந்தையை ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்ப்போம். மற்றதைப் பிறகு கவனிக்கலாம்.'' சேதுவர்மா கூறினார்.

மூவரும் காரில் ஏறிக்கொள்ள கார் உடனே ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தது.

''அந்த பங்களாவில் இப்போது மற்றொரு மனிதரும் வந்து சேர்ந்திருக்கிறார். ஏறத்தாழ உங்களை மாதிரியே தோற்றமுள்ள ஒரு மனிதர் அவர். அவர் அம்பாஸிடர் காரில் வந்திருக்கிறார்.'' காரின் பின்ஸீட்டில் இருந்த வசந்தா கூறினாள்.

''என்ன... என்னை மாதிரியே இருந்தாரா? ஓகோ... இப்போதுதான் எனக்குப் புரிகிறது!'' சேதுவர்மா கூறினார்.

''யார் அவர்?'' வசந்தா கேட்டாள்.

''பிரதாப வர்மா! நான் இல்லாவிட்டால், எனது சொத்துகள் அனைத்தும் அவரைத்தான் சாரும். அப்படியொரு நோக்கம் அவருக்கு உண்டு. போதாக்குறைக்கு அவர் ரத்னபிரபாவை வேறு நாடியிருக்கிறாரா?''

''உண்மையில் ரத்னபிரபாவுக்கு அதுவும் ஒரு காரணம். அவ்வளவுதான். அவளைப் பொறுத்தவரை ஜோதிர்மயியைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் நோக்கம். அதற்காக பிஞ்சுக் குழந்தைகளை பலி கொடுக்க வேண்டும். அதற்கு இந்த சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறாள். இப்போது அவளின் முக்கியமான எதிரிகள் நாம்தான்!'' வசந்தா கூறினாள்.

ஆஸ்பத்திரியை அடைந்தனர்.

குழந்தையைக் கொண்டுபோய் தாயிடம் ஒப்படைந்தனர். குழந்தையைத் திரும்பவும் உயிருடன் கண்ட தாய், டாக்டரை நன்றியுடன் பார்த்தாள்.

நேரம் இரண்டு மணியாகியிருந்தது.

''கொஞ்சம் நேரம் நான் ஓய்வு எடுத்துக் கொள்ளலாமா?'' சேதுவர்மா கேட்டார்.

''போங்கள்... நான் பார்த்துக் கொள்கிறேன்.'' டாக்டர் பாலச்சந்திரன் ஒப்புக்கொண்டார்.

வசந்தா அங்கிருந்து கிளம்பினாள்.

உட்கார்ந்த சற்று நேரத்திலேயே அப்படியே கண் மயங்கினார் டாக்டர் பாலச்சந்திரன்.

பொழுது விடிந்ததே தெரியவில்லை.

சேதுவர்மாவும், பாலச்சந்திரனும் விடியற்காலையில் நேராக டாக்டர் சசிதரனின் வீட்டுக்கு வந்தார்கள். காபி சாப்பிட்டனர்.



''காலைப் பலகாரமும் இன்று உங்களுக்கு இங்குதான்!'' சசிதரன் கூறினார்.

''சரி... அப்படியே ஆகட்டும்!'' இருவரும் ஒப்புக் கொண்டனர்.

அங்கிருந்து கிளம்பித் தங்களது வீடுகளுக்குத் திரும்பிய சேதுவர்மாவும் பாலச்சந்திரனும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிற்றுண்டி சாப்பிடுவதற்காக மீண்டும் சசிதரனது வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

''இன்று எனக்கு டூட்டி. ஆனால், அப்பா விடியற் காலையிலேயே போன் செய்தார். இன்று அப்பாவின் பிறந்தநாள். திடுமென்று குருவாயூர் கோயில் போக வேண்டுமென்று சொன்னார். என்ன செய்வது?'' சசிதரன் மற்ற இருவரையும் பார்த்தார்.

''இதில் யோசிக்க என்ன இருக்கிறது. நீங்கள் புறப்படுங்கள் சசி. நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.'' சேதுவர்மா கூறினார்.

''அப்பாடா... இப்போதுதான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறது!'' சசிதரன் மகிழ்ச்சியுடன் பேசினார்.

எட்டு மணியளவில் சேதுவர்மா ஆஸ்பத்திரிக்கு வந்தார்.

டாக்டர் தனது அறைக்கு வந்தபோது யாரோ தலை தாழ்த்தியபடி எதிர் இருக்கையில் அமர்ந்து இருந்தனர்.

''டாக்டர் இன்று உங்களுக்கு விடுமுறைதானே?'' உட்கார்ந்திருந்தவர் கேள்வியுடன் தலையை உயர்த்தினார்.

டாக்டர் இந்திராபாய்!

சேதுவர்மா வியப்பால் விழிகள் விரிந்தவாறு அவளைப் பார்த்தார்.

## 35

டாக்டர் சேதுவர்மாவின் மனத்தில் அப்போது, இளயிடத்துக் கோவிலகத்தில் பார்த்த ஓவியம் தெளிவடைந்து வந்தது. இந்திராபாயின் அழகான ஓவியம்!

அந்த ஓவியத்துடன் பொருந்திப் போகிற அதே முகம்தான் இப்போது தனக்கு எதிரில் தென்படுவதும்.

''இத்தனை நாட்களாக எங்கே போயிருந்தீர்கள்?'' சேதுவர்மா கேட்டார்.

''எதிர்பாராமல் விடுமுறை எடுக்க நேர்ந்து விட்டது.'' இந்திராபாய் கூறினார்.

''அது எனக்கும் தெரியும். ஆனால், விடுமுறை எடுத்த நாட்களில் கோவிலகத்துக்குப் போகவில்லை. அப்படித்தானே?''

''அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்?'' இந்திராபாய் ஆர்வத்துடன் கேட்டார்.

''மனத்தில் தோன்றியதைக் கேட்டேன். நானும்கூட சில நாட்களாக இங்கு இல்லை. ஓரிடம்வரை போக வேண்டியிருந்தது. போன இடத்தில் உங்களது ஓவியத்தைப் பார்த்தேன்.''

''எங்கு?'' இந்திராபாயின் முகத்திலிருந்த வியப்பு இன்னும் மாறாமல் இருந்தது.

''இளயிடத்துக் கோவிலகத்தில். அந்த இடத்துடன் உங்களுக்கு ஏதாவது தொடர்பு இருக்கிறதா?''

''இருக்கிறது. என் பெரியப்பாவின் அம்மா அந்தக் கோவிலகத்தைச் சேர்ந்தவர். அந்தப் பாட்டியின் பெயரைத்தான் எனக்கும் வைத்திருக்கிறார்கள். பாட்டியின் ஜாடை அப்படியே எனக்கு இருப்பதாக அப்பாவும் அடிக்கடி சொல்லுவார்.''

''அப்படியானால் நான் பார்த்தது சரிதான். அந்தப் பாட்டி மாதிரி நீங்களும் மாந்திரீக வித்தைகள் எதையாவது கற்று வைத்திருக்கிறீர்களா?'' சேதுவர்மா சிரித்தபடி கேட்டார்.



''இல்லை... எனக்கு அந்த மாதிரி எதுவும் தெரியாது.''

''சரி, அதெல்லாம் போகட்டும். உங்கள் இடது கையின் சக்தி திரும்பக் கிடைத்து விட்டதா?''

இதைக் கேட்டதும் டாக்டர் இந்திராபாய் சந்தேகம் நிறைந்த கண்களுடன் சேதுவர்மாவைப் பார்த்தார்.

''நான் சொன்னது உண்மைதானே? டாக்டர் இந்திராபாயின் இடது கையில் ஏதோ ஒரு சிறிய குறை இருந்ததுபோல் எனக்குத் தோன்றியது. அது இப்போது சரியாகிவிட்டதா? சரியாகி இருக்கும் என்றுதான் தோன்றுகிறது.''

''இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''பாட்டியின் இடதுகை ஏதோ அஞ்ஞாதமான காரணத்தால் துண்டாக நேர்ந்திருக்கிறது. அதை நான் ஒட்டவைத்து சரி செய்தேன். உங்கள் கையைப் பற்றி நானாகவே யூகித்தேன்.''

''நீங்கள் சொன்னது உண்மைதான் டாக்டர். ஒரு சில சந்தர்ப்பங்களில் என் இடது கையில் ஏதோ ஒரு குறை இருப்பதுபோல், செயலற்றிருப்பதுபோல் தோன்றியதுண்டு!'' இந்திராபாய் கூறினாள்.

''இனிமேல் அதையெல்லாம் நினைத்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். முந்தைய தலைமுறையினரின் சில குறைகளும், நன்மைகளும் பிந்தைய தலைமுறைக்கு அப்படியேவோ சற்றுக் கூட்டிக் குறைந்தோ வாய்ப்பதுண்டு. அதனால் அப்படி நிகழ்ந்திருக்கும்!'' சேதுவர்மா கூறினார்.

இந்த சந்தர்ப்பத்தில் நர்ஸ் ஒருவர் ஓடி வந்தார்.

''இருபத்தொன்றாவது பெட்டில் படுத்திருக்கும் நோயாளி மிகவும் கஷ்டப்படுகிறார் டாக்டர். ஆபரேஷனுக்காகக் காத்திருக்கிற நோயாளி அவர்.''

''அப்படியானால், நான் இதோ வந்துவிடுகிறேன்.'' டாக்டர் சேதுவர்மா எழுந்து வெளியே போனார். சற்று நேரத்துக்குள் உடைமாற்றி ஆபரேஷன் தியேட்டரில் நுழைந்தார்.

தங்கம்மா நர்ஸ் தயாராக இருந்தார்.

அவரைத் தவிர வேறொரு நர்ஸும் முகத்தை மறைத்துக் கட்டியபடி நின்றிருந்தாள். எனவே, ஆள் யாரென்று தெரியவில்லை. இருப்பினும் அந்த அளவுக்கு உயரமும், பருமனும் உள்ள நர்ஸ் ஆஸ்பத்திரியில் இல்லை. சட்டென்று டாக்டர் சேதுவர்மாவின் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது! 'ஒருவேளை அவள் ரத்னபிரபாவாக இருப்பாளோ? அடுத்த பலி நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறாளோ?'

ஆபரேஷன் தியேட்டருக்குள், அவசரமான இந்த சந்தர்ப்பத்தில் எதுவும் பிரச்சினை ஏற்பட வேண்டாம் என்பதால் நடுநடுவே அந்த நர்ஸின் நடவடிக்கைகளை கவனித்தார் சேதுவர்மா.

ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தது.

வழக்கத்தைவிட எடை அதிகமாக இருந்த ஆண் குழந்தை பிறந்தது. எப்போதும் தன்னுடைய வேலை முடிந்ததும் வெளியேறி விடும் டாக்டர் அன்று வெளியேறாமல் அறைக்குள்ளேயே இருந்தார்.

தான் சந்தேகப்பட்ட பெண்மணி அந்தக் குழந்தையை எடுக்க முற்பட்டபோது சேதுவர்மா, அவள் தோளைப் பிடித்துத் தடுத்தார்.

அவளுக்கும் விஷயம் விளங்கியிருக்க வேண்டும். சேதுவர்மா, தங்கம்மா நர்ஸிடம் சைகை காட்டினார். உடனே மேற்கொண்டு தான் குழந்தையை கவனித்துக் கொள்வதாக ஒப்புக்கொண்டு குழந்தையை அவளிடமிருந்து பெற்றுக் கொண்டாள். ரத்னபிரபாவும் விஷயத்தைத் தெரிந்து கொண்டு உடனே அங்கிருந்து வெளியேறினாள்.

திரும்பவும் டூட்டி அறைக்கு வந்த டாக்டர் சற்று ஓய்வெடுக்க விரும்பி, சாய்ந்தவாறு கண்ணை மூடினார்.

ரத்னபிரபா தனது காரை ஸ்டார்ட் செய்து பங்களாவை நோக்கி விரைந்தாள். அவசர அவசரமாகத் தனது பூஜையறையை அடைந்தாள்.



ரத்த தாகத்துடன் ஜோதிர்மயியின் பைசாசிக வடிவம் காத்திருந்தது.

''சேதுவர்மாதான் இப்போதும் நமது நோக்கத்துக்குத் தடையாக இருக்கிறார்! நான் என்ன செய்ய?'' ரத்னபிரபா கேட்டாள்.

''பரவாயில்லை... அந்த மனிதனுக்கு நான் ஒரு சிறு தொல்லை கொடுத்திருக்கிறேன். அதாவது சின்னத் தலைவலி. இதற்குள் சேதுவர்மா குவார்ட்டர்ஸுக்குப் போயிருப்பார். நீ வசந்தியின் வேஷத்தில் விரைவாக அங்கு போ!'' ஜோதிர்மயி கூறினாள்.

''உடலை மாற்றிக்கொள்ளக்கூடிய வித்தை எனக்குத் தெரியாதே!'' ரத்னபிரபா கூறினாள்.

''அப்படியானால் ஒரு காரியம் செய். சரண்யாவைக் கூப்பிடு. அவளுக்கு ஏறத்தாழ வசந்தாவின் முக ஜாடைதான். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன். நானே அவளுக்குள் புகுந்து கொள்கிறேன்.'' ஜோதிர்மயி கூறினாள்.

ரத்னபிரபாவுக்கு அது நல்ல யோசனையாகத் தோன்றியது.

ஜோதிர்மயியே நேரிட்டு ஒரு செயலில் இறங்கினால் தோல்வி ஏற்பட வாய்ப்பு இல்லையென்று ரத்னபிரபா உறுதியாக நம்பினாள். உடனே காரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

சற்று நேரத்தில் சரண்யாவுடன் திரும்பினாள். அவளை பூஜையறைக்கு அழைத்து வந்தாள்.

ஜோதிர்மயியின் உருவத்தைப் பார்த்த சரண்யா ஒரு தடவை பயந்து நடுங்கினாள்.

''முட்டிக்கால் போட்டு நில்லும்மா!'' ரத்னபிரபா கட்டளையிடும் குரலில் கூறினாள்.

சரண்யா அப்படியே செய்தாள்.

ரத்னபிரபா வாளை எடுத்து நெற்றியில் வெட்டிக் காயத்தை ஏற்படுத்தினாள். பீய்ச்சியடிக்க

பிடித்து ஜோதிர்மயியின் உதட்டில் விழச் செய்தாள். அந்த உருவம் அந்த ரத்தம் முழுவதையும் உறிஞ்சிச் சுவைத்தது.

சற்று நேரத்துக்குள் அந்தக் கோர வடிவத்திலிருந்து தெளிவற்ற நிழல் போன்ற ஒன்று சரண்யாவைச் சூழ்ந்து மறைந்தது.

சரண்யாவின் முகம் மாற்றமடையத் தொடங்கியது. கடைசியில் அவள் வசந்தாவாக மாறினாள்!

''இதுதானே அந்த வசந்தாவின் உருவம்?'' ஜோதிர்மயி கேட்டாள்.

''வசந்தாவை அந்த மனிதனுக்குப் பிடித்துப் போனது, எத்தகைய துரதிருஷ்டம் என்று இப்போதுதான் தெரிகிறது!''

ரத்னபிரபா, சரண்யாவுடன் கீழ்த்தளத்துக்கு வந்தாள்.

''இவ்வளவு போதும் ரத்னபிரபா! மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்.'' சரண்யாவின் குரலும் மாறியிருந்தது இப்போது.

சரண்யாவின் உடம்பில் புகுந்த ஜோதிர்மயி காருக்குள் ஏறி அமர்ந்தாள். கார் கேட்டைக் கடந்து வெளியேறியது.

''ரத்னபிரபா, இந்தத் தடவையாவது காரியம் நல்லபடியாக முடியுமா?'' பிரதாப வர்மா கேட்டார்.

''கண்டிப்பாக! அதில் உங்களுக்கு என்ன சந்தேகம்? இதன் பின்னணியில் நீங்கள் இருப்பதும் வெளியே வரப்போவதில்லை. சேதுவர்மா மரணமடைவது, விஞ்ஞான உலகத்துக்கே சவால்விடுகிற ஒரு புதுமுறையில் நடக்கும். இந்த மரணம் எப்படி நடந்தது என்று தெரியாமல் உலகமே விழிக்கப் போகிறது!'' ரத்னபிரபா உறுதியான குரலில் கூறினாள்

''என் மீது சந்தேகம் ஏற்பட்டால், கொலையாளியாக என்னைக் கூண்டில் ஏற்றுவார்கள். அது நடக்கக் கூடாது!''

''பயப்படாதீர்கள்... அப்படி எதுவும் நடக்காது. இதுவரை நாம் முயற்சி செய்ததெல்லாம் உங்களது அந்த நோக்கத்துக்காகத் தானே!'' ரத்னபிரபா பதிலளித்தாள்.



**ச**ரண்யா, சேதுவர்மாவின் குவார்ட்டர்ஸை அடைந்தாள்.

காரிலிருந்து இறங்கிய சரண்யா, தன் சக்தியைச் சோதித்துப் பார்ப்பது போல் சுட்டுவிரலால் காரைத் தள்ளினாள். ஒரு விளையாட்டு பொம்மை மாதிரி கார் பின்னோக்கி நகர்ந்தது. மெயின் ரோட்டுக்கு வந்த கார் மேற்குப்புறமாகத் திரும்பி ஓரமாகப் போய் நின்று கொண்டது.

சரண்யா கதவைத் தட்டினாள்.

சேதுவர்மா தூங்காமல் படுக்கையில் புரண்டபடி, அதுவரை நடந்த சம்பவங்கள் ஒவ்வொன்றையும் மனசுக்குள் ஓடவிட்டு அதைப் பற்றி யோசித்தார்.

கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

'ஆஸ்பத்திரியில் இருந்து யாராவது வந்திருந்தால் முன்னதாக டெலிபோன் செய்திருப்பார்கள். ஒருவேளை யாராவது நோயாளியாக இருந்தால்?'

படுக்கையிலிருந்து எழுந்த சேதுவர்மா வரவேற்பு அறைக்கு வந்தார்.

''யாரது?'' கேட்டார்.

''நான்தான் வசந்தா!''

''ஓகோ... வசந்தாவா... இதோ வந்துவிட்டேன்.'' வேகமாக வந்து கதவைத் திறந்தார்.

அவள் உள்ளே நுழைந்தாள்.

''இன்றைக்கு வரமாட்டேன் என்று சொல்லியிருந்தாயே?'' சேதுவர்மா கேட்டார்.

''சீக்கிரமாகத் திரும்ப முடிந்தது. வந்துவிட்டேன். இருந்தாலும் நான் உடனேயே கோவிலகம் அரண்மனைக்குப் போக வேண்டும்.'' அவள் சொன்னாள்.

தங்கத் தகடாலான சுவடி அங்கு இருப்பது வரை சேதுவர்மாவை அங்கு கொல்வது நடக்காது. எனவே, எப்படியாவது

சேதுவர்மாவை வீட்டுக்கு வெளியே கொண்டு வரவேண்டுமென்று தீர்மானித்தாள்.

''கண்டிப்பாகப் போக வேண்டுமா?'' சேதுவர்மா கேட்டார்.

''ஆமாம். துர்காஷ்டமி நாளன்று கோவிலகத்துக்குள் இருக்க வேண்டியது கட்டாயம்.''

''நான் டாக்டர் பாலச்சந்திரனிடம் ஒரிரு வார்த்தை சொல்லிவிட்டு வருகிறேன்.'' சேதுவர்மா அங்கிருந்து திரும்ப முயன்றார்.

''அவரிடம் சொல்ல வேண்டாம். இந்த நேரத்தில் நீங்கள் என்னுடன் கோவிலகத்துக்கு வருவதை அறிந்தால் கண்டபடி யோசிப்பார்கள், பேசுவார்கள். அதனால்... அது வேண்டாமே!''

''சரி... உனது விருப்பப்படியே செய்தால் போகிறது. எவ்வளவு சீக்கிரம் திரும்பிவர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வர வேண்டும். நாளைக்கு நான் கண்டிப்பாக ஒருவரை சந்திக்க வேண்டி இருக்கிறது.''

''அதற்கென்ன... தாராளமாகத் திரும்பிவிடலாம்.''

சேதுவர்மா காரில் ஏறினார். அவளும் ஏறிக்கொண்டாள்.

குவார்ட்டர்ஸின் கேட்டைக் கடந்து கார் ரோட்டுக்கு வந்தது. வளைவு திரும்பியவுடன் சிவப்புநிற மாருதி நிற்பதை சேதுவர்மா கவனித்தார். அவருள் ஒரு சந்தேகம் தோன்றினாலும் அதைப் பொருட்படுத்தாமல் வண்டியைச் செலுத்தினார்.

கார் விரைந்தது.

நகர எல்லையைக் கடந்தது.

ஆள் நடமாட்டமற்ற பகுதிக்கு வந்தது கார்.

அப்போது சேதுவர்மாவின் தோள்மீது ஒரு கை பதிந்தது. ஒரு சில்லிடலை உணர்ந்தார்.

பனிக்கட்டியைவிடச் சில்லிட்டிருந்தது அந்தக் கை.



அத்துடன் காரின் வேகமும் அதிகரித்தது. ஆக்ஸிலேட்டரை அவர் மிதிக்காமலேயே வேகம் கூடுகிறது. இப்போது சேதுவர்மாவுக்குள் சந்தேகம் எழுந்தது.

கார், தன்னுடைய கட்டுப்பாட்டிலிருந்து நழுவுகிறது.

இரு புறமும் உள்ள தெருவிளக்குள் பேயோட்டமாக விரைந்து மறைந்தன.

இதற்கெல்லாம் என்ன காரணம்?

சேதுவர்மா தனக்கு அருகில் உட்கார்ந்திருக்கும் சரண்யாவைப் பார்த்தார். வசந்தாவாகத் தோற்றமளித்த அவள் கண்கள் பளபளத்தன.

''நான்தான் ஜோதிர்மயி!'' அவள் பேசினாள்.

சேதுவர்மா சட்டென்று நடுங்கினார் ஒரு கணம்.

தங்கத் தகடாலான சுவடி குவார்ட்டர்ஸில் இருந்தது.

என்ன செய்வது?

சட்டென்று ரோட்டில் வெகு தூரத்தில் மனித உருவம் ஒன்று தட்டுப்பட்டது.

அது காரை நோக்கி விரைந்து வந்தது.

அந்த உருவம் ரோட்டின் மையத்தில் நிற்பதாகத் தெரிந்தது.

காரின் வெளிச்சத்தில் அந்த உருவம் தெளிவடைந்தபோது சேதுவர்மா சற்று ஆறுதலடைந்தார்.

அந்த உருவம், டாக்டர் இந்திராபாய்!

கார் அவரை நெருங்கியதும். இந்திராபாயின் வலது கை காரின் பானட்டைத் தொட்டது.

கார் விருட்டென்று ஒரு குலுக்கலுடன் நின்றது.

''இறங்கு!'' இந்திராபாய் கட்டளையிடும் குரலில் கூறினாள்.

சேதுவர்மா காரிலிருந்து இறங்கினார்.

"உன்னிடம்தான் இறங்கச் சொன்னேன்!" இந்திராபாய், சரண்யாவைப் பார்த்துக் கூறினாள்.

அவள் காரிலிருந்து இறங்கினாள்.

"இப்போது என்ன சொல்கிறாய்?" இந்திராபாய் கேட்டாள்.

"என் பலத்தை சோதிக்கிறாயா?" சரண்யா கேட்டாள்.

"ஆமாம்... முன்பைவிட அதிகமான சக்திகளுடன் வந்திருக்கிறேன். அந்தச் சுவடி இதோ என் கையில் இருக்கிறது." இந்திராபாய் தன் கையிலிருந்த தங்கத் தகட்டுச் சுவடியைக் காட்டினாள்.

அதன் ஒளிபட்டதுமே சரண்யா சுயநினைவற்று விழுந்தாள்.

அந்த உடலிலிருந்து ஓர் ஒளிக்கீற்று பிரிந்து அந்தரத்தில் மிதந்து போனது.

"இவளை எடுத்து காரில் போடுங்கள்! நாம் சீக்கிரமாகப் போக வேண்டும்!" இந்திராபாய் கூறினாள்.

சரண்யாவை காருக்குள் எடுத்துப் போட்ட பிறகு கார் புறப்பட்டது.

"எங்கே போக வேண்டும்?" சேதுவர்மா கேட்டார்.

"ரத்னபிரபாவின் பங்களாவுக்கு!" இந்திராபாய் கூறினாள்.

கார் விரைந்தது.

விடிவதற்கு முன்பாக கார் அந்த பங்களாவின் முன்னால் வந்து நின்றது.

காரிலிருந்து இறங்கிய இந்திராபாய் விடுவிடென்று வாசலைத் தாண்டி படிகளில் ஏறினாள்.

ரத்னபிரபாவின் பூஜையறைக் கதவைத் திறந்து அதற்குள் நுழைந்தாள்.

அங்கே ஜோதிர்மயியின் பைசாசிக உருவம் சாத்தி வைத்த நிலையில் இருந்தது.



இந்திராபாய் தன் கையிலிருந்த தங்கச் சுவடியை அந்த உருவத்தின் முன்னால் வைத்தாள்.

அந்தச் சுவடியிலிருந்து சட்டென்று ஓர் ஒளி உயர்ந்து, நெருப்பு ஜுவாலையாகத் தகதகத்தது.

தீ ஜுவாலைகள் அந்த உருவத்தைச் சூழ்ந்து எரித்துத் தின்னத் தொடங்கின. ஒருசில நிமிடங்களுக்குள் அந்த உருவம் எரிந்து வெறும் சாம்பலானது.

அவளைத் தொடர்ந்து வந்த சேதுவர்மா எல்லாவற்றையும் வியப்புடன் பார்த்துக் கொண்டே நின்றார்.

அங்கிருந்து இந்திராபாயும் சேதுவர்மாவும் வெளியே வந்தவுடன் வாசல் கதவை இழுத்துத் தாழிட்டாள். பூட்டினாள்.

"வாருங்கள் போகலாம்!" இந்திராபாய் கூறினாள்.

கீழ்த்தளத்துக்கு வந்ததும் பிரதாபவர்மாவும் ரத்னபிரபாவும் வெளியேறுவதை கவனித்தனர்.

"அப்படியே நில்லுங்கள்!" இந்திராபாய் குரல் கொடுத்தாள்.

ஆனால், அதைக் காதில் போட்டுக்கொள்ளாமல் இருவரும் விரைந்து காரில் ஏறி ஸ்டார்ட் செய்து புறப்பட்டனர்.

"போய்த் தொலையட்டும்!" இந்திராபாய் கூறினாள்.

சேதுவர்மாவும் இந்திராபாயும் தங்களது காரில் ஏறினர்.

பண்ணார மூலையை அடைந்தபோது அங்கு ஏதோ வெளிச்சம் தெரிந்தது.

நெருங்கிப் பார்த்தபோது கார் ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

"இனிமேல் அவர்களால் எந்தத் தொல்லையும் ஏற்படாது!" இந்திராபாய் கூறினாள்.

மறுநாள் இந்திராபாய் இடம் மாறுதல் கேட்டு விண்ணப்பம் செய்தாள்.

''என்ன இங்கிருந்து போகப் போகிறீர்களா?'' சேதுவர்மா கேட்டார்.

''ஆமாம்... நான் போக வேண்டும். என்னைக் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறவர் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்திருக்கிறார்.'' இந்திராபாய் கூறினாள்.

''அப்படியானால் கோவிலகத்தைச் சேர்ந்த இந்திராபாய்?'' சேதுவர்மா கேட்டார்.

''அது நானல்லவென்று உங்களுக்குத் தெரியாதா?'' இந்திராபாய் சிரித்தாள்.

அன்றிரவு சேதுவர்மா குவார்ட்டர்ஸில் தனது வீட்டுக்குள் தனியாக உட்கார்ந்திருந்தபோது வசந்தா வந்தாள்.

அதுவரை நடந்த சம்பவங்களை சேதுவர்மா, அவளிடம் விவரித்தார்.

அவள் ஒரு புன்சிரிப்புடன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு கடைசியில் இப்படிச் சொன்னாள்: ''உங்களுக்கு இனிமேல் எந்தக் கவலையும் வேண்டாம். நான் நிரந்தரமாக இங்கேயே தங்கப் போகிறேன்!'' அவள், சேதுவர்மாவின் கழுத்தில் தன் இரு கைகளையும் போட்டவாறு கூறினாள்.

○○○

மலையாளத்தின் ஜனரஞ்சகமான எழுத்தாளர்களில் குறிப்பிடத் தக்க இடம் பெற்றிருப்பவர் கோட்டயம் புஷ்பநாத் அவர்கள்.

தொடர்கதை எழுதுவதில் தனி முத்திரைப் பதித்தவர்.

இவரது புத்தகங்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார் எழுத்தாளர் சிவன் அவர்கள்.

சுவாரஸ்யமான ஒரு திகில் நாவலுக்குத் தேவையான எல்லா அம்சங்களும் இவரது நாவலில் நிறைந்துள்ளன.